# பூங்கொடி

முடியரசன்

# பூங்கொடி

(மொழிக்கொரு காப்பியம்)

*

ஆசிரியர்:

கவிஞர் முடியரசன்

*

**வள்ளுவர் பதிப்பகம்**

வடக்கு இராச வீதி,

புதுக்கோட்டை.

# பூங்கொடி

(மொழிக்கொரு காப்பியம்)

*

ஆசிரியர்:

கவிஞர் முடியரசன்

*

வள்ளுவர் பதிப்பகம்
வடக்கு இராச வீதி,
புதுக்கோட்டை.

# POONGODI

SUBBARAYALU MUDIYARASAN

(BORN: 7—10—1920)

KARAIKUDI, TAMIL NADU.

Copy Right: KALAICHELVI MUDIYARASAN

Valluvar Pathippaham Series-8.

First Edition Nov. 1964.

Second Edition March 1970.

PRICE Rs. 5-00

**Published By:**

VALLUVAR PATHIPPAHAM,
North Main Street, PUDUKKOTTAI,
Thiruchirappalli District, Tamil Nadu.

The Ramanathapuram District Co-op. Printing Works Ltd. N. N. 490.
Industrial Estate, Karaikudi-5. Phone: 211.

பூங்கொடி

கண்ணனைய மொழிகாக்கக்
கடிமணத்தைத் துறந்தஒரு
பெண்ணணங்கின் வரலாறு
பேசுமொரு காப்பியமாம்.

பூங்கொடி

மொழிநலங் கேடுறக் கண்டுளந் தளர்ந்தாள்
விழிநலங் குறைவது போலவள் உணர்ந்தாள்.
உணர்ச்சி எழுச்சியாயிற்று — எழுச்சி வளர்ச்சியாயிற்று;
அவள் வாழ்வே ஓர் அறப்போராயிற்று.

முடிவு?

செந்தமிழாம் மொழிகாக்கத் தனைக்கொடுத்தாள்
செயிர்தீர்ந்த மொழிப்போரில் உயிர்கொடுத்தாள்.

அதனால் எங்கள்

உடலுங் குருதியும் அவளானாள்
உளத்தில் கொதிக்கும் அழலானாள்
மூச்சும் பேச்சும் அவளானாள்
மும்மைத் தமிழின் அணங்கானாள்.

அவள் வரலாறு கூறும் இப்பெருங்காப்பியம்
இருபதாம் நூற்றாண்டின் இலக்கியப் பேழை;
நாட்டின் நிலைக்கண்ணாடி;
மொழிக்கொரு காப்பியம்.

# புகழ்மாலை

## (பூங்கொடி வெளியீட்டு விழாவில்–1964)

இன்று நாட்டிலுள்ள நிலையை-தமிழுக்குத் தொண்டாற்றிய புலவர்களை, பேராசிரியர்களை, அரசியல் தலைவர்களை, அறிஞர்களை, நாவலர்களை, கலைஞர்களை வெவ்வேறு பெயர்களால் காட்டுகிறது பூங்கொடி.

**பண்டாரகர் அ. சிதம்பரநாதனார் M. A., Ph. D.**

தமிழ் வாழ, தமிழர் குறிக்கோள் வாழ வழி காட்டுகிறது பூங்கொடி.

**பண்டாரகர் மா. இராசமாணிக்கனார் M. A., Ph. D.**

ஆற்றொழுக்கனைய கவிதை யோட்டமும் ஆழ்ந்த கருத்துச் செறிவும் நிறைந்த காப்பியம் பூங்கொடி. அறப்போர்க்கும் மறப்போர்க்கும் விளக்கந்தரும் வரிகள் இதனை உறுதிப்படுத்தும். "ஆருயிர் கொடுப்பது அறப்போர் ஆகும், வேறுயிர் எடுப்பது மறப்போர் ஆகும்".

**பண்டாரகர் மு வரதராசனார் M. A., Ph. D.**

தாய்மொழிக்காகப் போராடிச் சிறை செல்வோரையும், பேரிடரைத் தாங்கிக் கொள்ளும் தலைவர்களையும் நினைவூட்டுகிறது இப் பூங்கொடி. இஃது உலக ஒருமைப்பாட்டுக் காப்பியமே என்பதற்கு அகச் சான்றுகள் பல உள.

**பண்டாரகர் தமிழண்ணல் M. A., Ph. D.**

உலக மொழிகளில் தேசியக் காப்பியம் என்று கூறத்தக்க நூல்கள் மூன்று. அம்மூன்றனுள் ஒன்று பூங்கொடி.

**பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார் M. A.**

தமிழன், யார் வேண்டுமானாலும், எது வேண்டுமானாலும் வரட்டும் என்று சொல்லும் பரந்த மனப்பான்மை படைத்தவன். அதற்காக எந்த மொழியாவது வந்து நம்மிடம் அமர்ந்து குழப்பம் செய்தால் கிளர்ந்தெழுவோம் என்று கூறுகிறாள் பூங்கொடி.

**செல்லபாண்டியனார் B. A., B. L.**

*சட்டமன்ற அவைத்தலைவர்–தமிழ்நாடு*

எப்பக்கம் சுவைத்தாலும் இனிப்பது கற்கண்டு; எப்பக்கம் படித்தாலும் இனிப்பது பூங்கொடி.

**உரைவேந்தர் அவ்வை சு. துரைசாமிப் பிள்ளை**

பாரதியார் என்ற வித்திலிருந்து முளைத்தது பாரதிதாசன் என்ற செடி. அச் செடியிலிருந்து தழைத்தது முடியரசன் என்ற கொடி. அக்கொடி பூங்கொடியாகி எங்கும் படர்ந்து மணம் பரப்புகிறது.

**பேராசிரியர் க அன்பழகன் M. A.**

* * *

இப்புதிய காப்பியப் படைப்பு, தமிழுக்கு மறுமலர்ச்சி அளிக்கும் ஒரு சீரிய பணியாகும். பூங்கொடி தமிழகப்பெண்டிர்க்கு நல்ல வழிகாட்டியாக அமைந்துள்ளாள். இக்காப்பியம் இலக்கிய இலக்கண வளஞ் செறிந்து, உவமை நலத்தாற் சிறப்புற்று விளங்குகிறது. பண்டைத் தமிழ்க் காப்பியங்களைப் போல் பிற்காலத்தில் தமிழில்புதுக்காப்பியங்கள் தோன்றிற்றில. அக்குறைபாட்டினை நீக்குமுறையில் இற்றைநாள் 'பூங்கொடி' தழைத்துள்ளாள்.

**-செந்தமிழ்ச் செல்வி, சனவரி 1965**

சித்திரத்தில் பார்ப்போம்; சிலை செய்து கும்பிடுவோம் என்னும்படியாகத் திகழும் இப்பூங்கொடி நல்லாளாகிய நம் உடன்பிறப்பாட்டி, தன்னைத் துறந்து, தமிழைக்காக்கின்ற செயல் நெறியே இவள் நமக்கு உணர்த்திச் செல்லும் தத்துவமாகும்.

**-தமிழ்ப்பாவை 7—1—1965**

தமிழ்த் தெய்வ வணக்கத்துடன் தொடங்கித் தமிழணங்கின் உணர்ச்சி மொழிகளுடனும் 'விடுதலை' மொழிகளுடனும் முடிவு பெறுகின்றது இந்நூல். புதுமை வழிகளில் செல்லாது பண்டைத்தமிழ் மரபை ஒட்டி அமைந்திருக்கும் இந்நூலும் இன்றைய தமிழுக்கு ஒரு நல்ல அணிதான்.

**-சுதேசமித்திரன் (பி-ஸ்ரீ.) 16—6—1965**

துள்ளும் நடையில் எழுதப்பட்டுள்ள சுவை நிறைந்த இக்காவியம் (பூங்கொடி) படிக்கப் படிக்க இன்பம் ஊட்டுகிறது.

**-வீரகேசரி 8—8—1965**

இந் நூலினுள் உவமைகள் பாங்குற எடுத்தாளப்பட்டுள்ளன. ஓசை நயம் மிகுந்த பகுதிகள் பல இந்நூலகத்து உண்டு. இயற்கைக்காட்சி வருணனைகள் எழிலுறத் தரப்பட்டுள்ளன.

-திருச்சி வானொலி நிலையம் 4—9—1965

இந்தக் கவிஞரின் அகவலில் ஓர் இன்பம் பெருகுகின்றது. சிறந்த சொல்லாட்சி மிளிர்கின்றது. கவிதை உள்ளம் பேசுகின்றது. ஆனால் தமிழ்ப் பெருமையைப் பரப்புவதற்கே உற்ற கருவியாய் இந்தக் காப்பியம் அமைந்து விட்டது. தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம் பெறும் என்பதற்கு ஐயம் இல்லை. அந்தி மாலைச் சிறப்பைப் பற்றி இவர் தரும் சித்திரம் நம் மனத்தை விட்டகலாது. இந்த இலக்கிய யாழ் முழுவதும் இன்பமாய் ஒலிப்பது நம் தமிழணங்கின் தெய்வக் குரல்தான். அக்குரலினுக்குச் செவி சாய்த்துத் தமிழ்த் தேவியை நாம் வணங்குவோமாக.

-தினமணி (ரா. ஸ்ரீ. தேசிகன்) 26—10—1965

இருபதாம் நூற்றாண்டில் எழுந்த புதிய காப்பியங்களில் இதற்குத் தனியிடம் உண்டு. ஒரு நாற்பதாண்டுக் காலத் தமிழ் நாட்டின் வரலாற்றை அது சுவைபட எடுத்துக் காட்டுகிறது. இக் காப்பியம் தமிழுக்குக் கிடைத்த ஒரு பெறற்கருஞ் செல்வம் எனலாம்.

-'தாமரை'யில் எழில் முதல்வன் ஏப்பிரல் 1967

காவிய நயத்துடனும் கவிதை மணத்துடனும் அமைந்துள்ள இந்நூல் முடியரசனைக் கவியரசனாக்குகிறது. ஒரு முறை படித்து முடித்த பிறகு, நயத்துக்காகவும் சொல்லழகிற்காகவும் இன்னொருமுறை படிக்க வேண்டுமெனத் தோன்றுகிறது.

-முத்தாரம் 1—5—1968

This is the Summary of the story in 31 Kathais or chapters in a chaste Flowing style with clear discriptions and picturesque situations. A close imitation of a master-piece of literature in all its parts in the same language can become stale. Otherwise the work which seems to be meant mainly in praise of the Tamil language is one which is laudable on its several Fronts.

THE HINDU 24—1—1965 -V-

# உள்ளுறை


| | | | |
|---|---|---|---|
| | பதிப்புரை | | |
| | முன்னுரை | | |
| | கதைச்சுருக்கம் | | |
| | தமிழ்த் தெய்வ வணக்கம் | ... | 1 |
| 1. | விழாவயர் காதை | ... | 3 |
| 2. | பழியுரை காதை | ... | 7 |
| 3. | பூங்கா புக்க காதை | ... | 12 |
| 4. | படிப்பகம் புக்க காதை | ... | 17 |
| 5. | தாமரைக்கண்ணி தோன்றிய காதை | ... | 23 |
| 6. | கல்லறை காண் காதை | ... | 31 |
| 7. | கடல் நகர் புக்க காதை | ... | 38 |
| 8. | கடல் நகரில் தங்கிய காதை | ... | 45 |
| 9. | திருக்குறள் கற்றுத் தெளிந்த காதை | ... | 49 |
| 10. | தொல்காப்பியம் உணர்ந்த காதை | ... | 54 |
| 11. | ஏடு பெற்ற காதை | ... | 59 |
| 12. | மலையுறையடிகள் வாழ்த்திய காதை | ... | 66 |
| 13. | மீனவன் வரலாறுணர்ந்த காதை | ... | 72 |
| 14. | சுவடியின் மரபு தெரிவுறு காதை | ... | 83 |
| 15. | இசைத்திறம் உணர எழுந்த காதை | ... | 92 |
| 16. | எழிலியின் வரலாறறிந்த காதை | ... | 98 |
| 17. | எழிலிபாற் பயின்ற காதை | ... | 107 |

| | | | |
|---|---|---|---|
| 18. | இசைப்பணி புரிந்த காதை | ... | 113 |
| 19. | கோமகன் மீண்டும் தோன்றிய காதை | ... | 126 |
| 20. | பெருநிலக்கிழார் வாழ்த்திய காதை | ... | 139 |
| 21. | நூல் நிலையம் அமைத்த காதை | ... | 149 |
| 22. | கோமகன் கொலையுறு காதை | ... | 156 |
| 23. | சிறைப்படு காதை | ... | 166 |
| 24. | சிறை விடு காதை | ... | 177 |
| 25. | கிழார்திறம் அறிந்த காதை | ... | 185 |
| 26. | யாழ் நூல் பெற்ற காதை | ... | 197 |
| 27. | அயல்நாடு சென்றுவந்த காதை | ... | 205 |
| 28. | சொற்போர் நிகழ்த்திய காதை | ... | 212 |
| 29. | அறப்போர் நிகழ்த்திய காதை | ... | 222 |
| 30 | சிறையகம் புகுந்த காதை | ... | 231 |
| 31. | விடுதலைக் காதை | ... | 237 |
| | அருஞ்சொற்பொருள் | ... | 243 |
| | ~~பிழை-திருத்தம்~~ | ... | [illegible] |


*

# பதிப்புரை

உலகில் பிறந்தவருட் சிலர், அவர் தம் நாட்டை, மொழியைக் காக்க உடல், பொருள், ஆவியை ஈந்துள்ளனர் என்பதை உலக வரலாறுகள் எடுத்துக் காட்டுகின்றன. அவ்வகையில் தமிழ்நாடும் குறைந்ததன்று என்று பெருமிதத்துடன் தலைநிமிர்ந்து நின்று எத்தனையோ நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறலாம்.

அந் நிகழ்ச்சிகளில் நினைவூட்டுவன சில; உணர்ச்சியூட்டுவன சில; மறைந்தன பல. ஆனால் மறக்க முடியாதன சில வுள. அவ்வரலாற்று நிகழ்ச்சிகளை உள்ளத்திற் கொண்டு உணர்ச்சி குன்றா வகையில் எளிய, இனிய நடையில் தமிழ்மொழி வளர்ச்சி ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது இப் பூங்கொடி. இப் பூங்கொடி வாயிலாகத் தமிழ்மொழியைப் பாரெங்கும் பரப்பக் கவிஞர் முடியரசன் முனைந்துள்ளார். கவிஞர் அவர்கள் புத்தம் புதிய போக்கில், மறு மலர்ச்சி எழுச்சி கொள்ள இதனைப் படைத்துள்ளார். இதன் சுவையை எல்லாரும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதே எங்கள் ஆவல்.

வழக்கம் போல உங்கள் ஆதரவு உண்டு என்ற நம்பிக்கையுடன் இரண்டாம் பதிப்பாக இதனை வெளியிடுகின்றோம். வணக்கம்.

புதுக்கோட்டை
14 — 3 — '70

பு. அ. சுப்பிரமணியன்,
*பதிப்பக உரிமையாளர்.*

# முன்னுரை

மொழிவளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு, இல்லறந் துறந்து, தன்னலம் வெறுத்துப் பொதுநலம் ஒன்றே பேணித்தன் வாழ்வையே கொடுக்க வல்ல பெண்மகளொருத்தி நம்தமிழகத்துக்கு வேண்டுமென எண்ணினேன். அவ்வெண்ணத்தின் விளைவே இப் பூங்கொடி

சமயங்கட்கெல்லாம் தனித்தனிக் காப்பியம் பெற்று மிளிரும் நம்தாய்மொழி, மொழிக்காக ஒரு காப்பியம் பெறுவதும் ஆக்கந்தானே!

மொழிநலங்கருதி முற்பட்டுவரும் இப்பூங்கொடி, இக்காலத்து நிகழ்ச்சிகள் பலவற்றை உள்ளத்தில் இறுத்தி, ஊருக்கு உரைத்து நிற்பாள். உலகம் அவற்றைச் செருது, வெருது சிந்திப்பதாக அவள் நடைபற்றிக் காய்தல் உவத்தல் அகற்றி, நடுநின்று உண்மை உரைப்பதாக

இப் பூங்கொடியை ஒப்பனை செய்து, தமிழகத்தே உலாவரச் செய்த வள்ளுவர் பதிப்பகத்தார்க்கும் இவள் நன்கனம் உருப்பெற்றொளிர உற்றதோர் நற்றுணையாய் நின்ற புலவர்கள் தமிழண்ணல், முத்தரசன், ஆ. பழநி முதலிய அன்பர்கட்கும் என் உளங்கனிந்த நன்றி உரித்தாகுக

*காரைக்குடி,*
14—3—1970.

*அன்பன்,*
**முடியரசன்.**

# கதைச் சுருக்கம்

தமிழகம், எங்கும் விழாக் கோலத்துடன் பொலிந்தது; பொங்கற் புதுநாள் அனைவர் உள்ளத்தையும் மகிழ்வித்துக் கொண்டிருந்தது. பகலும் இரவும் கலை நிகழ்ச்சிகள் சிறப்புற்றோங்கின. ஆனால், அருண்மொழியும் அவள் மகள் பூங்கொடியும் இசையரங்கேற வாராமையால் ஊரார் பலவாறு பேசினர். இதனால் வருந்திய வஞ்சி, தன் மகள் அருண்மொழிக்குத் தேன்மொழி வாயிலாகச் செய்தி கூறியனுப்பினள். மலையுறையடிகளுடைய குறளகத்திற் சேர்ந்த அவள், இத்துறையையே வெறுத்து வாராது நின்றனள். அருண்மொழி தன் தோழியாகிய தேன்மொழியிடம் தன் கணவன் வடிவேல் படுகொலையுண்டதைக் கூறக் கேட்டுக்கொண்டிருந்த பூங்கொடி தேம்பியழுதனள். அருண்மொழி, அவ்வழுகையை மாற்றப் பூங்கொடியைப் பூங்காவிற்கு அனுப்பினள். தோழியாகிய அல்லியும் உடன் சென்றாள்.

பூங்காக் காட்சிகளை இருவரும் கண்டுகளிக்கும் பொழுது பூங்கொடிமேற் காதல் கொண்ட கோமகன் அங்கு வருவதறிந்து, அஞ்சிய பூங்கொடி, ஆங்கிருந்த படிப்பகத்தினுட் புகுந்தாள். வெளியில் நின்ற அல்லியிடம், தன் உளக்குறிப்பை அவன் புலப்படுத்த, அவள் மறுத்துரைத்துப் பூங்கொடியின் துறவுள்ளத்தை எடுத்துரைத்தாள். கோமகன் ஆசை தணியானாகி யகலத் தாமரைக் கண்ணி அங்கே வந்தனள். அவள் இவ்விருவரின் நிலையறிந்து, முன் வந்த வழியே செல்லாது முத்தக் கூத்தன் கல்லறை வழியே செல்லுமாறு பணித்து, அவன் வரலாறும் கூறிப் பூங்கொடியைக் கடல் நகர்க்கு வருமாறு மொழிந்தகன்றனள்.

பூங்கொடியின் நினைவொடு போகிய கோமகனிடத்துத் தாமரைக்கண்ணி சென்று, இடித்துரை கூறி மீண்டனள். தாமரைக்கண்ணி கூறியவாறு, பூங்கொடி கடல் நகர்க்குச் சென்று, சொன்மழை பொழிந்து, கயவர் வீசிய கல்லடி

பட்டும் அஞ்சாது பணிபுரிந்தனள். இடைவிடாப் பணியால் திருந்திய மாந்தர்தம் வேண்டுகோட்கிணங்கிப் பூங்கொடி கடல் நகரிலே தங்க, தாமரைக்கண்ணி மட்டும் மீண்டனள். அந்நகருக்கு வந்த இலக்கியர் என்னும் நாவலர், பூங்கொடியைக் கண்டு, தம் முன் வரலாறுரைத்து, அவளுக்கு ஊக்கமூட்டித் திருக்குறட்குத் தெளிவுரையும் கூறி, விடை கொண்டனர்.

தாமரைக்கண்ணி இரண்டாம் முறையும் கடல்நகருக்கு வந்து, பூங்கொடிபால் கோமகன் செய்யும் தமிழ்ப்பணியுரைத்துப் பன்மொழிப் பயிற்சி பெறப் பணித்து, எழுச்சியூட்டித் தொல்காப்பிய விளக்கம் மொழிந்து, மீண்டனள். பூங்கொடி அந்நகரில் தங்கியிருக்கும் பொழுது, தமிழேடுகள் தேடித் தொகுக்கும் பணியை மேற்கண்ட நாவலூர் அமுதம் என்னும் மூதாட்டி, ஆங்கு வந்து, இவளை வாழ்த்திப் பாராட்டிக் கலைமகள் நிலையத்திலிருந்து தான் பெற்ற இசையுங் கூத்துங் கூறும் இருபெருஞ் சுவடிகளை ஈந்தனள். பூங்கொடி மகிழ்ந்து வணங்கிச் சுவடிகளுடன் தாயகம் மீண்டனள்.

மீண்ட பூங்கொடி மலையுறையடிகளிடம் நிகழ்ந்தவை கூறி, மீனவன் என்பான் விடுத்துச் சென்ற இருபெருஞ் சுவடிகளையும் நாவலூர் அமுதம் தந்தமையையும் மொழிந்து நின்றனள். அடிகளார் மகிழ்ந்து, மாந்தர்க்கு எழுச்சியூட்ட, மீண்டும் இசைப்பணி புரிய எழுமாறு பணித்துப் பொதுப்பணிக்கு வேண்டும் பண்புகளையும் விளக்கி வாழ்த்தியருளினர். மேலும் அவர் மீனவன் வரலாற்றையும் கூறியருளினர்.

"நெல்லூர் என்னும் ஊரில் பொன்னி என்பவள் தன் தந்தையை மீறி வில்லவன் என்பானைக் கலப்புமணஞ் செய்து கொண்டனள். அவள் ஆண் மகவொன்றைப் பெற்று மறைந்தனள். வில்லவன் மனம் நொந்து, குழந்தையை ஒருவரிடம் கொடுத்து, உலகை வெறுத்துச் சென்றுவிட்டான். கற்று வளர்ந்த அவ்விளைஞனே மீனவன். அவன் புரட்சி மனப்பான்மையுடையவனாய் விளங்கினன். ஒரு நாள் சிலரால் தாக்குண்டான். பழமையில் ஊறிய மாந்தர், இவனை வளர்ப்போர்க்குப் பல தொல்லைகள் தந்தனர். தன்னாலன்றோ இத்தொல்லைகள் இவர்கட்கு நேர்கின்றன என எண்ணிய மீனவன் யாரும் அறியா வகையில் புறப்பட்டுக் கூடல் நகரினை அடைந்தான்.

கூடல் நகரில் மீனவன் பணிபுரிந்து வருங்கால், அங்கிருந்த தமிழ்ச் சங்கத்தில் இசைச் சுவடியொன்று கிடைக்கப் பெற்றான். அதன் துணை கொண்டு இசை பரப்பும் நாளில், ஏமகானன் என்னும் வடபுலத்திசை வல்லான், தங்கத்தேவன் ஏவலால் மீனவனிடம் வந்து, வடநாட்டிசை பயிலச்சொன்னான். மீனவன் மறுத்து எள்ளி நகையாடி அனுப்பிவிட்டான். வெட்கித் திரும்பிய ஏமகானன் தூண்டுதலால் சீற்றங் கொண்ட தங்கத்தேவன் மீனவனைக் கொலை செய்ய முயன்றான். அத் தீமையிற் றப்பிப் பிழைத்த மீனவன், கூடலை விட்டு வேறிடஞ் சார்ந்தனன். எனினும் கொடியோன் ஏவத் தீயோர் சிலர் அவனைக் கொலை செய்து விட்டனர். அவன் இறக்கும்பொழுது இசைச் சுவடியைக் கலைமகள் நிலையத்திற் சேர்க்குமாறு பணித்தனன். அச்சுவடி பூங்கொடி யாகிய நின்பால் வந்துற்றது. இதன் துணையால் மீண்டும் இசைப்பணி புரிக'' என அடிகள் உரைத்துச் சென்றனர்.

அருண்மொழியும் இசைவு தந்து, இசைச் சுவடியின் விளக்கத்தை எழிலி என்னும் பாதரசியிடம் சென்று பெறுமாறு பணித்தனள். பூங்கொடி, எழிலியின் வரலாறறிய விழைந்தனள். அடிகளும் கூறுவாராயினர் "கொடுமுடியில் பிறந்த எழிலி இசைத் துறையில் ஒப்புயர்வின்றி விளங்கினாள். அப்பொழுது புகழ்பெற்ற கூத்தன் ஒருவனைக் கலப்பு மணம் செய்து கொண்டாள். ஒரு சமயம் கூத்தின் பொருட்டு அயல் நாடு சென்று திரும்பும் பொழுது, புயலால் மரக்கலம் உடைய, அருகில் இருந்த ஒரு தீவை அவன் அடைந்தான். தப்பிப் பிழைத்த சிலர், கூத்தன் இறந்தானென்று எழிலியிடம் கூற, அளவிலாத் துன்பம் அடைந்திருந்தாள். தீவினுள் நுழைந்த கூத்தன் அத்தீவின் தலைவன்பால் தன் திறமை காட்டிப் பரிசில் பல பெற்று ஊர் திரும்பினன். திரும்பிய அவனைக் கண்டு எழிலி அளவிலா உவகை எய்தினள். அப்பெருமாட்டியிடம் இச்சுவடியிற் சொல்லிய செய்திகளைத் தெரிந்து கொள்க'' என்றனர்.

பூங்கொடி எழிலிபாற் சென்று இசை நுணுக்கம் பயின்று யாப்பிலக்கணமும் தெளிந்து, இரு துறையிலும் வல்லவளாக விளங்கினாள். இது கண்டு மகிழ்ந்த அடிகளார் இசைப்பள்ளி ஒன்றனை நிறுவிப் பயிற்றும் பொறுப்பைப் பூங்கொடிபால் ஒப்படைத்தனர். இப்பணி நடைபெற்று வருங்கால் சண்டிலி என்னும் வடபுலத்துப் பெண்ணொருத்தி இசை பயில வந்தனள்.

அவளும் ஆர்வத்தால் அத்துறையில் மேம்பாடடைந்தனள். அவள் முன்பொருகால் தென்னாட்டு மலைவளம் காண வந்து, பொதிகையில் கணவனோடு தங்கியிருந்தனள். அங்கே இசைச் செல்வி ஒருத்தியின் தேவார இசை கேட்டு மயங்கித் தமிழ் இசையை வேட்டுத் தனக்கு அவ்விசையைப் பயிற்றுமாறு வேண்டினள். அவ்விசைச் செல்வி பூங்கொடியிடம் செல்க என ஆற்றுப்படுத்த இங்கு வந்து சேர்ந்தனள். பயின்று முடித்த சண்டிலி இசைப்பணி புரிய வேங்கை நகர்க்கு வருமாறு பூங்கொடியை வேண்டினள். இவளும் இசைந்து அடிகளிடம் ஒப்புதல் பெற்று, வடபுலம் சென்று இசைப்பணி புரிந்தனள்.

மண வாழ்வு வெறுத்த பூங்கொடியை நினைந்து வருந்திய வஞ்சி, கோமகனை அடைந்து, அவனைத் தூண்டி, அவனுள்ளத்தே மீண்டும் காம உணர்ச்சியை உண்டாக்கி அவனை வேங்கை நகர்க்கு அனுப்பினள். அவன் இசை பயில்வான் போன்று, பூங்கொடிபாற் சென்று தன் உள்ளக் குறிப்பைப் புலப்படுத்தினன். அவள் அறவே வெறுத்துக் கூறி அனுப்பி விட்டாள். தோல்வியால் கலங்கிச் சினந்து செல்லும் கோமகன் எவ்வாறேனும் இவளை அடைவேன் என வஞ்சினம் கூறிச் சென்றான். அந்நகரில், இசையில் பெரு விருப்பங்கொண்ட பெருநிலக்கிழார் என்பவர் பூங்கொடியின் இசைப் புலமையைக் கேள்வியுற்று அவளுக்கு அழைப்பு விடுத்தனர். அவளும் தனித்து இங்கு வந்து பலவகை இசையும் பாடி மகிழ்வித்தனள். மகிழ்ந்த அவர், இவள் தன் மகள் போல் இருத்தலான், மேலும் மகிழ்ந்து, வாழ்த்துரை கூறினர். ஆடலிலும் பாடலிலும் சிறந்திருந்து, இறந்து போன தன் மகளைப் போலவே விளங்கும் இவளையும் மகளாகவே கருதிப் பூங்கொடிக்கு உதவ நினைத்தனர். அதன்படி பூங்கொடியின் வேண்டுதலால் மிகப் பெரிய நூலகம் ஒன்று நிறுவ இசைந்தனர்.

இசை பயிலும் சண்டிலியைக் காண வந்திருந்த அவள் கணவனாகிய துருவன், அம்மாளிகையின் ஒரு பால் தங்கியிருந்தனன். அந்நள்ளிரவில் கோமகன் பூங்கொடியின் அறையை நோக்கிப் பதுங்கிப் பதுங்கி நடந்தான். இதனைக் கண்டு ஐயுற்ற துருவன், தவறுதலாகச் சண்டிலியின் அறையுட் புகுந்த கோமகனைக் கொலை செய்து விட்டுச் சண்டிலியோடு ஓடி மறைந்தான். பெருநிலக்கிழாரிடம் விடை பெற்றுத்திரும்பிய பூங்கொடி, கோமகன் கொலையுண்டு கிடப்பதைக்கண்டு அஞ்சிப் பதறிக் கிழாரிடம் சென்றாள். கொலைச் செய்தியறிந்த ஊர்காவ

லர் இங்கு வந்து ஆய்ந்தனர். அப்பொழுது கிழாருடன் பூங்கொடி வர, அவளை ஐயுற்ற காவலர் சிறைப்படுத்தினர். செய்தியிதழின் வாயிலாக இதனை யறிந்த துருவன் சண்டிலி யோடு அறமன்றத்திற்கு வந்து, உண்மையைக் கூறி அவளை விடுவித்தான்.

அருண்மொழியும், அடிகளும் பூங்கொடி சிறைப்பட்ட செய்தியறிந்து, விரைந்து வந்து, அவள் விடுதலை பெற்றதறிந்து மகிழ்ந்தனர். பூங்கொடி, ஒருவர்க்கொருவரை அறிமுகஞ் செய்தாள். கிழார் அருண்மொழி முகத்தை உற்று நோக்கிக் கலங்கியிருக்க, அடிகளார் அதன் காரணம் வினவினர். அதற்கு அவர், 'அருண்மொழி முகம் என் கடந்த கால நிகழ்ச்சிகளை நினைவூட்டியது' என்று சுவரில் மாட்டிய படமொன்றைக் காட்டினர். கிழாரும் அவர் மனைவியும் சேர்ந்து எடுத்துக்கொண்ட படம் அது. அருண்மொழி முகமும் அப்படத்திலுள்ள பெண் முகமும் ஒன்று போலிருந்தன. யாவரும் திகைத்தனர். 'இவள் பெயர் என்ன?' என்று அருண்மொழி வினவினள். பெருநிலக் கிழார் 'நான் வாணிகத்தின் பொருட்டுக் காழகம் செல்லும்பொழுது கப்பலில் இவளைக் கண்டேன். எங்கள் விழிகள் கலந்தன. பின்பு காழகத்து இசையரங்கில் அவள் இசையைக் கேட்டு மயங்கினேன். அவளையே மணமும் செய்து கொண்டேன். சில ஆண்டுகளில் பெண் மகவொன்றை ஈன்று உயிர் துறந்தாள். அப்பிரிவுத் துயரைக் குழந்தையின் முகம் பார்த்து மாற்றி வந்தேன். அம்மகளும் கட்டிளம் பருவத்தே காலன் வாய்ப்பட்டனள். என் மனையாள் பெயர் எலங்குழலி' என்று விடை தந்தனர். இது கேட்டு அலறிய அருண்மொழி, 'அவள் என் உடன் பிறந்தவளே; இளமையில் எங்களைப் பிரிந்தாள்' என்று முன்னைய வரலாறு உரைத்து, 'இப்பூங்கொடியும் உங்கட்கு மகள் முறையே ஆவாள்' என்றனள். அனைவரும் மகிழ்ந்து, சிலநாள் அங்கு உறைந்து, நால்வரும் மணி நகர்க்குப் புறப்பட்டனர். வழியில் கோட்டை நகரில் இறங்கிக் கோனூர் வள்ளலைக் கண்டு மகிழ்ந்தனர்.

கோனூர் வள்ளலின் மாளிகையில் மயில்வாகனரைக் காணும் பேறும் பெற்றனர். அவர் பதினைந்து ஆண்டுகள் ஆய்ந்து எழுதிய யாழ்நூல் ஒன்றனைப் பூங்கொடிக்குத் தந்து, அதன் விளக்கமும் கூறினர். பின்னர், மயில்வாகனர் அறிவுரைப்படி பூங்கொடி அயல் நாடுகள் பலவுஞ் சென்று,

தமிழின் சிறப்பை உணர்த்தி, ஆங்காங்குள்ள அறிவியல் நூல்கள் பலவுங் கொண்டு தமிழகம் திரும்பினுள். புதுப்புது நூல்கள் படைத்தாள். தமிழ் மொழி குறித்து எதிர்ப்புரை பகர்வார் பலருடனும் சொற்போர் புரிந்து தமிழுக்கு வெற்றி தேடித் தந்தாள்.

தமிழகத்தே மொழிப் பற்றுடையார் பலரும் கூடி, மாநாடு ஒன்று கூட்டி, மொழி காக்க அறப்போர் தொடுப்பதென்று முடிவு செய்தனர். அறப்போர் தொடங்கியது. அதனல், அருண்மொழி முதலாகப் பலரும் சிறை ஏகினர். பூங்கொடியும் பொங்கிய உணர்வால், பூரிப்புடன் சிறையகம் புகுந்தனள். சிறையில் அப்பெருமாட்டி நோய்வாய்ப்பட்டாள். நோயின் கொடுமை மிகுதிப்பட, மருத்துவமனைக்கு அவளை எடுத்துச் சென்றனர். அங்கும் நோய் தணிந்திலது. இதனைக் கண்ட அரசு விடுதலை ஆணை பிறப்பித்தது. அவ்வாணை வருமுன், பூங்கொடியின் உயிர் அவள் உடலிலிருந்து விடுதலை பெற்றது.

*

# பூங்கொடி

*

## தமிழ்த் தெய்வ வணக்கம்

தாயே உயிரே தமிழே நினைவணங்கும்
சேயேன் பெறற்கரிய செல்வமே — நீயே
தலைநின்ருய் இவ்வுலகில் தாள்பணிந்தேன் நீயிங்
கிலையென்ருல் இன்பமெனக் கேது.

பாவால் தொழுதேத்திப் பாரில் நினையுயர்த்தும்
ஓவாப் பணிசெய்ய உன்னுகின்றேன் — நாவாழும்
மூவா முதலே முழுமைபெறும் செம்பொருளே
சாவா வரமெனக்குத் தா.

தென்பால் உகந்தாளும் தெய்வத் திருமகளே
என்பால் அரும்பி எழுமுணர்வை — அன்பால்
தொடுத்தே அணிதிகழச் சூட்டினேன் பாவாய்
அடிக்கே எனையாளண் டருள்.

## படைப்பு

என் பிள்ளைமைப் பருவத்திலேயே எனக்குக் கவிதை யுணர்வை ஊட்டி யூட்டி வளர்த்தவரும் என் தாய் மாமனுமான காலஞ் சென்ற கி. துரைசாமி அவர்கட்கு இந்நூலைப் படைத்து வணங்குகின்றேன்

— முடியரசன்.

# 1. விழாவயர் காதை

## தமிழகச் சிறப்பு

அலையெழு நெடுங்கடல் ஆடை உடீஇய
நிலமகள் தனக்கு நிறைமதி முகமெனும்
நாவலந் தீவின் நாடியாய் விளங்கும்
பாவலர் புகழ்தரு பண்டைத் தமிழகம்
மேவலர் அணுகா வீரங் கெழுமிய
காவலர் மூவர் கயல்புலி வில்லெனும்
கொடிமூன் றுயர்த்திக் கோலோச் சியது;
சங்கம் நிறீஇத் தமிழ்மொழி ஓம்பிப்
பொங்கும் புகழ்வரப் பொலிந்தநன் னாடு;
'யாதும் ஊரே யாவருங் கேளிர்'என்
றோதி ஓதி உயர்ந்ததோ டன்றி
வருபவர் தமக்கெலாம் வணங்கி வரவுரை
தருவது தொழிலாய்த் தான்கொண் டதுவே.

## பொங்கல் வந்தது

அயலவர் மொழிக்கெலாம் ஆளுகை தருதல்
தவறென உணரார் தாய்மொழி ஈங்குச்

சிறுகச் சிறுகச் சீரிழந் தேகுதல்
அறியக் காணார் அயர்ந்தனர்; அந்நாள்
பொங்கல் நாளெனும் மங்கலத் திருநாள்
எங்கணும் மகிழ்ச்சி இலங்கிட வந்தது;

## அறிக்கை விடுதல்

கட்சி சமயங் கருதிடா நல்லோர்
நச்சி ஒருசிலர் நாட்டு மக்கட்கு
ஆய்ந்து வரைந்ததோர் அறிக்கை அனுப்பினர்;

## விழாக் கொண்டாடுக

'தமிழர் திருநாள் தைமுதல் நாளாம்
அமிழ்தென இனிக்கும் பொங்கல் திருநாள்
உழைப்பின் உயர்வை உணர்த்தும் பெருநாள்
சளைப்பிலா முயற்சி தருபயன் பெற்றுப்
புதுமை இன்பம் பூணும் நன்னாள்
இதுவே பெருவிழா எனக்கொண் டாடுக;
ஆங்காங் குறையுநர் அயலவர் பண்புகள்
நீங்கிய திருநாள் நினைந்திதைப் பேணுக
பிறபிற பண்புகள் பேணிய போதும்
நமக்கென மொழியும் நாளும் உளவென
உலகம் அறிய உணர்த்துவம் வாரீர்;

## நகரை அணிசெய்க

பல்வகைத் தோரணம் பாங்குடன் நாற்றுமின்
வளர்குலைக் கமுகும் வாழையுங் கட்டுமின்
கிளரொளி மாடங் கிளைபடு குடிசை
யாங்கணும் யாங்கணும் ஓங்குக இன்பம்

### ஒற்றுமை பரப்புக

எத்திசை நோக்கினும் எழுப்புக மேடை
தத்தங் கொள்கை தவிர்த்து நாடும்
மொழியும் வளம்பெற முன்னுவ தொன்றே
வழியெனக் கருதி வழங்குக பேருரை
முத்தமிழ் ஒலியே முழங்குக யாண்டும்
சிறுசிறு பகையைச் சிந்தைவிட் டகற்றுக
ஓரினம் நாமென உன்னுக பெரிதே.

### வாழிய வாழிய

காரினம் மழையைக் கரவா தருள்க
பசிப்பிணி வறுமை பகைமை நீங்கி
வசைக்கிலக் கிலதாய் வளர்க அரசியல்
செல்வங் கல்வி சிறந்துமிக் கோங்குக
வாழிய பொங்கல் வாழிய திருநாள்'
என்னுமிவ் வறிக்கை எங்கணும் பரந்தது;

### பொங்கற் கொண்டாட்டம்

பொழிபனி கழியப் பொங்கலும் வந்தது;
எழில்பெறச் செய்தனர் இல்லந் தோறும்
வெண்ணிறச் சுண்ணம் விளைத்தது தூய்மை;
கண்கவர் முறையிற் கட்டினர் தோரணம்;
வண்ணப் புத்துடை வகைவகை பூண்டு
கன்னல் துண்டினைக் கடித்திடும் சிறுமகார்
தெருவினில் ஓடித் திரிந்தனர் யாண்டும்;
கருவிழி மகளிர் கடும்புனல் ஆடித்
தறிதரும் ஆடை தரித்தனர் ஆகி
நெய்வழி பொங்கல் செய்ம்முறை செய்து
கைவணம் காட்டிக் காதலர் மகிழப்

படைத்தனர் பிறர்க்கும் பகிர்ந்து கொடுத்தனர்;
கடைத்தெரு வெங்கணும் களிகொள் ஆட்டம்;

### ஏறு தழுவினர்

கவைபடு கூரிய காளையின் கொம்பிடைத்
துவைபடத் தழுவிச் சுற்றிய துணிமணி
அவிழ்த்தன ராகி ஆர்த்தனர் காளையர்;
அன்பிற் சூரிய ஆடவர் காளையை
அஞ்சில ராகி நெஞ்சுரங் காட்டிக்
குழுவினர் நடுங்கத் தழுவுதல் கண்டு
வஞ்சியர் களித்தனர் வாழ்த்தொலி கூவினர்;

### கலை நிகழ்ச்சி

அறிஞர் ஒருபால் ஆய்வுரை நிகழ்த்தினர்,
கலைபயில் கூத்தினைக் கண்கவர் அரங்கில்
இலஙிகர் எனுமா றேற்றினர் கலைஞர்,
இசையொலி கடலொலி பிறக்கிட எழுந்தது,
வசையெனப் பிறமொழிப் பாடல்கள் வழங்கிலர்
தமிழே இனிமைத் தமிழே இசைத்தனர்,
மணிநகர் எங்கணும் மாபெருந் திருநாள்
அணிபெறத் திகழ்ந்தது ஆர்ப்பொலி யுடனே.

*

# 2. பழியுரை காதை

### வஞ்சியின் கவலை

முத்தமிழ் காக்கும் முதற்பணி பூண்ட
நத்தும் வடிவேல் நன்மணம் புணர்ந்த
பத்தினித் தெய்வம் பாங்குயர் அருண்மொழி
இத்தரை உய்ய ஈன்றருள் மகளாம்
தத்தை பூங்கொடி தாயொடு மங்கலத்
தைத்திரு நாளில் தமிழிசை வழங்க
வாராத் துயரால் மயங்கிய வஞ்சி
சோரா நின்றனள் ; தன்மகட் டோழி
தேன்மொழி யைக்கூஉய்த் திருநகர் கூறும்
தீமொழி அருண்மொழிக் குரையெனச் செப்பினள்;

### தேன்மொழி செல்லல்

அவ்வுயிர்த் தோழியும் அருண்மொழி நிலைக்கு
வெவ்வுயிர்த் தேங்கும் வினையினள் ஆதலின்
பூங்கொடி தன்னோ டருண்மொழி வைகும்
பாங்குடை இல்லிற் புகுந்தனள் பாங்கி;
அருண்மொழி மேனி அழிநலங் கண்டு

மருண்மனங் கொண்டு 'மங்காய் நின்னை
இவ்வூர் மாக்கள் இகழ்ந்துரை கூறினர் ;

## அருண்மொழியின் இசைப்புலமை

செவ்விய இசைநூல் இவ்வுல குள்ளன
அவ்வள வும்பயில் அறிவினள்; பிறமொழி
இசைபல முயன்று வசையற வுணர்ந்து
நசையுடன் ஆய்ந்து நம்தமிழ் இசைக்கே
ஆக்கம் தந்தவள் ; அரியதோர் இசைப்புனல்
தேக்கிய கலைக்கடல் ; தெள்ளிய இசையால்
உலகை வென்றவள் ; உயர்ந்தவள் குரலால்
குழலும் யாழும் கொட்டம் அடங்கின ;
பாடும் முறையாற் பாவை பாடுவள் ;
ஆடாள், கோணாள், அங்கக் குறும்புகள்
நாடாள், அந்த நல்லிசைச் செல்வி
வாயிதழ் விரியின் வானிசை கேட்கும்
சேயிதழ் மலர்க்கை தாளச் சீர்இடும்
அன்னவள் காண அரங்கம் இல்லை
பொன்மிகக் குவித்தாள் புகழோ மிகுத்தாள் ;

## ஊரார் பழிமொழி

இசைத்தொழில் புரியும் இவள்இத் தொழிலை
வசைத்தொழில் என்று வெறுத்திடல் என்கொல் ?
செருக்கினள் கொல்லோ ? செல்வம் மிகவாய்ப்
பெருக்கினள் கொல்லோ ? என்றுரை பேசி
ஏளனம் செய்தனர்' என்ற தேன்மொழிக்கு

## அருண்மொழி அலருக்குக் கூசாமை

அருண்மொழி நகைத்தனள் அருளினள் சிலசொல்;
'பொதுப்பணி புரிவோர் புகழ்வும் இகழ்வும்

நினைத்திடல் வேண்டும் ஒருநிகர் எனவே;
ஆருயிர்த் தோழி! அந்நாள் வடிவேற்
பேருடைச் செம்மலைப் பேணினன் காதற்
கொழுநர் என்று கொண்டபின் ஊரார்
இழிசொல் எத்துணை ஏசினர் அறியாய்?
கலப்பு மணத்தைக் கடிந்துரை யாடினர்
கலைத்தொழில் புரிந்தேன் கற்பினைப் பழித்தனர்
மலைத்திலேன் சிறிதும், மனமுங் கூசிலேன்;

## வள்ளி குறிக்கோள் வாழ்வினள்

அவர்முதன் மனையாள் அரும்பெறல் வள்ளி,
எவர்துயர்ப் படினும் எழுந்துடன் சென்று
துன்பம் நீக்கலில் இன்பங் கொள்வாள்;
என்பும் பிறர்க்கே எனுங்குறி வாழ்வினள்;
பொதுநலத் தொண்டே புந்தியிற் பதிந்தவள்;
எதுசரி எனமனம் ஏற்குமோ அதனைத்
துயர்பல நேரினும் துணிவுடன் ஆற்றும்
அயர்விலாக் கணவர் அரும்பணிக் கிசைந்தவள்;
அடிமை வாழ்வில் அருவருப் புற்று
விடுதலை வேட்டு வீறுற் றெழுந்த
நல்லவன் ஒருவனை நாய்மகன் சுடுங்கால்
ஒல்லென ஓடி ஒப்புயர் வில்லாள்
தன்னெஞ் சேற்றுத் தான்மடிந் தனளே!

## வள்ளியின் மகளே பூங்கொடி

வன்னெஞ் சினர்அவ் வள்ளியின் வாழ்வை
இகழ்ந்ததும் அறிவேன்; என்வயி றீன்ற
மகளே யாயினும் வள்ளியின் மகளே
பூங்கொடி என்று பொருந்தினேன் ஆதலின்

ஆங்கவள் தன்னை இசைத்துறை அறுத்துப்
பாங்குடன் பொதுநலப் பணிக்கே ஆக்கினென் ;

## வடிவேல் படுகொலை

ஆங்ஙனம் அன்றியும் அரும்பெறற் காதலர்,
நிலத்தினில் மடமை நிறைந்திடல் கண்டு
பகுத்தறி வூட்டும் பகலவன் ஆவர் ;
சொல்லின் செல்வர், சோர்விலர், தொண்டர்,
அல்லும் பகலும் ஆருயிர்த் தமிழே
வெல்லும் வகையால் வீரம் விளைத்தவர் ;
நல்லவர் இவரை நரிக்குணம் விஞ்சிய
கொல்லும் பகைக்குணம் கொண்டோர் ஒருசிலர்
தூண்டுதல் செய்யத் துணிவுடன் கூடி
நீண்ட புளிமரக் கிளைதனில் நேயரை
அந்தோ தூக்கி ஆருயிர் வவ்வினர் ;
இந்தவெந் நிலையில் இசைத்தொழில் புரிவதோ ?

## மலையுறை அடிகள் வருகை தருதல்

வெந்துயர் வாட்ட வேலரின் நினைவால்
மனநலி வெய்தி மனையுறை நாளில்
நினையா நிலையில் நீளருட் செல்வர்
மலையுறை யடிகள் வந்துநின் றருளினர்
துயரம் நீங்கச் சொற்றனர் சிலசொல் ;

## அடிகளார் அறிவுரை

மாதே! 'பிறப்பும் மாய்வும் இயற்கை
யாதே முயலினும் தடுத்திடல் அரிதே!
பெறலருங் கொழுநன் பிணியால் மாண்டிலன்
பிறரெவ ரும்பெறாப் பெருநிலை பெறவே

ஆருயிர் ஈந்தனன் அவனோர் வீரன் ;
வீரப் பெருமகன் விடுபணி தொடர்ந்து
புரிந்தனி ராயின் பொருந்திய துயரம்
முறிந்திடும் ; அவனுளம் நிறைந்திடும் ஆதலின்
முயன்றுறு செல்வம் முத்தமிழ்க் கல்வி
உயர்ந்திட உதவுக, உழைப்பும் நல்குக,

## உழைப்பினை உதவுக

கோவிலில் தமிழொலி குடிபுக வேண்டி
மேவிய விருப்பால் மேலோர் சிலரோடு
ஒல்லும் வகையால் உழைத்தும், ஊர்தொறும்
சொல்லியும் வருதல் தொழிலெனக் கொண்டுளேன்;
அச்செயல் ஆற்ற அரிவையர் சிலரும்
நச்சின ராகி உழைப்பினை நல்கின்
மெச்சிடும் வெற்றி மேவுதல் திண்ணம்,
என்றனர் யானும் எழிற்பூங் கொடியும்
ஒன்றிய உணர்வால் ஒப்புதல் தந்தோம் ;
சென்றுநீ தாய்க்கும் பிறர்க்கும் செப்'பெனச்
சென்றனள் தேன்மொழி செயலற வுற்றே. (104)

*

# 3. பூங்கா புக்க காதை

## பூங்கொடி அழுகை

தேன்மொழிக் கருண்மொழி செப்பிய துயருரை
ஆன்றரு பாலெனும் அருட்பா திளைத்திடும்
பூங்கொடி செவியிற் புகுந்தது ; புகுதலும்
ஓங்கிய பெருவளி உற்றிடு துகிற்கொடி
படபடத் தாலெனப் பதைத்தனள் நெஞ்சம் ;
மடமை யகற்ற மனங்கொளீஇ நிலத்துக்
கடமை யாற்றுழிக் கைதவ மாந்தரால்
பெற்றோ ரீங்குப் பட்டவெந் துயரால்
உள்ளிற் புண்ணாய் உருகிய குருதி
வெள்ளப் புனலாய் விழிவழி வழிந்தது;
கண்ணீ ரிடைவிரி கருவிளை மலரென
எண்ணும் படிக்கிரு கண்களும் இலங்கின ;
சுமையாய்த் துயரம் சுமந்திடற் கியலா
அபயத் திருப்போர் அழுதிடல் இயல்பே ;
அழுதிடல் ஏனெனின் அப்பெருந் துயரைக்
கழுவும் ஆற்றல் கண்ணீர்க் குளதென

நம்புவர்; அதனால் நலிவுங் குறைகுவர்;
பூங்கொடி தனக்கோ பொங்கிய துயரம்
நீங்கிற் றிலது நெஞ்சம் விம்மத்
தேம்பித் தேம்பித் தெரிவை அழுதனள்;

### பூங்கொடி அழுகையை அருண்மொழி மாற்றுதல்

பூங்கொடி கண்ணீர் புத்தகம் நனைத்திட
ஆங்கது கண்ட அருண்மொழி வெதும்பிக்
கண்ணீர் மாற்றிக் கவலையை ஆற்ற
எண்ணினள் குறுகி, 'ஏனோ கலங்கினை?
மக்கள் கலக்கம் மாற்றிடல் ஒன்றே
தக்கதென் றெண்ணிச் சார்ந்தனம் ஈண்டு;
நாமே கலங்குதல் நன்றோ? நம்பணி
ஆமோ பூங்கொடி! அவலம் விட்டொழி
மலர்வனம் சென்று மாற்றுக கவலை
அலர்பூங் காவுள் ஆறுதல் கிட்டும்;

### பூம்பொழில் தந்திடும் ஐம்புல இன்பம்

பலர்முகம் கண்டும், பாட்டொலி கேட்டும்,
சிறுவர் ஆடிடும் சிரிப்பொலி கேட்டும்,
நறுநீர் அருந்தி நளிகனி உண்டும்,
மலர்மணம் நுகர்ந்தும், வருசிறு தென்றல்
தளிருடல் வருடத் தருநலம் பெற்றும்
களிமிகு மனத்தொடு திரும்'பெனக் கழறினள்;

### பூங்கொடியின் அழகு

உடனுறை தோழி அல்லி உரைப்போள்
பூங்கொடி நல்லாள் பொற்பின் செல்வி,
தேங்கெழில் இளமை செறிதரு சிற்பம்,

சிற்றிடை கொடியைச் சிரிக்கும், பிறையெனும்
நெற்றியிற் புருவம் வில்லினை நிகர்க்கும்,
அவ்வில் லடியில் அம்பென இருவிழி
செவ்விதின் நிற்கும், செவ்வா யிதழில்
புன்னகை மின்னும், பொலிவுறச் சுருள்படு
பின்னலில் இணையாப் பிரிந்துள கருங்குழல்
நுதலிடைக் கிடந்து நுடங்கும்அக் காட்சி
கவிஞன் ஓவியன் கற்பனை தூண்டும்,
நடைக்கோர் உவமை நவிலவும் ஒல்லுமோ?

## உலுத்தர் தொல்லை

கடைத்தெரு வழியே காரிகை தனியாய்
ஏகின் சிற்றினம் ஏதம் விளைக்கும்;
நாகிளம் பருவ நல்லியல் மாதர்
உறுதுணை யின்றி ஊரில் வெளிச்செலின்
நரியென வேட்டை நாயெனத் தொடர்ந்தே
ஊறுகள் செய்யும் உலுத்தர் பல்கினர்
மக்கட் பண்பு மங்குதல் கண்டோம்
தெக்கணம் இப்படித் தேய்வது நன்றோ?

## அல்லியின் வரலாறு

வளநகர் ஈங்குநான் வந்தது கேளாய்
களமர் கெழுமிய கண்கவர் பொழில்சூழ்
மயில்நகர் எனும்பேர் மருவிய நகருள்
கோசிகப் பேரினன் குலக்கொடி யாவேன்;
மாசி மாமகத் தண்புனல் ஆடும்
ஆசை துரப்ப ஆணை கோரினேன்;
தந்தை தடுத்தும் தவிரும் ஆர்வம்
உந்த அவருரை உதறித் தனிமை

அஞ்சிலேன் ஆய்விலா நெஞ்சினேன் சென்றேன்;
ஒருமகள் ஆதலின் உருத்துத் தடுக்கா
திருந்தனர், ஆங்கோர் இடுக்கண் நேர்ந்தது;

### வெருகன் நய வஞ்சகம்

நீறுறு நெற்றியன் நிகரிலாச் செல்வன்
ஏறெனப் பொலிவுறும் இளைஞன் அழகன்
காண்போர் மயங்கும் காட்சியன் உலகில்அவ்
ஆண்போல் ஒருவனைக் காணுதல் அரிது
பிறர்மனங் கவரப் பேசும் வன்மையன்
அறமுறு செயலே ஆற்றுவான் போல
எண்ணும் வகையில் இருப்பவன் வெருகன்
கன்னி என்னை நயவஞ் சகமாக்
கடத்திச் சென்றான் கதறியும் பயனிலை
விடலை தமியளை வீழ்ந்திடச் செய்தனன்;
அவன்மொழி நம்பி அவன்வழிப் பட்டேன்
தவலரும் வாழ்வு தக்குமென் றிருந்தேன்
என்னலம் உண்டான் எண்ணம் முடிந்ததும்
உன்னிலன் அறத்தை ஒளிந்தனன் ஓடி;
செல்வமும் வேடமும் செய்பிழை மறைக்கும்,
மாசுறு கற்பை மறைப்பது யாங்ஙனம்?

### யானும் உடன் செல்வேன்

இழிவும் வசையும் ஆடவர்க் கில்லை
பழியும் நலிவும் பாவையர் தமக்கே;
ஆதலின் பூங்கொடி ஆங்கவள் தனித்துப்
போதல் சரியிலை யானுடன் செல்வேன்;

### இருவகைப் பூங்கா

மேலும் வடதிசை மேவிய பூங்கா
தேளும் பாம்பும் என்னச் செப்பிடும்
கொடியவர் செல்லும் கூடம தாகும்;
அன்பும் பண்பும் ஆர்ந்தவர் நிறையும்
தென்புலப் பொழிற்கே செல்லுதற் குரியள்'
என்பன கூறி எழுந்துபூங் கொடியொடு
காவண மறுகுகள் கடந்துபல் பொருள்பகர்
ஆவண வழியே படர்ந்தன ளாக.

### கண்டோர் கவலை

வழியிற் காண்போர் விழிவாங் காமல்
'எழில்நிறை யிவளை இல்லறப் படுத்தா
தல்லல் நிறைதொண் டாற்றுப் படுத்தினள்
கொடியள் இவள்தாய் கொடியள்' என்று
வடிகண் ணீரர் வருந்தி அரற்ற,

### பொழிலுட் புகுதல்

அடிமலர் படிமிசைப் பொருந்தப் பூங்கொடி
ஓவியம் என்ன ஒசிந்து நடந்து,
காவியம் வல்லான் கற்பனை பெருக்க
எழுதரு சோலை எழில்காண் புறவே
பழுதறு பாவை நுழைந்தனள் பொழிலே. (105)

*

# 4. படிப்பகம் புக்க காதை

### இயற்கைக் காட்சிகள்

நங்கையும் தோழியும் நளிமலர்ச் சோலையுள்
தங்கிய எழில்எலாம் தனித்தனி கண்டனர்;

### தாமரைக் காட்சி

'செங்கதிர்ச் செல்வன் வெங்கதிர் புகுதாப்
பொங்கிய நிழல்செறி பூம்பொழிற் கயத்துள்
அடுத்தஓர் இரவலன் அகக்குறிப் புணர்ந்து
கொடுத்தலால் மகிழ்ச்சி கூர்முகம் நோக்கி
மகிழ்வால் விரியும் வள்ளல் மனம்போல்
அகவிதழ் முறுக்கவிழ்ந் தலர்ந்த தாமரை
இலைசூழ் மலர்கள் எழிலினைப் பாராய்!
ஊடல் கொண்ட ஒண்டொடி முகம்போல்
வாடிக் கவிழ்ந்த மலர்களும் காணுதி!

### கொடிமலர்க் காட்சி

செடிகள் மரங்கள் சிரித்து மலர்ந்திடக்
கொடிகள் நோக்கிக் கூடிக் குலாவத்

தாவிப் படர்ந்து தாமும் நகைத்தன
வண்ணப் பூக்கள் வகைவகை மலர்ந்து
கண்ணைப் பறிக்கும் காட்சியைப் பாராய்!

### வண்டுக் காட்சி

புதிதாய் வருவோன் பொருந்திய நண்பன்
வதியிடன் அறிய வாயில் தோறும்
புகுந்து வினவிப் போதல் போலத்
தகுந்த மலர்தொறும் தண்மது வுண்ணக்
குடைந்து குடைந்து கொட்புறும் வண்டினை
நடந்து மெலிந்த நங்காய் நோக்குதி!
தென்புறந் தருமொரு தென்றல் மலர்தொறும்
அன்புடன் தழுவி அசைந்து மெல்லென
நம்முடல் வருடி நலந்தரல் நுகர்வாய்!

### புற்றரைக் காட்சி

பைம்புற் பரப்புப் பசும்படாம் விரித்தெனத்
தோன்றும், இடையிடைத் துளிர்விடு செடிகள்
ஈன்ற மலர்வகை எழில்பெற வரைந்த
சித்திர வகையை ஒத்திடல் காணாய்!

### பொய்கைக் காட்சி

இந்நாள் விடுமுறை எனுஞ்சொற் செவியுறத்
துள்ளிக் குதிக்கும் பள்ளிச் சிறாரென
வெள்ளைக் கயல்கள் விடுபுனற் பொய்கையில்
தாவிக் குதிக்கும், தவஞ்செய் கொக்கு
மேவிப் பற்ற முயன்றும் மீன்பெறாது
ஏங்கிநின் றிரங்குதல் காண்'என அல்லி

பூங்கா எழிலும் பொய்கையும் காட்டப்
பூங்கொடி அவ்வெழிற் பூவனம் காண்புழி,

## கோமகன் முகுந்தனை வினவல்

அவ்வூ ராங்கண் அரிதின் முயன்றுறு
பெருநிதிக் கிழவன் பெட்புறு மைந்தன்
கோமகன் என்பான் கோடுயர் மாட
மாமறு கோரம் வருவோன் எதிரில்
வாடிய முகத்தன் வருதுயர் மனத்தை
மூடிட முகுந்தன் முன்வரு வோனை
'வீதியில் என்னெதிர் வருந்தினை வருவோய்!
ஏதம் உற்றது யாதென் றுரை'என,

## முகுந்தன் துயரம்

'மாதர் பூங்கொடி மலர்வனம் புகுவோள்
வழிஎதிர்ப் படலும் வடிவேல் உற்ற
வெந்துயர் நெஞ்சில் வேலெனத் தைக்க
நொந்துழல் மனத்தேன் நும்வரல் அறியேன்
சிந்தனை நினைவொடு செல்லுதல் உற்றேன்
யானுறும் இடும்பை இஃதே' என்றனன்;

## கோமகன் ஆவல்

மானிகர் விழியாள் மலர்வனம் புகுசொல்
தேனெனப் பாய்ந்தது திருமகன் செவியில்;
'ஒண்டொடி அவள்மன ஒப்புதல் பெற்றுத்
தண்டமிழ் நிகர்க்கும் தையல் கொழுநன்
ஆவேன் யான்'என ஆவல் துரப்பக்
காவிற் புகுந்துள பாவையைக் காண்பான்
வில்விடு அம்பென் விரைந்தனன் கோமகன்;

## பூங்கொடி வெருவுதல்

புகுவோன் றன்னைப் பூங்கொடி நோக்கி
'இருளே! இம்மகன் என்மேற் காதல்
மிகுமனத் தானென மேலொரு நாளில்
தேன்மொழி அன்னையிடஞ் செப்பக் கேட்டுளேன்
யானிவண் செய்வது யாது'என நடுங்கினள்;

## படிப்பகம் புகுதல்

அல்லி வெருவி ஆங்குள படிப்பகம்
அதனுட் புகுகென அரிவையைக் கடத்தித்
தான்வெளிப் புறத்தே தனிமையில் நின்றனள்;

## கோமகன் காமவுரை

காமம் என்னும் கடுவிட நாகம்
செக்கர் மாலைத் தென்றலின் இசையால்
பக்கம் நின்று படம்விரித் தாடத்
தீண்டஅப் பெருமகன் சிறுகுணம் மேவி
நீண்ட உயிர்ப்பொடும் நெருங்கி வருவோன்
கனிமொழி அல்லியைக் கண்களில் நோக்கித்
'தனிவெளி நின்றாய்! தந்திரம் அறிவேன்
நனிஎழில் நங்கைஎன் காதல் நலத்தை
உணரும் ஆற்றல் உற்றனள் கொல்லோ?
புணர்மணம் கொள்ளாள் பொதுநலம் பேணி
இளமை கழித்திடல் ஏனோ? வாழ்வெனும்
குளம்பெறு மலராம் கூடிய இளமை;
மலர்மணம் வீச மனங்கரு தாமல்
அலரின் கொடியை அறுத்திடல் நன்றோ?
இன்பத் துறவு துன்ப விடுதலை
ஈயுந் திறத்ததோ? இதழ்கள் எத்துணை

ஆயிரம் இருப்பினும் தோயுறும் மதுவைக்
காத்திட வல்லதோ பூத்தநற் றாமரை?
ஆர்த்திடும் சுரும்பினம் அருந்துதல் உறுதி;
பொறிகளின் கதவைப் பூட்டி வைப்பின்
நெறிதடு மாறி நெஞ்சங் கலங்கும்;

## கொழுநன் ஆவேன்

கொழுகொம் பின்றிப் பூங்கொடி தவித்து
விழுவது பொறேனைக் கொழுநன் ஆவேன்
எனுமுயர் நினைவால் இரங்கி வந்துளேன்
நின்பூங் கொடியோ நேரிசைக் குலத்தாள்
என்பெரு நிலையினை இசைத்தால் உடன்படும்;

## உடன்படச் செய்க

குறளகம் விடுத்துக் குமரன் என்னைப்
பெருமணங் கொள்ளப் பெட்டனள் ஆயின்
அளப்பருஞ் செல்வம் அனைத்தும் ஈவேன்
களைத்துடல் இளைக்கக் கருதா தென்றன்
காதற் கடலைக் கடந்திட அவளை
மாலுமி யாக்கி மகிழ்ந்திடக் குறித்தேன்
வேலெனும் விழியாய்! வேண்டினென் நின்னை
மதியுடம் படச்செய்' எனும்அம் மாற்றம்
செவியுற நெஞ்சம் செயலறக் கலங்கி
நவையறச் சிலசொல் நவின்றனள் அல்லி;

## அல்லியின் அறிவுரை

'செல்வக் கோவே! சீர்சால் கல்வி
மல்குறு நினக்கு மங்கையர் அறிவுரை
குறிப்பது நன்றன் றாயினும் குறிப்பேன்;

விருப்பிலா மகளிரை விழைவது முறையோ?
கருத்தொரு மித்தால் காதல் சிறக்கும்;
ஒருபால் அன்பால் உறுபயன் ஒன்றிலை;
சிறுவர் கூடிச் சிற்றில் இழைத்து
மறுகணம் சிதைத்து மகிழ்வுறல் போலத்
திருமணம் செய்து திரிவது பேதைமை;
அறிவுடை மாந்தர் அதனை ஒவ்வார்;
நல்லியல் மாதர் நலம்பெறு வாழ்வைச்
செல்வச் செருக்கால் சேர்வுறு பிறப்பால்
வெல்லக் கருதின் விளைவது வேறு;
சொல்லக் கூசேன் மெல்லியல் மாதரார்
பிள்ளைப் பூச்சிகள் அல்லர் பெரியோய்!
காமங் கதுவக் கருத்தினை விடுப்பின்
நாமங் கேடுறும் நல்லறந் தீயும்
தீமை பற்பல சேர்வது திண்ணம்
மாதரார் உளப்பாங் கியாதென உணர்ந்து
காதல் மேற்கொளல் கடமை யாகும்;

**காமங் கடந்தவள்**

காமம் என்னும் கள்வன் றனக்கே
புகஇடம் கொடாஅள் பூட்டி, நிறைஎனும்
காப்பமைத் திருத்தலின் கற்பெனும் மாமணி
காத்திடல் வல்லாள், கருத்தினில் வைப்பாய்!
என்னுயிர்ப் பாங்கி இல்லற வாழ்வினை
உன்னுதல் துறந்தே ஓங்குயர் பொதுப்பணி
ஒன்றே உயிர்ப்பென உவப்புடன் பூண்டனள்
இன்றே அவள்பால் எழுமனம் விடுக'
என்றவள் உரைத்த இவ்வுரை அவன்மனம்
பொருந்தா முன்னர்ப் பூங்கொடி உருவம்
விருந்தா கியதே கோமகன் விழிக்கே. (133)

*

# 5. தாமரைக்கண்ணி தோன்றிய காதை

### கோமகன் கலக்கம்

கோமகன் விழியிற் குலமகள் படுதலும்
காமங் கதுவிய கருத்தின னாகிப்
படிப்பகம் புகுதப் பார்த்தனன்; 'அடஓ!
சித்தமும் விழியும் சேர்ந்து பதிந்திடப்
புத்தகம் பயில்வோர் பொருந்திடன் அன்றோ!
புத்தகம் புரட்டும் புல்லென் ஓசையும்
உரவோர் உயிர்க்கும் ஓசையும் அன்றி
அரவம் சிறிதும் அறியா இடமாம்;
அறிவை வளர்க்கும் ஆய்வுரை நூல்பல
நிறைதரும் அவ்வகம் தூய்மை நிலையம்;
கொள்கைச் சான்றோர் குழுமும் நூலகம்;
உள்ளிற் செல்லுதல் ஒவ்வா தன்றோ!
சீரியோர் பலரும் சிறுவர் இகழ்வர்
வேறிடங் கூடுவேன்' எனமனம் வெதும்பி

### கோமகன் அல்லியை வினவல்

அகல்வோன் அல்லி அணிமுகம் நோக்கி
'நகைமுக நங்காய்!என் நலிவினைக் காணுதி!
இளையள் என்னை ஏற்றருள் வாள்கொலோ?
உளையும் எனக்குயிர் உவந்தளிப் பாள்கொலோ?
எத்திறத் தாள்நின் இளங்கொடி? உரை'எனச்,
சித்தங் கலங்கிச் செப்புவள் அல்லி,

### அல்லியின் மறுமொழி

'எத்தனை முறைநினக் கியம்புவென் பெரும!
வித்தக! விண்மீன் வலையினிற் சிக்குமோ?
தத்தை கொடுஞ்சிறைக் கூண்டுள் தங்கிட
விழைதல் உண்டோ? விடுவிடு காமம்!
மழைமுகில் தொடுதர வானுயர் கோவில்
அழுக்கும் இழுக்கும் பெருகி ஆங்குப்
புழுக்கள் நெளிதரல் போலச் செல்வர்
நெஞ்சில் தீக்குணம் நெளிதன போலும்;
வெஞ்சினங் கொள்வாள் நின்முகம் நோக்காள்
வஞ்சி குறிக்கோள் வாழ்வினள் ஆதலின்
விஞ்சுங் காமம் விடுவிடு' என்றனள்;

### அல்லியின் வரலாறு வினவல்

'புயலைத் தடுக்கஓர் பொறியும் உளதோ?
மயலை விடுக்க மதியுரை புகன்றனை!
கயல்விழி! நன்'றெனக் கோமகன் நகைத்து,
'மடம்படு மாதே மற்றொன்று வினவுவல்
வடபுலத் திருப்போன் வளநிதி மிக்கோன்
வெருகன் எனும்பெயர் மருவிய ஒருவன்
பெறுமனை நீயெனப் பேசிடும் இவ்வூர்;

அவனை நீங்கி ஆயிழை யிவளொடு
சிவணிய தென்னை ? செப்புக' எனலும்,

## அல்லியின் வரலாறு

'வளர்பெரு நிதியோய்! வாழ்கநீ பெரும!
தளர்வுறும் நின்மனம் தகாநெறி ஒரீஇ
நல்வழிப் படர்க! நானிவண் உற்றது
செல்வக் கோவே செப்புவென் கேண்மோ!
மகப்புனல் ஆட மயில்நகர் விடுத்துத்
தகப்பன் தடையைப் பொருட்படுத் தேனாய்
வருமெனை மறித்து வஞ்சகஞ் செய்தனன்
வெருகன் தன்னுரை முழுதும் மெய்யென
நம்பிய என்பால் நலம்நுகர்ந் ததற்பின்
வெம்பி அழிந்திட வீதியில் விடுத்துக்
காணா தேகினன் கலங்கனூர் எய்தி
நாணி என்னூர் நண்ணே னாக,

## அல்லி தந்தையின் அன்பு

அழலோம் பாளன் அறநெறிச் செல்வன்
பழமறை வல்லான் பார்ப்பன முதுமகன்
தாயிலாக் குறையைத் தவிர்க்குந் தந்தை
என்னைக் காணான் இரங்கிப் புலம்பித்
தென்றிசைக் கடல்வரை தேடித் திரும்பி
வருவோன் இங்கே உறுமெனைக் கண் 'டிவண்
எங்ஙனம் வந்தனை என்மகள்?' என்றே
பொங்கிய கண்ணீர் என்றலைப் பொழிந்து,
பிழைமணம் பட்டுப் பெருநெறி பிழைத்து
வழுவினேன் ஆயினும் வளர்மகப் பற்று
நிறைந்தவன் ஆதலின் நீங்கி நடவான்

புரந்திட எண்ணிப் பூசுரர் மனைதொறும்
இரந்துண வெடுத்தும் என்னைப் பேணினன்;

## வைதிகக் கொடுமை

ஆறாக் கவலை அரித்திட வருநோய்
தீராத் துயரால் திரிவோன் ஒருநாள்
அந்த ணாளர் மனைதனை அணுகிச்
செந்தண்மை வேண்டிச் செயலிலான் நிற்கஅச்
சேரி வாழுநர் சீறி 'வைதிகம்
மாறி நடந்த மங்கை எம்அகம்
குலவுதல் ஒவ்வோம் குலம்பழு தாயினள்
விலைமகள் தந்தைநீர் வேதியர் தாமோ?'
என்றெமை ஏசி இகழ்ந்தனர்; அதனால்

## குறளகம் புகுதல்

நிறைநீர் விழியேம்; நெடுநகர் ஈங்கே
உறையுநர் கருணை உளமுளோர் இலரோ?
புரக்குநர் இலோமெனப் புலம்புதல் கேட்ட
அறத்து வழிப்படூஉம் நெஞ்சினன் ஒருவன்
தாயினும் மேலாம் நோயுறும் தந்தை
வீய்நிலை கண்டுளம் வெதும்பி இரங்கித்
தோள்மிசைத் தழீஇத் தொண்டுளம் பூண்ட
வாழ்நாள் உடையார் மலையுறை யடிகள்தம்
குறளகம் தனிலெமைக் கொண்டுய்த் தனனே;

## மலையுறை அடிகள் மாண்பு

அவர்தாம்
குறள்நெறி வாழும் கொள்கையர் அறிஞர்
ஒழுக்கம் உயிரென ஓம்பும் செம்மல்

வழுக்கியும் தீதுரை வழங்காப் பெரியார்
கல்வித் தொண்டே கடவுள் தொண்டெனக்
கல்வி வளர்ந்திடக் கழகம் கண்டவர்
பல்வகை நூல்பயில் படிப்பகம் நிறுவியோர்
கவிஞர் பலருயிர் காத்தருள் வள்ளல்
புவியில் மேம்படு புலவரின் புரவலர்
மூடச் செயல்கள் மொய்த்துவந் துறுத்தலால்
வாடிக் கிடக்கும் மங்கையர் வாழ்வில்
புத்தொளி வீச நத்தின ராகி
அரிவையர் மன்றம் அமைத்தவர், செல்வ!

## குறளகத்தின் பணிகள்

தம்பெரும் உழைப்புத் தருமுயர் நிதியும்
தம்பினும் அன்பால் தருபெரும் பொருளும்
குவித்துக் கண்டதே குறளகம்; அதுதான்
தவிப்போர்க் கருளும், சாதியால் தாழ்நிலை
வகித்துளோர் தமக்கு வாழ்வினை நல்கும்,
அகத்தும் புறத்தும் அன்பே நிறையும்,
கசடறக் கற்றோர் கண்டநல் உண்மைகள்
திசைஎலாம் பரவத் தெளிதமிழ் நூல்கள்
பற்பல ஆக்கிப் படைக்கும், அதாஅன்று
தமிழ்மொழி ஒன்றேஇத் தரணி ஆள
அல்லும் பகலும் அரும்பணி ஆற்றும்;

## அடிகள் அடைக்கலம் அருளல்

நல்லறம் எவைஅவை நயந்திடும் அவர்எம்
அல்லல் கண்டதும் அரும்பினர் கண்ணீர்
துடைப்பேன் துயர்எனத் துடைத்தனர் அந்நீர்;
உடைப்பெருஞ் செல்வம் உற்றேன் போலக்

களித்தேன் தாயின் கருணையைக் கண்டேன்;
உளத்தே நிறையும் உவப்புடன் குறளகத்
தொண்டுகள் புரியும் தோகை இவளிடம்
விண்டுளம் நண்பு கொண்டுளேன் யான்'என;

## கோமகன் அகலுதல்

'அல்லி! நின்வர லாறு தெரிந்தேன்
மெல்லியல் இவளை வஞ்சியின் துணையால்
அடைவேன்' எனவுரைத் தகன்றனன் கோமகன்;

## பூங்கொடியின் கடுமொழி

படிப்பகம் விடுத்துப் பாவை போந்து
'தடித்திடும் உளத்தன், தகவிலா நெறியன்,
காவா நாவினன், காமுகன், நல்லன
மேவா வாழ்வினன், மெல்லியல் தம்பால்
நிறையெனும் காவல் நிலைப்பதை அறியான்,
குறைமதி யாளன், கொடியன் ஒழிந்தனன்;
இத்தகு காமம் இல்லா தொழிக!
இத்தகும் ஆடவன் இருந்திடப் பெறுமேல்
பொல்லா நாடெனப் புகலுவர் மேலோர்
நல்லாய் உணர்'எனப் பூங்கொடி நவில்வுழித்

## தாமரைக்கண்ணி வருகை

தாமரைக் கண்ணி தண்மலர்க் கரவுள்
வருவோள் 'தமிழ்மொழி வாழ்க! வாழ்க!
வருவோர் எவர்க்கும் வணங்காத் தமிழே!
உலக மொழியுள் உயர்ந்தாய் என்கோ!
அலகிலாக் காலங் கண்டாய் என்கோ!
சங்கம் வளர்த்தாய் சான்றோர் பலரால்

பொங்கும் புகழ்நூல் பூண்டாய் என்கோ!
ஆயிரம் பகைதாம் ஆர்ப்பரித் தறினும்
தூவென இகழ்ந்து தோள்வலி காட்டி
எழிலர சோர்க்கும் தமிழே என்கோ!
கடல்பொங் கலையில் கறையான் வாயில்
சுடர்எரி நாவில் சுழிபடும் ஆற்றில்
தப்பிப் பிழைத்த தமிழே என்கோ!
உன்னுயர் பெருமை உரைத்திட ஒருநா
தன்னால் இயலேன்' எனஅத் தையல்

## அந்தி வந்தது

பாடின ளாகப் பையென மாலை
கூடிவந் துற்றது; கூடடை பறவை,
மணியொலி கேளா மாணவச் சிறுவர்
அணியணி யாக ஆர்ப்பது போலப்
பலபட இரைந்தன பசுமரந் தோறும்;
குலவிய தம்பணி ஆற்றிய கொழுநர்
அயர்வொடு வருவரென் றதனை ஆற்றிட
நகைமுக மாதரார் வழிவழி நோக்கினர்;
நாடொறும் பயிலும் நங்கையர் பாட்டொலி
மாட மிசைதொறும் மலர்ந்து பரந்தன;
கால்விரல் சதிசொலக் கைவிரல் மொழிசொல
நூலிடை நுடங்க நுதல்வியர் வரும்ப
நீள்சடைப் பின்னல் நெளிந்துபின் துவளப்
பாவையர் ஆடல் பயிலும் அரங்கில்
மேவிய ஒலியும் மிடைந்து பரந்தன;
முழவொலி யாழொலி முடுகி எழுந்தன;
குழலியர் முன்றில் கோலஞ் செய்தனர்;
ஆவலொடு திரும்பும் ஆவினங் கண்டு

தாவின கன்றுகள்; தளிர்விரல் மாதரார்
வீடுகள் தோறும் விளக்கெடுத் தனரால்;
ஆடிடுஞ் சிறுவர் ஆசாற் காண்டலும்
பாடொலி அடங்கிப் பதுங்குதல் என்ன
வகைவகைப் புள்ளினம் வாயொலி ஒடுங்கிப்
புகுந்திட அந்திப் பொழுதுவந் ததுவே. (167)

*

# 6. கல்லறை காண் காதை

## நிலவும் உடுவும்

மாலைப் பொழுதில் மேலைத் திசையில்
நீலப் பச்சை கோலச் சிவப்பு
மஞ்சள் முதலா வண்ணங் குழைத்துச்
செஞ்சுடர்ப் பரிதி சென்றனன்; இரவெனும்
ஓவியன், மாதர் ஒளிமுகந் தீட்ட
நீல வான நெடுந்திரை தன்னில்
கோல வட்டம் குறித்தனன், அதனை
ஞாலம் நிலவென நவின்று மகிழ்ந்தது;
நுதலிற் புரளும் சுருள்குழல் வரைய
நுதலி ஒருபுறம் நுண்ணிதின் வரைந்தனன்
களங்கப் பட்டது கண்டனன் நெஞ்சம்
துளங்கிக் கனன்று தூரிகை வீசி
உதறினன்; கிண்ணம் ஒன்றனிற் பட்டுச்
சிதறிய வெண்ணிற வண்ணம் சிரித்திட
அதனை உடுவென அறைந்தனர் உலகோர்;

வண்ணஅவ் வுடுக்களும் வட்ட நிலாவும்
கண்ணுங் கருத்தும் களிமிகப் பொழிலகம்
வெண்ணிறங் கொள்ள ஒளிக்கதிர் வீசின;

### தாமரைக்கண்ணி வினவல்

அவ்விடை அவண்வரும் ஆரணங் காகிய
செவ்விய நெஞ்சினள் திருநிறை செல்வி
பொதுப்பணி பலநாள் புரிந்து துயர்பல
விருப்புடன் ஏற்றவள் விடுதலை வேட்டவள்
தாமரைக் கண்ணி தமிழ்மொழி வாழ்த்திப்
பூமலர் மேனிப் பூங்கொடி தன்னொடு
நின்றிடும் அல்லி நிலாமுகம் நோக்கி,
'நின்றீர் நுமக்கு நேர்ந்தது யாது?'என
நிலாமுக அல்லி நிகழ்ந்தது கூறலும்,

### தாமரைக்கண்ணி அறிவிப்பு

'கோமகன் ஆயிழை இவள்மேற் கொண்ட
காமந் தணிந்து கழிந்தனன் அல்லன்;
படிப்பகம் இதனுள் பழுதுகள் புரியின்
அடுத்தர் ஒறுப்பர் ஆதலின் புறத்தே
வருமிடைக் காண்பான் வழியிடை ஒதுங்கி
இருத்தலுங் கூடும் இதுநீர் ஓர்ந்து
திருத்தகு நல்லீர்! தெருவழிச் செல்லேல்
பொழிலின் பின்புறம் பொருந்திய ஒருசிறு
வழியுள தவ்வழி மருங்கிற் செல்லின்
சுடுகா டொன்று தோன்றும்; ஆண்டுக்
கடுநவை உறுஅது; கலங்கேல், அந்நெறி
தாண்டிச் செல்'எனத் தாமரைக் கண்ணி
வேண்டி நின்றனள்; விளங்கிழை அல்லி

### அல்லி அஞ்சுதல்

'பிணஞ்சுடு காட்டில் பேயினங் குழுமி
நிணங்கொளத் திரிதலால் கொடுந்துயர் நேர்ந்திடும்
யாங்ஙனம் செல்லுகேம்? யாருந் துணையிலேம்!
பாங்குற நன்னெறி பகருதி'' என்றனள்;

### தாமரைக்கண்ணி தெளிவு படுத்துதல்

'பேயென ஒருபொருள் உண்டெனப் பேசுதல்
ஆயிழை! பேதைமை ஆகும் அறிகதில்!
மனவலி மிக்கார் மருளார்; இருளில்
மனவலி குறைந்தார் மருளுவர்; ஆதலின்
கட்படு பொருளெலாம் கருநிறப் பேயாய்
முற்படும், வாய்சொல மொழிதடு மாறும்,
செயலறச் செய்யும், வியர்வுறும், நடுக்குறும்,
மையலுறக் கண்ணொளி மங்கிட இருளும்,
அச்சம் நெஞ்சில் அறையும், அதுதான்
பேயென உலகம் பேசும்; உரமுளார்
ஆயும் அறிவுளார் அஞ்சார் ஆதலின்
இவ்வழி நீவிர் ஏகுதிர்! ஏகின்
செவ்விய நெஞ்சுரம் சேரும் நுமக்' கெனக்

### முத்தக் கூத்தன் கல்லறை

'கலக்கந் தருசுடு காட்டில் நெஞ்சுரம்
சேருவ தெங்ஙனம்? செப்புதி' எனலும்,
'கூறுவென் கேண்மின் கூர்மதி யுடையீர்?
மொழிக்குயிர் ஈந்தநல் முத்தக் கூத்தன்
பளிக்கறைப் புதைகுழி பாங்குடன் மிளிரும்,
அதனைக் காணின் அச்சம் தொலையும்,
மதமுறு கொடியர் மனச்செருக் கொழிக்க

நெஞ்சுரம் ஏறும், நிமிர்ந்து நடப்பீர்!
வஞ்சனை மாக்கள் வண்டமிழ் மொழிக்கு
நஞ்சினை ஊட்ட நாட்டில் மறைந்துளார்;
அவர்தம் கொடுஞ்செயல் அழித்திட வேண்டின்
முத்தக் கூத்தன் கல்லறை முன்போய்
நத்தித் தொழுதால் நரம்புரம் ஏறும்,
குருதியில் உணர்ச்சி கொதிக்கும், நும்மினப்
பெருமையை அழிப்போர் பிறக்கிடச் செய்வீர்!
நாடும் மொழியும் நலம்பெற வேண்டிக்
கூடும் நீவிர் கூத்தன் செயற்றிறம்
பூணுதல் வேண்டும் பூவையீர்! ஆதலிற்
காணுதல் வேண்டுமக் கல்லறை' என்றனள்;

## முத்தக் கூத்தன் வரலாறு கூறுதல்

'நல்வழி புகன்றோய்! நன்றி யுடையேம்
கல்லறை புகுந்த காளைதன் திறம்எமக்கு
அருளுதல் வேண்டும் ஆயிழை' எனலும்,
80 'பிறைநுதல் நல்லீர்! பெட்புடன் கேண்மின்!

## பிறமொழி புகுதல்

நம்நாட் டகத்தே நயமிலாப் புன்மொழி
திணிப்பதற் கொருசிலர் செய்தனர் சூழ்ச்சி;
துணுக்குற் றெழுந்தனர் தூயநல் மனமுளோர்;
தாய்மொழி வளர்ச்சி தளர்ந்தஇந் நாட்டில்
நோய்என மடமை நுழைந்து பரந்தது;
எழுத்தும் அறியார் படிப்பும் உணரார்
கழுத்திற் பிறமொழி கட்டுதல் நன்றோ?
என்றநல் லுரையை இகழ்ந்தனர் ஆள்வோர்;

## நெஞ்சங் கனன்றது

கன்றிய நெஞ்சங் கனன்றது; தமிழர்
பொறுக்கும் அளவே பொறுப்பர், மீறின்
ஒறுத்ததன் பிறகே ஓய்வும் உணவும்
கொள்வர்; இதுதான் நெடுநாள் இயல்பு;
கனலும் புனலும் கரைமிகின் தடுக்க
உலகில் ஒருபொருள் உளதென அறியோம்;

## மான வுணர்ச்சி

மூக்கினை வருடின் மூங்கையும் சினப்பான்;
காக்கும் உயிரினும் மேம்படு கனிமொழி
தாய்மொழி யதனைத் தகவிலார் குழுமி
ஆய்வஞ் சனையால் அழிக்க முனையின்
ஊமையிற் வீழாய் உறங்கிக் கிடப்பரோ?

## அறப்போர்

போர்ப்படை திரண்டது போர்ப்பறை ஆர்த்தது;
கோற்படை வீரரைக் குவித்தனர் அரசினர்;
அஞ்சிலர் நெஞ்சில் ஆண்மை ஏறினர்
வஞ்சினம் சாற்றினர் வாகை சூடவே;
மானம்மீக் கூர்ந்தவர் மறியல் செய்தனர்;
கூனல் நெஞ்சினர் கொடுங்கோல் செலுத்தினர்;
அடித்தனர் துரத்தினர், அடவி நாப்பண்
துடித்திடக் கொண்டுபோய் விடுத்தனர், புலிவாய்
தப்பிப் பிழைத்துத் தாய்மார் பல்லோர்
அப்பணி மீண்டும் ஆற்றினர்; அவர்தமைக்
கொடுஞ்சிறைக் கூட்டுள் கொடுங்கோல் அடைத்தது;

### குருதி சிந்தினர்

தொடும்பணி எதையும் துணிவுடன் ஆற்றக்
கடும்புயல் என்னக் கனன்றெழும் காளையர்
கொடியுடைக் கையர் கூடி எழுந்தனர்;
தடியடி தாங்கினர் தரையிற் செந்நீர்
சிந்தினர் மொழிப்பயிர் செழிப்பான் வேண்டி;
குருதி கண்டும் உறுதி குலைந்திலர்
முறுகி எழுந்தனர்; மூண்டெழும் மக்கள்
உணர்ச்சியும் அதனோ டுள்ளெழும் எண்ணமும்
பணத்திமிர்க் கடங்கும் பான்மைய அலவே!

### சிறையும் சிந்தையும்

கிளர்ந்தெழு வீரரைக் கொடுஞ்சிறைக் கிடத்தின்
தளர்ந்திடும் புரட்சியென் றுளந்தனிற் கொண்டோர்
சிறையகந் தொறுமிடம் இலாமல் அடைத்தனர்;
சிறையகம் வீரர்தம் சிந்தையை அழிக்குமோ?
குறைமதி யாளர்தம் கொள்கை அஃதாம்;
சிறையகம் போலச் சிந்தனை வளர்க்கும்
உறைவிடம் மற்றொன் றுலகில் உளதோ?
எண்ணமும் கருத்தும் எலியோ? பொறியுள்
நண்ணிய பின்னர் நசுக்க ஒல்லுமோ?

### உண்ணா நோன்பு

எண்ண இயலா இளைஞர் தம்முள்
உண்ணா நோன்பினை ஒருவன் மேற்கொள
அஞ்சிய அரசினர் அதட்டினர் அவனை;
நஞ்சையும் கொள்கைக்கு நயந்துண் டோர்பலர்
காட்டிய நெறிகள் கண்டோ னாதலின்
ஊட்டிய உணவை உமிழ்ந்தனன் மேலோன்;

உயிர்பெரி தன்றே! உயர்ந்தது கொள்கை!
அயரினும் இவ்வுண அருந்தேன் என்றனன்;
அடித்தனர் அவனை அருந்தேன் என்றனன்;
அடித்தனர் அவனை அஞ்சேன் என்றனன்;
அடித்தனர் அடித்தனர் அடித்தே கொன்றனர்!

## முத்தக் கூத்தன் கொலை

அந்தோ அந்தோ! ஆவி துறந்தனன்;
நொந்தவப் பிணத்தை மூடிய கல்லறை
சுடுகாட் டாங்கண் தோன்றும்; அதுதான்
உடுவான் நிலவால் ஒளிபெற் றிலங்கும்,
சித்தம் கலங்கேல், அதன்முன் செல்லின்
முத்தக் கூத்தன் முழுவலி வாய்க்கும்' என்
றுரைத்ததற் பின்னர் ஒள்ளிழை மேலும்

## பூங்கொடி கடல்நகர் செல்ல இசைதல்

'இசைத்துறை வல்லாய்! இரைகடல் நாப்பண்
கடல்நகர் என்னும் ஒருநகர் உளதவண்
மடமையில் மூழ்கிய மக்கள் மலிந்துளார்;
அப்பெரும் மடமை அகற்றுதல் வேண்டும்
ஒப்பிலா நீயும் உடன்வர இசைவு
தருதி' என்றனள் தாமரைக் கண்ணி;
உவப்புடன் பூங்கொடி ஒப்புதல் தந்து
சவக்குழிக் கல்லறை சார்வுறும் வழியே
அல்லியின் தொடர ஏகினள் அவளே. (155)

*

# 7. கடல்நகர் புக்க காதை

### கோமகன் துயிலாமை

மலர்மலி காவுள் மங்கைபூங் கொடியின்
அலர்விழி அருளும் அந்தீங் கிளவியும்
பெருஅது கோமகன் பெயர்ந்தோன் அக்கொடி
மருஅது தன்னை மணங்கொள வழிவகை
உன்னி உன்னி உறங்கா திருந்தனன்;
கன்னியர் நினைவுறின் கண்படை ஒல்லுமோ?

### கதிரவன் எழுச்சி

இருளின் கால்சீய்த் தெழுந்தனன் பரிதி;
மருள்கெட மக்கள் இமைகள் மலர்ந்தனர்;
தெருள்நிலை கண்டனர், தேய்ந்த உணர்வெலாம்
புதுநிறை வெய்தப் பூரித் தெழுந்தனர்;
கோமகன் ஒருவனே கொடுந்துயர்ப் படுத்தும்
காமங் கதுவக் காலையின் எழுச்சி
அறியா னாகி அயர்ந்து கிடந்துழித்

### கோமகனுக்கு அறிவுரை

தாமரைக் கண்ணி தனிமையில் அணுகி
'நின்போற் செல்வர் நெறிதடு மாறி
வன்பாய்ப் புகுதல் வான்முறை யாமோ?
மொழிவளம் பெறவும் மூடச் செயலால்
இழிநிலை யுற்றோர் எழுச்சி பெறவும்
தொண்டுகள் ஆற்றும் தூயவள், இல்லறம்
பெண்டுகட் குரித்தெனப் பேசினும் பூங்கொடி
வேம்பென வெறுப்பவள், வியனுல கதனில்
மேம்படு தமிழே மேவிய மூச்சாய்
வாழும் குறிக்கோள் வாழ்வினள்; அம்மகள்
சூழும் தொழிற்குத் துணைசெயல் இன்றி
ஊறுகள் இயற்றல் ஒவ்வுமோ?' என்றனள்;

### கோமகன் மறுமொழி

'ஊறுகள் இயற்ற ஒருப்படேன் தாயே!
துணைசெய நினைந்தே தோகை அவட்குத்
துணைவன் ஆகத் துணிந்தேன்' எனலும்,

### மீண்டும் இடித்துரை

'செல்வ! நன்றுரை செப்பினை! அறிவைக்
கொல்வது ஒக்கும்நின் கூற்று! நின்னை
நயவாப் பெண்டிரை நாடுதல் சிறுமதிச்
செயலாய் முடியும், சிந்தித் துணர்மதி!
பொருள்வலி ஒன்றால் புந்தியை இகழேல்!
அருளும் அன்பும் அமைதியை நாட்டும்.
மற்றோர் தமக்கும் மனமென ஒருபொருள்
உற்றதை உணர்க! நின்மனம் ஒன்றே
விழைந்து பெறானின் விளையாட் டுப்பொருள்

அல்லர் மகளிர்! அறியாய் கொல்லோ?'
என்றறி வுறுத்தி ஏகும்அவ் வன்னை,

## பூங்கொடி கடல்நகர் அடைதல்

பூங்கொடி தன்பாற் போஒய்க் கடல்நகர்த்
தேங்கிருள் நீக்கும் கடப்பா டுடையேம்
எழு'கெனச் செப்ப, ஏந்திழை அவளொடும்
அழகிய அல்லி மலையுறை யடிகள்
அருண்மொழி முதலோர் அன்புடன் விடைதரச்
சுருளலை எழுப்பும் கருநிறக் கடலுள்,
பகைபிளந் தோடும் பான்மையன் போல
மிகுபுனல் பிளந்து மிதந்து விரையும்
மரக்கலம் ஏறி, மணிநீர்க் கடல்தன்
புறத்தினில் சூழ்தரல் போன்று மடமை
அகத்தினில் சூழ்தர அல்லற் பாடுறும்
கடல்நகர்த் துறைமுகம் கண்டனள்; ஆயிடை
மடமை துடைக்கும் மனமுளோர் குழுமி

## பூங்கொடிக்கு வரவேற்பு

ஆழி அடங்க ஆர்ப்பொலி எழுப்பினர்,
வாழி எனுமொலி வான்முக டுற்றது,
கதிரோற் கண்ட கடிமலர் போலப்
புதியோர்க் காணலும் பொலிந்தன முகமெலாம்,
உள்ளம் உவகை ஊற்றெடுத் தனவே,
கள்ளவிழ் மலராற் கட்டிய தெரியல்
சூட்டி மகிழ்ந்தனர், தோரண வகைகள்
காட்டிய வீதிகள் கடக்க வழியெலாம்
வண்ண மலர்கள் வாரி இறைத்தனர்,
கண்கள் இமைத்திலர் கண்டனர், இன்னியம்

செவிவழிப் புகுந்து சிந்தையை நிறைக்கப்
புவியிற் காணாப் புதுமை கண்டனர்;

## பூங்கொடியின் சொன்மழை

இவ்வணம் ஊர்வலம் எழுந்திடல் நோக்கி
அவ்விய நெஞ்சினர் அஞ்சினர், அவரெலாம்
பொய்யும் புளுகும் துணையாய் வாழ்வோர்,
தெய்வப் பெயரால் தீங்குகள் இழைப்போர்,
பதுங்கி நின்று பார்த்தனர்; பூங்கொடி
ஒதுங்கிநின் றாரும் உணரும் வகையால்
விளக்கி உரைத்தனள், வீணுரை யின்றித்
துளக்கம் இலளாய்த் தொகுத்தும் வகுத்தும்
இடையறா தருவி இழிதரல் மான
நடைஎழில் காட்டும் நல்லதோர் சொன்மழை
பொழிந்தனள்; மக்கள் புதுமழை கண்டு
விளைந்தெழு பயிர்போல் விம்மிதம் கொண்டனர்,
குளிர்ந்தனர் நெஞ்செலாம், கொடும்அறி யாமைக்
களைகளைந் தெறிந்தனர், கருத்தினில் அடிமைத்
தளைகள் தறிந்தனர், விடுதலை தாங்கினர்;

## அரங்கின் தோற்றம்

மக்கட் பரப்பு வான்கடற் பரப்பென
மிக்குக் கிடந்தது, மேடை ஓர் மரக்கலம்
போல விளங்கிப் பொலிந்தது, பூங்கொடி
மாலுமி என்ன மதர்த்து நின்றனள்,
கயல்புலி விற்கொடி கப்பற் கொடிபோல்
உயர்வான் மிசையே ஓங்கிப் பொலிந்தது,
அலையிடை மணியென ஆங்காங் கவிரொளி
நிலைவிளக் கெரிந்து நீளொளி பரப்பின,

எங்கணும் அமைதி இலங்க ஐம்பொறி
பொங்கும் உணர்வெலாம் புதியதோர் உணர்வாய்க்
குவிந்தன மேடையில்; குள்ள நரிச்செயல்
பொதிந்த நெஞ்சினர் பொல்லாங் கிழைத்தனர்;

## சிறியர் செய்கை

கற்களை வீசினர் காரிருள் இடைநின்
றற்பச் செயலென அறியார்; அறிஞர்
நெஞ்சிற் பதிந்த கருத்துரை நிலமிசை
விஞ்சிப் படர்வதை விரும்பாச் சிறியர்
புன்மைச் செயல்செயப் புறப்படல் படரிருள்
புன்மைக் கணத்தைப் புறங்காட் டச்செயும்;
கதிரோன் தன்னைக் கையால் மறைக்கும்
மதியோர் செயலினை மானும்; அந்தோ!

## பூங்கொடியின் கனன்றுரை

கற்கள் வீழலும் கண்கள் சிவந்தனள்
'எற்கெனை அழைத்தீர் இகழ்வதற் கோ?' என
நுவன்றனள்; ஒருகல் நுதற்படச் செந்நீர்
சிந்திச் சிவந்தன மேடையும் ஆடையும்;
கனன்றனள் சொல்லினைக் கனலெனச் சிந்தினள்;
பெண்மையில் ஆண்மை பிறத்தலுங் கூடும்
உண்மை உணர்த்தினள் ஊரினர்க் கவ்விடை;
'சான்றீர் பெரியீர் சாற்றுவென் கேண்மின்!
ஆன்ற பெரும்புகழ்த் தமிழின் அருமை
கேடுறல் நன்றோ? கிளைபோல் வருமொழி
பீடுறல் கண்டும் பேதைமை பூணல்
மாண்பன் றென்றேன், மடமைச் சேற்றில்
வீழ்ந்து மடிதல் வேண்டா என்றேன்,

தாழ்வும் இழிவும் சாதியில் வேண்டா!
குலமும் தேவும் ஒன்றெனக் கொள்க;
நலந்தரும் இவையென நவின்றேன், ஈண்டை
ஏற்போர் உளரேல் ஏற்று வாழ்க!
ஏலா ராயின் இவணின் றொழிக!

## சொற்போர் புரிக

பிழையெனப் படுமேல் பேசுக அரங்கில்
கழைஇனி தென்றேன் கசக்குமென் பீரேல்
சான்றுடன் நிறுவுக, சால்பது வாகும்;
நான்தரு கருத்தினை மறுத்துரை நவிலுதல்
அறிவோர் கொள்கை; அதனை விடுத்துச்
சிறியோர் செயல்செய முனைதல் நன்றோ?
திறமிலார் செயலெதும் திருந்திய கொள்கை
உரமுளார் போக்கினை ஒதுக்குதல் இல்லை;

## ஞாலத்து இயற்கை

நல்லன செய்வோர்க்கு நலிவே தருதல்
மல்லன்மா ஞாலத் தியற்கையே யாகும்;
உலகுக் குழைக்கும் உத்தமர் தம்மைச்
சிலுவையில் அறைந்தும் சிறையினில் அடைத்தும்
கொலைத்தொழில் புரிந்தும் குண்டுகள் பாய்ச்சியும்
நஞ்சுணச் செய்தும் நலிவுகள் தந்தும்
நன்றி கொன்றிடும் நல்லதோர் உயர்குணம்
இன்றுநம் மிடையே இறுகப் பிணைந்தது;
ஆதலின் இச்செயல் ஆற்றத் துணிந்தீர்!

## பூங்கொடி துணிபு

சாதல் உறுதி, சதைபடு இவ்வுடல்
கழுகு பருந்துகட் குணவாய்க் காட்டில்

அழுகிக் கிடக்கும், அத்தகு நிலையுடல்
என்னின மக்கள் எறிகல் பட்டுச்
செந்நீர் சிந்திச் செந்தமிழ் காக்க
மாய்தல் பெறின்நான் மனங்கொள ஏற்பேன்;

### சிந்தனை செய்க

ஆய்தற் றொழிலோர் அறிவினுக் கெட்டாக்
காலங் கடந்தநும் தாய்மொழி வாழ
ஞாலம் வாழ நவின்றனென் சிலவழி,
ஒவ்வும் வழியெனின் உவப்புடன் கொள்க
செவ்விதன் றாயின் சிந்தித் தொதுக்குக'
எனவாங்கு
உணர்வு பொங்க உரையாற் றியபின்
மணமலர்ப் பந்தர் மருங்கிருந் தனளே. (148)

# 8. கடல்நகரில் தங்கிய காதை

### நகரத்தார் வேண்டுதல்

தாமரைக் கண்ணி தன்னொடு வந்த
தோமறு பூங்கொடி தூயநல் லுரையால்
திருந்திய மனத்தினர் திரள்கொடு வந்தே,
'இருந்திடல் வேண்டும் இன்னும் சின்னாள்
நின்னுரை கேட்டோர் நேரிய ராகிப்
புன்முறை நீங்கிப் புந்தி தெளிந்து
மல்கிருள் அகல மதியொளி பெற்று
நல்லுணர் வெய்தி நலம்பெறல் திண்ணம்
ஆதலின் நங்காய்! அருளுதி, நின்னகர்ப்
போதல் ஒழிமதி!' எனுமுரை புகன்றனர்;

### இசைவு தருதல்

பக்கல் நிற்கும் கண்ணியைப் பார்த்தனள்
அக்கொடி தன்னுளம் அறிந்தவ ளாதலின்
தோமறு பணிசெயத் தூயவ ளாகிய
தாமரைக் கண்ணி தந்தனள் இசைவே;

ஆண்டிருந் தேகி அணிமலர்க் கண்ணி
மீண்டனள் மணிநகர்; மெல்லியல் அல்லி

## அல்லி வினவல்

ஈண்டிய அன்புளத் தெழிற்பூங் கொடியைக்
காண்டல் விருப்பொடு கடுகி வந்தனள்;
தோழியைக் காணாள் துயர்படர் நெஞ்சினள்
'ஆழி நடுநகர் ஆங்கண் சென்றீர்!
நீயோ தமியள் நின்றிடல் கண்டேன்!
ஆயே! என்றன் ஆருயிர்த் தோழி
யாண்டுளாள் நிகழ்ந்தது யாதென் றுரை'என

## தாமரைக் கண்ணி நிகழ்ந்தன கூறல்

ஆண்டு நிகழ்ந்த அத்துணைச் செய்தியும்
மூண்டெழும் உணர்ச்சி முந்துற மொழிந்து'இனும்
புகலுவென் கேட்டி! பூங்கொடி ஆற்றிய
தகவுரை கேட்டோர் அகமிக வுருகி
இன்னுஞ் சின்னாள் இருந்திடல் வேண்டும்
என்ன நயந்தனர்; எழிற்பூங் கொடியும்
ஆண்டுளார் பண்பொடு அவர்தம் அரசியல்
காண்டகு நெஞ்சினள் கனிவோ டிசைந்தனள்;
சின்னாள் இருந்து செந்தமிழ் பரப்பிப்
பின்னர் மீளுவள் பேதுறல் தவிர்நீ'
இன்னணம் தாமரைக் கண்ணி இசைத்தலும்

## அருண்மொழி மனநிலை

அல்லி வருந்தி அருண்மொழி தன்பாற்
புல்லி, அனைத்தும் புகன்றது கேட்டவள்
கலங்கினள் ஆயினும் 'கன்னித் தமிழின்

விலங்குடை படஅவ் வீரங் காட்டினள்;
வாழ்கஎன் மகளே! வாழ்கஎன் மகளே!
வாழ்கஎன் தமிழே! வாழ்கஎன் தமிழே!'
எனுமுரை கூறி இறுமாந் திருந்தனள்
மனமொழி செயலெலாம் மாசறத் திகழ்ந்தவள்;

## பூங்கொடி கலக்கம்

கல்லென் பேரூர் கடல்நகர் ஆங்கண்
புல்லர் வீசிய கல்லின் விசையால்
நல்லியற் பூங்கொடி நலங்குறைந் திருப்போள்
சேக்கையிற் சாய்ந்து சிந்தித் திருந்தனள்;
சிந்தனைத் திரையில் சென்றபன் னிகழ்ச்சிகள்
வந்து மறைந்தன; தந்தையின் நினைவும்
நொந்தஅவ் வுளத்தில் நுழைந்தது: ஐயகோ!
மொழிக்குறு பகைமை முதுகிடப் பொருதனை!
இழுக்குறும் அடிமை இரிந்திட உழைத்தனை!
வழுக்கனைந் தினத்தவர் வாழ்ந்திட மொழிந்தனை!
ஆயினும் அந்தோ அறிவிலார் கூடி,
நாயினும் கீழோர் நயவஞ் சகரால்
கொன்றனர் நின்னைக் கொடுமை! கொடுமை!
என்றெழும் உணர்ச்சி நெஞ்சினைக் கொன்றிடத்
துயரம் புனலாய்த் துணைவிழி வழியா
உயிரொடு வெளிவரல் ஒப்ப வழிந்தது;

## பூங்கொடி தெளிதல்

இத்துயர் கண்ட எழில்மதி முகிலுட்
புக்கது; பின்னர்ப் புத்தொளி வீசிச்
சிரித்தது வானில்; சிந்தனை நெஞ்சினில்
விரித்துள கவலை விரைந்து கலைந்திட

அடுத்த தறிவொளி, விடுத்தனள் இடுக்கண்
உடுக்கணம் இதனை உற்று நோக்கின;
முத்தக் கூத்தனை மூடிய கல்லறை
சித்தத் தெழுந்தது சிலிர்த்தனள் உடலம்;
நினைதுயர் நீங்க நெஞ்சகம் சிரித்தனள்;
முனைவொடு பணிசெய முயன்றனள் நங்கை;

### பூங்கொடியின் புகழ்மணம்

நாடொறும் அறிவுரை நயந்துரைத் திருந்தனள்
வீடுகள் தோறும் விருந்துக் கழைத்தனர்
கேட்போர் பலராய்க் கிளைத்தனர் பல்கினர்
வேட்போர் தொகையும் மிகவாய்த் திரண்டன
ஒன்றே குலமெனும் உணர்வு விரிந்தது;
நன்றே செய்தனள் நம்முயர் தலைவி
என்றே தொழுதனர் இசைத்தனர் அவள்புகழ்;
உள்ளம் பொய்யா துழைப்பவர் எண்ணம்
எள்ளள வும்பிழை ஏலா தீண்டெனும்
கொள்கை நிலைத்திடச் செய்தனள் கொடியே (78)

*

# 9. திருக்குறள் கற்றுத் தெளிந்த காதை

### நாவலர் வருகை

அந்நகர் மக்கள் அறியா மையிருள்
வெங்கிட அறிவொளி விரித்தெழு செஞ்சுடர்ப்
பரிதி என்னப் பாவை விளங்க,
உரிமை வேட்கையும், உன்னும் பண்பும்,
உன்னிய தஞ்சா துரைக்கும் உரனும்,
மூன்றா லாகிய முத்தமிழ் வகைக்கும்
விரித்துரை திறனும், வியனுறு குறள்நூல்
உலகெலாம் பரவ உழைக்கும் செயலும்,
உடையார் அறிவுப் படையார் ஒருவர்
நடையால் உயர்ந்த நாவலர் அந்நகர்
வருமவர் பூங்கொடி வந்துள தறிந்து
பெரும்பே ராசான் அருங்குண அறிஞர்
திருமா மகளைத் தேடி வந்தனர்;

## பூங்கொடி நிகழ்ந்தன கூறல்

வணங்கினள் தொழுதனள் வாழ்த்தினள் எழுந்து
மணங்கமழ் மாலை சூட்டிப் 'பெரியோய்!
நின்மொழி ஏற்று நெடுநாள் பயின்று
மன்னிய குறள்நூல் மாசறத் தெளிந்தேன்;
குறளகம் கண்டார் குமணன் போன்றார்
அருளறம் பூண்டார் மலையுறை யடிகள்
அவர்தம் துணையால் அறிவொளி பெற்றேன்;
உவர்நீர்க் கடல்நகர் உவந்தீண் டுற்றேன்,
மொழிப்பயிர் ஊட்ட முனைந்தேன், சிலரால்
பழியுரை பெற்றேன், பகுத்தறி வில்லான்
எறிபெருங் கல்லால் இடர்பெரி துற்றேன்,
எனினும் பின்னர் என்னுரை விழைவோர்
நனிபெரு கினரால் நயந்திவண் இருந்தேன்'

## நாவலர் ஆறுதல் உரை

எனுமுரை கேட்ட இலக்கிய நாவலர்
'அன்னாய்! உலகில் அறிவொளி பரப்ப
முன்னுவோர்க் கெல்லாம் முதல்வர விதுவே;
தொல்லைகள் பொறுத்துத் தொண்டுகள் ஆற்றின்
எல்லையில் இன்பம்; எடுத்தது முடியும்;
வெற்றி வெற்றி விளைவது கண்டோம்;
உற்றநின் துயரால் உளமது கலங்கேல்
ஆற்றுக தொண்டே ஆற்றுக தொண்டே;

## நாவலர் தலைமேற் கல்

நேற்றோர் அவையில் நிகழ்த்தினென் பேச்சு,
பொல்லாங் குடையார் புழுங்கினர் நெஞ்சம்
கல்லார் நல்வழி நில்லார் புல்லார்

குழப்பம் விளைத்துக் கூட்டங் கலைத்தனர்,
விளக்கொளி அவித்தனர் வீணர், ஒருசிலர்
பாறைக் கல்லோடு பக்கம் வந்தனர்,
வீரச் செயலென விழைந்தனர், தலைமிசை
ஓங்கினர், அவ்வுழி உற்றொரு தோழர்
தாங்கினர் அதனைத் தடுத்து நிறுத்தினர்,
தடுத்திரார் ஆயின் தலைதூள் ஆகும்,
உடலும் உயிரும் உலகுக் காக்கினென்,
இடரினைக் கண்டு தொடைநடுக் குறுதல்
மடமை அன்றோ? மதியிலார் செயலது,

### நாவலரின் முன்னை நிகழ்ச்சி

யான்புரி அலுவலில் என்விலக் குற்றேன்?
மீன்புலி கயலால் மேம்படு தமிழக
விடுதலை குறித்து விளம்பினேன்; தமிழ்மொழி
கெடுதலை இன்றிக் கிளர்ந்தெழப் புகன்றேன்,
இவையே யான்செய் தவறென இயம்பி,
நவையெனப் பழிஎன நாணார் விலக்கினர்;

### நாவலர் ஊக்கமூட்டல்

மதுப்பூங் குழலி! 'மாநிலத் தித்துயர்
பொதுப்பணி புரிவோர்க்குப் புதுவ தன்றே!
விதுப்புறேல் நின்பணி வீறுற் றோங்கும்'
என்றவர் ஊக்கினர்; இவ்வுரை கேட்டாள்,
'நன்றுநன் றைய! நான்அய ரேன்இப்
பணியே உயிராப் பாரில் கொண்டுளேன்;

### உலகியல் நிலைமை

உலக மாந்தர் நிலைதான் என்னே!
நிலையிலாக் கொள்கை, நேர்மை இன்மை

கலையெனக் கொண்டனர்; கருதின் ஒருநாள்
பெரியார் அறிஞர் என்றெலாம் பேசுவர்;
மறுநாள் மாறி 'மதியே இல்லார்,
சிறியார்' எனப்பழி செப்புவர் அந்தோ!

## தொண்டர்தம் பெருமை

நல்லன செயலே நாளும் ஆற்றும்
வல்லமை பூண்டு வழுவிலாக் குறள்நெறி
பரப்பிக் கடவுட் பள்ளியில் பைந்தமிழ்
சிறக்கப் பணிபுரி சீரியோர் மலையுறை
அடிகள் தம்மை, அறியார் கூடி
நாத்திகர் என்று நவிலுதல் கண்டோம்;
வேத்திய லாளரும் வீண்துயர் தந்தும்
கண்டின் சுவையைத் தொண்டிலே கண்டனர்;
தொண்டர்தம் பெருமை சொல்லவும் போமோ!
என்ற மொழிப்பொருள் உணர்ந்தேன் ஐய!

## பூங்கொடியின் உறுதிமொழி

நின்றன் பெருமையும் நீணிலம் அறியும்;
எத்துயர் வரினும் எடுத்த பணியே
இலக்கெனக் கொண்டுநீ இயங்கலால் அன்றோ
இலக்கியர் என்றோர் விருதினைத் தந்தனர்;
பேரா சிரியப் பெரியோய்! நின்போல்
யாரே செயல்செய வல்லார்? யானும்
நின்வழி கொண்டேன், நிலையாய் நிற்பேன்,
என்பெரு வாழ்வை ஈந்தனென் பணிக்கே'
எனுமொழி கூறி இருந்தனள் ஆங்கே;

## குறளுரை தெளிதல்

'மனமிக நல்லாய்! வாழிய பெரிதே!
உலகப் பெருநூல் ஓதி உணர்ந்தனை!
கலகப் பொருளுரை கடிகதில் அம்ம!
புத்துரை பலப்பல காணுதி! யானும்
ஒத்த வகையால் உணர்ந்தநல் உரைசில
கூறுவென் கேண்மோ' என்றுரை கூ[redacted]றத்
தேறினள் செல்வி தெளிபொருள் உணர்ந்தே
வீறுகொள் செம்மல் விடைகொண் டனரே. (92)

*

என்றுரை கூறத்

# 10. தொல்காப்பியம் உணர்ந்த காதை

### குறளுரை பரப்புதல்

நற்பொருள் உணர்ந்த பொற்கொடி குறளின்
சொற்பொருள் தெளிந்து சூழ வருவார்க்கு
உணர்த்தும் பணியை உவப்புடன் பூண்டனள்;
கணக்கில் அடங்கார் கற்று நடந்தனர்,
இணர்ப்பூங் குழலாள் இவ்வணம் இருந்துழித்

### தாமரைக்கண்ணி வருகை

தாமரைக் கண்ணி தந்தனள் வருகை;
காமரு பூங்கொடி கடிதின் எழீஇத்
தூமன மகிழ்வால் தொழுதனள் தழீஇ
நீராற் கண்ணை நிறைத்துப் புகழ்மொழி
கூறு நின்றனள்; கூறிய நங்கையை
ஆரத் தழுவி அப்பெரு மாட்டி
வீரத் திருமகள் வாழிய என்றனள்;

### பூங்கொடி வினவல்

'ஊரில் புதுமை உற்ற துண்டுகொல்?
அன்னையும் தோழியும் என்பிரி வாற்றி
நன்னல மோடவர் துன்னினர் கொல்லோ?
உரையாய் தாயே' என்னலும் 'உன்னைத்

### தாமரைக்கண்ணி மறுமொழி

### அருண்மொழி நிலைமை

திரைவாய்க் கடல்நகர் திருத்துவான் வேண்டித்
தனியே விடுத்ததால் தையலர் இயல்பான்
நனிகலங் கினர்பின் நலிவு துடைத்துச்
செந்தமிழ் காக்க வந்தவள் என்மகள்,
எந்த இடும்பையும் ஏற்றிட வல்லாள்,
பகைகளெறி வடிவேல் பைந்தமிழ் காக்கும்
குகைவழி புலிபெறு குலக்கொடி அவளாம்,
அவன்வழி வந்தவள் அஞ்சாள் பகையைக்
கவண்விடு கல்லால் கலங்குதல் செய்யாள்,
என்று தேறினள்' எனுமுரை கேட்டு
நின்றவள் 'என்தாய் வாழிய' என்றனள்;

### கோமகன் நிலைமை

'குலக்கொடி இன்னுங் கூறுவென் கேட்டி!
கலக்குறு நெஞ்சினன் காமம் விஞ்சிய
கோமகன் சிலரொடு குழுமி ஆங்கண்
பாமக னாகிய பாவலன் பெயரால்
படிப்பகம் நிறுவிப் பணிபூண் டொழுகினன்;
உடைப்பெருஞ் செல்வன் ஆதலின் ஊரார்
தடைக்கல் இட்டிலர்; தமிழின் பெருமை
முடுக்குகள் தோறும் முழங்குதல் கண்டேன்'

எனுஞ்சொற் கேட்டுளம் எழுச்சி கூர்ந்து
மனங்கொளும் மகிழ்வின் வாழ்த்தினள் பூங்கொடி;

## பொதுப்பணி வேடர்

'இருஇரு செல்வி! இளையோன், தமிழ்க்குப்
புரிபணி உளத்தில் பூத்த தன்றே!
தந்நலம் வேண்டும் தணியா ஆர்வலர்
பொதுநலம் புரிவோர் போலப் பேசுவர்;
மதுநலங் கண்ட வண்டென மக்களும்
மதிமயக் குற்று வாழ்த்தொலி எழுப்புவர்;
புதுநிலை எய்துவர் புகழ்பொது மக்களால்;
மேனிலை எய்தலும் மிதிப்பர்அம் மாந்தரை;
நானிலம் இவ்வணம் நடந்திடல் கண்டோம்;

## கோமகன் வஞ்சகப் பணி

இளையோன் ருனும் இவ்வழி செல்லும்
உளமே உடையோன், தன்னலம் ஒன்றே
குறியா வைத்துக் குழைந்து பொதுப்பணி
புரிவோன் ஆயினன், பூங்கொடி நின்னை
வஞ்சித் திருந்து வதுவை புரிதலை
நெஞ்சத் தழுத்தி நின்றனன் காணுதி!
தமிழ்ப்பணி எனின்நீ தலைபணி வாய்என
மனப்பால் குடித்து மகிழ்ந்தனன்' என்றனள்;

## பூங்கொடி வருந்துதல்

'ஐயகோ தமிழே! ஐயகோ தமிழே!
செய்ய தொண்டுளம் சிலரே கொண்டனர்;
உன்பெயர் சொல்லித் தந்நலம் நுகர்வார்
நின்னலம் சிறிதும் நினையார் உளரே'
என்றுளம் ஏங்கி இனைந்தனள் இளங்கொடி;

### தாமரைக்கண்ணி அறிவுரை

'இன்று பொதுப்பணி எளிதென எண்ணேல்!
உள்ளமும் உயிரும் உணர்வும் தமிழென
உள்ளுவோன் எவனோ அவனே தமிழன்!
தமிழ்தமிழ் என்றுரை சாற்றுவோர் எல்லாம்
தமிழ்காப் போரென நினைப்பது தவறு;

### இருவகைப் பகை

பொதுப்பணி புரிவோய்! புந்தியில் ஒன்றுகொள்
எதிர்ப்படு பகையை எளிதில் வெல்லலாம்;
சதிச்செயல் புரிந்து நண்பாய்ச் சார்ந்து
சிரித்துச் சிரித்துச் செய்வ தெல்லாம்
மறைத்துப் பகைக்கும் மனத்தை வெல்வது
பரிக்கொம் பாகும் பாவாய்! தமிழ்க்கும்
அகப்பகை புறப்பகை ஆயிரண் டுண்டென
மிகப்புரிந் தாற்றின் மேம்படும் நின்பணி;

### பன்மொழி பயிலெனல்

பூங்கொடி நின்புகழ் பூவுல கெங்கும்
ஓங்கிய காதலின் உன்னொடு சொற்போர்
ஆற்ற நினைவோர் ஆங்காங் கெழுவர்;
வேற்று மொழிகள் விரைவில் பயில்நீ!
தெலுங்கு கன்னடம் தென்மலை யாளம்
ஒழுங்கு பெறநீ ஓதுதல் வேண்டும்!
பழம்பெரும் மொழியுள் ஒன்றெனப் பகுக்கும்
வழங்குதல் இல்லா வடமொழி முதலா
நெருநல் முளைத்திவண் வருமொழி வரையில்
மறுவறப் பயின்று மாற்றார் வாயைத்
திறவா வண்ணம் செய்திடல் வேண்டும்!
அவ்வம் மொழியார் ஒவ்வும் வகையில்
செவ்விதின் உரைப்பாய் செந்தமிழ்ப் பெருமை;

## எழுச்சி யூட்டல்

அவரவர் மொழியில் உயர்பொருள் காணின்
தவறறப் பெயர்த்துத் தாய்மொழிக் காக்கு!
தாய்மொழி விடுத்துப் பிறமொழி விழைவோர்
ஆய்வுரை கேட்கின் அவர்செருக் கடக்கு!
பிழைபடத் தமிழைப் பேசியும் எழுதியும்
பிழைப்போர்க் காணின் பேரறி வூட்டு!
பழிப்போர் இங்கே பிழைப்போர் அல்லர்
அழித்தேன் என்றெழும் சிறுத்தைகள் கூட்டம்
நாட்டினில் பல்கிட நல்லுரை வழங்கு!
கோட்டமில் மனத்தாய்! குக்கலின் செயல்போல்
இலக்கண நூலை இழித்தும் பழித்தும்
குரைத்தால் அவர்தம் கொட்டம் அடக்கு!

## பொருள்நூல் உணர்த்தல்

தொல்காப் பியமெனும் ஒல்காப் பெருநூல்
நல்கிய தாய்மொழி நாளும் வாழிய!
எழுத்தின் இயலும் சொல்லின் இயலும்
வழுக்களைந் துணர்ந்தனை! வாழ்வியல் கூறும்
அகம்எனப் புறம்என வகைபெறு பெருநூல்
உலகிற் பிறமொழி உரையாப் பொருள்நூல்
திறமுனக் குணர்த்துவென் செவ்விதிற் கற்பின்
அறிவுரம் பெறுமே, ஐவகை இலக்கணம்
உணர்வார் மொழியில் உயர்வார்' என்று
துணர்மலர்க் கொடிக்குத் தொல்காப் பியநூல்
முழுமையும் ஓதி முடித்தனள் தாமரை
விழியாள் கொடிபால் விடைபெற் றனளே. (109)

*

# 11. ஏடு பெற்ற காதை

### பொழிலில் பூங்கொடி

தாமரைக் கண்ணி தவிர்ந்த பின்னர்த்
தோமறு தமிழ்க்குத் தொண்டுகள் ஆற்றப்
பூமியிற் பிறந்த பூங்கொடி ஒருநாள்
பொழில்நலங் காணும் விழைவினள் செல்வுழி,

### மூதாட்டி வருகை

மழைமுகங் கண்ட மயிலென ஒருத்தி
நரைமூ தாட்டி நல்லன எண்ணிப்
புரையறு செயலே புரிவது காட்டும்
முகத்தினள், கல்வி முற்றிய அறிவினள்,
அகத்தினில் அன்பு நிறைந்தவள் ஆங்கே
எதிர்ப்பட் 'டாயிழாய் யார்நீ?' எனலும்,

### பூங்கொடி தன் வரலாறு கூறல்

'முதிர்பரு வத்தாய்! மொழிகுவென் கேளாய்!
உலகந் தோன்றி ஊர்ந்து வளர்ந்து
பிள்ளைப் பருவத்துப் பேசிய மொழியாம்

வெல்லத் தமிழ்மொழி வெல்லப் பணிபுரிந்
தறிவொளி விளங்க ஆற்றினர் தந்தை;
குருடு படுமதிக் குழுவினர் சதியால்
மாண்ட வடிவேல் மனைவிளக் கருண்மொழி
ஈன்ற மகள்யான் என்பெயர் பூங்கொடி,

## இல்லறம் தவிர்ந்தமை கூறல்

தனித்தொரு மகள்இத் தரணியில் வாழ
நினைத்தல் பலபழி நிகழ்வதற் கேதென
உலகம் மொழிதல் உண்மையே யாயினும்
நிலவிய பொதுப்பணி நேர்வோர் தமக்குத்
தடையாம் இல்லறம் தவிர்ந்தேன்; நெஞ்சுரம்
உடையார் எந்தை உழைத்தஅப் பணியே
தலையாக் கொண்டேன் தையால்! மணஞ்செயின்

## குடும்பக் கவர்ச்சி

உலைவாய்ப் பட்ட இரும்பென உருகி
வளைந்து நெளிந்து வாழ்தல் வேண்டும்;
குழந்தை கணவன் குடும்பம் என்றெலாம்
எண்ணம் விரியும், இடும்பைகள் பெருகும்;
தன்னல மறுப்பெனும் நெருப்பினுள் மூழ்க
உன்னுங் காலை உளந்துணி யாதே!
அன்னாய்! அதனால் துறந்தனென் இல்லறம்;

## கடல்நகர் வந்தமை கூறல்

இயல்பினில் வாய்த்தது இத்துற வுள்ளம்,
மயலொரு சிறிதும் இல்லேன், மலையுறை
அடிகள் குறளகம் அண்டினேன், உய்ந்தேன்,
கடிகமழ் தாமரைக் கண்ணிதன் துணையால்

இந்நகர் வந்திவண் இறுத்தனென், அதன்றலைப்
பன்னரும் பெருமைப் பழந்தொல் காப்பியப்
பொருள்நூல் உணர்ந்தேன்; புகன்றேன் என்னிலை;
அருள்விழி! நீயார் அறை'யென மொழிதலும்,

## மூதாட்டி தன் வரலாறுரைத்தல்

வந்தவள் மகிழ்ந்துதன் வரலா றுரைக்கும்;
'மூந்திய தமிழ்மொழி தந்தநல் இலக்கியச்
செல்வம் பற்பல சிதைந்தும் குறைந்தும்
புதைந்து கிடப்பவை புகுந்து புகுந்துஅப்
புதைபொருள் தேடும் பணியினைப் பூண்டேன்,
நல்லநல் ஏடுகள் நனிவரப் பெற்றும்
அல்லும் பகலும் செல்லும் சிதலும்
சுவைத்துச் சுவைத்துச் சோர்ந்தபின் எஞ்சிய
குறைபடும் ஏடுகள் குவிந்தன அந்தோ!
தமிழுக் குறுபகை எத்தனை தாயே!
அமுதத் தமிழே! அன்னாய்! வாழி!
அவையெல்லாம் திரட்டி அரியதோர் நூலகம்
குறையற நிறுவி நடத்துதல் என்பணி,
நாவலூர் அமுதம் என்றெனை நவில்வர்;

## வாழ்த்தும் பாராட்டும்

ஆவல் தமிழில் அளவிலா துற்றனை!
குறள்நூல் தொல்காப் பியநூல் இரண்டும்
மறுவற உணர்ந்தோர் தெருளறி வுறுவர்,
வாழ்கநின் உள்ளம்! வாழ்கநின் துறவு!
உன்போல் துறவுளம் உடையவர் ஒருசிலர்
அன்பால் தமிழின் ஆக்கங் கருதித்
துயரெது வரினும் துச்சமென் றெண்ணி

அயர்வில ராகி ஆற்றத் துணியின்
உயர்தனிச் செம்மொழி உலகினில் ஓங்கும்;

### கலைமகள் நிலையம்

அண்மையில் ஓரூர், அவ்வூர் அரசன்
கண்ணெனக் கருதிக் கலைநூல் பலவும்
தொகுத்தொரு நூலகந் தொடங்கி நிரல்பட
வகுத்து வைத்தனன், வகைவகை ஏடுகள்
நிறைந்தன, அதன்பேர் கலைமகள் நிலையம்,
மறைந்தனன் கலையுணர் மன்னன், அவ்வூர்
அயலவர் ஆட்சியிற் சிக்கிய ததனால்
செயற்படல் இன்றிச் சிதைந்தது நூலகம்;
வீடுகள் தோறும் ஏடுகள் தேடிப்
பாடுகள் உறும்யான் பயன்தரும் எனநினைந்
தோடினென் ஆங்கே தேடினென் ஏடுகள்;

### சிதைந்த சுவடிகள்

தென்மொழி வடமொழி தெலுங்கு முதலாப்
பன்மொழி ஏடுகள் பற்பல கண்டேன்,
ஓவியம் சிற்பம் மருத்துவம் ஒண்டமிழ்ப்
பாவினில் உரைக்கும் ஏடுகள் கண்டேன்,
வானநூல் ஏடும் வகைவகை கண்டேன்,
ஊனம் இலாத தொன்றும் இல்லை;
முதலும் முடிவும் காணாச் சுவடிகள்,
சிதலும் மண்ணும் சிதைத்த சுவடிகள்
கண்டேன் கண்டேன் கலங்கினென் உள்ளம்;

### எரிந்த ஏடுகள்

அண்டையில் நின்ற அந்நூல் நிலையப்
பணியாள் தன்பாற் பரிந்து வினவினென்,

இன்னும் உளவோ ஏடுகள்? என்னவும்
'அன்னாய்! ஏடுபல் லாயிரம் இருந்தன,
வெந்நீர் வேண்டி விறகென அவற்றை
எரித்தோம்' என்றனன்; துடித்ததென் மனனே;
எரித்தஅவ் வேடுகள் எத்தகு நூலோ!
கலைமகள் தமிழைக் காப்பதிப் படியோ!
கொலைமிகு நெஞ்சர் கொடுமைதான் என்னே!
வெந்நீர் பாய்ச்சி, மிகுபயன் நல்கும்
கன்னல் தமிழ்ப்பயிர் கருகிட முனைந்தனர்;
என்னே! என்னே! இவர்தம் மதிதான்!
மடமை என்கோ? கொடுமை என்கோ?
படம்விரி யரவுக்குப் பசுப்பால் வார்த்தோம்!
உடனுறை வாழ்வும் உவந்ததற் களித்தோம்!

## மனத்துயரம்

அச்சகத் தொழிலோன் அவன்மனை யாட்டி
மகப்பெறு நிலையில் மிகப்பெருந் துயரால்
வருந்துதல் கேட்டு விரைந்தவன் தொழிலைத்
திருந்த முடித்து வரும்பொருள் பெற்று
வீடு செல்ல விழைந்தவன் எடுக்கக்
கூடும் எழுத்துக் குலைந்து சிதறி
வீழ்ந்திடக் கண்டு வெதும்புதல் போல
என்மனம் கலங்கி ஏடுகள் பார்த்தேன்;

## இருபெருஞ் சுவடிகள்

கூத்தும் இசையும் கூறும் இருநூல்
ஏத்தும் படியாய் என்விழிப் பட்டன;
வாழ்த்துக் கூறி மகிழ்ந்தவை புரட்டினேன்;
நெருப்பாற் புண்படு நெஞ்சம் வேதுபெற்

றிருப்பது போல இன்பம் விளைந்தது;
இசையும் கூத்தும் தமிழில் இலையெனும்
வசைமொழி கூறி வருவோர் மடமை
தொலைக்கஇவ் விருநூல் துணைசெயும் எனநான்
விலைக்குப் பெற்றவ் வேடுகள் கொணர்ந்தேன்;

## மூதாட்டி சுவடிகள் தருதல்

நானிவை பிரித்துப் பயிலும் நாளில்
மீனவன் என்னும் மேலோன் கையன
இந்நற் சுவடிகள் என்ப துணர்ந்தேன்;
மின்னற் கொடியே! மிகுபயன் தருமிவ்
வேடுகள் நின்பால் இருந்திடல் நலமாம்;
கூடிய ஆண்டெனைக் கூடிய ததனால்
இவைநீ கைக்கொண் டியற்றுக நற்பணி;

## பூங்கொடி சுவடிகள் பெறுதல்

நவையிலாய்! நின்னூர் ஆங்கண் நாடொறும்
அன்பாற் பணிபுரி மலையுறை யடிகள்
தம்பால் இவற்றின் தகவெலாம் கேட்குவை'
என்றவள் உரைத்தலும் இளையவள் மகிழ்ந்து
'நன்றுநன் றன்னாய்' என்றவள் மொழிந்து
வணங்கித் தொழுது வாங்கினள் செங்கையில்;

## பூங்கொடியின் பூரிப்பு

அணங்கிற் கின்பம் அகத்தினிற் பொங்க
'அன்னாய்! என்னுயிர் அன்னாய்! தமிழே!
ஒன்னார் மனமும் உருக்குந் தமிழே!
அகப்பகை புறப்பகை கடந்தாய் தமிழே!
தகப்பன் தாயெனத் தருவழி காட்டி

மிகப்பல் லறநூல் மொழிந்தாய் தமிழே!
உலகம் வியக்க ஒப்பிலாக் குறளால்
கலகம் தவிர்ப்பாய் கன்னித் தமிழே!
இறக்கும் வரைநின் பணியே யல்லால்
துறக்கமொன் றுண்டெனத் துணியேன் தமிழே!
இடுக்கண் வருங்கால் துடைப்பாய் தமிழே!
மொழிவளம் மிகுந்தாய் முதன்மைத் தமிழே!
பழியிலா நின்னைத் தொழுதக வல்லது
வாழ்த்துதற் கென்வாய் வகையறி யாதே'

## பூங்கொடி தாயகம் மீளல்

இவ்வணம் பலபட இசைத்து, முதுமை
கவ்விய அன்னையைக் கைகுவித் தேத்திப்
பவ்வங் கடந்து பாவை பூங்கொடி
பிரிவாற் கலங்கிப் பேதுறும் நெஞ்சத்
தருண்மொழி வழியும் ஆயிடைத் தோன்றித்
அயராக் கனிந்து ஆயநற் றமிழால்
இயலுங் கூத்துநூல் இசைநூல் காட்டி,
'தமக்கிணை இணையாம் நாட்டில் தமிழிசை
முழக்குதற் கினிநாம் முயலுதல் வேண்டும்;
தடுப்பார் தமக்குக் கொடுப்போம் ஓலை
படிப்பார் அறிவர் பைந்தமிழ் இசையை'
என்றுங் கிருக்தனள் இவ்வுரை மொழிந்தே. (154)

*

# 12. மலையுறையடிகள் வாழ்த்திய காதை

### பூங்கொடி மலையுறையடிகளை அடைதல்

தாயும் தோழியும் தன்னுடன் தொடர
ஆயும் அறிவினர் நரைமுதிர் யாக்கையர்
சாயா நாவினர் தங்கிடன் குறுகிக்
காயாப் பூங்கொடி கண்ணீர் மல்க
மலையுறை யடிகள் மலரடி வணங்கிக்

### பூங்கொடி நிகழ்ந்தன கூறல்

காற்றலை வீசும் கடல்நகர் புக்கதூஉம்,
ஆங்கவள் சிலரால் அருந்துயர் பெற்றதூஉம்,
தீங்கினை எதிர்த்துத் திருத்தி வென்றதூஉம்,
அழுக்கிலா வாழ்க்கை ஆசான் றன்பால்
திருக்குறள் கற்றுத் தெளிந்து நின்றதூஉம்,
பொருள்நூல் முழுதும் திரிபற உணர்ந்ததூஉம்,
அருள்விழி நாவலூர் அமுதத் தம்மை
விறலுறு தமிழன் மீனவன் கையன

பெறலருஞ் சுவடிகள் பெட்புடன் ஈந்ததூஉம்,
ஏந்தல் மீனவன் இயல்பினை மலையுறை
அடிகள் தம்பால் அறிகஎன் றறைந்ததூஉம்
முடிய வுரைத்து முகிழ்த்தசெங் கையினள்
படிமிசை நின்றனள் பழுதறு பூங்கொடி ;

## அடிகளார் அறவுரை

மலையுறை யடிகள் மனங்களி கூர்ந்து,
‘ கலைபயில் செல்வி ! கல்லா மாந்தர்
நாட்டிடை மிகுதலின் நலிவுகள் மல்கின,
ஆட்டினம் ஆயினர் ஆதலின் அவர்பால்
கல்வித் தொண்டே கடவுள் தொண்டெனச்
சொல்லுதல் வேண்டும் மெல்லியற் பூங்கொடி !

## கல்விப் பயன்

ஓதிய கல்வி உயர்வினை நல்கும்,
சாதியில் உயர்வு தாழ்வுகள் சாய்க்கும்,
குடிக்குயர் வாக்கும், கொடுமைகள் போக்கும்,
பிடித்துள பேதைமைப் பிணியினைத் தொலைக்கும்,
அடிமைத் தளைகளை அறுக்கும், உலகில்
படிறு செய்திடப் பார்ப்பார் தமக்கிடம்
இல்லா தொழிக்கும், இன்பம் பயக்கும்,
பொல்லா வினைகளைப் புதைக்கும், நாளும்
மான வுணர்வினை வளம்பெற வளர்க்கும்,
ஆன கல்வி, அவலக் கவலை
கடத்தற் கொருமரக் கலமும் ஆகும் ;

## கற்றார் செய்தொழில்

மடக்கொடி நல்லாய் ! மாநிலத் திந்நாள்
கல்விப் பணியே காத்திடல் வேண்டும் ;

நல்லஇச் செயலால் நம்மனோர் அறிவொளி
எய்திடப் பெறுவர்; எய்திய காலை
உய்வகை அறிவர்; உணர்வும் பெறுவர்;
எப்பொருள் ஆயினும் மெய்ப்பொருள் காண்பர்;
தப்பெதும் புரியார்; தாய்மொழி அன்பும்
இயல்பினில் வாய்க்கும்; இந்தநல் லன்பால்
மயலறி வொழித்து மாண்புகழ் ஆக்குவர்;
பிறமொழி தமிழிற் பெருகுதல் காணின்
அறவே ஒதுக்குதற் காவன இயற்றுவர்;

## மொழிக் கலப்பு

செம்பொன் றன்னோடு செம்பு கலந்தால்
அம்பொன் அணிகள் அமைத்திடல் ஒல்லும்;
கலவா விடினோர் கலன்செய இயலா
ததுபோற் பிறமொழி அகற்றுதல் கருதின்
தமிழ்வள ராதெனச் சாற்றுவர் சிலர்தாம்;
அமிழ்தம் இனிக்க அச்சு வெல்லம்
கலப்போர் உலகிற் கண்டோ மில்லை;
உலப்பிலாத் தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழி
கலப்பிலா தியங்கும், கற்றவர் அறிவர்;
செம்பு கலந்தணி செய்வதும் இயற்கை,
செம்பும் மிகவே சேர்த்திடப் பெறுமேல்
கலன்செய அப்பொன் பலன்படா தொழியும்;

## இசையுங் கூத்தும் பரப்புக எனல்

நலமிகு நல்லாய்! நற்றமிழ் வளரப்
புலம்புலஞ் சென்று புரிகநற் றிருப்பணி;
மங்கை! கேளினி மற்றொன் றறைகுவென்
துய்ப்போர்ப் பிணிக்கும் தொன்மைசேர் இசைநூல்,

மெய்ப்பா டனைத்தும் மேவிய கூத்துநூல்
எத்துணை எத்துணை இருந்தன தமிழில்!
அத்துணை நூலும் அழிந்தன கடலால்
எனநாம் இரங்கி அயருங் காலை,
கனவெனக் கட்டுக் கதையெனக் கழறியும்
புலவோர் தம்மைப் பொல்லாங் குரைத்தும்
அலறுவோர் சிலருளர் அருகிய அறிவினர்
அவருரை பொய்யென ஆக்குக நங்காய்!
சுவடியின் துணையாற் சொல்லுக மெய்ம்மை;

## தமிழினமும் குரங்கினமும்

தமிழிற் பற்றுதல் தவறுவோர் தம்மையும்
தமிழினம் என்றே சாற்றுதல் கண்டோம்;
தாய்க்குரங் கொருகிளை தாவுங் காலை
தாய்மடி பற்றுதல் தவறுமேல் குட்டியைக்
குரக்கினம் தம்மொடு கொள்ளா தொழிக்கும்;
மரக்கிளை வாழும் மந்தியின் மானம்
நமக்கிலை அந்தோ! நாமோ மாந்தர்!
மானம் பரவுதற் கானவை இயற்றுக;

## தாய்மையும் பொதுப் பணியும்

பிணியுறு குழவியின் பெருந்துயர் கண்டு,
தணிவறு காதல் தாய்மனம் உருகிப்
பிணியற மருந்துகள் பெட்புடன் ஈய,
அறியாக் குழவி அலறுதல் போல,
அறியா மைப்பிணி அகற்றுதல் வேண்டிப்
பெரியோர் நல்லுரை பேசுதல் கேட்டுச்
சிறியோர் மருளுவர் சீறுவர்; அவர்தமைப்
பொதுப்பணி புரிவோர் ஒதுக்குதல் இன்றித்

தாய்மைப் பண்பே தாங்குதல் வேண்டும் ;
சேய்நலங் கருதிய தாய்,மருந் துணல்போல்
உலகம் நலம்பெற உறுதுயர் வரினும்
விலகா ததனை விழைந்திடல் வேண்டும் ;

### காணாப் புதுமை

ஆய்பொற் றொடியே அறிகதில் அம்ம!
தகுமிசை யரங்கில் தாய்மொழி விடுத்துப்
புகுமொழி இசைத்திடும் புன்மையை உலகில்
யாண்டுங் காண்கிலை ஈண்டுக் காண்குவை ;
மீண்டுந் தமிழிசை வேண்டும் எனினோ
மொழிவெறுப் புணர்ச்சி என்றதை மொழிகுவர் ;
பழுதுறு மதியர் பான்மையஃ தன்றோ?
அப்பகை தமிழை அழிப்பதைக் காணுதி!
செருக்கதை ஒழித்துச் செந்தமிழ் பேணுதி!

### தொண்டர்க்கு வேண்டுவன

தொண்டுபூண் டார்க்குத் தூயநல் லுளனும்,
கண்டவர் பழிப்பாற் கலங்கா உரனும்,
துயரெது வரினும் துளங்கா நிலையும்,
அயரா உழைப்பும், ஆயும் அறிவும்,
தந்நல மறுப்பும், தகவும் வேண்டும்
இந்நல மெல்லாம் ஏற்றனிர் நீயே ;

### இருளும் தொண்டும்

விளக்கிடை நின்றான் வீங்கிருள் புகுவோன்
துளக்கம் கொள்வன் ; துணைவிழிப் புலனும்
ஒளியிழந் தொருபொருள் உணரா திருக்கும் ;
கழியிருள் அதனுள் கடந்தனன் செல்லின்

வழியதும் புலனும் ஒளியுங் காணுவன்;
பொதுநலம் புரிவோர் நிலையதும் இதுவே;
முதன்முதற் புகுவோர்க்கு மலைப்பே முந்துறும்,
மலைப்பும் இளைப்பும் மதியா ராகி
உழைப்போர், வருதுயர் ஒன்றுங் காணார்;
அரிதாய் மலைப்பாய்த் தோன்றிய அப்பணி
சிறிதாய் எளிதாய்ச் செயற்படும்; அதனால்
என்மொழி யாவும் ஏற்றுளம் பதித்துத்
தென்மொழி உயரத் தேன்மொழி! தொண்டுசெய்!

### இசைப்பணிக்கு எழுக எனல்

இசைத்தமிழ் முழக்குக எங்கணும் பெரிதே!
வசைத்தொழில் புரிவோர் வாய்தனை அடக்குக!
இசைப்பணி புரிதல் இனிநமக் கேலாது
வசைத்தொழில் ஈதென வாளா விருந்தனை!
திசைத்திசைச் சென்று செந்தமிழ்ப் பாட்டின்
இசைத்திறன் காட்டுதி இனிநீ தாயே!
நின்னுயிர் பெரிதோ? தென்மொழி பெரிதோ?
இன்னுயிர் ஈந்தும் இசைத்தமிழ் பேணித்
தோமறு பணிசெயத் துணிந்தெழு நீ'என,

### அடிகளார் வாழ்த்து

ஆம்என மொழிந்தனள் ஆய்தொடி அரிவை;
'தாய்க்குலம் வாழ்க! தமிழினம் வாழ்க!
ஏய்க்கும் தொழில்போய் ஏர்த்தொழில் வாழ்க!
வாழ்கநின் னுள்ளம்! வாழ்கநின் தொண்டு!
வாழ்கபல் லாண்'டென வாழ்த்தினர் அவரே;
அருண்மொழி அன்னையும் அல்லியும் அடிகள்
தருவிடை பெற்றுத் தனியே கினரே.

*

# 13. மீனவன் வரலாறுணர்ந்த காதை

### அடிகளார் கூறத்தொடங்குதல்

இசையியல் இயம்பும் எட்டுச் சுவடி
வசையிலா நினக்கு வழங்கிய மீனவன்
தன்றிறம் கூறுவேன் தயங்கிழை! கேளாய்,
நின்பெரும் பணிக்கும் நீள்பயன் விளைக்கும்;

### குறியிடத்திற் காதலர்

நெல்லூர் என்னும் நல்லூர் ஆங்கண்
கழனி வினைபுரி களமர் குடிதனில்
எழில்நிறை செல்வி இடுபெயர்ப் பொன்னி
நல்லவள் ஒருத்தி, கொல்லுலைத் தொழில்புரி
வில்லவன் என்னும் விடலை தன்னொடு
அறியாக் காதல் வாழ்வின ளாகிக்
குறியிடம் ஒருநாள் கூடினள் நிற்க;

### அலர் பரவியது

நெறியிடை ஏகும் நெடுமகன் ஒருவன்
கண்டனன் அவர்நிலை காதல் அறியான்,
அண்டையர் மறைசெயல் அறிவதும் தீமை
அதனைப் பலர்க்கும் அறைவதும் தீமை;
இதனை உணரான் எதிர்ப்படு வோர்க்கெலாம்
புதுமை கண்டவன் போலதை விளம்ப
மனைதொறும் அம்மறை வாயிடம் பெற்றது
நினையா வகையிற் பனையாய் வளர்ந்தது;

### ஊரார் வாய்

பாரோர் அறிய ஒருபொருள் பரப்ப
ஊரார் வாய்போல் ஒன்றிலை உலகில்
உற்றொரு மறையை மற்றவர்க் குரைக்க
முற்படும் மாந்தர் கற்பனை என்னே!
கேட்டிடும் ஒன்றைக் கண்கால் படைத்து
நாட்டிடை நடமிட நற்பணி புரிகுவர்;

### தந்தையின் சீற்றம்

மறைபிறர் அறிய மலர்ந்தஅவ் வலர்மொழி
குறையிலாக் களமர் குலமகன் செவிபுகத்
தணியாச் சினமொடு தன்மகட் கூஉய்த்
'துணியாச் செயல்செயத் துணிந்தனை! என்குல
அணியாப் பெருமையை அணைத்தனை பேதாய்!
நினைகுவை நீயிப் பழிசெய என்றே
நினைந்தேன் அல்லேன் முனைந்தாய் கொடியாய்!
மேதியிற் கீழென மேலோர் நினைக்கச்
சாதி கெடுக்கச் சதிசெய் தனையே!
வீதி சிரிக்க விளைத்தனை சிறுசெயல்!

## இற்செறித்தல்

பெற்றான் ஒருவன் உற்றான் என்றும்
சற்றே நினைந்திலை! சாற்றுதல் கேள், இனிப்
புறச்செல வொழிப்பாய்! போற்றுதி மானம்!
அறச்செயல் விடுத்துநீ அகலுவை யேல்,என்
கதிர்அரி வாள்உன் கழுத்தினை அரியும்,
மதியொடு நட!என் மானமே பெரி' தென
இடிபடப் பேசி இற்செறித் தனனே;

## தடைபடாக் காதல்

கொடிபடர் முல்லையின் வெடிமலர் மணத்தைக்
கூர்முள் வேலியாற் காத்தலுங் கூடுமோ?
ஏர்முனை பாறையில் எவ்வணம் உழுதிடும்?
நேர்வரும் பகையால் நின்பெருங் கொள்கை
சீர்பெற் றோங்கிச் செழிப்புறல் போலப்
பொன்னியின் காதல் பொங்கிப் பொலிந்தது;

## பொன்னியின் செயலறு நிலை

இந்நிலை வதனால் ஏங்கி மெலிவது
கண்டனன் தந்தை; கடிதினில் இவள்மணம்
கண்டமை வேன்எனக் கொண்டுளங் கருதி
முயல்வுழி, இச்செயல் முழுவதும் உணர்ந்த
கயல்விழி இரங்கிக் கண்ணீர் மல்கிச்
செயலறக் கிடந்தனள் மயலது மிகவே;

## பொன்னி காதலனிடம் செய்தி கூறல்

இனைந்துயிர் மாய இடங்கொடா ளாகி
நினைந்தொரு முடிவு நேர்ந்தனள் மனத்தே;
விடிந்தால் திருநாள் விரைவினில் அனைத்தும்

முடிந்தே எழுவேன் எனமனம் முடுகும்
தையற் றெழில்வலான் தானென இரவில்
தையல் மலரடி விரைந்தன தனிமையில்;
வல்லவன் காதலன் வதியிடன் குறுகி
வில்லவன் றன்பால் நிகழ்ந்தன விளம்பலும்,

## வில்லவன் புலம்பல்

'அந்தோ! நின்னை அயலவன் மணஞ்செயின்
நொந்தே சாவேன் நொடிப்பொழு தினியிரேன்
இந்த உரைசொல வந்தனை யோ'என
வெந்துழல் மனத்தினன் வில்லவன் புலம்ப,

## பொன்னியின் துணிபு

'உயிரனை யாய்!நீ உணரா துரைத்தனை!
துயரம் விட்டொழி! துணைவன் நீயே
அயிரேல்! நின்னை அடையே னாயின்
கயிறே துணையெனக் கருத்தினிற் கொண்டுளேன்'
என்றனள் பொன்னி; இவ்விடை கேட்டு,

## வில்லவன் எழுச்சி

'நன்றுரை புகன்றனை! நமக்கேன் சாவு?
வென்றுல காள்வோம்; வீணரை எதிர்ப்போம்;
நினைப்பெறின் உலகை நினையேன் மதியேன்;
முனைத்தெழு பகையை முறிப்பேன் சிரிப்பேன்;
நின்னுளம் யாதோ! என்னுளம் வாழ்வோய்!'

## உடன் போக்கு

என்னலும், மின்னலின் இடையினள் துவண்டு
கன்னலின் மொழியாற் 'கருத்துரை வெளிப்பட
உரை'எனத், தலைவன் 'உடன்போக்' கென்றனன்;

‘விரைவாய்! விரைவாய்! விடுதலை பெறுவோம்;
மீன்,புனல் வாழ வெறுப்பதும் உண்டோ?
என்உனக் கையம்? எழுவாய் தலைவா!
நின்தாள் நிழலே என்பே ரின்பம்’
என்றவள் செப்ப, இருவரும் அவ்வயின்
ஒன்றிய உணர்வால் உடன்போக் கெழுந்தனர்;

## தந்தையின் மானவுணர்வு

துன்றிருட் கணமெலாம் சென்றிடக் கதிரோன்
ஒளிமுகங் காட்டி உலகெலாம் விளக்கக்
களமர்தம் குலமகன் கண்விழித் தெழுவோன்
தன்மகட் காணான் தணியாச் சினமிகப்
‘புன்மகள் தன்னினும் என்குல மானம்
ஒன்றே பெரிதாம்’ என்றே இருந்தனன்;

## பொன்னியின் செல்வன்

ஒன்றிய உணர்வால் உடன்போக் கெழுந்தோர்
சென்றொரு சுரநகர் சேர்ந்தனர்; ஆங்கண்
வாழும் நாளில் மகப்பே றுறுங்கால்
ஆண்மக வுயிர்த்தவள் ஆவி துறந்தனள்;
ஊண்புசி யானை உழலுமவ் வில்லவன்
புரிமனை காதற் பொன்னி நல்லவட்
பிரிவினை ஆற்றான் பெற்றஅம் மகவை
உறுமக வில்லா ஒருவன் பாற்படுத்
தேகினன் வெறுத்தே; இன்னுயிர் நீத்தஅப்
பொன்னியின் செல்வன்இம் மீனவன், பூங்கொடி!

## கலை பயில் தெளிவு

நன்மக விதனை நயந்து வாங்கியோன்
தன்மனை யாளும் தாய்பெறு பேறெனக்

கண்ணென மணியெனக் காத்து வளர்த்தனர்;
எண்ணும் எழுத்தும் எழிலோ வியமும்
பண்ணும் பிறவும் பழுதிலா துணர்ந்தே
செவ்விய நடையினன் செந்தமிழ் வல்லுநன்
அவ்வூர் மக்கள் அறிஞன்என் றியம்ப,

## கோவிலில் மீனவன்

வாழ்வோன் ஒருநாள் வானுயர் கோவில்
சூழ்வோன் உட்புகச் சொற்றமிழ் கேட்டிலன்
வழிபா டியற்றி வாழும் அவர்பால்
'இழிவாம் இச்செயல்! இனிமேல் தமிழால்
வழிபாட் டுரையை வழங்குக' என்னலும்,

## மறியல் போராட்டம்

'நெறியன் றும்'என நிகழ்த்தினர் மறையோர்;
மறியல் செய்தனன், மற்றவர் கூடிச்
சிறியன் இவன்தான் செருக்குற் றனெனத்
தூணிற் கட்டினர்; 'தாய்தமிழ்ப் பெரியீர்!
வீணில் தவறுகள் விளைத்திட முனைந்தீர்!
உருவுகண் டெள்ளேல்! ஒருபொருள் யார்வாய்க்
கேட்பினும் மெய்ப்பொருள் காண்பதே அறிவாம்,
கோட்பகை ஒன்றே மேற்பட நினைந்து
நாணுச் செயல்செயல் நற்றமிழ் மரபோ?'

## மீனவனைப் பழித்தல்

என்றனன்; அவ்விடை இருந்தவர் ஒருவர்
'நன்று நன்றடா! மரபினை நவிலக்
கூசினை யல்லை! குலவுநின் மரபோ
ஏசலுக் குரியது! வேசியின் பிள்ளை!

சாதி கெடுத்தவள் தந்தைசொல் விடுத்தவள்
வீதியில் நின்றவள் விடுமகன் நீயோ
எம்பெரு மரபை இகழ்ந்துரை கூறினை?
வம்பினை விலைக்கு வாங்கினை சிறியோய்!'
என்றிவை கூறி எளனம் செய்தனர்;

## மீனவன் வெஞ்சினம்

'பெரியீர்! எளனப் பேச்சினை விடுமின்!
சிறியேன் தீங்கு செய்ததும் உண்டோ?
அன்னையைப் பழித்தீர் ஆணவப் போக்கால்,
என்னைப் பிணித்தீர் இலையேல் நும்முடல்
துண்டு துண்டாத் துணிப்பென், பிழைத்தீர்!

## காதல் ஒரு குற்றமா?

கண்ட தவறென் காரிகை கற்பில்?
ஒருவனை உளத்தால் உன்னினள், எதற்கும்
வெருவிலள், அவனே விழைமண வாளன்
என்றவன் துணையை ஏற்றனள் காதலில்
வென்றனள், பொன்னி, வீரத் தாயென
நின்றவள் கற்பின் நிறைதனை இகழ்ந்தீர்!

## குணமிழந்தாள் நும் மகள்

கணவனை இழந்த காரிகை நும்மகள்
குணமிழந் தாளிதைக் குவலயம் அறியும்
கருவுற் ருளெனக் கண்டதும் நெஞ்சம்
வெருவுற் றிழைத்த வினையெலாம் மறந்தீர்!
கிணறே உரைக்கும்நும் கீழ்மைக் குணமெலாம்,
உணரா தும்மை உயர்வா நினைத்தீர்!
கொடும்பழி யஞ்சாக் குலத்தினில் தோன்றி

மிகும்பொருள் ஒன்றால் மேலவர் போல
நாடகம் நடித்தீர்! நல்லவள் கற்பில்
கேடுரை கிளந்தீர்! கிளறேல் என்சினம்!

## சாதி ஏது

சாதி என்றொரு சொல்லினைச் சாற்றினீர்
ஆதியில் நம்மிடம் அச்சொல் இருந்ததோ?
பாதியில் புகுந்தது பாழ்படும் அதுதான்;
தொழிலாற் பெறுபெயர் இழிவாய் முடிந்தது;
அழியும் நாள்தான் அணிமையில் உள்ளது;
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்குமென் றோதிய
திருக்குறள் உண்மைநும் செவிப்புக விலையோ?
கதிரும் நிலவும் காற்றும் மழையும்
எதிரும் உமக்கும் எமக்கும் ஒன்றே!
தவிர்த்தெமை நும்பாற் சாருதல் உண்டோ?
கபிலர் அகவல் கண்டதும் உண்டோ?

## காலம் அறிந்து கருத்தை மாற்றுக

சாதிப் பெயர்சொலித் தாழ்வும் உயர்வும்
ஓதித் திரியின் உலகம் வெறுக்கும்;
பிறப்பால் தாழ்வுரை பேசுவீ ராயின்
சிறப்பால் நீவிர் செப்புநும் முன்னையர்
மூலங் காணின் ஞாலஞ் சிரிக்கும்;
காலங் கருதிக் கருத்தினை மாற்றுமின்'
தோலா நாவினன் துணிந்திவை கூறி,

வேட்டங் கருதிக் காட்டகம் போகிக்
கோட்டுக் களிற்றொடு கொடும்போர் விளைத்து
மீண்ட வேங்கையின் நீண்டுயிர்ப் பெறிய,

## முதியோன் தூண்டுதல்

மூண்ட சீற்றத்து முதியோன் கொதித்துப்
'பெருமறை மந்திரம் பிழைஎனப் பிதற்றும்
சிறுமகன் நாத்திகன் செருக்கினைப் பாரீர்!
இன்றெனைப் பேசினன் இவனைநாம் விடுத்தால்
நாளையும் பழிக்க நாணான் நடுங்கான்
கோழை எனநமைக் கொண்டனன் போலும்;
தொழுதகு முன்னையர் வழிமுறை பிழைஎனப்
பழுதுரை கூறிய பாவியைப் பொறுத்தீர்!
ஆத்திகப் பெரியீர்! ஆண்டவற் பழித்தனன்
ஆத்திரம் கொண்டிலீர் அஞ்சினீர் கொல்' என,

## கயவர் தாக்குதல்

முரடர் சிலர்அம் மீனவன் முகத்தில்
குருதி சிதறக் குத்தினர்; மயக்குறக்
கட்டவிழ்த் தேகினர்அக் கருணை மாந்தர்;
சுட்டாற் செம்பொன் கெட்டா போகும்?
முட்டாள் தடுக்க முற்படின் பயணம்
தொட்டார் குறியிடம் விட்டொழி வாரோ?
மயங்கினன் கிடக்கும் மகன்றனை வளர்த்தவள்
புயங்களிற் சுமந்து தன்மனை புகுந்தனள்;

## வளர்த்தவள் வாய்மொழி

வயங்கிழை நல்லாள் வாய்விட் டலறித்
'துரும்பும் படாஅவகை விரும்பி வளர்த்தேன்

குறும்பர் இவ்வணம் கொடுந்துயர்ப் படுத்தவோ ?
அந்தோ அந்தோ'என் றழுவோள் முன்னர்
நொந்துழல் உடலினன் நுண்ணிதின் உயிர்க்கக்
கண்ணீர் மல்கிக் கசிந்துளம் உருகிப்
புண்ணீர் துடைத்துப் பொருந்திய மருந்திட்
டாற்றி, 'என்துயர் ஆற்றினை மகனே !
ஏற்றுள இப்பணி இனிமேல் வேண்டா
நமக்கேன் ஊர்ப்பகை ? நல்லது கெட்டது
சுமப்பவர் நாமே ! சொல்வது கேள்'எனத்

## மீனவன் உணர்ச்சி மொழி

'தாயே வரைத்தேன் தாம்பெற முயலுநர்
ஈயின் தாக்குதல் ஏற்பதும் வேண்டும் ;
குலவுநன் முத்துக் குளிப்பவர் கடல்மிசை
அலைவரல் காணலும் அடங்குவோர் இல்லை;
தேனும் முத்தும் மானும்நம் செந்தமிழ் ;
யானும் அதனை நயந்துளேன் ஆதலின்
அலைக்கும் ஈக்கும் அஞ்சேன், என்பணி
நிலைக்கும் வெல்லும் நீமனங் கலங்கேல்'
எனவாங்கு
உரைத்திவன் இருக்க ஊர்க்குறு மாக்கள்

## ஊரவர் தொல்லை

துரைத்தனம் செய்தனர் தொல்லைகள் தந்தனர் ;
வளர்த்தவர் அவற்றால் வாடி வதங்கினர் ;
இடுக்கண் இவர்க்குறல் என்னா லன்றோ ?
துடுக்கர் புன்செயல் தொலைவதெந் நாளோ ?
விடுத்திவ் வூரின் வெளிப்படல் நன்றென

## மீனவன் கூடல் அடைதல்

ஈண்டிய இருளில் எவர்கணும் படாவணம்
பாண்டிநன் னாட்டுப் பழம்பெரும் மூதூர்
கூடல் நகரினைக் குறுகினன் சென்று
பாடல் சான்றஅவ் வையைப் பதியுள்
ஓவியத் திறனும் உயர்இசைத் திறனும்
காவியப் புலமும் காட்டி நல்லோர்
யாவரும் நயந்திட மேவினன் அவனே. (224)

*

# 14. சுவடியின் மரபு தெரிவுறு காதை

### கூடலில் மீனவன் பணி

ஆங்கவன் றனக்குப் பூங்கொடி நல்லாய்!
தீங்கொன் றுற்றது செப்புவென் கேண்மோ!
கேட்குநர் உள்ளம் கிளர்ந்தெழூம் பாடல்,
நோக்குநர் மயக்கும் நுண்கலை ஓவியம்,
கள்ளின் சுவைதரு காவியம் முதலன
வள்ளலின் வழங்கினன் வருவோர்க் கெல்லாம்;
அவ்வவர் திறனும் அறிவும் விழைவும்
செவ்விதின் ஆய்ந்துணர்ந் தவ்வவர்க் குரியன
பயிற்றினன், பயில்வோர் பல்கினர் நாடொறும்;

### மாணவன் ஐயம்

செயல்திறம் நற்பயன் செய்துவரு காலை
'இசையும் கூத்தும் இயம்பும் தமிழ்நூல்
நசையுறும் ஓவியம் நவில்நூல் உளவோ?
ஒருநூ லாயினும் உருவொடு காண்கிலேம்;
எனஓர் ஐயம் எழுப்பினன் ஒருவன்;

## தமிழின் பகைகள்

மனநலி வுற்று மற்றவற் குரைப்போன்
'பலப்பல அந்நூல் படைத்தது தமிழ்மொழி
நிலைத்திடு சான்றுகள் நிறைதலும் காண்குவை ;
நெருப்பும் நீரும் செருத்தொழில் புரிந்தன ;
உருக்குலைந் தொழிந்தன ஓங்குயர் நூல்பல ;
ஆடிப் பெருக்கில் ஆற்றொடு விடுத்தனம் ;
தேடிச் சுவைத்தன செல்லுப் பூச்சிகள்
எஞ்சின ஒருசில! நஞ்சினுங் கொடியர்
வஞ்சினங் கொண்டென அழித்தனர் மாய்த்தனர் ;

## சங்கப் புதையல்

இத்தகு பகைஎலாம் எதிர்த்துத் தப்பின
பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும்,அச்
சங்கப் புதையலும் சாமி நாதத்
துங்கன் உழைப்பால் தோண்டி எடுத்தோம் ;
சிற்றூர் யாங்கணுஞ் சென்றுசென் றோடிப்
பெற்றஅவ் வேடுகள் பெருமை நல்கின ;
இத்தொகை நூல்களும் புத்தக உருவில்
வாரா திருப்பின் வளமிலா மொழிஎன
நேரார் பழித்து நெஞ்சம் மகிழ்வர் ;
நல்லோன் தந்தனன் நம்புதை பொருளெலாம்,
செல்லார் குழுவும் சிதைக்கா தொழிந்தது ;

## சிலம்பின் சான்று

நல்லோய் ! இசையும் நாடகச் சுவடியும்
வல்லோன் விழிக்கு மறைந்தன போலும்!
அகப்பட் டிருப்பின் ஆணவப் பேச்சைத்
தகர்த்தெறிந் தொழிப்பேன் ; சுவடிகள் தவறினும்

அந்நூல் தமிழுக் கிலையென் றறைதல்
அளப்பே யாகும் அவ்வுரை நம்பேல்!
அளப்பரும் புகழ்நூல் சிலப்பதி கார
உரைதரும் ஆசான் அடியார்க்கு நல்லான்
புரையற உரைத்தது புலமுளோர் அறிவர்;

## பழந்தமிழ் இசைகள்

யாழும் குழலும் எழுப்பிய இசைதான்
வாழும் தமிழோ? வருமொழி இசையோ?
அவ்விசைக் கருவிகள் ஆய்ந்து கண்டவர்
செவ்விய தமிழர்; சிறந்தஇக் கருவிகள்
எப்பொருட் டியற்றினர்? இசைப்பொருட் டன்றோ?
பாணன் பாடினி பாடற் றொழிலோர்
மேனாள் ஈண்டு மேம்பட வாழ்ந்தனர்;
அவர்தாம்

எம்மொழிப் பாடல் இசைத்தனர்? ஆய்ந்துணர்!
திணைகள் ஐந்தெனச் செப்பிய முன்னோர்
இணையும் வகையால் பண்ணும் இசைத்தனர்;
இவைஎலாம் மறந்தே இல்லெனல் முறையோ?

## மீனவன் கலங்கல்

ஆதலின் நம்பால் அனைத்தும் இருந்தன;
ஏதிலர் நம்மை இகழ்ந்துரை யாட
நோதகச் சிலபல தீதுற் றழிந்தன;
அந்தோ உலக அரங்குக் கொளிசெயும்
நந்தா விளக்கே! நாமிசைப் பாவாய்!
மண்ணக முதல்வி! எண்ணுநர் தலைவி!
நண்ணுவ தேனோ நலிவுகள் நினக்கெனக்
கண்கலங்கி நெஞ்சம் புண்ணடைந் திருப்ப,

## வந்தவன் வாய்மொழி

ஆங்கோர் பெருமகன் அவனுழை வந்து
பாங்குடன் அவனுளப் பாடுணர்ந் துரைக்கும் ;
'அயரேல் மீனவ! அறைகுவென் கேள்நீ!
பயில்தரு மறவர் பாண்டிய மரபினர்
சங்கம் நிறுவித் தண்டமிழ்ச் சுவடிகள்
எங்கெங் குளவோ அங்கெலாம் துருவித்
தொகுத்து வைத்துளார் ; மிகுத்தஅச் சுவடிகள்
பகுத்துப் பார்ப்பின் பண்ணும் கூத்தும்
வகுத்துக் கூறுநூல் வாய்க்கவும் கூடும்';

## மீனவன் சங்கம் புகுதல்

செவியில் இவ்வுரை தேனெனப் பாய்ந்தது;
குவிபடு கையாற் கும்பிட் டெழுந்து
சங்கம் புக்குத் தமிழே டனைத்தும்
பொங்கும் மகிழ்வால் பொன்னியின் செல்வன்
நுண்ணிதின் நோக்கினன் கண்களி கொள்ளச்
சுவடியொன் றுற்றது துள்ளிக் குதித்தனன் ;

## மீனவன் எக்களிப்பு

தவலரும் உவகை தன்னகம் நிறைக்கக்
குழந்தை யாகினன் ; இருகை கொட்டி,
இழந்ததைப் பெற்றேன் இனித்துயர் இல்லென
றாடினன் பாடினன் அவையகம் மறந்தே ;
தேடிய சுவடி ஓடிவந் துறலால்
வாடிய அவன்மனம் கூடித் தளிர்த்தது ;
துயரக் கடலுள் மூழ்கித் துடிக்கும்
அமயத் தொருமரக் கலமென அவற்குச்
சுவடி துணைசெயச் சோர்வகன் றனனே ;

## மீனவன் செம்மாப்பு

'என்தாய்ப் பழிப்போர் இனியிரார் உலகில்,
பொன்றாப் புகழ்நூல் புகுந்ததென் கையில்,
இசையும் கூத்தும் இலங்கிய தமிழோ
வசைபெறக் காண்பது? வையகம் எங்கும்
முழக்குவென் முழக்குவென் முத்தமிழ்ப் பெருமை,
சழக்கர் பகைஎலாம் தவிடெனப் பொடியென
ஆக்குவென், எதிர்ப்பெலாம் நீக்குவென், மாசினைத்
தீக்கிரை யாக்கித் தேனிசை பாடுவென்',
என்றவன் செம்மாந் தேறென எழுந்தனன்;

## பகைவர் அடக்கம்

கூடல் நகரெலாம் கொற்றவன் தமிழிசைப்
பாடல் ஒலியே பரந்தது கண்டு
வாயடங் கினரே வாதுகள் செய்தோர்;
தாயினும் மேலாத் தமிழினை விழைவோன்
இசையின் இயலெலாம் இசைத்தவன் இருப்புழித்

## ஏமகானன் பாராட்டுரை

திசைதொறும் சென்று தன்புகழ் நிறீஇ
விருதுபல கொண்டு வெற்றிக் களிப்பொடு
வருவோன் ஒருவன் வடபுலத் திசைவலான்
ஏம கானன் எனும்பெயர் பூண்டோன்
தோமறு மீனவன் தொண்டும், தமிழிசைப்
புலமையும், அவன்பெரும் புகழும் செவிமடுத்துக்
கலைமலி காளையின் கண்முன் தோன்றி
'உரவோய்! இளமையில் ஒருதனி நின்றே
இரவாப் பகலாத் திறமுடன் ஆற்றும்
நின்னிசைப் பணிக்கு நெடிதுவந் தனனே,

### வடபுலத்திசை பயில்க எனல்

என்னிசைப் பயிற்சியும் எளிதாய் நினக்கு
வருமா றுரைக்க மனங்கொண் டுன்பால்
வருதல் உற்றேன்; வடபுலத் திசையும்
ஒருங்குடன் சேரின் ஒளிரும் நின்புகழ்;
அருங்குணம் ஆன்றோய்! விரும்புதி யோ'என,

### மீனவன் ஏளனம்

வயிறுபுண் ணுக நாய்விட்டுச் சிரித்துக்
'குயிலின் குரலொடு கோழியின் குரலும்
இணையின் என்னும்? இந்நாள் வரையும்
துணைவிழி மூடித் தூங்கிய மாந்தர்
கண்விழித் தெழுந்து கருத்துடன் தமிழிசைப்
பண்தொடுத் திசைக்கப் பயிலுங் காலை
மீட்டும் மற்றோர் இசைபுக விழையின்
காட்டும் ஆர்வம் கருகிச் சாகும்;
அரும்பிய ஆர்வம் அணிமல ராகி
விரிந்து நறுமணம் வீசுதல் ஒன்றே
என்குறிக் கோள்'என எடுத்துரைத் தனனே;

### தங்கத் தேவனிடம் ஏமகானன் முறையிடல்

மின்பொறித் தாக்குதல் மெய்யுற் றன்போல்
பின்புறம் நோக்கிலன் பேசா நாவினன்
ஏகினன் வடபுல ஏம கானன்;
போகிய அவ்விசைப் புலவன் தானுறை
தங்கத் தேவன் தன்மனை குறுகிச்
'சிங்கம் என்னையிச் சிறியோன் பழித்தனன்;
என்னிசை இகழ்ந்து தன்னிசை புகழ்ந்தனன்;
நின்னுரை கேட்டேன் நெளிந்ததென் மானம்!
எந்நகர்ச் செலினும் எற்பணிந் தேற்றனர்;

இந்நகர் ஒன்றே இகழ்வுரை தந்தது ;
தங்கத் தேவ! தலைகவிழ் நிலையில்
தொங்கச் செய்தனை! துளைத்தனை நெஞ்சம்'
செங்கண் சிவக்கச் செப்பினன் இவ்வணம் ;

## தங்கத் தேவன் கொதிப்புரை

'வடபுலப் பெரியோய்! வாட்டம் தவிர்தி!
வடமொழி வெறுத்து வழுத்தமிழ் கோவிலில்
இடம்பெற முயலும் இழிமகன் செருக்கினை
அடக்கிட அழைத்தேன், கோவிலில் தமிழ்புகல்
விடத்தகு செயலோ? தடுத்திடல் வேண்டும் ;
மந்திர மொழியை வடமொழி தவிர்த்துச்
செந்தமி ழாற்சொலின் செத்து மடிகுவர் ;
கோவிலைத் தொலைக்கஇக் குறுமகன் இப்பணி
மேவினன் போலும், மிடுக்கினைத் தொலைப்போம் ;
தேவ பாடையின் சிறப்பினை நாட்டுவோம் ;
யாவரும் என்பெயர் கேட்டால் நடுங்குவர்,
பிறப்பால் இழிந்தோன் எதிர்த்துனைப் பேசினன் !
இறப்பே அவன்இனி எய்துதல் வேண்டும்' என்
றழுக்கா றுள்ளமும் அயலவன் சினமும்
இழுக்குறு செயல்செய எழுந்தன ; ஒருநாள்

## மீனவன் தாக்குறல்

அருகமை சிற்றூர் ஆண்டு விழாவில்
பெருமழை என்னச் சொன்மழை பொழிந்து
வருமவன் மீனவன் வண்டியை இருளில்
ஊர்க்குறு மாக்கள் தாக்கினர் ; அவனைத்
தீர்த்திட எண்ணித் தீட்டிய வாளால்
வெட்டினர் ; ஆனால் விளைந்தது வேறு !

கட்டிளங் காளையர் தட்டுவண்டி யோட்டிக்
கொட்டி முழக்கிக் கூஉய்வரல் கேட்டு
விட்டுவிட் டோடினர் விலங்குச் செயலோர் ;
வந்த காளையர் வாரி யணைத்து
நொந்த உடலின் நோவினை அகற்றிக்
கூடல் நகரிற் கொண்டுய்த் தனரே ;

### வருந்திய மீனவன் வேறிடம் சேறல்

'வேடன் கட்படு வெண்புற வானேன் !
பாடும் தமிழைப் பரப்புதல் பழியோ ?
கூடி எங்கும் கொலைசெய் மாக்கள்
தேடி அலையத் தொடங்குதல் கண்டேன் ;
காடும் நாடும் ஒன்றெனக் கண்டேன் ;
உயிர்ப்பலி உறுதி, ஓரிடம் தரியேன் ;
செயிர்த்தோர் என்னைச் செகுத்தொழிக் காமுன
ஊரூர் ஓடி உயரிசை பரப்பிப்
பாரோர் ஏற்கப் பணிபுரிந் தழிவேன்'
என்றம் மீனவன் ஏகினன் விரைந்தே ;

### தங்கத் தேவன் வஞ்சினம்

தங்கத் தேவன் தகவல் அறிந்ததும்
'எங்குஅத் தீயவன் ஏகினும் ஓயேன் ;
யாங்குறின் என்ன? வேங்கையின் பகையைக்
கிளறி விட்டவன் கேடுறல் திண்ணம் ;
உளறித் திரியுமவ் வுலுத்தன் தலைதனைக்
கொய்தமை வேன்'எனக் கூறி முடிக்கக்

### ஏமகானன் தூண்டு மொழி

கைதவன் ஏம கானக் கயவனும்
'நிற்பகை கொண்டோர் நெடுநாட் பிழையார்

சொற்பகை கொள்ளத் துணிந்தனன், நின்னைச்
சிங்கத் தேவனெனச் செப்பக் கேட்டுளேன்
தங்கத் தேவ! தயங்கேல் வினைமுடி'
எனமுடி போட்டவன் ஏகினன்; இப்பால்

### மீனவன், பகைக்கு இரையாதல்

ஊர்தொறும் ஊர்தொறும் உழைத்துவரு மீனவன்
பேர்மிகப் பெற்றனன்; பின்பொரு நகரில்
காரிருள் இரவிடைக் கண்ணயர்ந் திருந்துழி,
சூரியுட் கையினர் துணிமறை முகத்தினர்
ஈரிரு மாக்கள் இருள்நிறை மனத்தினர்
மானவன் மீனவன் மார்பிடை அந்தோ!
ஈனவர் செயலினை எவ்வணம் இயம்புவல்!

### ஆவி பிரிதல்

குருதிக் காட்டிற் குப்புறக் கிடந்தவன்
பெறலருஞ் சுவடியைப் பேணிக் கலைமகள்
நிலையஞ் சேர்க்கப் பணித்தபின் நெட்டுயிர்
கலைமலி தமிழுக் காக்கிக் களித்தனன்;

### அடிகள் இசை பரப்பப் பணித்தல்

அப்பெருஞ் சுவடி, ஆயிழை நல்லாய்!
தப்பரும் வீரன் தன்கையில் வாளென
நின்பால் உற்றது; நீஇதைப் பரப்பி
அன்பால் வெல்'கென அடிகள் நவில
நன்றெனப் புகன்று நங்கைஏ கினளே. (205)

*

# 15. இசைத்திறம் உணர எழுந்த காதை

### அடிகளார் ஆணை

பூங்கொடி யாகிய பொற்புடைச் செல்வி
ஆங்கண் மீண்டதும் அருண்மொழிக் குரைப்போள்
'மீனவன் திறமெலாம் விளம்பித் தமிழால்
ஆன நல்லிசை யாண்டும் பரவிடச்
சுவடியின் துணையால் தொண்டியற் றென்று
தவறிலா அடிகள் சாற்றினர்' என்றனள்;

### அருண்மொழியும் இசைதல்

'ஆம்என் மகளே! அதூஉஞ் சாலும்
தோமறு தமிழிசை துலங்குதல் வேண்டி
மீண்டும் அப்பணி மேவுதல் வேண்டும்;
பூண்டநல் லன்பரைப் பூரியர் கொலைசெய
ஈண்டிய துயரால் இசைத்தொழில் துறந்தோம்;
இவ்வணம் நம்மனோர் இசைப்பணி வெறுத்திடின்
செவ்விய அவ்விசை சீருறல் யாங்ஙனம்?

துயரால் துறத்தல் தன்னல மாகும்
அயரா உழைப்பால் அப்பணி புரிகுவம்
எண்ணி எண்ணி இம்முடி பேற்றேன் ;
அண்ணலும் அம்முடி பறைந்தன ராகலின்
இன்னே அதனை இயற்றுதல் வேண்டும் ;
கொன்னே வாழ்நாள் குறைவது கண்டோம்
விழுங்கி உறங்கிப் பிணியால் மூப்பால்
விழுந்து மாய்தல் வீணே யாதலின்
புதுமைச் சுவடியின் பொருளெலாம் தெளிந்து
போதல் நன்றெனப் புகன்றனள் அருண்மொழி ;

## பூங்கொடி வேண்டுதல்

'அன்னாய் ! சுவடியின் அரும்பொருள் அனைத்தும்
என்னால் ஆய்தல் எவ்வணம் இயலும்?
இசையின் திறனும் இயலின் திறனும்
நவையற உணர்ந்த நல்லோர் தாமே
இதன்திறம் முழுவதும் எளிதின் அறிகுவர் ;
அதனதன் வகைஎலாம் அறிந்தனை நீயே
முதன்முதல் இதன்பொருள் மொழிக' என்றனள் ;

## எழிலியிடம் செல்க எனல்

'உயிர்நிகர் மகளே ஒன்றுரை கேண்மோ !
இயலிசைத் திறமெலாம் என்னினும் மிகவே
கற்றாள் நிறைபுகழ் பெற்றாள் ஒருத்தி
உற்றாள் கொடுமுடி ஊரினள் அம்மகள்
அறிவின் உரனும் ஆய்வின் திறனும்
செறியும் இயல்பினள் செம்மை வாழ்வினள்
நரைமூ தாட்டி நம்போற் பொதுப்பணி
புரிவது தொழிலாப் பூண்டவள் ; அவள்தான்

எழிலி என்னும் ஏழிசைச் செல்வி ;
அன்னவள் தன்பால் அணுகி இதன்பொருள்
பழுதற உணர்க! பைந்தமிழ் இசைமுறை
கெழுதகும் அன்பால் கிளத்துவள் அம்மகள் ;
என்பாற் கற்ற இன்னிசைத் திறனும்,
அன்பாற் கற்ற ஆய்முறைத் திறனும்,
உன்பால் அமைந்த உருக்குங் குரலும்,
முன்பே முறுகி எழுநல் லார்வமும்
உடையாய் ஆதலின் உறுபயன் ஒருதலை ;
தடையாய் வருவன உளவேல் தவிரும்;
எழுவாய்! எழுவாய்! இன்றே எழுவாய்!
தொழுவாய் அவளைத் துணையென நினைவாய்!
வழுவா மகளே! வாழிய பெரிதே'
என்றவள் வாழ்த்தி இருந்தனள் ஆங்கண் ;

### அடிகளார் வருகை

நன்று நன்றென நங்கையும் இயைந்தனள் ;
அவ்வுழி அடிகள் வருகை தந்தனர்
செவ்விய மங்கையர் செங்கை கூப்பி
நிற்றலும் அவர்தமை நேரியர் வாழ்த்திப்
'பொற்றொடி யீர்! நாம் புறக்கணிப் பாக
விடுதல் தகாது விழிப்பினி வேண்டும்,
முடுகி எழுந்து முயலுதல் வேண்டும்,
மீண்டும் இசைப்பணி மேவுதல் ஒன்றே
காண்டகு செயலாம் ; கருதா தொழியின்

### இசைப் பகைவர்

தமிழின் பகைவர் தாமே புகுந்து
நமதிசை மறைப்பர், நாளும் பிறமொழி
இசையே பாடி ஏற்றமும் பெறுவர்,

இசையும் பொருளும் இனியநல் வாழ்வும்
அடைதல் ஒன்றே அவர்குறி யாதலின்
தடையும் செய்குவர் ; 'தமிழில் இசையிலை,
பாட்டிசைத் துறையில் 'பாஷைச்' சிக்கல்
நாட்டுதல் நன்றோ? நாதம் ஒன்றே
நோக்குதல் வேண்டும், மொழிவெறி நுழைப்பது
குறுமனப் பான்மை, விரிமனங் கொள்க'
என்றெலாம் கதைப்பர் ; இவ்வுரை கேட்டோர்
ஒன்றும் ஓரார் ; உயரிய கல்வி
கற்றோர் சிலரே; கற்றோர் தம்முளும்
சிந்தித் துணர்வார் சிலரினும் சிலரால்
வந்தித் தவ்வுரை வாயென ஏற்பார் ;
நேரிய நப்சொலைச் சீரிய தன்றெனக்
கூறிப் பல்வகைக் குறைகளும் புணர்த்துவர் ;

## தமிழிசை தழைக்கும்

ஆதலின் அன்னாய்! அத்துறை அனைத்தும்
ஏதிலர் தமக்கே இரையா காமல்,
தாய்மொழி மானம் தமதென நினையும்
ஆய்முறை தெரிந்த ஆன்றோர் தாமும்
உயிரெனத் தமிழை உன்னுவோர் தாமும்
செயிரறத் தமிழைத் தெளிந்தோர் தாமும்
புகுந்து தமிழிசை போற்றுதல் வேண்டும்;
தகுந்தோர் புகின்அது தழைத்திடல் ஒருதலை;

## கூத்தும் பரவுக

கூத்தும் அவ்வணம் கூர்மதி யாளர்
காத்துப் போற்றின் கைம்மேற் பலனும் ;

உயர்தமிழ் மூன்றனுள் ஒன்றென நினையார்
மயலறி வுடையார் மறந்தனர் வெறுத்தனர்;
கல்லா மாந்தர் கையகப் பட்டது;
நில்லா தொழிந்தது நீள்புகழ் பட்டது;
கற்றோர் பலரும் முற்றுகை யிடின்அது
நற்றமிழ் மரபாய் நாட்டினிற் பரவும்;

### அடிகளார் விழைவு

ஆதலின் அருண்மொழி! அரும்பெறற் பூங்கொடி
ஓதல் வேண்டும் உயர்தமிழ் இசையை;
தெருவெலாம் ஊரெலாம் சென்று நாடெலாம்
உருகும் இசைத்தமிழ் ஒலித்து முழக்கி
வெல்லுதல் ஒன்றே விழைந்தனென்; அதன்றலை

### அடிகளார் வினவுதல்

சிந்தனைக் கருத்தளாஅய்ச் செந்தமிழ்ப் பாட்டால்
பிந்திய மக்களைப் பேணலும் ஆகும்;
ஏற்றுள நம்பணி எளிதினில் வெல்லும்;
சாற்றிய மீனவன் தான்விடு சுவடியும்
வேற்றிடன் புகாஅது விளைபயன் நல்கப்
பூங்கொடி கையிற் புகுந்தது நல்லாய்!
ஈங்குன துளம்யாது?, என்றலும் உரைப்போள்

### அருண்மொழி விடை

'பெரியீர்! நும்மொழி பேணுதல் ஒன்றே
அறிவோம் யாங்கள், ஆதலின் என்மகள்
நெறிமுறை பிறழா நேரிசைச் செல்வி
கொடுமுடி தந்த கோமகள் எழிலி

என்பாள் உழைச்செலீஇ இசையின் நுணுக்கம்
முன்போய்ப் பெறுகென மொழிந்துளேன், அவளும்
அன்பால் இயைந்தனள்' என்னலும், பூங்கொடி

## எழிலியின் திறம் வினவுதல்

'குறள்நெறி வழுவாக் கொற்றவ! எழிலி
திறன்முழு தறியும் விழைவினேன்' என்றனள்;
அழியாப் புகழ்மிகுத் தடங்கி வாழும்
எழிலி திறமெலாம் இயம்புவென் யானென
விழிமலர்ப் பூங்கொடிக்கு விளம்பினர் அவரே. (118)

*

# 16. எழிலியின் வரலாறறிந்த காதை

## இசைச் செல்வி

கன்னித் தமிழின் நன்னலங் காப்போய்!
தன்னலம் விழையாத் தையல் எழிலிதன்
திறமுனக் குணர்த்துவென் செவ்விதிற் கேண்மோ!
அறமனச் செல்வி, அழகின் விளைநிலம்
எழிலி எனும்பெயர்க் கியைந்தவள், அவள்தான்
இசையால் உறுபே ரிசையாள், பிறமொழி
இசையே பாட இசையாள், தமிழில்
ஒன்றெனும் இயலும் ஓதித் தெளிந்தவள்,
மன்றினில் நிறைவோர் மகிழ்ந்திடப் பாடலில்
ஒன்றிய பொருளின் உணர்வொடு பாடி
இசைவய மாக ஈர்க்குந் திறத்தினள்,
நரம்பிசை பிழையாக் குரலால் நெஞ்சம்
உருக இன்னிசை ஓதும் பெற்றியள்;

### எதிர்ப்பெலாங் கடந்தாள்

மெல்லிசைத் தமிழின் மேன்மை விரும்பாச்
செல்வர் சிலரும் செய்தி இதழரும்
மொழிவெறி கொண்டாள் எனப்பழி மொழிவது
தொழிலாக் கொண்டனர் தொல்லைகள் தந்தனர்;
புன்கண் ஒன்றும் பொருளெனக் கருதிலள்,
தன்கண் வருவாய் தழைவது வேண்டிலள்;
அதனை விழைவோர் தாமே அஞ்சுவர்?
எதையும் அஞ்சிலள் எடுத்தநற் பணியில்
ஆக்கமும் கேடும் அணுகுதல் உண்டென்
றூக்கமும் உரனும் மீப்பட லாயினள்;
அயலி ருந்தே அழிவினை வித்தும்
பயனில பேசும் பதர்சிலர் ஒழிய
மயல்ஒழிந் தாரெலாம் மதித்தனர் போற்றினர்;
தளிர்க்கும் அவள்புகழ் தகைப்பார் இல்லை;
முளைப்பவர் எவரும் முகங்கவிழ்த் தேகினர்;
இவ்வணம் இசையால் ஏற்றம் பெற்றனள்;

### காதல் மணம்

அவ்வுழை ஒருவன் அழகிய கூத்தன்
ஆடல் வல்லான் அதனதன் நுணுக்கம்
நாடிய புலத்தான் நாடெலாம் வியந்து
'நிகரிலை இவற்'கென நிகழ்த்துநற் பெயரோன்
புகழில் மிதப்போன், பூவை எழிலியை
மலர்மண மாலை சூட்ட விழைந்தனன்;
கலைஞர் இருவர் கருத்தும் ஒன்றின,
கூத்தும் பாட்டும் குலவி மகிழ்ந்தன,
ஏத்தும் புகழோ எழுந்தது திசைஎலாம்;

### கூத்தன் அயல்நாடு செல்லுதல்

மண்டிய புகழை மாந்திய மாந்தர்
தெண்டிரை கடந்த திசையினில் வாழ்வோர்
கண்டு மகிழக் கருதின ராகி
வேண்டி அழைத்தனர் விரைந்தனன் கூத்தனும்;
ஈண்டிருந் தாள்இசை எழிலி தனித்தே;
ஆழி கடந்தவன் ஆடற் றிறமெலாம்
ஊழியல் முறையால் உணரக் காட்டினன்;
'கண்டிலாப் புதுமை கண்டனம்' என்று
கண்டவர் புகழ்ந்து கைப்பொருள் நல்கப்

### மரக்கலம் உடைதல்

புகழும் பொருளும் மிகவரப் பெற்றே
அகநிறை களிப்பால் ஆழ்கடல் மிசையே
மீள்வோன், பெருவளி மிடல்கொடு தாக்க
நீள்கலம் உடைந்து நெடுங்கடல் மூழ்கலும்;

### கூத்தன் ஒரு தீவை அடைதல்

பாய்மரம் சிதறிய பகுமரம் பற்றி
ஓய்விலா அலைகள் உந்தி உதைப்பக்
கடுங்கண் மறவர் கல்லா மாந்தர்
கொடுங்கள் உண்டியர் குழீஇ வாழும்
மொழிபெயர் தீவின் கழிபடு கரையில்
விளிவில னாகிச் சார்ந்தனன் கூத்தன்;

### எழிலியின் துடிப்பு

'பெயருங் கூத்தன் பெருவளி தன்னால்
உயர்கலம் மூழ்கி உயிர்துறந் தான்'என
உயிர்பிழைத் துய்ந்தோர் வந்தீங் குரைத்த

கொடுமொழி செவிப்படக் கொடுவரிப் புலிவாய்ப்
படுதுயர் மானெனப் பதைத்தனள், கதறினள்,
துடித்தனள், துவண்டனள், துடியிடை கண்ணீர்
வடித்தனள், 'என்னுடை வாழ்வில் வீசிய
பெரும்புயல் விளைத்த துயரம் பெரிதே!

## எழிலியின் புலம்பல்

மாலுமி இல்லா மரக்கலம் ஆகிப்
பாழும் இடர்க்கடல் வீழும் தனியேன்
எவ்வணம் உய்குவென்? யாதுநான் செய்குவென்?
கவ்விய இத்துயர் கடப்பது யாங்ஙனம்?
பிரிவெனும் பெருஞ்சுரு பேழ்வாய் காட்டி
விரைவினில் வந்தெனை விழுங்கிடும் அந்தோ!
இசையொலி பரவிட இன்புறுங் காலை
வசையிலா யாழில் வடிநரம் பறுந்ததே!
கூடி மகிழ்ந்த கூத்தும் இசையும்
வாடி வதங்கி வாழ்விழந் தனவே!
பண்ணொலி இழந்தது பாடல் அந்தோ!
கண்ணொளி இழந்தது கருவிழி அந்தோ!
கொழுநன் இழந்தேன்! கொழுநன் இழந்தேன்!
உழலும் வாழ்வும் உயிரும் வேண்டேன்'
எனுமொழி புலம்பி, இனைதுயர் நலியக்

## எழிலியின் மெலிவு

கண்படை கொண்டிலள், கருதிலள் உணவைப்
புண்படு நெஞ்சம் பூண்டனள்; அதனால்
பண்ணும் இசையும் பரிவுற் றேங்கக்
கண்ணும் மனமும் கவலை தேங்க
உயிரும் உடலும் நலிந்து மெலிந்தனள்;

## வானொலிச் செய்தி

‘ஊர்பெயர்ந் தேகிய உயர்பெருங் கூத்தன்,
சூர்வளி தாக்கத் தொலைகலப் பட்டோன்,
ஊர்திரை உந்த ஒடிமரம் துணையாக்
கல்லா மாந்தர் கடுங்கண் மறவர்
பல்லோர் வாழும் பழுவூர்ப் பாக்கம்
சார்ந்துளன்’ என்று சாற்றிய வானொலி
வாய்மொழி கேட்டோர் வந்துடன் புகலத்

## எழிலியின் களிப்பு

தழலில் உருகும் நெஞ்சம் தளிர்த்தனள்,
உயிரும் தளிர்த்தனள், ஊனெலாம் தளிர்த்தனள்,
பயிரை விளைத்தோன் பயனெதிர் நோக்கும்
பான்மைய ளாகிப் பண்ணுயர் எழிலி,
வாழ்க்கைத் துணைவன் வரவெதிர் நோக்கி
வீழ்த்திய துயரம் விலகிட இருந்தனள்;

## கூத்தன் பழுவூர்த் தலைவனை அடைதல்

அடைகரை சேர்ந்து விழுமகன் றன்னை
மிடைமணற் பரப்பின் இடையினிற் கண்டோர்
பழுவூர்த் தலைவன் பக்கலிற் சேர்த்தனர்;
கொழுவிய தலைமகன் கூத்தன் நிலைகண்
டிரங்கிய நெஞ்சினன் இவன்பசி களைவோன்
நறுங்கனி பலவும் நல்கின னாகப்

## தலைவன் வியப்பும் வினவும்

பசியும் தளர்வும் நீங்கியோன் பழுவூர்
வதியும் பிறமொழி மாந்தர் தம்முடன்
அவர்மொழி பேசிட, அவ்வூர்த் தலைவன்

உவப்பும் வியப்பும் உற்றன ளாகித்
'தவறிலா துரைத்தனை எமது தாய்மொழி!
யாங்ஙனம் உணர்ந்தனை? ஈங்கெமக் குணர்த்துதி!
ஆங்கிலம் வடபுலத் தாரிய மொழிகளால்
தீங்குவந் துறுமென நின்னுடைத் தேய
மாந்தர் பலரும் மற்றைய மொழிகளைக்
காந்திய நெஞ்சொடு கனன்று வெறுத்துரை
கூறுவர் என்றே கூறக் கேட்டுளேம்;
ஆயினும் நீயோ அழகுற எமது
தாய்மொழி புகன்றனை யாங்ஙனம் உணர்ந்தனை?
ஈங்கெமக் குணர்த்துதி' என்னலும் உரைப்போன்

## தமிழரின் பரந்த மனப்பான்மை

'வருவிருந் தோம்பும் பெருந்திறல் உடையோய்!
வருமொழி தமக்கெலாம் வணங்கி வரவுரை
தருவது தொழிலாக் கொண்டது தமிழகம்;
அயன்மொழி பலவும் ஆய்ந்து தெளிந்து
மயலற மொழியும் மாந்தர் பற்பலர்
எம்முடை நாட்டினில் இலங்கிடல் காணுதி!
எம்மொழி யாயினும் எம்மொழி என்றதை
நம்பும் இயல்பினர் நாங்கள்; இந்நிலை
அறிகதில் ஐய! அமிழ்தெனும் தமிழை
மறந்தும் பிறமொழி மதிக்கும் பெற்றியேம்;
ஆயினும் தமிழை அழிக்கும் கருத்தின்
சாயல் காணினும் தரியேம் எதிர்ப்போம்;

## பிறமொழி பயில்வோர்

மொழியியல் ஆய்வோர் முந்நீர் வணிகர்
எழிலுறுங் கூத்தர் இவ்வகை மாந்தர்

பன்மொழிப் பயிற்சி பாங்குறப் பெறுவர்;
என்தொழில் கூத்தென ஏற்றுளேன் ஆதலின்
அயன்மொழி சிற்சில அறிந்துளேன் அன்ப!

## தமிழகக் கிளர்ச்சி

உரிமை வாழ்வை உவந்தனர் என்னினப்
பெருமை உணர்ந்த பெரியோர், அதனால்
உணர்ச்சியும் எழுச்சியும் ஊட்டினர்; ஊட்டத்
தளர்ச்சி நீங்கித் தமிழக மாந்தர்
வளர்ச்சி நாடிக் கிளர்ச்சிகள் செய்தனர்;

## சிற்றினத்தின் சூழ்ச்சிகள்

தமிழர் உயர்வைத் தகைக்கக் கருதிப்
பழியும் பொய்மையும் பகர்தல் நாணா
இழிமதிக் கூட்டம் எம்செயல் கண்டே
அவ்விய நெஞ்சில் அச்சமும் சேர
எவ்வகை யேனும் தமிழியல் எழுச்சியைக்
கொல்லும் நோக்கொடு குழுமிய சிற்றினம்
ஒல்லும் வகையாற் பல்வகைப் பழியைச்
சொல்லித் தீர்த்தது சூழ்ச்சிகள் விளைத்தது;

## பொய்ம்மொழி நம்பேல்

சூழ்ச்சியால் அயன்மொழி ஆட்சியைப் பரப்பிடப்
பாழ்ச்செயல் புரிந்தது; பகைமனங் கொண்டெமைக்
குறுமனம் என்று குறைகள் சொற்றது;
பிறமொழி வெறுக்கும் பெற்றியர் என்றது;
உடனிருந் தழிக்கும் நோய்நிகர் மாந்தர்
கொடுமனம் உடையோர் விடுபொய் மொழியை
நண்ப! மெய்யென நம்பேல்; எம்முயர்

பண்பினை நடுநிலைப் பாங்கினர் ஏத்துவர்'
எனஅக் கூத்தன் எடுத்தியம் பினனால்;

### தலைவன் மகிழ்வும் வேண்டுகோளும்

மனமிகக் களித்த பழுவூர்த் தலைவன்
கூத்தன் உரைத்திடும் கொள்கைகள் போற்றி
'நாத்துணை யாகிய நாவல! ஈங்கிவண்
காத்துனைப் போற்றிடக் கருதினம்; எம்முழைச்
சின்னாள் வதிந்து சிறியேம் மகிழ
நன்னூல் ஒன்றின் நலமுரைத் தேகுதி!
கூத்தின் திறமெலாம் பார்த்திடும் விழைவினேம்
ஆயினும் நின்குழு அனைத்தும் இழந்து
பாய்மரம் துணையாப் பற்றிவந் துற்றனை;
ஆதலின் நன்னூல் அறநூல் ஒன்றினை
ஓதுதி எமக்கு'என உரைத்தன னாகக்

### கூத்தன் திருக்குறள் உரைத்தல்

கூத்தனும் இசைந்து குலவி மகிழ்ந்தனன்;
பாத்திறம் காட்டும் பாவலன், நாவலன்,
தீத்திறம் யாவும் தீர்த்திடும் ஆசான்,
உலகம் உய்ந்திட உயர்நிலை எய்திடப்
பலபொருள் பொதிகுறட் பாவினைத் தந்தனன்;
எப்பா லவரும் ஏத்தும்அம் முப்பால்
செப்பிய பொருளறம் தப்பா துரைத்து
மெய்ப்பால் அனைத்தும் விளக்கினன் கூத்தன்;

### பழுவூர் மாந்தர் அறநெறி தெளிதல்

எஞ்சா துணர்த்திய எழிலறம் அனைத்தும்
நெஞ்சாற் கொண்டனர்; நிறைமொழி மாந்தன்

வள்ளுவன் ஓதிய வாய்மைகள் கண்டனர்;
தெள்ளிய தமிழியம் தேர்ந்தனர்; அன்பை
உள்ளிய பழுவூர் உறையும் மாந்தர்;

### பழுவூரார் பரிசில் அளித்தல்

நன்னூல் மொழிந்திடும் நவைதவிர் அறமெலாம்
பன்னூற் கூத்தன் பகர்ந்திடக் கேட்டுக்
கழிமிகு மகிழ்வினர் நிறைபடு நிதியம்
அரும்பொருள் பலவுடன் அளித்தனர் போற்றப்
பெரும்புகழ் விஞ்சிடப் பெயர்ந்தனன் கூத்தன்;

### பிரிந்தவர் கூடுதல்

கருங்கடல் கடந்தனன் கலந்தரு துணையால்
தாயகம் கண்டனன் தளிர்த்தனன் மனனே;
வேயனை தோளி மீளுறுங் காதலற்
காணலும் நீள்துயர் களைந்தனள் ஆங்கே;
பேணிய கூத்தும் பெரும்பே ரிசையும்
நீணில மாந்தர் நெஞ்சங் களிகொள
மீண்டும் மலர்ந்தே யாண்டும் பரவின;
எழிலிதன் வாழ்வில் எழிலி ஆயினள்;

### பூங்கொடி எழிலிபால் எழுதல்

தொழுதகும் அந்தத் தூயவள் பாங்கில்
எழுக! இசையின் நுணுக்கம் யாவும்
பழுதற உணர்க! பரப்புக பாரில்!
என்றனர் அடிகள் எழுந்தனள் அவளே. (198)

*

# 17. எழிலிபாற் பயின்ற காதை

## பூங்கொடி எழிலியின் இல்லம் அடைதல்

ஆங்ஙனம் புகன்ற அடிகள்தம் வாய்மொழி
பூங்கொடி ஏற்றுளத் திருத்தினள் போந்து
கொடுமுடி நல்லாள் குலவிய தமிழிசை
நெடுமனை குறுகி நின்றன ளாக,

## பூங்கொடி அறிமுகம்

'வல்லான் கைபுனை ஓவியம் போலும்
நல்லாய்! என்மனை நண்ணிய தென்னை?
இளங்கொடி யார்நீ?' என்றனள் எழிலி;
உளங்கொள அறிமுகம் உரைத்தனள் தன்னை
அடிகள்தம் ஆணையும் அறைந்தனள் பூங்கொடி;

## எழிலி பாடம் பயிற்றல்

இசையின் அரசி ஈங்கிவள் விழைவுணர்ந்
திசைந்தனள், இசையின் இலக்கண நுணுக்கமும்,
பாடல் திறனும், பாடும் முறைமையும்,
ஏடுரை வகையும், இசைத்தொழில் புரிதலால்

பட்டுணர் அறிவும், பாங்குடன் குழைத்து
மட்டவிழ் கோதை மனங்கொள ஓதினள்;

## இசைக்கருவிப் பயிற்சி

குழலும் யாழும் முழவும் முதலாப்
பழகும் கருவியின் பான்மையும் பயிற்றினள்;
மீனவன் சுவடியின் மேம்படு பொருளெலாம்
ஞானமீ தூர நாள்பல ஆய்ந்து
குறைவறத் தெருட்டினள் கொடுமுடி நங்கை;

## எழிலியின் உள்ளக்களிப்பு

நிறைவுறும் அறிவொடு நேரிய நடையுறும்
இளையாள் திறமெலாம் எழிலி நன்குணர்ந்
திவளால் இசைத்தமிழ் இசையுறல் திண்ணம்;
தவலரும் இப்பணி தரணியில் ஆற்றிட
என்பின் ஒருவரும் இலரே எனமனம்
துன்பின் ஆழ்ந்து துவளுங் காலை
அந்நலி வகற்றிட ஆயிழை வந்தனள்;
என்னினும் மேம்பட ஏற்றமுற் றிலங்குவள்,
பைந்தமிழ் இசைத்தொழில் பரம்பரை அறாஅது;
பைந்தொடி நெடுநாள் வாழிய பெரிதென
நெஞ்சொடு வாழ்த்தி நெடிதுவந் தனளே;

## பூங்கொடி இசையரங்கேறுதல்

பாவை ஏறிய பாட்டரங் கனைத்தும்
நாவை மீறிய நற்புகழ் எய்தினள்;
கேட்டார்ப் பிணித்துக் கேளார் தாமும்
வேட்ப இசைக்கும் வியத்தகு குரலும்,
பொருளொடு புணர்த்துப் புந்தியிற் படியத்

தெருள்தரச் சுவையொடு செப்பும் முறையும்,
உயர்த்தும் தாழ்த்தும் விரித்தும் சுருக்கியும்
வியக்கும் முறையாற் பண்தரு விறலும்,
தாளமும் இசையும் தவறா வகையில்
காலமும் இடமும் கலையா நிலையில்
இணைந்தும் பிணைந்தும் இசைக்கும் திறனும்,
குழைந்து பயன்தரு கொள்கையும் கலந்து
விழைந்து மாந்தர் வியந்திடப் பாடி
இசைப்பணி புரிந்தனள் எழில்வளர் பூங்கொடி ;

## யாப்பியல் பயில்கென எழிலி கூறல்

நகைத்தமிழ் இசைத்திறம் நன்கறி வுறுத்திய
எழிலி மீண்டும் இளையவட் கூஉய்க்
'கழிமிகு புலமை பெற்றனை காரிகை !
பாடல் யாக்கும் பாங்கும் கசடற
நாடிநீ பயிலுதல் நயந்தனென் செல்வி !

## கவிதை குவிதல் வேண்டும்

யாண்டும் கவிதை யாத்திட முனைவோர்
வேண்டு மளவில் விரிந்திடல் கண்டோம் ;
ஆயினும் சிலரே அறிவுடைப் புலவோர் ;
தாயினும் மேலாம் தமிழ்மொழி ஓங்கிட
நவையறு கவிதை குவிந்திடல் வேண்டும் ;

## கல்லாக் கவிஞர்

கவியெனும் பெயரால் கற்பனை செய்து
புனைவோர் அனைவரும் புலவோர் அல்லர்,
துணைசெயும் யாப்பும் தொட்டவர் அல்லர்,
எழுத்தும் சொல்லும் பழுத்தவர் அல்லர்,

முழுக்கப் பொருளும் முடித்தவர் அல்லர்,
பழுதிலா அணியும் படித்தவர் அல்லர்,
ஐவகை இலக்கணம் அனைத்தும் இன்றிச்
செய்யுள் எழுதி உய்வோர் பலரே!

## தமிழைப் பழிக்க விடுவதோ!

இவர்தம் பாடல் எழிலுற அச்சுச்
சுவடி வடிவில் சுற்றுதல் கண்டோம்
விடுத்தஇச் சுவடிகள் அடுத்திவண் வருமவர்
படித்தவர் விழியிற் படுமேல் நம்மைப்
பழிப்பவர் ஆவர்; பைந்தமிழ் வளர்ச்சி
இழித்துரை கூறுமா றிருந்ததே என்பர்;
செழித்துயர் தமிழைப் பழித்திட நாமே
விடுத்திடல் நன்றோ? விளம்புதி மகளே!
நிலைத்திடுங் கவிதை தொடுத்திடுங் காப்பியம்
விளைத்திடல் வேண்டும் பலப்பல இன்றே,
அருமைத் தமிழ்க்கிஃ தாக்கப் பணியாம்,
தரும்நமைத் தலைமுறை தலைமுறை வாழ்த்தும்;

## போலிக் கவிதைகள்

போலிக் கவிஞர் புனைபவை புனைக!
வேலி யிடினும் விளைபவை விளையும்;
பயனும் பண்பும் பழுநிய நூல்கள்
வியனுற வெளிவர முயலுதல் வேண்டும்;
புதியநம் சுவடிமுன் போலிச் சுவடிகள்
கதிரோன் முன்னர்க் கைவிளக் காகும்;
நாளைய உலகம் நந்தமிழ் ஏத்தும்;

### மன்னுபுகழ் நிறுவுக

பாளை விரிநகைப் பாவாய்! நின்பாற்
பல்வகைப் புலமை படிந்திடல் கண்டேன்;
நல்லிளம் பருவத்து நாலுந் தெரிந்தனை!
நால்வகைப் பாவும் நன்கனம் யாத்தல்
கைவரப் பெறுதியேல் கன்னிநீ பூண்டுள
செய்கைக் குறுதுணை சேர்க்கும், அவ்வினை
அரிவை நினக்கும் அரியதொன் றன்று,
சிறிதின் முயலினும் தேர்ந்து தெளிகுவை;
மன்னு உலகத்து மன்னுதல் வேண்டின்
தன்புகழ் நிறுவிடத் தலைப்படல் வேண்டும்;
நின்னுளம் யாதென நிகழ்த்துதி' என்னலும்;

### பூங்கொடி இசைவு தருதல்

'அன்னையிற் சால அன்புளம் காட்டி
என்புலம் ஓம்பி இலங்கிட அருளினை!
நின்பணி அஃதேல் நேருதல் அன்றி
மறுமொழி கூற யானோ வல்லேன்?
மறையுமென் வாழ்வு வளர்தமிழ்ப் பணிக்கே
என்றுளம் கொண்டேன் என்பணிக் கஃதும்
நன்றெனின் இன்னே நவிலுதி தாயே'

### காவியப் பாவை

என்றலும், எழிலி யாப்பின் இயலும்
பாவும் வகையும் பாவின் இனமும்
யாவும் உணர்த்திக் காவியத் துறையில்
வல்லமை பயிற்றினள், நல்லவள் அதன்றலை
இசைத்துறைப் பாடலும் இயற்றிடச் செய்தனள்;
கற்பனைத் திறனும் கவிதை வளமும்

பொற்புடன் அணிநலம் பொலிந்திடப் புனையும்
காவியத் தலைவிஎன் றிவளைக் கழறிடப்
பாவியல் வல்ல பாவை யாகினள்;

### புகழ்மணம் பரவுதல்

கற்றவர் மெச்சிடக் கவியரங் கேறினள்,
குற்றமில் மீனவன் நற்றமிழ்ச் சுவடியின்
துணைகொடு தமிழிசைத் தொண்டுகள் ஆற்றினள்;
இணையிலை இவட்கென யாவரும் ஏத்திடப்
பட்டி மண்டபம் பாங்கறிந் தேறினள்;
எட்டிய திவள்புகழ் இருநிலம் அனைத்தும்;
இவ்வணம் மொழிப்பணி இயற்றிப் பொதுநலச்
செம்மனம் உடையாள் சிறந்தனள் பெரிதே. (117)

*

# 18. இசைப்பணி புரிந்த காதை

### அருண்மொழி மகிழ்ச்சி

எழிலி பயிற்றிய இசைத்திறம் பூண்ட
விழிமலர்ப் பூங்கொடி வியன்புகழ் ஊர்தொறும்
பரவிப் பரவிப் பாரகம் அடங்கலும்
விரவி மலர்ந்தது விளைந்தது நற்பயன் ;
தான்புனை கவியைச் சான்றோர் ஏத்திட
ஈன்றநற் கவிஞன் ஏமுறல் போல
ஈன்றாள் அருண்மொழி இவள்புகழ் செவிப்பட
ஈன்ற ஞான்றினும் பெரிது வந்தனளே ;

### எழிலியின் மகிழ்ச்சி

இசையின் அரசியாம் எழிலிதன் கொழுநன்
விசையுறு மரக்கலம் சிதைவுறு காலை
விளிவில னாகி மீளுதல் கண்ட
காலையின் மிகவே களிகூர்ந் தனளே ;

### அடிகள் விழைவு

குறளகங் கண்ட மலையுறை யடிகள்
உறுபுகழ் பூங்கொடி உறுவது காணலும்

நெஞ்சம் குளிர்ந்து நேரிழை வாழ்த்தி
'வஞ்சி! தமிழிசை வளர்வான் வேண்டி
நிலையம் ஒன்று நிறுவுதல் விழைந்தனென்;
பலரும் வந்திவண் பயிலிகள் ஆவர்;
இசைகெழு தமிழின் ஏற்றம் உணர்வோர்
திசைதொறும் திசைதொறும் சென்றிசை பரப்புவர்;
கொள்கை தழீஇய நல்லிசைப் பாடல்
உள்ளங் கவர்வன தெள்ளிதின் யாக்கும்
நற்றிறல் உடையாய் நங்கைநீ யாதலின்
சொற்றமிழ்க் கொள்கை முற்றவும் தொகுத்துப்
பகுத்தறி வூட்டும் பாடல்கள் புனைந்து
வகுத்தவை பயிற்றின் வந்திவண் பயில்வோர்
நாடெலாம் பரப்புவர் நம்முயர் கொள்கை;

## இசையின் இருபயன்

ஈடிலா இப்பணி இருபயன் விளைக்கும்;
பகைவர் மறைத்த பழந்தமிழ் இசைத்திறன்
பகலவன் கதிரொளி பரவுதல் போலப்
புத்துயிர் பெற்றுப் புவிமிசை யாங்கணும்
மெத்தவும் பரவி மேம்படும்; அதன்றலை
விளக்கொளி இன்றி வீங்கிருள் மூழ்கித்
துளக்குறும் மாந்தர் நிகர்த்தன ராகி
உளத்தொளி யின்றி ஓங்கிருட் கிடந்து
நொந்திடும் மாந்தர் உய்ந்திட யாண்டும்
சிந்தனைச் சுடரொளி வளர்ந்திடும் அன்றோ?'
என்றன ராக இயைந்தனள் பூங்கொடி;

## தமிழிசைப் பள்ளி

நன்றுளங் கொண்ட குன்றுறை யடிகள்
இமிழ்கடல் வரைப்பில் தமிழிசை கூட்டும்

கமழ்மணம் பரவக் கண்டனர் பள்ளி;
பள்ளித் தலத்துள் பயிற்றும் பொறுப்பினைக்
கள்ளிதழ்க் கோதை கருத்துடன் ஏற்றனள்;
நாற்றிசை வாழுநர் பாட்டிசை வேட்டுக்
கோற்றொடி தன்னுழைக் குழுமின ராகப்
பொன்னியின் செல்வன் புகழ்பெறு மீனவன்
பன்னரும் துயரப் பாடுகள் அடைந்து
தேடிக் கொணர்தரும் பீடுயர் ஏடு
நாடிப் புகலும் நற்றமிழ் இசையின்
நுணுக்கம் அனைத்தும் நுவன்றனள் இருந்துழி;

### சண்டிலி வருகை

மணக்கும் தென்றல் மாமலை எழிலும்,
கோடை தவிர்க்கும் குளிர்மலைப் பொழிலும்,
நீடுயர் தண்ணணிய நீல மலையுடன்
கண்டுளங் குளிர்ந்த காரிகை ஒருத்தி
சண்டிலி என்பாள் சார்ந்து வணங்கித்

### சண்டிலி வேண்டுகோள்

'தமிழிசை வளர்க்கும் தையாஅல் நின்னுழை
அமிழ்தம் நிகர்க்கும் அவ்விசை பயிலும்
ஆர்வங் கொண்டுளேன் ஆதலின் அருள்நலங்
கூர்விழி யாய்நின் குழுவினுள் எனையும்
சேர்த்தருள் செய்'எனச் சேயிழை வேண்டலும்,

### பூங்கொடி அருளல்

'வருக தோழி வாழ்கநின் வேட்கை!
வருவோர் தமக்கெலாம் தமிழிசை வழங்குதல்
தொழிலாப் பணியாத் தொடங்கினம் இதனை;

பிழையாப் பயனும் விளையா நின்றது
கண்டுளங் களிக்கும் காலை எம்முழைச்
சண்டிலி நீயும் சார்ந்தனை வாழி!
அயன்மொழி பேசும் அரிவைநீ யாயினும்
வியன்பெருங் காதல் விருப்பொடு வந்தனை,
பயிலுங் குழுவினுள் பாங்குடன் நீயும்
குயிலிசை பயில்'கெனக் கூறினள் பூங்கொடி;

## சண்டிலி இசைப் பயிற்சி

மூளும் அருள்மன முத்தமிழ்ச் செல்வி
நாளும் நாளும் நல்லிசை யமிழ்தம்
வாரி வாரி மகிழ்ந்தனள் வழங்கலும்,
நேரிழைச் சண்டிலி நிமிர்ந்தெழும் அவாவினள்
காய்பசி வருத்தக் கடுந்துயர் உழந்தோன்
வாய்புகும் உணவினை மகிழ்ந்துண விரையும்
ஆர்வலன் என்ன ஆஅர மாந்தினள்
சோர்விலள் வைகலும் சொல்லிசை பயின்றனள்;

## பூங்கொடி பாராட்டல்

தமிழிசை பயிலும் தணியா வேட்கையள்
தமிழக மாந்தரும் தம்முள் வியக்க
முன்னணி எய்திய மொய்குழல் மொய்ம்பினை
முன்னின் றுணர்ந்த மென்னடைப் பூங்கொடி
'நின்குரல் மென்குரல் நன்குரல் ஆதலின்
மென்மொழி இசைக்கு மெருகுறல் கண்டேன்;
பண்ணிசைப் பயிற்சியில் பகரரு முயற்சியும்
திண்ணிய நெஞ்சும் திரிபிலா வேட்கையும்
நண்ணினை யாதலின் நலமுயர் தோழி
எண்ணிய எண்ணியாங் கெய்தினை வாழி!

## சண்டிலி வரலாறு

ஒன்றுனை வேண்டுவல், உன்வர லாற்றினை
இன்றுணர் விழைவினென், என்பால் உரைத்திடல்
நன்றெனின் நவிலுதி' என்னலும் நங்கை
தூமென் கொடியைத் தொழுதனள் உரைக்கும்,
'கோமகள் நினக்குக் கூறுதல் என்கடன்
விந்தங் கடந்தொரு வியனகர் உண்டு
நந்தலில் செல்வ நலத்தது வளத்தது,
அந்தம் மிகுந்தது எந்திரத் தொழிலது,
தந்தை அவ்வூர்த் தலைமகன் ஆவர்,
செந்தமிழ் முதலாச் செம்மொழி பலவும்
சிந்தித் தாயும் திறனும் உடையார்;
முந்தை நகர்க்கு மொழிபெயர் அளகை;
அந்நகர் வாழ்வேன், அன்புறு கொழுநன்
தன்னொடு தென்திசைத் தண்மலை எழிலெலாம்
காணிய வந்தனென்; கண்கவர் நெடுமலை,
சேணுயர் முகிலினம் சென்றிடை தழுவும்
நீலப் பெருமலை, நீடுயர் சாரல்
கோலத் திருமலை, கோடைக் கொடுமையைச்
சோலைச் செறிவால் தொலைத்திடு முதுமலை
இன்னன பலகண் டின்புறும் எல்லையில்

## பொதிகைக் காட்சி

தென்திசைப் பொதியில் காணிய வந்தேன்;
முடியும் நடுவும் முகிலினம் படர்தரக்
கொடிபடர் சந்தனக் கடிமணம் அளாவிச்
சில்லெனுந் தென்றல் மெல்லென வீச
நல்லிளஞ் சாரல் நயந்திடத் துளிப்ப

அலரும் மலரும் அடருங் கடறும்
பலவும் குலவி நிலவும் மாமலைக்
காட்சியும் மாட்சியும், கடும்புனல் அருவியின்
வீழ்ச்சியும் கண்டவை வாழ்த்தினென் வாழ்த்தினென்
தென்மலைச் சிறப்பினைச் செப்புதல் எளிதோ?
கன்மலைக் காப்பியம் யாத்திட முனையின்
பொதியம் ஒன்றே போதும் தோழி!

## அருவிக் காட்சி

### புலியருவி

போர்ப்பறை சாற்றிடும் ஆர்ப்பொலி என்ன
வேர்க்குலம் பேர்த்து வீறுற் றார்த்துக்
கல்பொரு திறங்கும் மல்லலம் அருவிகள்
நல்லன பலவும் நயந்தினி தாடினேன்;
கண்டார் வியந்திடக் கைபுனைந் தியற்றிய
தண்டாது பாயும் தண்புலி யருவியில்
கொண்டான் தன்னொடுங் கூடி யாடினேன்;

### பேரருவி

பொங்குமா கடலெனப் பொங்கிட வீழ்ந்து
தங்கா திழிதரும் விரிபே ரருவியில்
கங்குலும் பகலும் கணவனும் யானும்
ஆடியும் ஓடியும் ஆர்த்தும் நகைத்தும்
பாடியும் கூடியும் பன்முறை ஆடினோம்;

### சண்பக அருவி

தண்முகை அவிழும் சண்பக அடவி
எண்ணரும் மலர்களை இறைத்திட வாரித்
தடதட ஒலியொடு தாவி இறங்கிப்

படர்தரு சண்பக அருவிப் பாங்கரில்
நின்றும் இருந்தும் நிலவிய இன்பில்
ஒன்றிய உளத்தேம் உலகினை மறந்தோம்;

## தேனருவி

வான முகட்டின் வாய்திறந் திறங்குதல்
மான வீழ்ந்திடும் தேன்சுவை அருவியின்
ஓங்குயர் தோற்றமும் ஒய்ய்யெனும் ஓசையும்
பாங்கிளன் எருத்தையும் செவியையும் வருத்தின;
வானுற நிவந்த வால்வெண் ணிறத்தூண்
தானது என்னத் தயங்கி நின்றிடும்;
விலங்கினம் அன்றி வழங்குதல் இன்மையின்
கலங்கினென் ஆயினும் காணாஅ இன்பமும்
அலைவுறும் மனத்தில் அளப்பரும் அமைதியும்
நிரம்பிய தாதலின் நெடும்பொழு திருந்தேன்
திரும்பவும் நினையின் அரும்பிடும் அங்கிலை;

## சிற்றருவி

சிற்றருவி என்று செப்பிடும் ஒன்று
மற்றொரு பாங்கரின் உற்றது கண்டு
பற்றொடு சென்று பைம்புனல் ஆடினம்;
உருவம் சிறிதென உள்ளினென் நிற்ப
அருவியின் வேகம் அறியா என்றன்
கூந்தலும் ஆடையும் குலைத்துடன் வீழ்த்த
இடுக்கண் வருங்கால் இமைப்பில் வந்துடன்
தடுக்கும் நட்பினை நிகர்க்கும் கைகள்
உடுக்கையைக் காத்தன; உருவுகண் டெள்ளுதல்
வடுப்படு செயலெனும் வாய்மொழி உணர்ந்தேன்;

## ஐந்தருவி

செந்தமிழ் ஒன்றே தெலுங்குடன் கன்னடம்
சந்தம் மிகுமலை யாளம் துளுவென
வந்தது போல வாய்ந்தலர் அருவி
ஐந்து கிளையாய் ஐந்தருவி என்னத்
தவழ்ந்திடல் கண்டு தனித்தனி அவற்றிற்
சிவந்திட விழிகள் சிலபொழு தாடினம்;

## மாலைக் காட்சி

இங்ஙனம் இனிமையில் இருந்துழி ஒருநாள்
பொங்குமா கடலெனப் பொங்குபே ரருவியில்
துங்கநீ ராடித் துணையுடன் கூடிக்
குறும்பலா வடியில் இருந்தனென்; ஆங்கண்
செங்கதிர் மேலைத் திசையினில் மறைய
மாலைக் காதலன், மண்மகள் போர்த்த
சீலை யாகிய செழுமிள நாற்றினை
வாலைக் குறும்பென வளரிளந் தென்றற்
கைகொடு வருடி அலைத்திடல் கண்டும்,
கடுவனும் மந்தியும் கனிவகை கொடுத்துத்
தொடுவதும் விடுவதும் தொடர்ந்துடன் ஓடிக்
கிளைதொறும் தாவித் திரிவது கண்டும்,
மென்சிற கொலியால் வீணையின் இசைத்து
நன்மணம் பரப்பும் பன்னிற மலர்தொறும்
நறவம் மாந்திடும் வண்டினம் கண்டும்,
பறந்தும் இருந்தும் பாடும் புள்ளினம்
விருந்தெனச் செவிவிழிக் கிருந்தன கண்டும்,
நகைத்துரை யாடிக் களித்தவண் இருக்கத்

## நிலவுக் காட்சி

தொகைப்படு விண்மீன் மினுக்கிட வானில்
வெண்மதி வட்டம் விட்டொளி கான்று
தண்புனல் கானம் தளிர்கொடி யாவும்
வெள்ளிய ஒளிமயம் விளைத்தது கண்டோம்;
அள்ளிய விழியால் ஆர வுண்டனம்
உள்ளந் துள்ளிய உவகைப் பாங்கினைத்
தெள்ளிதின் இயம்பத் தெரிகிலேன் தோழி!

## பாட்டின் மகிழ்ச்சி

உள்ளெழும் உணர்ச்சி உந்தி எழலால்
பைந்தொடீ! முன்பே பாடுந் திறனும்
இயைந்துளேன் ஆதலின் வாய்விட் டிசைத்தேன்;
மயங்கிய துணைவன் வாயிசை கேட்டு
வியந்துரை கூறி நயந்தனன் ஆக
எற்புகழ்ந் துரைத்த இசைமைத் திறலால்
முற்படு செருக்குள் மூழ்கி இருந்தேன்;

## இசையொலி கேட்டல்

யாழொலி யோவென யாண்டிருந் தோஒரு
மெல்லிசை நல்லிசை மெல்லென வந்தது;
மெல்லிய அவ்விசை மென்கால் தன்னொடு
மிதந்து படர்ந்தென் செவியகம் புகுந்தது;
புகுந்தஅவ் விசையாற் புலமெலாம் ஒன்றாய்ச்
சொக்கிய விழியும் சோர்வுறும் மொழியும்
உடையே னாகி உணர்வு தளர்ந்திடும்
நடையே னாகி நல்லிசை வருதிசை
மருங்கினை நாடி நெருங்கினேன்; ஆங்கண்

## இசையணங்கு

மருங்குல் கொடியாய் மதியம் முகமாய்க்
கருங்கண் குவளையாய்க் காட்டும் ஒருமகள்
இனிய காட்சியள் இசைமழை பொழிந்து
தனிய ளாகித் தனைமறந் திருந்தனள்;
செவியுள் இசையும் சேயிரு விழியுள்
அவளின் உருவும் அகத்துள் மகிழ்வும்
நிறைந்திடப் பெற்றேன் நின்றேன் அவள்முன்;
அகமும் முகமும் அருள்நிறை விழியும்
உகந்தும் மலர்ந்தும் உற்றெனை நோக்கி
வருக வருகென வாய்மலர்ந் தருளினள்;
தூயவள் தன்னைத் தொழுதவண் இருந்து
தோயும் நின்னிசை தாயே ஈங்கெனை
ஈர்த்த தெனநான் இயம்பலும், இன்னிசை
வார்த்தனள் மீண்டும்; மகிழ்ந்திசை பருகி

## சண்டிலியின் புகழ் மொழி

'அன்னைஎன் மொழியுள் அமைந்தநல் லிசையும்
தொன்மை மொழியுள் தோன்றிசை சிலவும்
ஒல்லும் வகையான் உணர்ந்துளேன் ஆயினும்
உள்ளமும் உணர்வும் உருகிட இன்ப
வெள்ளம் பாயும் வியனிசை இதுபோல்
இந்நாள் எல்லை யாண்டும் கேட்டிலேன்
என்நா சிறிதால் எவ்வணம் புகழ்வேன்?

## சண்டிலி வேண்டல்

இதன்திறம் சிறிதெனக் கியம்புதி கொல்லோ?
பதமிது வன்றேல் பைந்தொடி பொறுத்தருள்'
எனநான் பணிவுடன் இயம்பினே னாக,
அனநடை புன்னகை அரும்பினள் இயம்பும்;

## தமிழிசைச் சிறப்பு

'மனமொழி செயலினை வயப்படச் செய்யும்
தனியொரு செயற்றிறம் தமிழிசைக் குண்டு;
கொடுந்தொழில் விலங்கும் கடுவிட அரவும்
படிந்திடச் செய்யும் பாங்கிதற் குண்டு;
மூவாத் தமிழில் மொழியிசை வளர்க்கும்
தேவா ரப்பண் தெரிந்தொன் றிசைத்தேன்
அவ்விசை கேட்டுளம் அதனுட் கூட்டினை!
செவ்விய அந்நூல் திறமெடுத் துரைப்பின்
மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே'
என்றுளம் அன்பால் இளகிட மொழிந்தனள்;

## சண்டிலியை ஆற்றுப் படுத்தல்

நன்றுரை கேட்டு நயந்துளம் மகிழ்ந்தே
'உன்மொழி யிசைஎனக் கோதுதி யோ?' என
'என்னால் இயம்புதல் இயல்வதொன் றன்று
மின்னேர் இடையாய் மேம்படு செல்வர்
தக்கார் அறவோர் தகுகலை யறிவின்
மிக்கார் பலரும் தொக்குடன் வாழும்
மணிநகர் என்னும் அணிநகர் உளது
பணிபுரி தொழிலே அணியெனப் பூண்டுள
மலையுறை யடிகள் நிலைபெற நிறுவிய
கலையகம் அந்நகர்க் கண்ணதுஅப் பள்ளியில்
இசைக்கே இசைதரும் பெற்றியள் எமதுதென்
திசைக்கே விளக்கந் திகழ்ந்திடத் திகழ்பவள்
இளங்கொடி பூங்கொடி எனுந்திரு வாட்டி
உளங்கொள இசையை ஓதும் பணியினள்

அவளுழைச் செல்கநின் ஆவல் நிறைவுறும்'
என்றெனைப் பணிக்க ஈங்கிவண் வந்தேன்;

## சண்டிலியின் துணிந்துரை

தணியா வேட்கை தணித்தனை! செல்விநின்
பணியால் தமிழிசை பாருல கெங்கும்
இணையிதற் கிலையென ஏற்றமுற் றோங்கும்
துணிவோ டிதனைச் சொல்லுதல் வல்லேன்
சிறியவள் எனக்குச் செந்தமி ழிசைபால்
முறுகிய ஆவலின் முழுதுணர்ந் தனனால்;

## சண்டிலியின் அழைப்பு

பிரிவினை யறியாப் பெருமனக் கொழுநன்
பெரிதுறு விழுமமோ டிங்கெனைப் பிரிந்தோன்
விரைவினில் வருஉம் விறலி! எனக்கிசை
ஊட்டிய தலைவீ! ஒன்றுனை வேண்டுவல்
பாட்டியல் பயில வேட்டவர் பலர்வட
நாட்டிடை வேங்கை நகரினில் வதிவோர்;
ஊட்டுவோர் ஆங்கண் ஒருவரும் இன்மையின்
வாட்ட முறுவது வருங்கால் உணர்ந்தேன்;
அரிவைநீ அருளுடன் அந்நகர்க் கேகுதல்
புரிகுவை யாயின் பெரும்பயன் வரும்'எனப்
பரிவுடன் சண்டிலி பகர்ந்து வணங்கினள்;

## வேங்கை நகரில் பூங்கொடி

சரியென இசைந்தெழு தன்னிகர் பூங்கொடி
அடிகள் திருவடி அன்பொடு வணங்கித்
துடியிடைச் சண்டிலி துணையொடு போந்தவள்
ஓங்ககல் நெடுந்தெரு வேங்கைமா நகருள்

நிலவொளி வீசும் நெடுநிலை மாடம்
பலர்புகத் திறந்த பகுவாய் வாயில்
மாளிகை புகுந்து மகிழ்வுடன் தங்கி
மீளி மீனவன் மீட்டநற் சுவடியின்
துணையொடு தோன்றித் தொழுதவண் இருந்தே
இணையிலா வளத்தன் இளகிய மனத்தன்
பசிதின வருந்திய பைதன் மாக்கட்கு
நசையொடு பெருஞ்சோறு நல்குதல் என்ன
இசைபயில் பசியால் இரப்போர் தமக்கெலாம்
காரிகை உவந்து கனியிசை யமுதம்
வாரி வாரி வழங்கினள் பெரிதே. (291)

*

# 19. கோமகன் மீண்டும் தோன்றிய காதை

### வஞ்சியின் ஏக்கம்

பூங்கொடி அளவிலாப் புகழ்நிலை யுறினும்
தேங்கெழில் சிதைவுறத் திருமணம் இன்றிக்
கொஞ்சும் இளமை கொன்னே கழிய
அஞ்சுபொறி அடக்கிய அறவோர் போல
நெஞ்செழுங் காதலை நெருப்பினில் பொசுக்கிப்
பிஞ்சிற் பழுத்த பேதை ஆயினள்;
எவ்வணம் இயம்பினும் எத்துணை மொழியினும்
செவ்விய அவள்நிலை சிறிதும் பிறழ்ந்திலள்
என்னே இவள்மனம் இருந்த வாறே!
பின்னே வாழ்விற் பேதுறு வாளே
எனநினைந் தேங்கி இடருறூஉம் வஞ்சி

### வஞ்சி தேன்மொழியிடம் புலம்பல்

தேன்மொழி யாகிய தெரிவையை விளித்து,
'மீன்விழி மாதே! வியனிலத் தியாண்டும்

இங்கிவர் கொடுமை எவ்வுழி அறிதி?
தன்பெருங் கொழுநன் தனிமகன் வடிவேல்
வன்புடை வஞ்சரால் மாய்ந்தன னாக
என்னொரு திருமகள் எழிலுறும் அருண்மொழி
மாயாத் துயரால் மாழ்குதல் கண்டு
வீயாத் துன்புள் வீழ்ந்தேன்; என்மகள்,
ஓயாக் கவலை ஒழிப்பான் வேண்டித்
தேயாப் பெருவளச் செல்வமும் வாழ்வும்
மறந்தன ளாகி மலையுறை யடிகள்
திருந்திய குறளகம் சேர்ந்தனள்; என்னுளம்
வருந்திய துரைத்திட வாயொன் றீங்கிலை;
அடுக்கடுக் காகத் தொடுத்தெனைச் சார்ந்த
இடுக்கட் சுமையைப் பொறுத்துளேன் ஆயினும்
துடுக்கி என்மகள் துளிர்பூங் கொடியை
விடுக்கில ளாகி வெந்துயர்க் குழியில்
படுத்தினள் அந்தோ பாவி மடமகள்!
கருங்கல் இடறிய கால்விரல் ஒன்று
பெரும்புண் ணாகி வருந்துங் காலைக்
கொடுந்தேள் அதனிடைக் கொட்டிய தென்று
நெடுந்துயர் அடைவுழிக் கொடும்பட அரவம்
தீண்டிய தென்னத் தேங்கிய கவலைக்
கூண்டுடல் ஆகிக் குலைந்தேன் தோழி!

## பூங்கொடியின் எழில் நலம்

ஆறாத் துயரால் அருண்மொழி துறந்தவண்
சேரா நின்றனள் சேர்கதில் லம்ம!
வாழ்வின் நலமெலாம் வகைவகை சுவைத்து
மூழ்கும் பருவத்து முதிரா இளமையள்,
அழகும் ஒளியும் அழியா ஓவியம்,

பழகும் மொழியோ பழச்சுவை மானும்,
துளிர்த்தும் தளிர்த்தும் தூமலர் பூத்தும்
கிளைக்கும் மரந்தழீஇ மணக்கும் பூங்கொடி,
விழியின் மலர்ச்சியை வியந்துரை யாடஓர்
மொழியும் உளதோ? முகமொரு முழுநிலா,
நடைக்கும் இடைக்கும் நல்லதோர் உவமை
படைக்கும் ஆற்றல் பாவல புலவர்க்கும்
அரிதினும் அரிதே! ஆயிழை நீயும்
தெரிகுவை அந்தத் தெரிவையின் நலமெலாம்,
மூக்கும் விழியும் நோக்குநர் உளத்தைத்
தாக்கும் இயல்பின, தகதக ஒளியின,
வார்த்தபொற் சிலைகொல்! வடியாச் சிலைகொல்!
பார்த்தவர் இவ்வணம் மயங்குவர் பைந்தொடீ!

## பருவம் பாழ்படுவதா?

சிறியவள் இல்லறச் செந்நெறிப் படாஅது
பருவமும் உருவமும் பாழ்படப் புறநெறி
கருதின ளாகிக் கழிவது முறையோ?
தேடருங் குறிஞ்சித் தேனினைப் பாழ்செயும்
மூடரும் உளரோ? முக்கனி யாகிய
தேமாங் கனியும், தீஞ்சுவைப் பலவும்,
கொழுங்குலை வாழைச் செழுங்கனி யதுவும்
அழுங்கல் எய்திட விழுந்து புழுதியில்
நைந்து சிதைவதில் நன்மையும் உளதோ?
ஐந்து பொறியிவள் அடக்கவும் வல்லளோ?

## கடப்பருங் காமம்

இல்லறத் திருந்துநல் லின்பந் துய்த்தபின்
நல்லஇவ் வுலகினை நஞ்சென வெறுத்துச்

செல்லும் துறவரும் சிற்சில போழ்து
கொல்லும் காமங் கோட்பட் டுழன்றும்
அல்லன புரிந்தும் அலைவுறல் கண்டோம்;
ஒருநலம் உணரா துறைபவள் இவளை
வருமிளம் பருவம் வருத்தா தொழியுமோ?
பழிக்கும் வினைகளை இழைக்கும் வழிகளில்
நுழைத்திடும் அந்தோ! நுண்ணிடை மகளை;

## ஆசை கெடுத்தனள்

குடிதழைத் திடவரூஉம் குலக்கொடி இவளென
நெடிதுநினைந் திருந்தேன் கொடியவள் ஆயினள்,
பரம்பரை அறுந்திடத் திறம்பினள் குழம்பினள்,
நரம்பறும் யாழென நலிந்தனள் மெலிந்தனள்;

## வேட்புறுங் கோமகன்

கற்றோர் மற்றோர் கணக்கிலாச் செல்வம்
உற்றோர் இவள்மணம் ஒன்றே வேட்டுக்
கடைவிழி நோக்கிக் காத்துக் கிடப்போர்
படைஎனு மாறுளர்; பரிவுறும் அவருள்
செல்வமும் இளமையும் சேர்ந்தெழில் பொங்கும்
நல்லவன் கலைபயில் வல்லவன் ஒருவன்
கோமகன் என்னும் குறியுடை யானவன்
பூங்கொடி நலமுண வீங்கிய வேட்கையன்
தாங்கருங் காமம் ஓங்கின னாகி
உடலும் பொருளும் உயிரும் ஈயக்
கடவன் அவனை மடவனென் றொதுக்கினள்;
அப்பெருஞ் செல்வனை ஒப்பின ளாகித்
தப்பருங் காதல் தடத்தினில் நீந்தித்

துணையுடன் இருந்தே தொண்டுகள் ஆற்றின்
இணையிலை இவட்கென இருநிலம் ஏத்தும் ;

## வஞ்சியின் வஞ்சினம்

பிணைவிழி மாதின் பெறலரும் இளமை
அணையிலாப் புனலென ஆகிட ஒவ்வேன் ;
இவள்நலம் விழையும் இளவல் கோமகன்
தவள மாளிகை சார்ந்தவற் கொண்டு
குறளகம் நீக்கிக் கொணர்வேன் அவளை ;
பெருமகன் தன்பால் பேதையைப் படுத்தல்
அறமெனக் கொண்டேன், அதுமுடித் தமைவேன்;
படுத்தே னாயின் பாழுயிர்ச் சுமையை
விடுத்தே அமைவேன் வெற்றுரை அன்'றெனத்
தொடுத்துரை கூறித் துணைவிழி சிவக்க
உயிர்ப்பும் செயிர்ப்பும் உற்றன ளாகிப்
பயனுடை நெடுந்தெரு பலவுடன் கடந்து
வியனுயர் மாளிகை விறலி கண்டனள் ;

## வஞ்சி கோமகனைச் சார்தல்

வெண்சுதை பூசிய கண்கவர் மாமனைக்
கண்புகுந் துள்மனைக் காட்சியை வியந்தனள் ;
முன்னுள மலர்மணம் முகந்து தென்றல்
படர்தரு மெல்லிய பவர்நுனி யசைத்துச்
சுடர்விடு மாடச் சுவர்கடந் துட்புகச்
செய்வினைச் சித்திரப் படாஅம் போர்த்த
துய்யவெண் பஞ்சணைத் தூமலர்க் கட்டில்
இருந்தோன் திருந்தடி பொருந்திநின் றேத்தினள்;

## கோமகன் பூங்கொடியின் நலம்வினவல்

வந்தவண் ஏத்திய வஞ்சிக்கு வரவுரை
தந்து மகிழ்ந்து தான்பெரு களிப்பால்

நல்லெயி றிலங்க நகைத்தவன் 'வஞ்சி!
மெல்லியல் அருண்மொழி மேவிய நற்பணி
அல்லல் இன்றி ஆற்றுநள் கொல்லோ?
என்னுளம் இருளறச் செய்தஅவ் விளங்கொடி
முன்னிய பொதுப்பணி முட்டின் றோ'என,

## வஞ்சியின் தூண்டுதல்

'ஒருதனி ஓங்கிய திருவுடைப் பெரும!
பெருகிய துயரால் பேதுறுத் தினளுனை
என்னையும் மயக்குறுத் திடர்க்கடல் வீழ்த்தினள்;
நின்னையும் நின்மனம் நிறைந்துள மின்னையும்
பின்னிய அன்பால் பிணைந்தவ ராக்கி
வதுவைக் கோலம் கண்டுநான் வாழ்த்த
முதுமைப் பருவத்து முறுகிய ஆவல்
கனவாய் வெறுமொரு நினைவாய்க் கழிவதோ?
இனைவுறும் என்மனம் மகிழ்வுறல் என்றுகொல்?
நம்பி நினக்கொரு நங்கையும் அவளே!
நங்கை அவட்கொரு நம்பியும் நீயே!
நீமுனைந் தெழுவையேல் நேரிழை நின்னுழைக்
காமுறல் திண்ணம் கடிதினில் விரைக
கடிமணம் கொண்டு படிமிசை வாழ்'கென;

## கோமகன் நிகழ்ந்தன கூறல்

இழுக்கல் நிலத்திடை இடர்ப்பட் டேகுவோன்
வழுக்கல் தவிர்க்க வாய்த்தகோல் இவளென
வஞ்சிக் குரைட்போன், முகுந்தன் வாய்மொழி
தன்செவி கேட்டுத் தென்புலப் பொழிலுட்
பூங்கொடி காண்பான் போய்ப்புகுந் ததூஉம்,
தாங்கா வேட்கை தாங்குவோன் றன்னைக்

கண்டு வெரீஇக் கற்றோர் பலர்தாம்
மண்டும் படிப்பகம் மங்கைபுக் கதூஉம்,
மெல்லியல் அல்லியை மேவி விருப்பைச்
சொல்லி மணம்பெறத் துடித்துநின் றதூஉம்,
ஆங்கது கேட்ட அல்லி தெளிவுடன்
பூங்கொடி நிலையினைப் புகன்றிருந் ததூஉம்,
மங்கையின் மாற்றம் மதித்திடல் இன்றி
அங்குள படிப்பகம் அதனுட் புகுந்திட
விரையும் காலை விஞ்சிய அறிவினர்
நிறையிடம் அதுவென நினைந்தகன் றதூஉம்,
அகன்றபின் அல்லியை அணுக, வெறுத்துஅவள்
புகன்றுபின் நல்லுரை புகட்டி நின்றதூஉம்,
துளக்குறு நெஞ்சம் துணையே யாக
விளக்கிலா இருளில் வெய்துயிர்ப் புடனே
புல்லிதழ் மென்மலர் பொதுளிய பஞ்சணை
கல்லென வருத்தக் கண்படை பெறுஅது
பொழுதுபுலர் காறும் புரண்டிருந் ததூஉம்,
எழுகதிர்ச் செல்வன் எழில்முகம் காட்டத்
தோமறு செல்வி தாமரைக் கண்ணி
காமம் கெடுத்திடக் கழற்றுரை மொழிந்ததூஉம்,
எஞ்சா துரைத்தபின் 'ஏழிசை வல்ல
வஞ்சி! இன்னுமவ் வளரிளம் பூங்கொடி
நெஞ்சுவிட் டகன்றிலள் நிலைத்தனள் ஆயினும்
நெஞ்சு கொடுக்கிலள் நிலையாய் நின்றனள்;
கொஞ்சும் கிளிமொழி கொடும்நினை வதனால்
துஞ்சுவ தன்றித் துணைசெய் வோரை
இன்னும் காண்கிலேன்' என்றவன் இயம்ப;

## வஞ்சியின் ஆறுதல்மொழி

'கொடுமொழி யிதனைக் கூறேல் பெரும!
விடுதுயர்! இனியுன் வேட்கை நிறைவுறும்
அஞ்சுதல் ஒழிமதி! ஆர்துணை என்றோர்
வெஞ்சொல் மொழிந்தனை! வஞ்சிஎன் துணையால்
அழகிய பூங்கொடி ஆர்வம் தழைத்திடக்
கொழுகொம் பென்றுனைத் தழுவிட வருஉம்;
காமம் ஒதுக்கிய கடவுளும் ஈங்கிலை
ஏமம் அஃதே ஈண்டுயிர் தமக்கெலாம்;
கடவுளும் மாந்தரும் கண்டுணர் காமம்
இன்றெனின் உலகும் உயிரும் இன்றாம்;
அவளும் நீயும் அதன்வழிப் படாஅது
தவிர்தல் ஒல்லுமோ? தலைவ ஒன்றுகேள்!

## வஞ்சியின் எழுச்சியுரை

கருதிய காதற் களந்தனில் நீதான்
ஒருமுறை இறங்கினை, திரும்பினை வறிதே!
காதல் எளிதெனக் கருதினை போலும்
சாதல் எய்தினும் சலியா துழைப்பின்
விரும்பிய வெற்றி அரும்புவ துறுதி;
நால்வகை முயற்சியும் நயவா தொருமுறை
தோல்வி கண்டுளம் தொய்ந்தனை யாயின்
ஆண்மை என்றதை அறைதலும் உண்டோ?
நாண்மடம் பூண்ட நங்கையர் தம்மனம்
எளிதாய் இசைந்திடின் பெண்மையும் ஏது?
மறுத்தும் வெறுத்தும் மாறியும் சீறியும்
தடுத்தும் உரைப்பதே தையலர் இயல்பு
தொடுத்து முயன்றால் தோள்புணை யாகக்
கொடுத்தல் உறுதி; கோமகன் நீயும்

அடுத்தடுத் தவள்பால் அணுகுதல் வேண்டும் ;
தோல்வி கண்டுளம் துவளுவை யாயின்
பால்மொழி நின்பால் பரிவுறல் யாங்ஙனம்?
மறுத்தனள் அவளென உரைத்தனை இளைஞ !
ஒருத்தி யவள்முனம் ஒருமுறை யேனும்
கருத்தினை விளக்கிக் கழறிய துண்டோ?
அவள்கருத் துன்பால் அறைந்ததும் உண்டோ?
மூங்கை நிலையில் மொழியா திருந்துபின்
ஆங்கவள் நெஞ்சம் அளித்திலள் என்றே
வீண்குறை கூறினை ; தனிமையில் அவளைக்
காண்கிலை வீணில் கலங்குதி மடவோய் !
ஆதலின் அறிவ ! அவள்பாற் செல்லுதி !
எத்திறத் தவள்மனம் உவக்கும் எனவுணர்ந்து
அத்திறத் தானே அணுகுதி பயன்தரும் ;
பெண்மனம் என்பது கன்மனம் அன்றே
உண்மையின் விரும்பும் ஒருவனைக் காண்புழி
வெண்ணெயின் உருகும் தன்மைய தாகும்;
ஐயா! நீயும் அவள்பாற் சென்று
பொய்யா மனத்துப் பூத்துள காதலை
எய்யா துரைத்தனை யாயின் அந்தக்
கொய்யாக் கனியைக் கொய்திடல் ஆகும்;
ஒய்யென விரை'கெனக் கோமகற் குரைத்தலும்;

### கோமகன் எழுச்சி

திரியின் பிழம்பு சிறிது சிறிதாக்
குறுகி அணைந்து மறையும் நிலையில்
குறைதிரி தூண்டிக் குறையா நெய்யும்
ஊற்றிட நிமிர்ந்தொளி ஓங்குவ தென்னச்
சாற்றிய காமம் தளர்ந்திறும் நிலையில்

வீற்றிருந் தோனை விறலி தூண்டி
ஒல்கா ஆசையை ஊட்டின ளாகக்
கொல்லும் காமம் கொழுந்துவிட் டெழுந்து
செல்லும் குருதியில் சேர்ந்துடல் கனல,
'ஒருவர்நெஞ் சொருவர் உற்றறி கில்லேம்;
அறியாப் பிழைக்கும் உரியவன் யானே;
இருவர் மனமும் இவ்வணம் துயருறல்
சரியிலை; இன்றே சார்ந்தவட் குரைப்பேன்;
யாண்டுளாள் பூங்கொடி? யாங்ஙனம் அணுகுதல்
வேண்டும்? விறலீ! விளம்புதி கொல்லோ?'
என்றுளம் ஏங்கி இரங்கினன் வேண்ட,

## பூங்கொடியை அடையும்வழி

'வேங்கை நகரெனும் வியன்பெரு நகரினுள்
பூங்கொடி புகுந்து புதுமைத் தமிழிசை
ஆங்கண் வருவோர்க் கன்புடன் பயிற்றி
நின்றனள்; நீயும் சென்றவட் குறுகி
ஒன்றிப் பழகி உயர்தமிழ் இசைபயில்
குழுவில் இடம்பெறு, கொக்கென நடந்திரு,
பழகுறும் பாவையின் நற்பதம் நோக்கி
நழுவா வகையில் நயந்துரை மொழிந்திடு,
அழகிய அவளுடல் ஆடவன் நினக்கு
விருந்தாம் நிலையில் வென்று திரும்புதி!
பொருந்தா மனமும் திருந்திய தாகிப்
பொருந்தும் மணம்பெறப் பூவை தன்னொடு
திரும்புநன் னாளைத் தேர்ந்தெதிர் நோக்கிக்
கண்படை பெறாது காத்திவண் கிடப்பேன்
திண்மன முடையாய் செல்லுதி' என்றனள்;

### கோமகன் பூங்கொடியைச் சார்தல்

வஞ்சி உரைத்தவை செஞ்சொல் எனக்கொண்டு
எஞ்சாச் செல்வன் எளிமைய னாகி
வேங்கை நகரில் பூங்கொடி தன்பால்
தேங்கிய ஆர்வலன் சேர்ந்தனன்; ஒருநாள்
தமியள் தானே நின்றவள் முன்னர்க்
குறுகினன் சென்று ‘கூர்விழி நல்லாய்!
ஒருமொழி நின்பால் உரைத்திட விழைந்தேன்;

### திருமணங் கொள்கெனச் செப்பல்

சிறியவள் நீதான் திருமணம் பெறாஅது
துறவுளம் கொண்டு குறளகம் புக்க
காரணம் என்கொல்? கடிமணம் கொள்ள
ஆரணங் குன்னை அகத்தினில் நிறுத்தி
நாடொறும் தொழூஉம் ஆடவர் உளரெனச்
சேடிய ரேனும் செப்பிலர் கொல்லோ?
வாடிய இளங்கொடி வாழ்வை வெறுத்தது
முறையன் றெனினும் உரிமைஎன் றாகும்
ஆயினும் பிறராம் ஆடவர் தம்மை
ஆயுள் முழுதும் அனலிடைப் புழுவென
வீயுறச் செய்வது வேல்விழி முறையோ?
சேயிழை! என்மொழி சினவா திதுகேள்!
கன்னியர் என்போர் காதலை மதிக்க
முன்னுதல் வேண்டும் முரணின ராயின்
பெண்மைக் கிழுக்கெனப் பேசுமிவ் வுலகம்
எண்ணித் துணிக’ என்றனன் கோமகன்;

## பூங்கொடியின் மறுமொழி

பூங்கொடி அவன்மனம் புரிந்தன ளாகி
'வீங்கிய மனத்து விறலோய் கேண்மோ!
மலர்தொறும் நன்மணம் மற்றவர் செயற்கையால்
நிலவுதல் இல்லை இயற்கையின் நிலைமை;
திருமண நினைவும் செயற்கையில் தோன்றி
வருவதும் இல்லை, மனத்தின் இயற்கை;
இல்லறம் ஒருபெரும் நல்லறம் இதனை
அல்லறம் எனநான் அயர்த்தும் புகலேன்;
தனிமை வாழ்வினும் துணையுடன் வாழ்வதே
இனிமை எனப்புவி இயம்பக் கேட்டுளேன்,
ஆயினும் பொதுப்பணி ஆற்றுவோர் சிற்சிலர்
தோயுமிவ் வின்பம் துறப்பது மேலென
ஆயும் புலத்தால் அறிந்துளேன் எனினும்
காவியும் மணியும் கடுவிலங் குரியும்
பூவிரி கானும் பூண்டேன் அல்லேன்,
உள்ளத் தெழூஉம் உணர்ச்சிகள் அடக்கி
உள்ளம் துறந்தேன் உலகம் துறந்திலேன்,
எள்ளத் தனையும் எழுச்சியில் விழாஅது
தெள்ளத் தெளிந்து திருமணம் ஒரீஇ
இனமும் மொழியும் ஏற்றமுற் றோங்க
மனம்வைத் துழைத்திட வாழ்வு கொடுத்துளேன்,
அருளறம் பூண்டது குறளகம், ஆதலின்
தெருளும் அனையொடு சேர்ந்தவண் உறைவேன்;

## ஒருதலைக் காமம்

நிறைஎனப் படுவது இருதிறத் தார்க்கும்
பொதுவென நினையாப் புன்மனம் தாங்கி
ஆடவர் திரியின் யானென் செய்வல்?

ஒருதலைக் காமம் உடையவர் தாமே
வருதுயர்க் கடலுள் மடிவது திண்ணம்
மற்றவர் மனத்தை மதியா ராகிச்
சுற்றுதல் இழிதகைத் தொழிலே அன்றோ?

## காதற் கொடுமைகள்

காதல் என்றுல கோதும் பெயர்தான்
ஏது வாக இயற்றும் கொடுமைகள்
எத்துணை எத்துணை! கானல்நீர் இதனை
நத்தின ராகி நலிவது பேதைமை
பெண்மை பெண்மைஎனப் பேசி மகளிரைக்
கண்ணை மறைத்துக் கருவியென் றடிமையென்
றெண்ணுங் கொடுமை ஏகுவ தென்நாள்?
காமங் கடந்த காரிகையர் தம்மைத்
தீமனம் கொண்டோர் பழிமொழி செப்பிக்
காப்பிலாப் பொருளெனக் கருதிக் கவர்ந்திட
மோப்பம் பிடிக்க முயலும் கள்வர்
பல்கினர்; இளையோய்! பண்பிலா இம்மொழி
சொல்லுதல் இனிமேல் தொலைகநீ பெரும!
எண்ணித் துணிந்ததே இப்பணி' எனச்சொலக்

## கோமகன் ஏக்கம்

கண்ணும் முகமும் கருத்துத் தலைகவிழ்த்து
உள்ளம் கலங்கி உறுநடை தளர்ந்து
பிறிதொரு பாங்கர்க் குறுகின னாக,
முறுகிய காமம் குறைந்திலன் இவன்எனக்
கருதிய பூங்கொடி கலங்கிய மனத்தள்
ஆடவர் மனநிலை அறிகுநர் யாரெனத்
தோடலர் மாலை சூடிய சண்டிலி
துணையிற் பிரியா திருந்தனள் அவளே.

*

# 20. பெருநிலக்கிழார் வாழ்த்திய காதை

### கோமகன் வஞ்சினம்

கலங்கிய கோமகன் கனலும் நெஞ்சினன்
இலங்கிழை நல்லாள் எழில்விழிப் பூங்கொடி
சொல்லிய மாற்றம் சுடுநெருப் பாகிக்
கொல்லுவ தென்னக் கொடுந்துயர்ப் படுத்தப்
பொறாஅ மனத்தினன் புந்தி மயங்கி
மறாஅ மனத்தொடு மணங்கொள இயைவள்
எனாஅ நினைந்தேன் எற்பழித் தொதுக்கினள்
தருக்கிய பூங்கொடி செருக்கினை யடக்கி
வருத்துமவ் வொருத்தியை வாழ்க்கைத் துணையெனக்
கொள்ளா தொழியேன் என்றுளங் கொளீஇச்
செல்லா நின்றனன்; சென்றவன் ஒருநாள்

### சண்டிலியை வேண்டல்

சண்டிலி தன்பாற் சார்ந்தனன் குறுகிக்
கண்டினை நிகரிசை கைவல பூங்கொடி

விண்டுரை யாடிய வெந்துயர்க் கொடுமொழி
தண்டா துரைத்துத் 'தையாஅல் அவள்மணங்
கொண்டா லன்றிக் கொண்டுயிர் வாழேன்;
சிறுமகள் அவளுழைச் செலீஇய என்னுளம்
பெறுவழி யறியாது பேதுறு வேலைக்
காத்தல் நின்கடன், கடிமணங் கொள்ளப்
பூத்தநல் விளங்கொடி புந்தியை மாற்றி
என்பாற் படுத்'தென இரந்துரை கூறினன்;

## சண்டிலி இடித்துரை

'பெண்பாற் குழலும் பெரியோய்! திருமணம்
வன்பாற் பெறுதல் வரன்முறை யன்றே!
ஆசை யரும்பா அரிவையின் நெஞ்சில்
பேசிய காதற் பெருங்கனி பறிக்கக்
கூசினை யல்லை, கொடுமதி விடுமதி;
பாலுணர் வகற்றிய பாவையின் நல்லுளம்
காலள வேனும் கருத்திற் கொண்டிலை,
விழையா ஒருத்தியை விழையா நின்றனை,
பிழையாம் அதனைப் பேணி அகன்றிலை,
கிட்டா தாயின் வெட்டென மறத்தலைக்
கற்றா யலைநீ, காளைப் பருவம்
பெற்றாய் அதன்மனம் பெற்றாய் கொல்லோ?
பாலையில் தண்புனல் பருகிட முனைந்தனை,
காலையை இரவெனக் கருதி அலைந்தனை,
கொல்லும் காமத்துக் கோட்படா தொழிமதி,
அல்லும் பகலும் அரும்பெரும் பணியில்
செல்லும் மகளின் செந்நெறிப் புகுந்து
செல்லல் விளைத்திடல் தீதினும் தீது'என
நல்லறி வுறுத்தினள் நங்கைஅச் சண்டிலி;

## கோமகன் வியப்பு

கள்ளவிழ் கோதை கழறிய உரைகேட்
டுள்ளமும் உடலும் புழுங்கின னாகிக்
கள்ளுண் டான்போற் கலங்கினன் செல்வோன்,
'காவியம் வல்லான் கற்பனை தூண்டும்
ஓவியம் என்ன உருவம் உடையள்,
பாலும் பழமும் பஞ்சணை மலரும்
நாலும் விழையும் நல்லிளம் பருவம்,
வேலும் வாளும் மானும் விழியள்,
காமக் கோட்டத்துக் கடவுட் சிலையிவள்
வாமக் காளையர் வழிபடு தெய்வம்,
இத்தகு நலத்தள் எழில்வளர் பூங்கொடி
எட்டுணை யேனும் எண்ணிலள் காமம்,
பெட்டவர் பலராய்ப் பெருகினும், இவளோ
விட்டனள் காமம், இவள்செயல் வியப்பே!
பலரொடு கலந்தும் பொதுநலம் புரிந்தும்
அலையும் இம்மகள் ஆசை துறந்தனள்,
நிலையும் திறம்பிலள், நினைப்பரும் வியப்பே!'
என்றுளம் வியந்தனன் ஏகுவோன் மனத்துச்

## கோமகன் கொதிப்பு

சுடுநெருப் பாகிச் சுடர்விடு காமம்
படர்ந்து விரிந்த பான்மை போலச்
செக்கர் படர்ந்து சிறந்தது வானில்;
வெட்கி மீளும் விடலையின் விரிமுகம்
செக்கச் சிவந்து தெளிவிழந் ததுபோல்
மேலைத் திசையில் மெல்லெனச் செல்லும்
மாலைக் கதிரவன் மறைமுகங் காட்டினன்;

மாமலர்ப் பூங்கொடி மையலைப் பெருஅக்
காம வேகங் கடுகித் தாக்குறத்
துடிதுடித் தாடும் நெஞ்சகம் போலக்
கடிதடித் தேகும் கடுங்கால் மோதலின்
படபடத் தாடின பைந்தளிர்ப் பரப்பு ;
கூந்தலைப் பல்வகைக் கோலஞ் செய்தும்,
மாந்தளிர் மேனியில் மணியணி பூண்டும்,
கண்ணும் புருவமும் கருமை தீட்டியும்,
வண்ண ஆடைகள் வகைவகை உடுத்தும்,
ஒப்பனை முடித்த ஒண்டொடி மகளிர்
கப்பிய காதற் கணவரொடு கூடி
மலர்வனம் புகூஉம் மனங்கவர் காட்சி
அலைவுறும் அவன்மனத்து அனலாய்க் கனற்ற
ஊதுலைக் குருகின் வெய்துயிர்த் தேகினன் ;

## மாளிகையில் இசை முழக்கம்

பண்ணும் இசையும் பயில்வோர் ஒலியும்,
தண்ணுமைக் கருவி தந்திடும் முழக்கும்,
தெரிதரு யாழில் விரிதரும் இசையும்,
முறிதரு கருவிகள் மோதுநல் லொலியும்,
காய்வேங் குழலின் கனிந்தநல் லிசையும்,
ஆய்நூற் புலவர் அறைந்தநாற் கருவியும்,
கற்பார் மிடற்றுக் கருவியுங் கலந்து
பொற்புடன் வழங்கும் புத்திசை வெள்ளம்
மாடமிசைப் பிறந்து மறுகிடைப் பரந்தது ;
ஆடவர் பெண்டிர் அவ்விடை வழங்குநர்
செவியகம் பாய்ந்து சிந்தை நிறைந்தது ;
புவியகம் யாங்கணும் புகழ்மணம் மலர்ந்தது ;

## மாந்தர் வியந்துரை

சுரிகுழற் பூங்கொடி சொற்றமிழ் இசையை
மறுகிடைக் கேட்குநர் வழங்குதல் தவிர்த்துச்
செயல்மறந் தாங்கண் சிந்தையும் உருகிக்
கயல்விழி இசையின் கற்பனைத் திறனும்
பயில்வார்க் கோதும் பாங்கின் திறனும்
நல்லிளம் பருவத்துப் பல்வகை இசையில்
வல்லவ ளாகிய வகையும் கண்டு
வியந்துரை கூறி வியநகர் மாந்தர்
நயந்தன ராகி நல்கினர் வாழ்த்தொலி;
வாய்விட் டுரைத்து வாழ்த்திய மாந்தருள்
தோய்மகிழ் மனத்துத் தூயோர் ஒருசிலர்
கலைப்பணி ஒன்றே தலைப்பணி என்று
நிலைத்ததம் பொருளெலாம் நீரென இறைத்துப்
பேரின் புறூஉம் பெருநிலக் கிழார்பால்
நேரிற் சென்று நேரிழை இசைத்திறன்
கூறுதும் என்று கூடினர் ஏகி,

## பெருநிலக்கிழார் மாளிகை

வங்க வினைஞரும், வச்சிரத் தச்சரும்,
கொங்கக் கொல்லரும், குளிர்மலை யாளரும்,
தமிழக வினைஞர் தம்மொடு கூடிப்
புகழ்பெறு மாறு புதுமையின் இயற்றிய
கண்கவர் வனப்பிற் கைவினை முற்றிய
விண்தவழ் முகப்பும் வியன்பெரு வாயிலும்,
வெண்சுதைப் பாவை விளங்கிடும் அரணும்,
ஒள்ளிய சாந்து வெள்ளிய நிலவொளி
அள்ளி இறைக்கும் அழகுறு மதிலும்,
திரள்பெருந் தூணிற் செய்வினைப் போதிகை

மருள்படச் செய்யும் மனங்கவர் சித்திர
விதானப் பரப்பொடு விளங்குநல் மண்டபத்து

## ஆடல் அரங்கு

கண்ணுள் வினைஞர் கைத்திறத் தியற்றிய
வண்ண ஓவியம் வகைவகை துலங்கும்
எண்ணருந் திறத்த எழினிகள் நாலப்
பின்னரும் முன்னரும் பேரொளி காலும்
பன்னிற விளக்கம் பாங்குற விளங்கக்
கற்பனை தோற்கக் கண்கவர் முறையில்
பொற்புடன் அமைத்த பொன்னிற அரங்கில்
ஆடற் கூத்தும், அவிநயக் கூத்தும்,
நாடகக் கூத்தும், நல்லிசைப் பாட்டும்
கண்டுங் கேட்டுங் களிப்பினில் திளைத்துத்
திண்டும் அணையும் சேர்தரும் அமளியில்
விலைபெறு பட்டும் விரிமலர் இதழும்
குலவிட அதன்மிசைக் கொற்றவன் என்ன
எழில்பெற இருக்கும் பெருநிலக் கிழார்முன்
தொழுதவண் வந்தோர் சொற்றனர் சிலசொல்;

## வந்தவர் செய்தி கூறல்

'இசையும் கூத்தும் நகையுடன் பேணும்
வசையிலாப் பெரும வாழ்கநின் உள்ளம்!
தமிழகச் செல்வி, தண்டமிழ்ப் புலத்தி,
அமிழ்தெனும் இசையில் அளப்பருந் திறத்தி,
தொண்டுளம் பூண்டவள், தோகை அவள்முகம்
கண்டவர் தொழுதிடும் கருணை நிறைந்தவள்,
புண்ணியத் திருவினள், பூங்கொடிப் பெயரினள்,
நண்ணிஇத் திருநகர் நயந்திடும் வகையால்

பண்ணிசை பரப்பும் பணியினள் உரவோய் !
ஈங்கவட் கூஉய் இன்னிசை கேட்டுப்
பாங்கறிந் தவட்குப் பரிசிலும் நல்கிச்
சீரும் சிறப்பும் செய்வன செய்து
போற்றுதல் நும்போல் பொருளுணர் மாந்தர்
ஆற்றிடுங் கடன்'என ஆர்வலர் இசைத்திடப்

## பெருநிலக்கிழார் அழைப்பு

பெருநிலக் கிழவரும் பெரிதுளம் மகிழ்ந்தே
'அருளுளங் கொண்டவள் ஆற்றுநற் பணியைப்
பிறரும் வியந்து பேசிடக் கேட்டுளேன்,
நெருநல் மாலை நேரிழை அவளைக்
கண்டுரை யாடக் கருதினேன், ஆயினும்
தொண்டுளம்பூண்டஅத்தோகையைக்காண்கிலேன் ;
ஒல்லையிற் காண்குவென், உயரிசை கேட்குவென்
ஒல்லும் வகையான் உறுதுணை புரிகுவென்'
என்றுளங் கனிய இசைத்தவர் ஒருநாள்
துன்றுநல் லன்பால் தூயவள் வருகையை
விழைந்தன ராகி விடுத்தனர் ஓலை ;
குழைந்துளம் உருகிஅக் குலக்கொடி இயைந்து

## மாளிகைக்காட்சி

வருவோள் நீளுயர் மாமதில் வாயில்
மருவா நின்றவ் வழியுட் புகுமவள்
பட்டின் இயன்ற பசும்படாம் போர்த்தென
வெட்டுறும் பசும்புல் விரிதரை கண்டும்,
புற்றரை அதனிடைப் பொலிவுற விளங்கிடும்
சிற்றுளி வல்லான் செய்வினை முற்றிய
கற்சிலை ஆங்காங்கு அமைந்தன கண்டும்,

காண்பார் மருளக் கைவலான் இயற்றிய
மாண்பார் சுதையின் பாவைகள் கண்டும்,
எழுப்பிய சுவரென எண்ணிட இருபுறம்
செழித்தவை ஒழுங்குறத் தறித்திடும் செடிகள்
வரிசையின் அமைந்த வனப்பினைக் கண்டும்,
சுரும்பினம் விரும்பா அரும்புகள் மிடைந்திட
நரம்பின் இசையென முரலும் வண்டினம்
முந்துற மொய்த்து நறுந்தேன் முகக்கப்
பந்தியின் அமைந்த பல்வகை மலர்கள்
வியன்மணம் பரப்பி விரிந்துள கண்டும்,
கயல்மீன் பிறழ்ந்து கள்ளவிழ் மலர்மிசைத்
துயிலுவ தென்னக் கிடந்துபின் துள்ளிப்
புனலிடை மீண்டும் புகுந்து திரியும்
செய்குள மாகிய பொய்கை கண்டும்,
நெய்யும் வினைஞர் நேர்த்தியின் இழைத்த
நூலின் இழையினும் நுண்கொடி படர்ந்து
நாலும் பந்தரின் நன்னலங் கண்டும்,

### கிழார்முன் பூங்கொடி

அகத்தும் முகத்தும் ஆர்தரும் உவகை
மிகுத்தன ளாகி மேலுயர் பொழிலின்
நாப்பண் நிறுவிய நலம்பல பழுநிய
காப்பமை மாளிகை கண்டனள் புக்குக்
கூப்பிய கையினள் வாழ்த்திய வாயினள்
மூப்பினை அறிய முடியா முகத்தின்
பெருநிலக் கிழவர் முன்னர்க் குறுகினள்;

### பெருநிலக்கிழார் வேண்டல்

பெறலரும் பொருளைப் பெற்றால் என்னப்
பெருமகிழ் வெய்திப் பெரியவர் வாழ்த்திப்

‘பெண்மையின் உருவே! கண்ணின் மணியே!
புண்ணிய மகளே! பூங்கொடி அன்னாய்!
பண்ணிசை நுகரும் பரிவுடன் அழைத்தனென்,
என்செவி குளிர என்னகம் மகிழ
நின்னிசை வார்க்க நேரிழை ஒல்லுமோ?
புதுமைச் சுவடியிற் பொதிந்துள உண்மைகள்
முதுமை யுற்றேற்கு மொழிகதில் லம்ம!’
எனவாங்கு
இரப்பார் போல இயம்பின ராக,

## பூங்கொடி பாடுதல்

‘பரப்புதல் இசையைப் பணியெனக் கொண்டுளேன்,
புரப்பது கடனெனப் பூண்டுளீர் நீவிர்,
தனியள் எனக்குத் தந்தநும் ஆணை
இனிதெனக் கொள்வேன், இயலும் வகையான்
தெரிந்தன கூறிச் செல்லுதல் என்கடன்,
பெருந்தனம் உடையீர் பிழைபொறுத் தருள்க’
என்றவள் பணிந்துரை இயம்பி மீனவன்
தொன்று முதிர்ந்த தாயகன் மொழியாம்
தமிழிசை மீண்டும் தரணியில் தழைக்கத்
தந்தநற் சுவடியின் தகவெலாம் உரைத்துப்
புந்தியிற் பதியப் பொதிந்துள நுணுக்கம்
முறைமுறை தெரித்தும் இடையிடை இசைத்தும்
நறைபழுத் தொழுகும் துறைத்தீந் தமிழின்
பழம்பெரும் பாடல் பாங்குடன் பாடியும்
முழங்கிசை வல்ல முத்துத் தாண்டவர்
வழங்கி யருளிய வளர்தமிழ்ப் பாட்டும்,
அரும்பெறல் இசைவல அருணா சலக்கவி
திறம்பட நல்கிய தீந்தமிழ்ப் பாட்டும்,

விரும்பிய சமநிலை வேத நாயகர்
தரும்பழச் சுவைநிகர் தண்டமிழ்ப் பாட்டும்,
என்றிவர் அனையார் இசைத்துறை வித்தகர்
துன்றுநல் லுணர்வில் தாய்த்துப் பாடிய
தென்றமிழ்ப் பாட்டும் தெள்ளிதின் இசைக்க,

## பெருநிலக்கிழார் வாழ்த்துரை

ஏந்திய மலரில் இன்சுவை நறவம்
மாந்திய வண்டென மனங்களி கூர்ந்து
விழிபுனல் ததும்பி வியந்துரை கூற
மொழிதடு மாறும் முதியவர் எழுந்து
'வாழிய நெடுநாள்! வாழிய நெடுநாள்!
யாழின் இசையோய் வாழிய நெடுநாள்!
ஏழிரண் டாண்டுகள் என்மனத் துறுத்திய
பாழிடர் போக்கினை! பாவாய் வாழிய!'
எனமனத் தெழூஉம் உணர்ச்சியின் இயைந்த
வாழ்த்துரை வழங்கி மகிழ்ந்தனர் பெரிதே.

*

# 21. நூல்நிலையம் அமைத்த காதை

### பூங்கொடி வேண்டல்

'வாழிய என்றெனை வாழ்த்திய பெரியீர்!
ஏழிரண் டாண்டுகள் இடரொன் றுளதெனக்
கூறிடக் கேட்டுளம் கொடுந்துயர் உற்றேன்;
மாறிய தவ்விடர் எனும்அம் மாற்றம்
தொடுத்துடன் மொழிந்தீர் அடுத்துளம் மகிழ்ந்தேன்;
படுத்திய அவ்விடர் பாவைநான் உணர
எடுத்து மொழிய இயலுமோ பெரும!'
என்றிளம் பூங்கொடி இரங்கினள் வேண்ட,

### மகள் வரலாறு

'நன்று கனிமொழி நவிலுவென் கேண்மோ!
உருவும் எழிலும் உன்போல் ஒருத்தி,
பருவம் நிறைமகள், பாவிஎன் மடமகள்;
உருவளர் முழுமதி ஒப்பத் திகழ்ந்தனள்,
ஆடலும் பாடலும் அவட்குயிர் ஆகும்,
ஏடவிழ் கோதை எனக்குயிர் ஆகும்,
நாடிய துறையில் நன்கனம் தேர்ந்து

பாடுங் குயிலாய், ஆடும் மயிலாய்,
வீடகம் எல்லாம் பாடகம் சிலம்ப
ஊடகம் குளிர உவந்து திரிந்தனள்;

## மகட் பிரிவு

ஒருநாள்
பாட்டியல் வழுவாப் பண்ணொலி அடங்க
மீட்டிய யாழும் கூட்டினுள் முடங்க
உடலும் உயிரும் ஒருங்குடன் நடுங்கப்
படரிருள் அகத்தில் பரவிய தந்தோ!
சுடரொளி அவிந்தது துயரெனை அணைந்தது,
தாங்கருந் துயரத் தடங்கடல் மூழ்கி
நீங்கா உயிர்ப்பொறை தாங்கி நாளெலாம்
உண்ணலும் உறங்கலும் எண்ணிலே னாகி
மண்ணகத் திருந்து வாழும் காலை,
காலம் என்னும் கோல மருத்துவன்
ஞாலத் தியற்கை நன்கனம் உணர்த்தி
மாறா மனப்புண் மாற்றின னாகத்
தேறினேன் ஆயினும் சிந்தையில் அவளுரு
மாறிய தில்லை; மனத்தவள் விழைந்த

## நினைவுச் செயல்

ஆடலும் பாடலும் அளாவிய இன்னொலி
வீடகம் எதிர்ந்து விரவிட நினைந்து
நாடொறும் அவ்வொலி நான்செவி மடுக்கத்
தேடரும் செல்வம் வாரித் தெளிப்பது
தொழிலாக் கொண்டுளேன், தூயவள் நீஎன்
விழியிடைப் படலும் மீண்டனள் என்மகள்
என்னும் உணர்வே என்னுளத் தெழுந்தது;

### வேண்டுவது உரை எனல்

புண்ணிய மகளே! பூங்கொடி அன்னாய்!
பெண்மையின் உருவே! கண்ணின் மணியே!
மாதமிழ்ச் செல்வி! வாழிய நெடிதே!
யாதுநீ வேண்டினும் என்பால் உரைத்தி
திதென நினையேல் செவ்விதிற் கொள்'கென
மாதவள் தன்பால் ஓதினர் அக்கிழார்;

### பூங்கொடி நன்றி கூறல்

'தகவுடைப் பெரியோய்! தந்தாய் அன்பினை
மிகுபொருள் அதனின் வேறொன் றில்லை,
உளத்தெழும் அன்பும், உணர்ச்சியின் வாழ்த்தும்,
பெறத்தகும் அளவு பெற்றபின் எனக்குக்
கொளத்தகு பொருளெது? வளத்திரு மிகுத்தோய்!
நன்றி யுடையேன்' என்றவள் கூறலும்,

### தந்தாய் எனுஞ்சொல் தந்த மகிழ்ச்சி

'தந்தாய் எனுஞ்சொற் புகன்றனை தாயே!
நந்தா விளக்கே! நான்பெறும் மகிழ்ச்சிக்
கெல்லையொன் றுரைக்க இயல்வதொன் றில்லை;
அன்பின் விளைந்த அம்மொழி கேட்டுளம்
இன்பில் திளைத்தேன் ஏழிரண் டாண்டின்
முன்னர்க் கேட்டஅம் மொழியினை நின்வாய்
மொழிந்திடக் கேட்டேன் மீண்டும் அதனை
மொழிகதில் லம்ம! மொழிகதில் லம்ம!
செந்தா மரைமுகச் செல்விநீ மொழிந்த
'தந்தாய்' எனுஞ்சொல் தந்தபே ரின்பம்
எத்துணை! எத்துணை! எவ்வணம் புகழ்வேன்!'

என்றுளம் கசிய இணைவிழி கசிய
நின்றனர் ஆங்கண்; நேரிழை உருகித்

### பூங்கொடி ஆறுதல் புகலுதல்

தந்தை வடிவேல் நினைவுளந் தாக்குறத்
'தந்தாய்! தந்தாய்! தணிகநின் துயரம்;
எந்தாய்! எந்தாய்! எனைநின் மகளெனத்
தந்தேன் தந்தேன் தவிர்கநின் கவலை;
உலகிற் பிறந்தோர் ஒருநாள் மறைதல்
நிலைஇய இயற்கை; நீக்கலும் அரிதே
உறவின் பாற்செலும் உளத்தெழும் அன்பினைப்
பிறரிடைச் செலுத்தும் பெற்றிமை வாய்ப்பின்
உற்றவர் பிரிவினிற் பெற்றிடும் மனநோய்
அற்றிடும்; இஃதென் பட்டறி வாகும்,'
எனவிழி ததும்ப இசைத்தனள் பூங்கொடி;

### கிழார் மகிழ்ந்து வாழ்த்துதல்

மனமிகக் களித்த மாபெருஞ் செல்வர்
கைவிரல் கொண்டு கண்மலர் துடைத்து
மெய்ம்மயிர் சிலிர்த்து 'மீண்டஎன் மகளே!
வாழிய நெடிதே! வாழிய மகளே!
சூழிடர் தொலைத்தனை! சுடரொளி துலக்கினை!
வாழ்வை மறுமுறை வளம்பெறச் செய்தனை!

### வேண்டுவன கொள்க எனல்

இளங்கொடி நினக்குயான் செய்யற் பாலதென்?
விளங்கிட உரைத்தருள் வேண்டுவ திதுவென;
எப்பொரு ளாயினும் அப்பொருள் ஈவேன்;
ஒப்பிலாச் செல்வி! உண்மையின் உரைக்கின்

'ஈதல்' எனுஞ்சொல் ஏற்புடைத் தன்று
தீதுதீர் செல்வமும் செழுமனை யாவும்
நின்பொருள், வேண்டுவ நீயே கொள்க'
இன்பினில் திளைத்தவர் இவ்வணம் புகல,

### பூங்கொடி மறுத்தல்

'அன்புடைப் பெரியோய்! பொதுப்பணி ஆற்றிட
என்பும் பிறர்க்கென எடுத்துளேன் வஞ்சினம்
எனக்கென ஒருபொருள் எதற்கினி ஐய!
மனக்கினி யாய்!எனை மன்னித் தருள்'எனத்
தனக்கென வாழாஅத் தையல் மொழிந்திட,

### கிழார் மீண்டும் வேண்டல்

'ஆருயிர் மகளே! அவ்வணம் உரையேல்,
சீரிய நின்பணி செயற்பட வேணும்
கோரிய என்மொழி கொண்டருள் செல்வீ!
மீறிய அவாவின் வேண்டுவல், யாதெனக்
கூறுக நீ'எனக் குறையிரந் தனரே;

### நூலகம் அமைக்கப் பூங்கொடி வேண்டுதல்

பெருமகன் உளத்து வருவிருப் பகற்ற
ஒருவழி யறியாள் ஒப்பின ளாகித்
'திருமிக வுடையாய்! செயிரறு கொடையாய்!
ஒருபெரும் நூலகம் ஊரிடை நிறுவக்
கருதுவ துடையேன், காணும் அதுதான்
தென்மொழி முதலாப் பன்மொழிச் சுவடிகள்
நன்மை தருவன நாடித் தொகுத்தே
யாண்டும் இதற்கிணை இல்லெனு மாறு
பூண்டநற் புகழொடு பொலிவுறல் வேண்டும்;

## தனித்தனி இடங்கள்

தொன்னூல் பலவும் துறையறி புலவர்
அந்நூல் துருவி ஆய்வுரை கண்டு
நன்னூல் பலப்பல நல்குதற் பொருட்டும்,
கற்பனை வல்ல காவியப் புலவர்
சொற்பொருள் பொதிந்த தொழுதகு காப்பியம்
பற்பல படைக்க முற்படும் பொருட்டும்,
நுழைபுலம் தரூஉம் நூலகம் அதனுள்
எழிலும் அவர்தமக் கேற்றநற் பொருளும்
கழிமிக நிரம்பிய கண்கவர் இடங்கள்
தனித்தனி அமைத்துத் தருதலும் வேண்டும்
கனித்தமிழ் தழைக்கஓர் கருவி ஆகும்
எனத்தகும் நினைவால் ஈண்டிது புகன்றேன்;

## நூலகத்திற்கு மாளிகை தர வேண்டுதல்

ஈங்குநின் னுரியன எண்ணில மாளிகை
ஆங்கவை தம்முள் ஓங்கிய நூலகம்
ஆக்கிட ஒன்றனை அளித்திடல் நின்கடன்
தேக்கிய நிதியும் செறிந்துள தறிவேன்;
ஈதற் பண்பும் இயல்பான் அமைந்தனை
ஆதலின் நூலகத் தரும்பெரும் பணிக்குப்
பொறுப்புடன் அருளும் பொருளும் அளித்து
விருப்புடன் காக்க வேண்டுவல் யானே,
இஃதென் விழைவாய்' என்றனள் பூங்கொடி;

## கிழார் உறுதியளித்தல்

'அஃதுன் விழைவெனின் ஆகுக அவ்வணம்
நன்று நினைப்பின் அன்றுசெயல் வேண்டும்;
இன்றே முடிப்பேன், இரவென நின்றேன்,

காலை புலர்ந்ததும் கடிதினில் முடித்து
நாளை நூலகம் நடுவூர் ஆங்கண்
மிளிரக் காண்குவை ; மேம்படும் நின்மனம்
குளிரக் காண்பதென் குறிக்கோள் ஆகும்'
எனுமொழி இயம்ப இளங்கொடி மகிழ்ந்து
நனிமிகு நன்றி நவின்றேகினளே. (139)

*

# 22. கோமகன் கொலையுறு காதை

### சண்டிலியின் கணவன் வருகை

மழைவளர் சாரல் மாமலைப் பொதியில்
குழலின் இனிய குரலிசை கேட்டுத்
தன்வய மிழந்து தமிழிசை வேட்டுப்
பயிலும் ஆர்வம் மீக்கூர் பாவை
அயில்வேல் விழியள் மயிலியல் சண்டிலி
பிரிவினைப் பொருஅன் பேதையின் கணவன்
துருவன் என்பான் தோகையைக் காணும்
ஆர்வல னாகி அணிதிகழ் மாடஞ்
சேர்தரு மறுகுகள் செறிந்தெழில் விளங்கும்
வேங்கை நகரெனும் வியனகர் புகுந்தோன்,
ஆங்கண் ஓங்கிய அகல்வாய் மாளிகை
வதியிடன் குறுகிஅம் மங்கையைக் கூடிப்
புதுமகிழ் வெய்திப் பூரிப் புற்றனன் ;

### சண்டிலி நிகழ்ந்தன கூறல்

ஓதும் பொருட்டாற் காதலற் பிரிந்த
மாதும் கொழுநன் வரவால் தழைத்த

நெஞ்சினள் அவற்கு நிகழ்ந்தன கூறுவோள்
பஞ்சியின் மெல்லடிப் பாவை பூங்கொடி
வஞ்சியின் அருளால் வளர்தமி ழிசையில்
விஞ்சிய புலமை விளங்கிடப் பெற்றதூஉம்,
பயிற்றிய பூங்கொடி பழகிய முறையதூஉம்,
செயற்றிறம் பழகியோள் செம்மனத் தொண்டும்
பண்பும் அன்பும் பண்ணிசைத் திறனும்
மன்பதை உரைபுகழ் மாண்பும் பிறவும்
எஞ்சா துரைத்தனள்; இசைத்தவை கேட்டோன்
நெஞ்சால் மகிழ்ந்து நேரிசைச் செல்வியைக்

## துருவன் பூங்கொடியைக் காண விழைதல்

காண்டல் விருப்பொடு காரிகை நோக்கி
'யாண்டுளாள் அம்மகள்? யாஃவள் பணிக்கு
நன்றியும் வணக்கமும் நவிலுதல் வேண்டும்'
என்றவற் கம்மகள் இயம்புவோள் 'அன்ப!

## சண்டிலி மறுமொழி

பழுதறு கலைக்கே பொழுதெலாம் ஆக்கிக்
கழிபே ருவகை காணும் பெரியர்
இருநிதிக் கிழவர் பெருநிலக் கிழார்பால்
சுரிகுழற் பூங்கொடி சொல்லுரை யாட
ஏகியோள் இன்னும் ஏனோ மீண்டிலள்!
பாயிருள் நீங்கப் பகலவன் தோன்றிக்
காய்கதிர் வீசுங் காலைப் பொழுதத்துக்
காண்குதும் இனிநீ கண்படை கொள்'கெனச்
சேண்படு நகர்வரூஉம் செழுநிதித் துருவன்
பாங்க ரமைந்தவோர் பாயல் விரித்த
ஓங்குபே ரறையகத் தொருபா லணைந்தனன்;

## நிலவின் தோற்றம்

வானகப் பள்ளியில் மாணவக் குழுவென
மீனினம் ஆங்காங்கு மிடைந்து விளங்கிடப்
பொருட்டிறந் தெருட்டும் ஆசான் போலவும்
அருட்டிறம் வேண்டி அவரவர் குறையை
விரித்துரை செய்வான் வியனகர் வாயிலில்
குழுமுங் குடியென உடுவினம் அணிசெயத்
தொழுதகும் அரசன் தோற்றம் போலவும்
இருட்பகை ஓட்டும் எண்ணரும் விண்மீன்
செருப்புலம் நோக்கிப் புறப்படும் மறவர்
திறப்பட அணியணி வகுத்திடல் மான
முறைப்படுத் தியக்கும் முதல்வன் போலவும்
ஒளியும் அளியும் உருவும் நிறைமதி
வெளிபடர் விண்ணக மறுகினில் போந்தது ;

## நிலவின் செயல்

பாரி லின்பம் பயந்தவோர் பொருளே
மாறித் துன்பம் வழங்கலுங் கூடும்
பரிசினை விளக்கும் பான்மைய தாகித்
திரியும் மதியம், விரிமலர்ப் பாயற்
கவவுக் கையர் காதலர் தமக்குத்
திவவுக் கோல்யாழ் தெளிநரம் பிசைபோல்
தவமகிழ் வூட்டத் தண்ணொளி வீசிப்
பிரிந்தவர் தம்மைப் பெருந்துயர்க் கடலுள்
வருந்திடச் செய்து வாயுலைக் குருகின்
வெய்துயிர்ப் பெறிய வெந்தழல் சிந்திக்
கைவிரித் தெங்குங் கலையெழில் வழங்கி,
மண்ணகம் நோக்கும் வளர்முகங் காட்டி
விண்ணகப் பரப்பில் மெல்லென நகர்ந்தது ;

## கோமகன் புலம்பல்

பாயலில் நெளியும் படுதுயர்க் கோமகன்
காயும் நிலவைக் கண்ணிமைப் பிலனாய்
நோக்குழி நோக்குழி நெட்டுயிர்த் ததனை
வீக்கிய துயரோன் விளித்து 'வானச்
சேக்கையில் என்போற் சிந்தை குலைந்து
நீக்கிய துயிலொடு நிலைதடு மாறிப்
போக்கொழிந் தனைகொல்? புகலுதி திருமதி!
விண்ணகத் திருப்பினும் மண்ணகத் திருப்பினும்
கண்ணிய காமங் கதுவப் பட்டார்
கண்ணுறக் கொழிந்து கண்ணீர் பொழிந்து
புண்ணுறல் யாண்டும் புதுவதன்று போலும்!
என்னிற் பெரிதே இடர்ப்பா டுற்றனை!
நின்னிற் பிரிந்தோன் நிகழ்த்திய துயரால்
எண்ணிப் பொழிந்த கண்ணீர்த் துளிதாம்
விண்ணிற் சிதறும் வெண்மீன் கொல்லோ?
நின்னை இகழ்ந்தனன் நீவிழை யொருவன்,
என்னை இகழ்ந்தனள் யான்விழை யொருத்தி,
விழைந்தவர் தம்மை வேட்டுளங் கொளாஅது
குழைந்து தளர்ந்திடக் கொடுந்துயர்ப் படுத்துதல்
இழிந்தவர் செயலாம்' எனப்பல புலம்பித்

## திங்களிற் பூங்கொடி

திங்களை நோக்கினன் நோக்கிய திங்களில்
செங்கயல் மீன்விழி பொங்கெழிற் பூங்கொடி
வஞ்சியின் முகமலர் வடிவினைக் கண்டனன்;
நெஞ்சினில் விஞ்சிய நீள்படர் காமம்
பஞ்சினில் தீயெனப் பற்றிப் படர்ந்தது;
உடுத்திரள் சூழ்தர உயர்பெரும் வானில்

நடுப்பட நின்றொளி நல்கிடும் அம்புலி,
படிப்பவர் சூழ்தரப் பண்ணிசை யரங்கிற்
படைத்திடும் பூங்கொடி பான்மையிற் றெரிதரக்
கற்பனைப் பெருக்கில் மூழ்கிக் களித்தனன் ;
முற்படு காதல் நினைவே முகிழ்த்தது ;

### கோமகன் கற்பனை

கருமுகில் உடீஇய நிலவெனுங் காதலி
இருளிடை வான மறுகினில் நின்று
காதலற் காணுங் கழிபே ரவாவொடு
பேதலித் தாங்கண் பெருமூச் செறியக்
காற்றெனுங் காதலன் கள்வழி மலர்மணம்
போற்றித் தன்னுடற் பூசி வந்தனன் ;
கொழுநற் காணலுங் கூசி அன்னவள்
எழிலி எனுந்துகி லெடுத்துப் போர்த்துத்
தன்முகம் மறைத்துத் தயங்கி நின்றனள் ;
வீசுகை கொண்டதை விலக்கின னாகப்
பேசுகை யின்றிப் பெண்மையின் நகர்ந்தனள் ;
தூசு பற்றினன் தொடர்ந்திடுங் காதலன்
மாசறு மேகலைக் காசுடன் முத்தும்
வீசிச் சிதறி வீழ்ந்தன வானில்
வீழும் அவையே மின்னும் உடுவெனச்
சூழும் அவ்விடைச் சுடர்விட் டெரிந்தன ;
எனவாங்கு
கற்பனை வடித்துக் கவிதையும் முடித்து
நிற்பவன் நெஞ்சில் நேரிழை உருவம்
பொற்புட னுடல் புரிவது கண்டனன் ;

### கோமகன் காம எழுச்சி

இரவுங் குளிரும் எரிதழல் மூட்ட
வருமந் நிலவு வாரிநெய் யூற்ற

வாடையுந் தென்றலும் மாறி மாறி
நீட்டவை வீசலால் நெஞ்சினிற் கனன்று
சுடர்விட் டெரிந்தது சொலற்கருங் காமம்;
கோமகன் அடங்காக் காமுகன் ஆயினன்;
நிறையும் பண்பும் இருகரை யாகச்
செறிபுனல் நிகர்க்கும் நெறிபடு காமம்
உறுகரை கடந்தது முறைமையும் இகந்தது
பொங்கிய வெள்ளம் புகாவழிப் புகுந்தது;
'தங்கிடன் புகுவேன் தையலை நகுவேன்
எங்கவள் தப்புவள்? என்மனம் ஒப்புவள்
ஆசை பகர்வேன் அவள்நலம் நுகர்வேன்
எசிய அவளினி என்கை தவருள்'
எனமனத் தெண்ணி எழுந்து நடந்தனன்;

## நள்ளிரவில் கோமகன்

நள்ளிராப் பொழுதிற் கள்ளனை நிகர்ப்போன்
மெல்லென நடந்து நல்லவள் வதியிடன்
மனத்துணி வுடனே மயங்கினன் செல்வோன்
தனைத்தெரி யாவகை தயங்கித் தயங்கிப்
புறமும் அகமும் புழுங்கி வியர்க்க
உடலும் உளமும் ஒருங்குடன் நடுங்க
நெஞ்சினில் துடிப்பும் நெட்டுயிர்ப் பொலியும்
விஞ்சும் முறையில் வெடவெடத் தேகினன்;

## துருவன் தொடர்தல்

ஒதுங்கியும் பதுங்கியுஞ் செல்லுமோ ருருவம்
அரவப் படாஅவகை அடியெடுத் தேகினும்
துருவப் பெயரோன் துயிலா விழியில்
தெள்ளிதிற் றெரிதரத் துள்ளி எழுந்தவன்

கள்ளச் செயலோன் கட்படா வகையில்
மெல்லத் தொடர்ந்தனன் மேவிய இருளில்;

### கோமகன் ஓர் அறையுட் புகுதல்

பழிசெய அஞ்சாக் கழிமிகு காம
வழியினிற் செல்வோன், வருவதும் ஓரான்
ஆண்டோர் அறையின் அடைகத வொன்றைத்
தீண்டினன் கதவம் திறந்தது கண்டோன்
'என்வர வறிந்தே இடுதாழ் இட்டிலள்,
தன்மனம் முகிழ்த்த தணியாக் காதலை
எவ்வணம் மறைத்தனள், இளையோள்? வியப்பே!'
இவ்வணம் நினைந்துளங் கவ்விய மகிழ்வால்
உட்புகுந் தாங்கண் ஒருத்தியைக் கண்டனன்
வெட்கினன் வியர்த்தனன் விழித்தனன் துடித்தனன்
மட்கிய முகத்தினன் வாயிதழ் மடித்தனன்
செய்வதொன் றறியான் சிலைபோல் நின்றனன்;

### துருவன் ஐயப்பாடு

மைமன முடையான் மதியிலி நிழல்போல்
தொடர்ந்து பின்வரும் துருவன், அவ்விடை
இடம்படும் அறையுள் இளையோன் புகுதக்
கண்டோன் ஐயமும் கடும்படர் சினமும்
கொண்டோ னாகிக் கொடுவரி நிகர்த்துக்
கதவிடை ஒருபாற் கரந்தனன் நிற்க;

### எழுந்தவள் சீற்றம்

மதர்விழி மாதவள் மலரணை விடுத்தே
ஒய்யென எழுந்தவள் ஒளிமுகஞ் சிவந்து
கைதவன் நிற்றலைக் கண்டுளஞ் சினந்து

'விழையா மகளை விழையா நின்றனை,
இழிவாம் இச்செயல் இயற்றிடத் துணிந்தனை,
நாணு மதியினை நங்கையர் வாழ்வில்
மாணு வினைசெய மனங்கொண் டனை,நீ
பொருந்தாக் காமம் பொருந்தா தென்று
திருந்தா வுனக்குச் செப்பிய வெல்லாம்
மறந்தாய் கொல்லோ? மதர்த்தனை கொல்லோ?
இரவிடை ஒருமகள் தனியிடன் குறுகக்
கரவுளங் கொண்ட காமுகன் நீதான்
உரமிக வுடையாய்! ஒண்டொடி மாதர்
மரமென மண்ணென மதித்தனை கொல்லோ?
அரிவை யிகழ்ந்தனை! அறிவை யிகழ்ந்தனை!
தெரிவை விரைவினில் தெரிவை திறமெலாம்
இன்னே வகுதி இவ்வுழை யகன்றே
கொன்னே வளர்ந்தனை கொடியோய்' என்று
மின்னேர் இடையாள் வெகுண்டுரை கூறக்

## கோமகன் காமவுரை

'கண்டன மொழியாய்! காயும் விழியாய்!
சண்டிலி நின்பாற் சாற்றுவ துடையேன்
கொண்டுள காதல் விண்டுளேன் அறிவாய்,
ஒண்டொடி மறுப்பின் உயிர்பெரி தன்றே!
நொடிநொடி யாக மடிவது தாளேன்,
விடியுமுன் காதல் விருந்துண் டமைவேன்,
எத்துணைத் தடுப்பினும் இனிப்பொறேன் நெஞ்சில்
அத்துணை உணர்ச்சி அழலாய் எரித்ததே;
உறுபசி கொண்டோன் உண்டியின் ஒப்புதல்
பெறுவதும் உண்டோ? பெரும்பசி கொண்டேன்;

உண்டியும் அருகி லுறுவது கண்டேன்
உண்பது தடுப்பார் ஒருவரும் ஈங்கிலை'
என்றுரை கோமகன் இழிமொழி கேட்டுத்

### துருவன் கோமகனைத் தாக்குதல்

தன்றுணை யாகிய சண்டிலி கற்பினைச்
சென்றுண முனைந்தனன் என்றுளம் அயிர்த்துக்
கன்றிய நெஞ்சினன் கனல்படு கண்ணினன்
துன்றி எழுந்தனன் துருவன், புலியெனப்
பாய்ந்தனன் அவன்மேற் சாய்ந்தனன் கோமகன்;
காய்ந்திரு கைகொடு காமுகன் முகத்தில்
முழுவலி யாலவன் மோதினன் தாக்கினன்;

### இருவரும் போரிடல்

விழுமவன் தானும் வேங்கையிற் சீறி
எழுதரக் கனன்றுடன் இருவரும் பொருதனர்;
அழிவது யாரென அறியா வகையிற்
புழுதியிற் புரண்டனர் புழுங்கினர் அழுங்கினர்;

### துருவன் கொலை செய்தல்

கழிமிகு காமங் கனன்றெழு மார்பிற்
குழிபட ஓச்சிக் கொடுவாள் செலுத்திப்
பறித்தனன் துருவன்; பறித்தஅவ் வாள்நுனி
கண்ணீர்த் துளியெனச் செந்நீர்த் துளிகளை
மண்ணிற் கிடந்தோன் மார்பினிற் சிந்த,
விரிபடு மார்பில் வேட்கைப் பெருக்கெனக்
குருதிப் பெரும்புனல் கொப்பளித் ததுவே;

### சண்டிலி கதறல்

அங்கிலை காண அஞ்சிய மெல்லியல்
நன்மலர்க் கையால் தன்முகம் புதைத்துக்
கூஉய் அழுதனள் கொடுமை என்றனள்
ஆஅய்ப்புலம் இன்றி அடாஅது செய்தனை!
எனப்பல கூறி இரைந்தனள் இரங்கினள்;
மனத்தினில் கொண்ட மணாளன் மலைத்தனன்;

### கோமகன் முடிவுரை

செந்நீர்க் காட்டிற் சீரழிந்து கிடப்போன்
புண்ணீர் வடிந்து பொங்கிய வாயிதழ்
பூஉங் கொடிஎனப் பூஉங் கொடியெனக்
கூஉம்பி யசைந்தன, குளிர்ந்ததவ் வுடலம்;
தேஎம்பி யழுதன திங்களும் வானமும்;

### துருவன் ஓடி மறைதல்

ஐயமுஞ் சீற்றமும் ஆட்கொண் டமையால்
வெய்யவ னாகி வீண்கொலை புரிந்து
செய்வதொன் றறியாது திகைத்திடுந் துருவன்
பெய்வளை யாளொடும் உய்வகை கருதிக்
காணு தேகிக் கரந்தனன் விரைந்தே. (230)

*

# 23. சிறைப்படு காதை

### பூங்கொடி வருதல்

பெருநிலக் கிழவர் பெட்புடன் மகிழ்ந்தே
அருளிய வாழ்த்தும் அவ்வூர் நாப்பண்
ஞாலங் காணக் கோலங் கொண்ட
நூலகம் அமைக்க நுவல்மொழி உறுதியும்
பெற்றநற் பூங்கொடி குற்றமில் மனத்துள்
உற்றெழு மகிழ்வால் சொற்றமிழ் இசைதரு
மாட மாளிகை மன்றினுட் புகுதரக்
கூட வாயிலில் குருதி கண்டனள்;

### பூங்கொடி மயக்கம்

கண்டவள் நடுங்கிக் கால்தடு மாறிச்
'சண்டிலி சண்டிலி' என்றுரை சாற்றியும்
கண்டிலள் அவளைக் கடும்பே ரமைதி
கொண்டு திகழ்ந்தது கோவுயர் மாளிகை;
அஞ்சிய ஒண்டொடி ஆங்காங் கோடித்
துஞ்சுவள் அவளெனத் துருவினள் யாண்டும்

காண்கில ளாகிக் கலங்கிய அம்மகள்
தூண்களி னிடையே துணுக்குற நோக்கினள் ;
மணமக ளாகும் மனத்தொடு வந்தோன்
பிணமக னாகிப் பிறிதுறக் கிடந்த
கொடுமை காணலுங் கோவெனக் கதறிச்
சுடுதழல் மிதித்தெனத் துவண்டு சுருண்டு
மயங்கி விழுந்தனள் மண்மிசை யாங்கே ;

## மயக்கந் தெளிந்து புலம்பல்

மயங்கிருள் தெளிய வைகறை வந்துற
வயங்கிணர்க் கொடிநிகர் மயங்கிய பூங்கொடி
சற்றே தெளிவுறச் சட்டென எழுந்து
'பற்று மாக்கள் பகைமுடித் தனர்கொல்?
எற்றால் இந்நிலை இம்மகன் உற்றனன்?
உற்றார் எவரும் உறாஅ விடத்துச்
செற்றார் இவனைச் செகுத்தனர் அந்தோ!
துணையாந் தோழியும் யாங்குத் தொலைந்தனள்?
அணையாப் பெரும்பழி அணையும் அந்தோ!
இசைக்கென வந்தவன் இறந்தனன் என்னும்
வசைக்கிலக் காக வாய்த்தஇந் நிலையே!

## செய்தித்தாள்களின் செய்கை

கொலைத்தொழில் ஒன்றே கலைத்தொழி லாகத்
தலைப்பிடுஞ் செய்தித் தாள்களும் உண்டே!
நாண்சிறி தின்றி நாட்டினில் உலவி
வீண்பழி சுமத்தும் வெள்ளை இதழ்களும்
நாடொறும் தெருவில் நடமிடல் உண்டே!
கூடுமிவ் விதழ்கள் 'கொலைகொலை' என்றே

பாடும் பாடும் பாரெலாம் பாடும்
வசைப்பணி புரியும் வாய்க்கிது விருந்தே!
இசைப்பணிக் கீதோர் இழுக்கே யன்றோ?

## கோமகனை நினைந்திரங்கல்

பரிவுக் குரியன் பாவம் இம்மகன்!
முறுகிக் கிளர்ந்து மூண்டெழு காமம்
பெருகிப் படர்ந்து பெட்புற் றென்னைத்
திருமணஞ் செய்வான் திரிந்தனன் பலநாள்;
பண்ணிசை ஆய்ந்து பயின்றிடக் கருதி
உண்ணிறை அவாவொடு நண்ணினன் ஈண்டு
மண்ணிரை யாக மாய்ந்தனன் அந்தோ!
எண்ணிய தொன்றும் ஏற்றிலன் பாவி!
வேட்டவன் ஒருநாள் விழைவினை என்பாற்
காட்டினன் குறிப்பால்; கடிந்துரை கூறுவேன்
'ஒருதலைக் காமம் உடையவர் தாமே
வருதுயர்க் கடலுள் மடிவது திண்ணம்'
என்ற அம்மொழி இன்று பலித்ததோ?
அன்றது மொழிந்தமைக் கின்று வருந்துவல்'
என்று பலப்பல இரங்கிப் புலம்பி,

## கிழாரிடம் முறையிடல்

உறுதுணை யாகிய பெருநிலக் கிழார்பால்
அறைகுவல் விரைந்தே என்றங் கணுகித்
தன்னையும் பண்ணையும் முன்னி வந்தவன்
பன்னிய செய்தியின் பான்மை முழுவதூஉம்,
மேனாள் தொட்டு மெல்லியல் அவன்மொழி
ஏலா தியாவும் எதிர்த்துரை புகன்றதூஉம்,

காதலின் பெயராற் கரையிலான் இவனால்
ஏதம் விளையினும் விளையுமென் றெண்ணிச்
சண்டிலி சூழ்துணை கொண்டு நின்றதூஉம்,
வண்டென அலைவோன் வாளிற் படுகொலை
யுண்டு மனையினில் ஒருபாற் கிடப்பதூஉம்,
உறுதுணை யாகிய ஒண்டொடி சண்டிலி
பெருமனை நீங்கிப் பெயர்ந்து போயதூஉம்
அரிவை யாவையுந் தெரிதர வுரைத்து
வருபழி யஞ்சி வாடி நின்றனள்;

## கிழாரும் உடன்புறப்படல்

பெருநிலக் கிழார்அப் பேதையைத் தேற்றி
'மருளுதல் தவிர்கஎன் மகளே! ஒன்றும்
வெருவுதல் வேண்டா, வேண்டுவ செய்வல்;
வருகுவென் யானும் வஞ்சி நின்னுடன்
எழு'கெனக் கூறி எழுந்தனர் ஆங்கே;

## காவலர் வருதல்

பண்ணும் இசையும் பயில்தரு மாளிகைக்
கண்ணொரு கொலைவினை நிகழ்ந்தென் றறிந்த
காவற் படையினர் கடுகி வந்தனர்;
ஏவல் மாக்கள் இருவரை வினவினர்;
மாளிகை முழுமையுஞ் சூழுறும் அறைகளும்
வாளிற் படுமகன் வடித்தசெங் குருதி
தோய்ந்து காய்ந்து தூணிடைக் கிடக்கும்
உடலும் பிறவும் உற்று நோக்கினர்;
காவற் றலைவர் கற்போர் தம்மை
'நீவிர் அறிந்தன நிகழ்த்துக' என்றனர்;

### மாணவன் கூற்று

'கொலைபடு கோமகன் கலையிசை வேட்டுப்
பலநாள் எம்முடன் பயின்றனன் அறிவோம் ;
ஈதொன் றன்றி வேறொன் றறியோம் ;
தீது நிகழ்வில் ஏதும் தெரியோம் ;
எமக்கிசை யூட்டுங் குலக்கொடி யாகிய
மடக்கொடி பூங்கொடி மற்றவள் தோழி
சண்டிலி என்பாள் தன்னுடன் கூடி
விண்டொட நிவந்த வியன்பெரு மாளிகை
வதிவதும் அறிவோம் வாய்மையிஃ தாகும் ;
மதிலரண் சூழும் மாமனை யிதனுள்
எதிரிகள் எவரும் எளிதிற் புகார்'என
மாணவர் தம்முளோர் மாணவன் இயம்பக்

### காவலர் குறுக்கு வினா

கரவிலா துரைத்ததைக் கேட்டஅக் காவலர்,
'அரண்படு மாளிகை ஆதலின் ஈண்டு
முரணியோர் உட்புக முடியா தென்றனை,
அவ்வா றாயின் அவனொடு முரணியோர்
எவ்வெவர் என்றெமக் கியம்புதி' என்றனர் ;

### மாணவன் மறுமொழி

முற்படு மாணவன் 'முரணியோர் உண்டெனல்
கற்பனை யாகும் ; காப்பமைந் துளதால்
மற்றவர் புகுந்து செற்றனர் என்று
சொற்றிட இடமிலை ; சொல்லுமென் கருத்தைச்
சுற்றி வளைத்து மற்றொரு பொருளைப்
படைத்திட வேண்டா பணிவுடன் வேண்டுவல்'

### காவலர் குறுக்கீடு

எனவாங்கு
முடிக்குமுன் காவல் முதல்வர் மறித்துத்
'துடித்த லின்றிச் சொல்லுக! உண்மை
கிடைக்குமென் றெண்ணிக் கிளறுவ தெம்கடன்;
மற்றவர் தம்மால் மாண்டிலன் என்றால்
தற்கொலை என்று சாற்ற நினைந்தே
இவ்வணம் புகன்றீர் எனுங்கருத் துடையேன்
ஒவ்வுவீ ராயின் உரைமின்' என்றனர்;

### மாணவன் ஏக்கவுரை

'எவ்வா றவ்வணம் இயம்புவல் ஐய!
செவ்விதிற் றெரியும் செயப்படு கொலையைத்
தற்கொலை என்று சாற்றுதல் தகுமோ?
எற்கெனை யிங்ஙனம் இடையிடை மறித்துப்
பற்பல வினவிப் பாடுறச் செய்கிறீர்?
எனக்கும் கொலைக்கும் எவ்வகைத் தொடர்பும்
மனத்தும் நினைக்க வழியிலை; என்மொழி
அனைத்தும் வாய்மை அறிகதில் ஐய!'
எனப்புகல் மாணவன் ஏங்கி நின்றனன்;

### காவலர் கனிவுரை

'உம்மை ஐயுறும் உள்ளம் எமக்கிலை
மெய்ம்மை தெரிவான் விடுத்தனென் இவ்வினா;
கடுமொழி யன்றிது கனிமொழி யாகும்
விடுகநும் அச்சம் விளம்புக மெய்யே;
அன்பொடு வினவும் ஐய வினைக்கட்

கின்புடன் விடைகள் இறுப்பது நும்கடன்;
துன்புகள் நும்மைத் தொடரா; உறுதி;
வன்பகை இறந்தோற்கு வாய்த்ததும் இல்லை;
பின்பவன் தற்கொலை புரிந்ததும் இல்லை;
செயப்படு கொலையெனச் செப்பலும் செய்தீர்;
நயத்தகும் மன்றினுள் நல்லவள் பூங்கொடி
சண்டிலி தன்துணை கொண்டு வதிவதும்
விண்டனிர்; இவற்றால் விளங்குவ தென்னை?
ஒண்டொடி மகளிர் ஒருவர்மேல் ஐயம்
உற்றனிர் கொல்லோ? மற்றிவர் இருவரும்
குற்றம் புரிதல் கூடுமென் றெண்ணம்
பெற்றனிர் கொல்லோ? தெற்றென மொழிக!'

## மாணவன் துடிப்பு

என்றுரை கேட்டோன் 'ஈதென் கொடுமை?
நன்றுரை புகன்றீர்! நானதற் கொருப்படேன்
கொன்றெனைச் சிதைப்பினும் கூறேன் அம்மொழி;
பயிற்றிய தாயின் பால்முகம் நோக்கின்
அயிர்த்தலும் ஒல்லுமோ? ஐயகோ அடாஅது!
பாழ்மகன் இறந்தும் பழியினைத் தந்தனன்;
ஆழ்கடல் உலகில் அவள்நிகர் பெண்மகள்
சூழினும் காண்கிலம்; தூயவள் தனக்குத்
தாழ்வுகள் வருதல் தகுமோ ஐய!
ஊழ்வினை என்றொன் றுளதெனச் செப்புவர்
பாழ்வினை யிந்தப் பழிமொழி வடிவிற்
சூழ்ந்தது கொல்லோ? சூழ்ந்தது கொல்லோ?'
என்றவன் அரற்றி யிரங்கித் துடிக்க;

## காவலர் நயவுரை

'யாது நிகழ்ந்த திங்ஙனம் அரற்றினை?
தீதுதீர் செயலி தேன்மொழி பூங்கொடி
யாதும் பழியுறாள்; வேதனை விட்டொழி;
ஆழ்கடல் உலகில் அவள்நிகர் பெண்மகள்
சூழினும் காண்கிலம்; தாயவள் தனக்குப்
பாழ்மகன் இறந்தும் பழியினைத் தந்தனன்
என்றனை யன்றோ? இறந்தும் தந்தனன்
என்றதன் உட்பொருள் இயம்புதி கொல்லோ?
இறந்தோன் உயிருடன் இருந்த காலை
அறந்தேர் தெரிவைக் காற்றிய பழியினைத்
திறந்துளம் உரை'எனத் தெரித்தனர் காவலர்;

## இருந்தும் பழி இறந்தும் பழி

'இசைதெரி வேட்கையன், இவனவள் பாற்கொளும்
நசைபெரி துடையன், நாளுமந் நினைவால்
உருகி உருகி மருகுவன், அவளை
மருவுதல் ஒன்றே வாழ்வின் குறியன்,
ஒருவுதல் நேரின் உயிரும் வேண்டிலன்,
இரவலன் போல இடையிடை அவள்பாற்
குறுகுவன் தன்னுளக் குறிப்பினை விளம்புவன்
இல்லறம் அறவே வேண்டிலா இம்மகள்
புல்லும் இவனைப் பொருட்படுத் திலளே,
ஆயினும் உண்மை அறியார் சிலர்சிலர்
தாயினை அலருரை சாற்றுதல் அறிவேன்,
இருந்தும் பழிமொழி இயற்றினன் பாவி
இறந்தும் அம்மொழி ஏற்றினன் பாவி'
என்றுரை கூறி மாணவன் இருந்துழிக்

## பூங்கொடி கிழாருடன் வருதல்

கன்றிய நெஞ்சொடும் கலையுணர் கிழாரொடும்
வந்து நின்றனள் வழுவிலாப் பூங்கொடி ;
நொந்தவள் முகத்தினை நுண்ணிதின் நோக்கி
முந்துறக் காவல் முதல்வர் வினவினர் ;

## காவலர் வினவும் காரிகை விடையும்

'ஈண்டிவ் விளையோன் கோமகன் என்பான்
மாண்டமை பற்றி மங்கையுன் விளக்கம்
வேண்டுவல் பூங்கொடி விளம்புக' என்னலும்,
'நெருநல் மாலை பெருநிலக் கிழாரின்
பெருமனை புகுந்து பெரியவ ரவரொடு
நெடிதுரை யாடி நேரிசை பாடி
விடியுமுன் னிரவில் மீளும் பொழுதிற்
படிமிசை இவனுடல் படிந்தது கண்டு
துடிமன முடையேன் தோழியைக் கூஉய்
வயங்கிழை காணாது வழியொன் றறியாது
மயங்கி வீழ்ந்தனென் மற்றொன் றறியேன்'
என்பது கேட்டோர் 'இவற்கும் நினக்கும்
முற்பகை யுண்டோ? மொழிக' என்றனர் ;
'பொதுப்பணி பூண்டேற்குப் புன்மைப் பகைமை
எதற்கு? நிலமிசை எவரும் பகையிலேன்'
'கொலையுணும் இம்மகன் கொடியிடை நின்பாற்
பலமுறை வந்து பழகலும் உண்டோ?'
'ஆம்அவன் பலகால் அணுகுவன் என்பால்
தோமறும் இசைபயில் தொழிலோன் ஆதலின்';
'எழில்மிகும் நின்பால் இளையோன் காதல்
விழைந்ததும் உண்டோ? மொழிந்ததும் உண்டோ?'

### கிழார் குறுக்கீடு

இவ்வுரை கேட்டாங் கிருந்திடுங் கிழவர்,
'செவ்விய இவட்குச் சிறுமை யூட்டும்
அவ்வினை வெழுப்புதல் அடாஅது காவல!
ஒவ்வும் முறையால் உண்மை ஓர்க'
இவ்வணம் கடிந்துரை இயம்பின ராகப்

### பூங்கொடி கலங்கா மொழி

'பொதுநலம் ஒன்றே புரிபவர் எவர்க்கும்
இதுபோல் இடுக்கண் இடையிடை வரலும்
அதுதான் எளிதின் அகலலும் இயற்கை;
சினவேல் ஐய! சிறுமைகள் நமக்கேன்?
வினவுக பெரும, வினவுக பெரும!'

### வினா விடை தொடர்தல்

'எழில்மிகும் நின்பால் இளையோன் காதல்
விழைந்ததும் உண்டோ? மொழிந்ததும் உண்டோ?'
'ஆம்ஆம் என்னை அம்மகன் விழைந்ததும்
காம மொழிகள் கழறியதும் உண்மை'
என்றவள் செப்ப, 'இசைந்ததும் உண்டோ?
மன்றல் புரியநின் மனமொப் பினையோ?'
என்றவர் வினவ, 'இல்லற வாழ்வே
வேண்டிலே னாகி விழைந்திப் பொதுப்பணி
பூண்டுளேன் ஆதலின் புல்லும் அவன்மொழி
பொருளெனக் கொளாஅது போயினென்' என்றனள்
'ஆங்ஙன மாயின் அவன்றன் போக்கைத்
தீங்கெனக் கருதிச் செற்றம் அவன்பாற்
கொண்டதும் உண்டோ? கொடியன் இவனெனக்

கண்டு வெறுத்ததும் உண்டோ? உரை'என,
'அவனுரை மறுத்துளேன் அவனை வெறுத்திலேன்
சினமொழி தொடுத்துளேன் செற்றம் படைத்திலேன்
ஆணும் பெண்ணும் அவரவர் கருத்தைக்
காணும் பொழுது கழறுதல் இயல்பு
விழைவோர் மற்றவர் விருப்பினைக் கேட்டல்
பிழையோ? உரிமை, என்றது பொறுத்தேன்'

### பூங்கொடி சிறைப்படல்

என்றவள் செப்பினள்; ஏந்திழை மாற்றம்
நின்றவர் செவியில் ஒன்றிய தெனினும்
'கொன்றவர் யாரெனுங் குறிப்பறி காறும்
காவலில் வைப்பதெங் கடமையும் ஆகு'மென்
றொருபிழை யறியாப் பெருமகள் அவளைச்
சிறைசெய் தனரே முறையின் பெயரால்;
குறைசெய் தனரே! குறைசெய் தனரே! (243)

*

# 24. சிறைவிடு காதை

### பெருநிலக் கிழார் வருந்துதல்

சிறைப்பட் டாங்கட் செல்வோள் முகத்து
மறைப்பரு கவலை வெளிப்படல் கண்டு
மாளாத் துயரால் வதைந்திடுங் கிழவர்,
'வாளா இனியிரேன் வருவது வருக!
நாளை மீட்பேன் நங்காய் கவலேல்'
என்றுதம் விழியில் இங்குநீர் துடைத்து
நின்றவர் 'அந்தோ நேர்மைக் கிடமிலை,
நல்லவை செய்தார்க்கு நலிவிலை என்றும்
அல்லவை செய்தார்க்கே அழிவுகள் என்றும்
சொற்றன யாவும் வெற்றுரை யாகும்;
முற்றா இளங்கொடி முள்நுனி யளவும்
குற்றம் புரிந்திலள் கொடும்பழி வந்ததே;
எற்றோ உலகியல்!' என்றவர் ஏகினர்;

### ஊரவர் பழித்தல்

இசைஇசை எனச்சொலி ஏய்த்தனள் ஊரை!
வசையென நாணாள் மணவினை நாடாள்

துறவினள் போலத் தொண்டெனும் பெயரால்
இரவிடை நிகழ்த்தும் இழிசெயல் எத்தனை!
ஒருநாள் வெளிவரும் உண்மை என்றனர்;
எழில்நிறை உருவமும் இளமைப் பருவமும்
கழிமிக வுடையவள் காரிகை யிவள்தான்!
கலைதெரி பெயரால் கட்டிளங் காளையர்
பலர்பலர் அவ்விடைப் பயில்வோர் உளரால்
துறவும் தூய்மையும் தொலைவினில் ஓடி
மறையும் அன்றி வாழுமோ? என்றனர்;
பாயும் புலியும் பசும்புல் வாயும்
காயழல் தீயும் தூயநற் பஞ்சும்
நெருங்குமேல் விளைவதை நீணிலம் அறியும்;
உறுகேழ் வரகினில் ஒழுகும் நெய்யெனில்
கேட்பவர் மதியும் கேடுறின் நம்புவர்;
நாட்பட விளங்கும் நயவஞ்சம் என்றனர்;
பசுப்போல் இருந்தனள் பாவி இவள்தான்
வெறுக்குங் கொலைத்தொழில் விளைத்தனள் என்றனர்;
நல்லவர் கெட்டவர் நாமுண ராவகை
உள்ளனர், என்ன உலகமிஃ தென்றனர்;
பெண்ணுருக் கொண்டுள பேயிவள் என்றனர்;
பெண்குலங் கெடுக்கும் பெற்றியள் என்றனர்;
இவ்வணம் ஊரார் இடுபழி கூறினர்;

## நல்லோர் வருந்துதல்

இவட்கோ இப்பழி! இழைத்தவர் எவரோ!
அவட்கோ கொடுஞ்சிறை! அடஓ கொடுமை!
ஆவின் இயல்பும் அடங்கிய பண்பும்
மேவிய மெல்லியற் கொடிக்கோ கொடுமை!
சொல்லும் செயலும் நல்லன புரிவோள்

கொல்லுந் தொழிலைக் குறிப்பவளோ? கொடுமை !
செந்நெறிப் படரும் சேயிழை யிவட்கே
இந்நிலை வருமெனின் என்னே வுலகம் !
பெண்மைப் பண்பிற் கிலக்கணம் இவளே
உண்மைக் கழிவினை உலகந் தந்ததோ !
இரவும் பகலும் இனியநற் பணியே
புரியும் இவட்கோ புன்மொழி? கொடுமை !
வழுவாத் துறவும் வாய்மையுந் தூய்மையும்
தொழிலாக் கொண்டவள் துயருறல் நன்றோ!
கலைபுரி யிவளோ கொலைபுரி செயலினள் ?
இலைமதி அவர்க்கென இயம்புதல் சாலும் !
பலர்பலர் கூடிப் பண்பினர் இன்னன
சொலுமொழி வாயினர் சோர்ந்து நின்றனர் ;

## இரவின் ஆட்சி

கனவிலுந் தீமை கருதா நல்லவட்
கினைதுயர் இவ்வணம் ஏற்படல் காணா
எரிகதிர்ச் செல்வன் ஒளிமுகங் குன்றி
வருந்திக் குடதிசை மறைந்தன னாகச்
சுருள்படு பழுதை விரிபட அரவென
மருள்படச் செய்யும் மாலைவந் துற்றது ;
கதிர்மதி காணாக் காரிரு ளாட்சி
எதிர்மறைப் பொருளாய் எங்கும் படர்ந்தது ;
'வந்தநம் ஆட்சியை வாழ்த்துவம் வாரீர் !
இந்தநல் லாட்சியை எதிர்ப்பவர் ஈங்கிலை
எதிர்ப்போர்க் காணின் ஒழிப்போம் வாரீர் !
மதிப்போம் மதிப்போம் மயங்கிரு ளாட்சி !
இருளின் ஆட்சி என்றும் வாழ்'கென
ஆந்தையும் கூகையும் அலறின ! அலறின !

## சிறையினுட் பூங்கொடி

காரிரு ளாட்சியிற் கட்டுணும் மாந்தர்
கூரிய நெடுவேல் கொளுவிய காவலர்
இருநிலம் மருவிய இருதிணை எனப்படும்
பொருள்கள் யாவும் புவிமிசைச் சோர்ந்தன ;
நெஞ்சினை வருத்தும் நெடுந்துயர் ஒன்றும் ,
துஞ்சுத லொழிந்த துணைவிழி யிரண்டும்,
வஞ்சியின் மனத்து வளர்தமிழ் மூன்றும்,
சூழ்மதிற் சிறையினுட் சோரா திருந்தன ;
தாழ்குழல் ஆங்குத் தனியிருந் தனளே ;

## கதிரவன் தோற்றம்

கொடுங்கோ லாட்சி நெடும்பகல் நில்லாது ;
மடம்படு மாந்தர் மதியொளி பெறுங்கால்
படும்படும் அந்தக் கெடும்பரின் ஆட்சி ;
உயிர்வரின் உக்குறள் ஓடுதல் போலக்
கதிர்வர வறிந்து காரிருள் ஓடிப்
பதுங்கி மறைந்தது, பகலவன் வளர்ந்தான் ;

## அறமன்றத்தில் பூங்கொடி

மறமிகு காவலர் வயங்கிழை தன்னை
அறங்கூ றவையத்து நிறுத்தின ராகத்
திறம்பா வுரையினர் செவ்விய மனத்தினர்
கோல்போல் ஒருபாற் கோடா நடுவர்
பால்போல் முகத்துப் பாவையை நோக்கிக்
குற்றஞ் சாற்றினர் ; மற்றவள் மறுத்துச்
‘செற்றேன் அல்லேன் செந்தமிழ் ஆணை ;
உற்றஇக் கொலையில் ஒருதொடர் பில்லேன் ;

அற்றைப் பொழுதில் அவணிலேன் ஆதலின்
ஒன்றும் அறிகிலேன்; உண்மையிஃ' தென்றனள்;
சிறைசெய் காவலர் சிற்சில வினவினர்;
மறைசெய் தறியா மங்கையுஞ் செப்பினள்;

## கிழார் சான்று கூறல்

அவ்வுழை வந்துறும் அரும்பெறற் செல்வர்
கவ்விய துயரினர் கலங்கிய விழியினர்
பெய்வளை விடுதலை பேணிய நிலக்கிழார்
அவையம் நோக்கி 'ஆயிழை இவள்தான்
நவையறு செயலினள் நன்மனத் தாட்டி
கோதை இவட்கும் கோமகன் கொலைக்கும்
யாதும் தொடர்பிலை யானன் கறிவேன்;
கொலைநிகழ் பொழுதில் இலைஅவள் அவ்விடை
என்மனை யகத்துள் இசையமு தளித்துப்
பின்னிர விற்றான் பேதை மீண்டனள்'
என்னலும், நடுவர் எடுத்துரை கூறினர்;

## நடுவர் தீர்ப்பு

'மாமனை யகத்து மங்கை இசைத்ததை
ஆமெனக் கொள்ளுதும்; ஆங்கவள் மீண்டபின்
கோமகன் கொலையுணல் கூடும் அன்றோ?
மீளுமுன் நிகழ்ந்ததை மெய்ப்பிக்க ஒன்றிலை;
மூளும் பகையும் முனிவும் அவன்பாற்
கொண்டவள் இவளெனக் குறிப்புகள் ஈண்டுள;
சண்டிலி என்னுந் தையலுங் காண்கிலள்
ஆகலின் இருவரும் அப்பெருங் கோமகன்
சாதலைக் குறித்தனர் என்பதே சாலும்;
அன்றெனின்

இருவருள் ஒருவர் மற்றவர் செயலுக்
குறுதுணை என்பதே உறுதி யாகும்;
ஒறுத்தற் குரியர் இவளும் அவளும்;
சிறையகம் இம்மகள் செல்க; அம்மகள்
மறைபுலம் நாடிச் சிறைசெயல் வேண்டும்';

## பூங்கொடி மனத்துயர்

தீர்ப்புரை பெற்றவள் சிறையகம் புகுவோள்,
யார்க்கொரு தீங்கும் இழைத்தே னல்லேன்,
என்மொழி காக்க ஏற்றிடும் பணியில்
புன்மையும் இன்னலும் புகுமேற் பொறுப்பேன்,
இறப்பே எனினும் சிரிப்புடன் ஏற்பேன்,
மறப்பரும் வன்பழி வாய்த்ததே! கெட்டேன்!
எனப்பல நினைந்தே இரங்கினள் பூங்கொடி;

## துருவன் துணிவு

அறங்கூ றவையம் அளித்த தீர்ப்பும்,
அறந்தேர் அரிவை அருஞ்சிறை பெற்றதும்
செய்தி இதழ்கள் தெள்ளிதின் உரைக்க
நையும் உளத்தினள் சண்டிலி கண்டு
கொழுநற் குரைத்தனள்; கொலைசெய் துருவன்
'வழுவிலா அவட்கோ வந்ததிப் பழி'யெனக்
கழிபடர் உறுவோன், 'கரந்துறை வாழ்வு
நாமினி மேற்கொளல் நன்றிலை, அதன்றலை
தூமொழி யுறுபழி துடைப்பது நங்கடன்,
காவலர் நம்மைக் காணு முன்னர்
பேவுதும் அவையகம் விளம்புதும் வாய்மை'
என்பன கூறி இன்றுணை தன்னொடும்

என்படும் படுக! எனுந்துணி வுடனே
முற்பட அவையக முதல்வர்ச் சார்ந்து,

## துருவன் நிகழ்ந்தன கூறல்

விளிவுறுங் கோமகன் களியிருட் புக்கதூஉம்,
ஒளிவுடன் செலலால் ஐயம் உற்றதூஉம்,
அறியா வகையில் அவர்பின் தொடர்ந்ததூஉம்,
உரியவள் சண்டிலி உறைவிடம் அவன்புக்
கழல்மிகு காம மொழிபல புகன்றதூஉம்,
தழலெனக் கொதித்துத் தான்சினங் கொண்டதூஉம்,
கைதவன் அவனெனக் கருதித் தொலைத்ததூஉம்,
மெய்ம்மை தெரிந்து விரைந்தவண் பெயர்ந்ததூஉம்
கொலைநிகழ் பொழுதத்துக் குலக்கொடி இலாததூஉம்
கலைமகள் அவட்கொரு களங்கம் இலாததூஉம்,
அஞ்சா தனைத்தும் எஞ்சா துரைத்து
நெஞ்சால் மகிழ்வோன் நேரிழை பூங்கொடி
விடுதலை வேட்டனன்; வியன்பே ரவையத்து
நடுநிலை பிறழா நடுவர் மகிழ்ந்து,

## பூங்கொடி விடுதலை

'முடிநிலை அறியா முதிர்ந்தெழும் உணர்ச்சியிற்
படுகொலை புரியினும் பாவை யிவட்குக்
கெடுதலை விழையான் முடிவினைப் போற்றுவென்;
இடுபழி ஏற்றவள் விடுதலை அடைகுவள்'
என்னலுந் துணையொடும் இளையோன் களித்தனன்;
நென்னல் மூடிய நெடுஞ்சிறைக் கதவம்
இன்னே திறந்தது; மின்னே ரிடையாள்

பொன்னே அனையாள் பூங்கொடி மீண்டனள்;
நன்னர் வினையே நாடிப் புரிவோர்க்
கின்னல் வரினோர் இமைப்பினில் இரியும்
என்னும் உண்மை இசைத்தது போல
ஒலியிட் டாங்கண் ஒய்ந்ததக் கதவே.

*

# 25. கிழார்திறம் அறிந்த காதை

## நிலக்கிழார் பூங்கொடியை வேண்டல்

பழியும் சிறையும் நீங்கிய பாவையை
வழியெதிர் நின்று வரவுரை கூறிக்
கழிபே ருவகைக் களிப்பொடு நிலக்கிழார்
தம்முயர் மாமனைக் கம்மகள் தன்னையும்
உடன்கொண் டேகி 'என்றுமென் னகத்தில்
இடனுண் டாதலின் ஈண்டுநீ உறைக!'
என்னுங் கனிமொழிக் கியைந்தன ளாகி
மின்னும் பிறைநிகர் நன்னுதல் அரிவை,

## பூங்கொடி நன்றி மொழி

'ஐயநின் னன்புக்கு யாதுகைம் மாறு
செய்வதென் றறியேன், திகைப்புறு கின்றேன்;
முனம்நினை யறியேன் எனினும் உன்பால்
இனம்அறி யாவணம் எழுந்ததோ ரன்பு
தழைத்ததென் னுளத்தே; தந்தையின் உறவை
விளைத்ததித் தொடர்பு வியந்தஎன் றந்தை

இல்லாக் குறையை இல்லா தொழித்தனை ;
நில்லாப் பழியால் நெடுஞ்சிறை புக்குப்
பொல்லாத் துயராற் பொன்றுங் காலை
நடுக்குற்ற நின்மனம் நன்குயான் அறிகுவல் ;
இடுக்கண் களைய எடுத்தநன் முயற்சியும்
தெற்றென உணர்குவென்; சிறுமகள் எனக்குநீ
உற்றுழி உதவிய ஒருபெருங் கருணைக்கு
நாளும் நாளும் நன்றியறி வுடையேன்;
வாழும் பொழுதெலாம் வணங்குத லன்றி
ஏழை யாதுநான் இயம்புவல் ஐய !'

## கிழார் முகமன் வேண்டா எனல்

எனுமொழி கேட்ட கனிமொழிக் கிழவர்
'நனிமிக நல்லாய்! நானிலத் தின்றுதான்
பெற்றோர் தமக்குப் பெறுமகள் நன்றி
சொற்றது கேட்டேன் ; மற்றவர் போல
மதித்தனை கொல்லோ? உற்றவர் என்று
குறித்தனை யாயின் விடுத்திடு முகமன்'
எனுமொழி கூறி இனிதிருந் தனரால் ;

## அருண்மொழி அடிகளொடு வருதல்

குலக்கொடி கோமகன் கொலைகுறித் தாளெனச்
சிறைப்பட லாயினள் எனுங்கொடுஞ் செய்தி
நாளிதழ் காட்ட நடுநடுக் குற்று
வாளிற் போழ்ந்தென மனத்துய ரெய்திய
அன்னை யாகிய அருண்மொழி ஆங்கண்
'என்னிளங் கொடிக்கோ இப்பழி நேர்ந்தது !
வன்பழி சூட்டிய வன்கணர் எவரோ?
தாய்மொழி காக்கும் வாய்மை மாந்தர்

வீய்துயர் எய்தி வீண்பழிக் காட்படல்
விரிநீர் உலகத்து விதியோ' என்று
சொரிநீர் விழியர் துயருறும் மொழியர்
பெரியோ ராகிய பீடுயர் அடிகள்
தாந்துணை யாகத் தடமனை சூழ்தரு
வேங்கை நகரினை விரைந்தெய் தினளே ;

## விடுதலைப் பேறறிந்து மகிழ்தல்

வீங்கிய துன்பினர் ஆங்கண் வினவிப்
பூங்கொடி பழியிலள் பூட்டிய சிறையகம்
திறந்தது, விடுதலை பிறந்தது, பண்பாற்
சிறந்தவர் நிலக்கிழார் பெருந்துணை யாக
நன்னுதல் அவர்மனை நண்ணினள் எனச்சிலர்
பன்னுதல் கேட்டுப் பாவையும் அடிகளும்
புயலிற் சிக்கிய மரக்கலம் ஊர்வோர்
வியனலை உந்த விடுகரை சேர்ந்தார்
உள்ளம் போலத் துள்ளிய உவகை
வெள்ளம் பொங்க விம்மும் நெஞ்சினர்
பெருநிலக் கிழவர் உறுமனை குறுகி
மறுவறு பூங்கொடி மதிமுகங் கண்டனர் ;

## அருண்மொழி வாழ்த்து

கலங்கிய கண்ணினள் காலடி வீழ
இளங்கொடி உடலை இருகையால் எடுத்தனள் ;
உச்சி மோந்தனள் மெச்சினள் வாழ்த்தினள்
வைத்தகண் வாங்கிலள் 'வயிற்றினில் பால்தனை
வார்த்தனை மகளே வார்த்தனை' எனுமொழி
சேர்த்தனள் அருண்மொழி; செம்பொருள் அடிகள்

## அடிகளார் வாழ்த்து

'பழியெனுங் கருமுகில் பாவையாந் திங்களை
வழியினில் மறைத்தது, கழிபடர் இருள்எம்
உளத்தினிற் பரந்து வளைத்த தாயினும்
கணத்தினில் முகிலிருள் காற்றிற் பறந்தன;
வாழிய மகளே! வாழிய மகளே!
வளர்தமிழ்ப் பணிக்கு வருமிடர் பலவாம்,
தளர்மனங் கொள்ளேல் தாயே நம்முயிர்
இழப்பினும் இழப்போம் இனியநந் தாய்மொழி
வளர்ப்பதே நங்கடன் வாழிய மகளே!
உயிரும் உடலும் ஒழிவன வாயினும்
செயிரறு நம்பணி செந்தமிழ்க் காகின்
உயரிய புகழொடு ஒண்டமிழ் வாழும்,
வாழிய வாழிய வண்டமிழ்த் தொண்டே!'
எனப்பல கூறி இயன்மொழி வாழ்த்து
மனத்தொடு வாழ்த்தினர் மலையுறை யடிகள்;

## நிலக்கிழார்க்கு அறிமுகஞ் செய்தல்

அவ்வுழை நிலக்கிழார் அணுகின ராகச்
செவ்விய பூங்கொடி சென்னி தாழ்த்தி,
'ஈங்கிவள் என்னை ஈன்றவள் ஆவள்
பாங்குயர் அருண்மொழிப் பெயரினள் ஐய!
தாங்கிய துயரொடு தாயிவள் இருந்துழி
நீங்கிட அத்துயர் நின்றருள் புரிந்தவர்,
குறளகம் என்னும் அருளகங் கண்டவர்,
குறள்நெறி திறம்பாக் கொள்கையர் இவராம்,
கலைபல பரவ வழிபல கண்டவர்
மலையுறை யடிகள் எனும்பெயர் மருவும்

இவரே எளியளை இத்துறைப் படுத்தினர்,
கவலை தவிர்ந்திட நல்வழி காட்டினர்,
தாயின் மனமும் தந்தையின் நிலையும்
ஏயும் பெருமகன் எப்முயர் தலைவரென்'
றிருவர் தம்மையும் அறிமுகஞ் செய்தனள்;

## கிழாரை அறிமுகப் படுத்தல்

'வருக ! வருகெ'ன வரவுரை கூறி
இருகை கூப்பி இன்முகங் காட்டி
'அமர்க அமர்'கென அவ்வுழை அமர்த்தித்
தமரென மகிழத் தாமும் இருந்தனர் ;
இருந்திடும் கிழவரை இருவர்க்கும் விளக்கினள்;
'பெருந்தனம் உடையவர், பேணிய பண்பினர்,
விருந்தெதிர் கொள்ளும் விழைவினர், என்பால்
உழுவ லன்பும் உறவென எண்ணிப்
பழகும் பண்பும் கெழுமும் பெரியார்,
பொழுதெலாம் கலையிற் பொருந்தும் நெஞ்சினர்,
யாங்கணும் காண்கிலா ஓங்குயர் நூலகம்
ஈங்கொன் றமைத்திட யான்விழைந் தியம்ப,
மாபெரும் மாளிகை மனமுவந் தீந்தனர்,
சிறையகம் புகுந்துயான் துயருறுங் காலை
உறுதுணை யாகி உதவிய நட்பினர்,
விடுதலை பெற்று வெளிப்படூஉம் என்னை
உடனழைத் திம்மனை உறைக என்றனர்,
முனம்மகள் இழந்த முதியவ ராதலின்
எனைமக ளென்றே எண்ணிடும் அருளினர்,
பெருநிலக் கிழாரெனும் பெயரினர் இவ'ரென
அனைத்தும் எடுத்துரைத் தாயிழை நின்றுழித்

### நிலக்கிழார் வியப்பும் திகைப்பும்

திகைத்தவ ணிருக்கும் தெரிவை அருண்மொழி
முகத்தினை முகத்தினை முதியவர் நோக்கி
வியப்பும் திகைப்பும் விளங்கா ஐயமும்
மனத்தினுள் தோன்ற மயங்கி யிருந்தனர்;

### அடிகளார் வினவுதல்

இமையா நாட்டத் திருந்திடும் பெரியரை
அமைந்தநன் மனத்தர் அடிகளும் நோக்கி
'அருண்மொழி யாகிய அரிவையின் முகத்தை
மருளுறப் பார்த்து மயங்கிய தென்னைகொல்?
அகத்துப் பொருதெழும் அளப்பருங் குழப்பம்
முகத்தினில் கண்டேன் முற்றவும் உணர
எமக்கவை கூற இயலுமேல் இயம்புக!
மனக்குறை மாறும் மற்றவர்க் குரைப்பின்
இனத்தவ ரென்றே எம்மையும் எண்ணுக!'
என்றுளங் கனிய இசைத்தன ராகக்

### கலக்கத்திற்குக் காரணம்

கன்றிய மனத்துக் கலையறி கிழவர்
'நன்றறி வுடைய நாவல ரேறே!
இன்றுநீர் இருவரும் எழுந்திவண் வரலால்
தொன்று பழகிய தொடர்பும் உறவும்
உடையேன் போல உள்ளங் களித்தேன்;
காரண மில்லாக் கலக்கமும் முளைத்தது;
யாரென அறியா அருண்மொழி யின்முகம்
பாரினில் நிகரிலை எனும்படி வாழ்ந்து
கழிந்தஎன் நாளிற் படர்ந்த நினைவெலாம்
சுழிந்து சுழிந்து தோன்றிடச் செய்தது;

நங்கையின் குளிர்முகம் நாளெலாம் பழகிய
துங்க முகம்போல் தோன்றுதல் கண்டேன்
பூங்கொடி முகமோ பூமியில் நாளும்
ஏங்கிடச் செய்தஎன் இளமகள் முகம்போல்
தேங்கெழில் பொங்கித் திகழ்வதுங் கண்டேன்;
அடங்காக் களிப்பும் அறியாத் திகைப்பும்
விளங்காத் துயரும் உளந்தனிற் கொண்டேன்;'

## நிழற்படங்கண்டு நிற்றல்

என்றிவை கூறி 'என்னுடன் வருக'
என்றவர் தனியறை ஒன்றனைத் திறந்து,
கிழாரும் அவர்மனைக் கிழத்தியும் இணைந்த
வண்ணம் பொலியும் கண்கவர் எழிற்படம்
முன்சுவர் தன்னிற் பொலிவது காட்டக்
கண்டஅம் மூவரும் கண்விழித் தயிர்த்தனர்
விண்டிட அறியார் வியர்வியர்த் திருந்தனர்;
மலைத்து நின்றிடும் மலையுறை யடிகள்,
கலைத்திறங் காட்டும் காரிகை படமும்,
நிலைத்துச் சிலையாய் நிற்பவள் முகமும்,
வேற்றுமை யின்றித் தோற்றுதல் கண்டு
கோற்றொடி முகத்தின் குறிப்பை நோக்கினர்;
அசையாப் பூங்கொடி, அன்னையின் முகமும்
நசைசேர் படத்தில் நங்கையின் முகமும்
பெருநிலக் கிழாரின் பேசா முகமும்
திரும்பத் திரும்பத் திகைத்து நோக்கினள்;

## அருண்மொழி விஞுதல்

அருண்மொழி விழியும் அருகினில் நிற்கும்
பெருநிலம் உரியவர் இருவிழி யும்புனல்

பெருகி வழிந்தது; பெரியவரை நோக்கிப்
'பெருமனம் உடையீர்! கிழத்தியின் பெயரை
அருளுதி ராயின் ஆறுதல் பெறுவேன்'
இவ்வணம் அருண்மொழி இரந்துரை கூறச்

## நிலக்கிழார் மறுமொழி

'செவ்விதின் அனைத்துஞ் செப்புவல் கேண்மோ!
கொவ்வை யிதழினள், கூரிய விழியினள்,
கவ்வும் வகையாற் கனியிசைத் தொழிலாள்,
தென்னகம் பிறந்தவள், என்னகம் நிறைந்தவள்,
கன்னலின் அனையாள், காதல் மனையாள்
என்னிளம் பருவத்து முன்னம் ஒருநாள்
வாணிக முறையாற் காழகம் செல்வுழித்
தோணியில் அவளுருத் துணைவிழி விருந்தாக்
காணலும் என்னுளங் கவர்ந்தனள்; மறுநாள்
காழக நகரின் கலைதெரி அரங்கில்
ஏழிசை வல்லவள் இசையினைக் கேட்டேன்
காதலும் கலையும் கனிந்திடத் தனியிடம்
குறித்துப் பலநாட் கூடிப் பழகிஅவ்
வொருத்தியை மணந்தென் உயிரின் மேலா
மதித்து வாழ்ந்தேன்; மணந்தவள் காதற்
பரிசில் எனஒரு பச்சிளங் குழவி
தருகையில் என்னைத் தணியாத் துயரில்
உருகிடச் செய்துயிர் ஒடுங்கினள்; யானும்
மறுமணம் புரியா மனத்தினேன் ஈன்ற
சிறுமியின் முகத்துச் சிரிப்பினைக் கண்டு
துயரம் மறந்து துணைவிழி யிமைபோல்
அயர்வொன் றின்றி அவளைப் புரந்தேன்;

கட்டிளம் பருவங் கண்டனள் அவளும்
விட்டுப் பிரிந்தனள்; வேதனைக் கடலுள்
மூழ்கிக் கிடந்தேன்; முதிராப் பூங்கொடி
ஆழ்துயர் துடைத்தனள், அவளென் மகளென
உறுதி எடுத்தேன் உறுதுயர் விடுத்தேன்,
இறுதி விரைவினில் எய்துவ துறுதி,
பெறுநிதி அனைத்துமிப் பேதையின் பணிக்கே
தருவதென் றெண்ணி அறுதியும் செய்தேன்;
காதல் மனையின் பெயர்சொல மறந்தேன்
வலங் குழலி' என்றவர் செப்புமுன்

## அருண்மொழி அரற்றுதல்

'ஆ'வென் றலறிய அருண்மொழி மீண்டும்
கூவி யழுதனள்; குறளகத் தலைவர்
அறவுரை கூறி ஆறுதல் தந்தனர்;
செறிதொடி அருண்மொழி செங்கை கூப்பிப்
'பொய்யிலை பொய்யிலை என்மகள் பூங்கொடி
ஐயநின் மகளே! ஐயநின் மகளே!
மெய்யிது மெய்யிது மேலோய்! நன்மகள்
சேரிடஞ் சேர்ந்தனள், சேல்விழி நின்மகள்'
என்பன கூறி இருவிழி பொழிந்தனள்;

## அடிகள் வினுதல்

முன்புள அடிகள் மென்மொழி விளித்துத்
'துன்புளங் கொண்டோ தூமொழி புலம்பினை?
அன்புளம் துயரினை ஆற்றுதல் அரிதே!'
என்பது கேட்ட இடருறும் அருண்மொழி

## முன்வரலாறு கூறுதல்

‘புலம்பினே னல்லேன் நிகழ்ந்ததை எண்ணிக்
கலங்கினேன் பெரும! நலங்கிளர் பூங்கொடி
நிலங்கிழார் மகண்முறை நேரிதின் உரியள்,
மேலும் விளம்புவென் மேலவர் கிழத்தி
கோலம் மிகுந்தவள் ஏலங் குழலி
ஒருவயிறு தந்த உடன்பிறப் பாட்டி,
சிறுபரு வத்தே செந்தமி ழிசையில்
பெருகிய புலமையள் பேணும் புகழினள்
ஈழம் முதலா இசையமு தளிப்போள்
ஆழி கடந்து காழகம் சென்றனள் ;
சென்றவள் இவரை ஒன்றிய மனத்து
மன்றல் புரிந்தனள், மணிநகர் மறந்தனள் ;
காதலும் கலப்பும் கலந்தஇம் மணத்தைத்
தீதெனக் கடிகுவம் எனமனங் கொண்ட
தவ்வை யவளென் தாய்க்கொரு முடங்கல்
கவ்விய துயரொடு வரைந்தது தவிர
யாண்டுளாள் என்பது யாதொன் றறியேம் ;
ஆண்டுபல வாயினும் அவள்நிலை சிறிதும்
அறிய கில்லேம், அரிவைநம் பூங்கொடி
தெரியச் செய்தனள் பெரியவர் மகளிவள்’
எனுமிவை யனைத்தும் இயம்பி நின்றனள் ;

## உறவறிந்து மகிழ்தல்

இனைதுயர் நீங்கிய இருநிலக் கிழவர்
‘மகளே மகளே வாவென் மகளே!
ஏலங் குழலிக் கிளையாள் மகளே!
ஞாலம் பிழைக்க உழைக்கும் நங்காய்!

உரிமை மகளே! உள்ளந் தழைக்க
வருமென் மகளே வாவென் மகளே!'
இருகை நீட்டி இவ்வணம் மொழிந்தனர்;

## பூங்கொடி தொழுது மொழிதல்

பொழிகண் ணீரினள் பூங்கொடி மகிழ்ந்து
தொழுதடி வீழ்ந்து 'விழுமிய அன்பால்
எனைமக ளெனநீர் ஏற்றனிர் ஐய!
முனம்நம துறவினைக் கனவிலும் அறியோம்;
இயல்பினில் அம்முறை யிருந்திடப் பெற்றோம்;
மயல்தரும் துன்பம் மடிந்தது நம்மிடை;
தந்தை யின்றித் தவிக்குமென் குறையும்
நுந்தம் மகளிலா வெந்துயர்க் கொடுமையும்
இன்றோ டொழிந்தன என்னுயிர்த் தந்தாய்'

## நிலக்கிழார் வாழ்த்துதல்

என்றாள் கைம்மலர் இறுகப் பற்றித்
தம்மிரு விழியொடு சார்த்திச் சார்த்தி
'இம்மையின் பயனை இன்றே நுகர்ந்தேன்
நம்மையொன் றாக்கிய நற்றமி ழிசையை
வாழ்க வாழ்கென வாழ்த்துவம் வாரீர்!
வாழ்க மகளே! வாழிய தமிழ்!' என
வாழ்த்திய நிலக்கிழார் வண்டமிழ்த் தொண்டராம்
மலையுறை யடிகள் மலர்முகம் நோக்கித்
தலைதனைத் தாழ்த்தித் தகவுடன் வணங்கினர்;

## அடிகளார் வாயுறை வாழ்த்து

'பெரியீர் வாழ்க! பேதைநும் மகளென
உரியீர் வாழ்க! உறவும் ஓங்குக

புதியநும் உறவு பொதுப்பணி புரியும்
சிறியவட் குறுதுணை செய்தல் வேண்டும்;
இளங்கொடி! நினக்கொன் றியம்புதல் கடனும்,
வளங்கொளும் இவரொடு வாய்த்தஇத் தொடர்பால்
மகிழ்ச்சியில் மைந்துறும் மங்கைநின் பணியில்
இகழ்ச்சி கொள்ளா திலங்குதல் வேண்டும்;
நம்மனோர் தந்தையும் தாயும் தமிழே,
அம்மொழிப் பணியே ஆற்றுதல் வேண்டும்
செம்மனக் கொடியே சீருடன் வாழிய'
எனவாங்கு
வாயுறை வாழ்த்து வழங்கினர் அடிகள்;

### இருவரும் உறுதி கூறுதல்

தந்தையும் மகளும் தாழ்ந்து பணிந்து
'முந்தை முறையில் முரண்பா டில்லை,
மொழிப்பணி புரிய முட்டொன் றில்லை
விழிப்பொடு பணியில் நடப்பது திண்ணம்,
உளத்தெழும் உறுதி இசைத்தனம்' என்றனர்;

### அனைவரும் மணிநகர் மீளுதல்

அடிகளும் அருண்மொழி அன்னையும் மகிழ்ந்து
கொடியிடை மகளை யிருவிழி குளிர
நோக்கி வாழ்த்துரை நுவன்றனர்; அன்பு
தேக்கிய நிலக்கிழார் சின்னாள் உறைந்திட
வேண்டின ராக வியநகர்த் தங்கிக்
காண்பன கண்டு களிப்புடன் நால்வரும்
சேண்படு மணிநகர் சேர்தல் வேண்டிப்
பகலிற் போந்தனர் பயணங் குறித்தே. (284)

# 26. யாழ்நூல் பெற்ற காதை

## வைகறைப் பொழுது

புலர்பொழு தத்து மலர்முகம் தோய்ந்து
வருமிள மென்கால் வரவுரை கூறக்
குறுமுகை தாங்கும் கொடியினம் பலவுடன்
சிறுநகை காட்டிச் செடியசைந் தாடத்
தளிர்பசும் புற்றலை தண்சிதர் உறைப்ப
நளிமலர் தோறும் நடம்புரி சுரும்பினம்
பலபல தொக்குப் பண்ணொலி மிழற்றப்
பலர்தொழ வரூஉம் பரிதியஞ் செல்வன்
விரிகதிர் நீட்டி விண்வெளி விளக்கச்

## கோட்டை நகரில் தங்குதல்

செறிதொடி அருண்மொழி சுரிகுழற் பூங்கொடி
தொடர்ந்துடன் பின்வரத் தொழுதகும் அடிகளும்
படர்ந்தெழும் அன்பால் பழுநிய கிழாஅரும்
கோட்டை நகரினைக் கூடின ராகிக்
கோட்டமில் மனத்தர் கோனூர் வள்ளல்
வீட்டினில் விருந்தாய் வேட்டுடன் புக்கனர்;

### கோனூர் வள்ளல் வரவேற்றல்

புக்கவர் தம்மைப் பொலிமுகங் காட்டித்
தக்க இன்னுரை தந்துளம் மலர்ந்து
மிக்க மகிழ்வால் மேம்படு வள்ளல்
வருக வருகென வரவுரை கூறி
இருகை கூப்பி இருக்கை யளித்தனர்;

### கலந்துரை யாடல்

பெருநிலக் கிழவரின் பெட்புறும் நண்பர்
இருநிதிக் கோமான் ஈகை மனத்தினர்
புலவர்க் குதவும் புரவலர், கரவிலர்
குலனருள் சிறந்த கோனூர் வள்ளல்
நாட்படு நண்பரை நலமெலாம் வினவி,
மீப்படும் அடிகள் வியனுல குய்ய
எற்றுள பணியும், இளங்கொடி யாகிய
பூங்கொடி மங்கை பூண்டுள பணியும்
தெள்ளிதின் நிலக்கிழார் தெரிப்பக் கேட்டுக்
கள்ளவிழ் கோதையின் உள்ளத் துறுதியை
நயந்தும் வியந்தும் நன்கனம் புகழ்ந்தும்
பயன்மிகு தொண்டினைப் பலபட வாழ்த்தி
வருவிருந் தோம்பி வளமனை யிருந்துழி,

### மயில்வாகனர் வருகை

ஒருமனப் பாடும் ஓம்பிய நெறியும்
விரிமொழிப் புலமும் ஒருங்குடன் பெற்றார்,
உரனெனுந் தோட்டியால் ஓரைந் தடக்கி
இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்,
குணமெனுங் குன்றின் கொடுமுடி நின்று

செயற்கருஞ் செயல்பல செய்திடும் பெரியார்,
கற்றவர் குழுமும் கடல்சூழ் ஈழம்
பெற்றவர், மொழிபல கற்றவர், நற்றவர்,
எழில்மயில் வாகனர் எனும்பெயர் பெற்றவர்
பொழிலிடைத் திகழும் வளமனை உற்றனர்;

## அறிமுகஞ் செய்தல்

வளமனை வருமயில் வாகனர்க் காணலும்
உளமுறு மகிழ்வால் உடனெழுந் தோடி
நல்வர வேற்ற நலங்கிளர் வள்ளல்
அவணிருந் தோர்தமை அறிமுகஞ் செய்தனர்;
அவர்தமக் கிவரை அறிமுகஞ் செய்தனர்;
தாயும் அடிகளும் தையல்பூங் கொடியும்
தோயும் மகிழ்வால் தொழுதனர் ஆங்கண்;

## மயில்வாகனர் வாழ்த்துரை

'பூங்கொடி ஏற்றுள பொதுப்பணி நாட்டில்
ஓங்குயர் நலந்தரும் உயர்வுறும் நம்மொழி'
எனமயில் வாகனர் ஏற்றம் உரைத்து
மனமுறும் உணர்வால் வாழ்த்துரை கூறி,
'இளங்கொடி யாகிய நலங்கிளர் பூங்கொடீ!
விளங்குநின் பணிக்கு வியன்துணை யாக
யாழ்நூல் என்னும் இந்நூல் பெறுக!

## யாழ்நூலின் சிறப்பு

ஏழிரண் டாண்டுகள் இடர்பல துய்த்தும்
ஏழிசை யாழின் இயற்றிறம் யாவும்
நுண்ணிதின் ஆய்ந்து நுவல்வதிப் பெருநூல்;
நண்ணுமிம் முயற்சியில் நான்படு துயரம்

எண்ணினும் உடலுளம் எல்லாம் நடுக்குறூஉம்;
ஆயிரம் ஆண்டுகள் அறியா வகையில்
வீயுறும் நிலையில் வீழ்ந்து கிடந்த
நற்றமிழ் யாழும் சொற்றமிழ் இசையும்
தெற்றென விளக்குந் திருவிளக் கிந்நூல்;
செந்தமிழ்க் கிஃதோர் சீர்சால் பொற்பணி
இந்தநன் னினைவால் இடரெலாம் மறந்தேன்;

## கோனூர் வள்ளலின் பேருதவி

முற்படும் இப்பணி முற்றுறு முன்னர்
எற்கொரு கொடுநோய் ஈண்டுவந் துற்றது
நடத்தற் கியலா நலிவினுள் வீழ்ந்து
படுத்துழன் றேனைப் பரிவுடன் அணுகித்
தொடுத்திடும் இந்நூல் முடித்திட வேண்டிக்
குலவிய நற்புகழ்க் கோனூர் வள்ளல்
மலைநிகர் செல்வர் மனவளச் செம்மல்
இடனறிந் தாங்கண் உடனிருந் தருளிக்
கடனுணர்ந் தாற்றிய கைம்மா றறியாப்
பெரும்பே ருதவியின் பெற்றியை விளக்கக்
கரும்பின் மொழியாய்! கண்டிலேன் ஒருசொல்,"

## பூங்கொடி யாழ்நூல் பெற்று மகிழ்தல்

எனமொழிந் தவட்கொரு யாழ்நூல் ஈந்தனர்;
மனமிக மகிழ்ந்து மலர்க்கை ஏந்தித்
தொழுது வாங்கினள் துடியிடைப் பூங்கொடி;
'முழுதுணர் பெரும! முத்தமிழ்த் தலைவ!
பழுதறும் இந்நூல் படைத்தநும் ஆற்றல்
தொழுதக வல்லது சொலுமுறை தெரியேன்;
தமிழிசைக் கிந்நூல் தற்காப் பாகும்;

இமிழ்கடல் உலகில் இசைக்கோர் அணிகலன்;
அமிழ்தம் பெற்றே னாகினென் வாழிய!

### வள்ளலைப் புகழ்ந்துரைத்தல்

கொடையாற் சிறந்த கோனூர் வள்ளல்
நடையாற் சிறந்த நம்மயில் வாகனர்க்
குற்றுழி உதவிய உயர்பெருந் தகைமையாற்
கற்றவர் உலகம் கடப்பா டுடைத்து;
நற்றவ முடையேன் யானும்' என்றனள்;

### புகழ்ந்துரைக்கு நாணுதல்

இவ்வுரை செவிமடுத் திருந்திடும் வள்ளல்
'செவ்விய மனத்தீர்! சிறியஎன் பணியால்
எற்புகழ்ந் தேத்தல் இருவீர் தமக்கும்
பொற்புடைத் தன்று; புகழுரை தவிர்க!
செந்தமி ழன்னையின் சீர்சால் தவமகற்
கிந்தநற் கடன்செய இயைந்ததென் பேறும்;
யார்க்கது வாய்க்கும்? எற்கது வாய்த்தது!
பார்க்குள் என்போற் பயன்பெற் றவரார்?
பெறலரும் பேறு பெற்றேன் போலப்
பெருமகிழ் வுறுமெனைப் பேணிநீர் புகழ்ந்தீர்!'

### இருவர்க்கும் கடன்

எனஇவை இசைக்க, இளமென் பூங்கொடி
'நுங்கடன் அஃதெனின் எங்கடன் இஃதாம்'
எனுமிம் மாற்றம் இறுத்தன ளாக
அனைவரும் களிப்பால் ஆர்த்து மகிழ்ந்தனர்;

## யாழ்நூல் விளக்க வேண்டுதல்

பனிமலர்க் கூந்தல் பைந்தொடி அரிவை
முனிவர் தம்பால் மொழிந்திவை வேண்டினள்
'வாழ்நாள் அனைத்தும் வளரறங் காப்போய்!
யாழ்நூல் முழுதும் நவையற உணரும்
ஆற்றல் உடையேன் அல்லேன் ஆதலின்
போற்றி அதன்றிறம் புகலுதி பெரும!'
என்பன கூறி இருந்தனள் ஆங்கண்;

## யாழ்நூல் விளக்குதல்

அன்புளங் கொண்டார் அவள்மொழிக் கிசைந்து
'மன்பதைக் குணர்த்துதல் என்பணி யாகும்
மறைந்தஇக் கருவியின் மாண்புகள் யாவும்
திறந்தெரிந் துணர்வையேல் தெரிவைநின் பணிக்கே
அரண்செயும் ஆதலின் அறைகுவென்' எனமொழிந்

## யாழின் வகை யுணர்த்தல்

தாயிரம் நரம்பான் அமைந்தநற் பேரியாழ்
தோயுறும் அமுதிசை பாய்வுறும் சீறியாழ்
மீன்போல் வடிவம் மேவிய மகரயாழ்
தேன்போல் நரம்பிசை தெரிக்கும் சகோடயாழ்
முளரியாழ் வில்யாழ் முதலன விளக்கிப்
பழகிய வீணையின் பான்மையும் உரைத்துப்

## யாழுறுப் புணர்த்தல்

பண்ணுறும் யாழின் பல்வகை உறுப்பும்
முன்னைய அமைப்பும் முற்றுற உணர்த்தி
இலக்கியச் சான்றுகள் எடுத்தெடுத் திசைத்துக்

குலக்கொடி மாதவி கோவலன் அருகில்
கடற்கரை யமர்ந்து கானல் வரியாம்
மிடற்றிசை கலந்து மெல்விரல் வருடிய
அவ்வியாழ்க் கருவியின் அமைப்பும் இயம்பிக்
கவ்விசை நரம்புக் கருவி முதலாச்
செவ்விய நால்வகைக் கருவியும் செப்பிச்

## இசைநூல் இசைத்தல்

சிற்றிசை பேரிசை செயிற்றியம் குணநூல்
முற்றிய சயந்தம் முறுவல் எனப்பல
சங்கத் திசைநூல் தனித்தனி சுட்டி,
இங்கச் சுவடிகள் இழந்தவும் கூறி,

## பண்முறை விளக்கல்

நண்ணும் இசைநூல் நலமெலாம் உணரப்
பண்ணும் பண்ணியல் திறமும் பகர்ந்து
கண்புலர் காலை கடும்பகல் மாலை
வெண்மதி இரவாம் வேளையில் இசைக்கும்
பண்ணிவை, பொதுவிற் பாடும் பண்ணிவை,
என்றாங்கு,
எஞ்சிய யாவும் இனிதினில் நவின்று,

## இலக்கியத்தில் இசையுணர்த்தல்

நெஞ்சினை யள்ளும் செஞ்சொற் சிலம்பில்
வேனிற் காதையும் வேட்டுவ வரியும்
ஆனினங் காக்கும் ஆய்ச்சியர் குரவையும்
பத்துப் பாட்டும் பரிபாட் டேடும்
வைத்துக் கிடக்கும் பண்வகை வகுத்து
நாவின் அரசர் நலந்திகழ் பிள்ளை

நாவலூர் நம்பியெனும் நற்றமிழ் வல்ல
மூவர் அருளிய தேவா ரத்தொடு
தேரும் செந்தமிழ்த் தேறல் மாந்திய
மாறன் திருவாய் மலர்ந்தருள் மொழியும்
அருண கிரியார் அருள்திருப் புகழும்
மருவிய பண்களில் வகையெலாம் தெரித்து,
வாழிய பாவாய் வாழிய தமிழால்!
வாழிய உலகம் வாழிய தமிழிசை!
எனவாங்கு
வாழ்த்தினர் எழில்மயில் வாகனர் அவளை ;

## பூங்கொடி நன்றி புகலுதல்

'வாழ்த்துக பெரும! வாழ்த்துக பெரும!
காழ்ப்பும் பகையும் கடிதினில் விலகிப்
பார்த்தலம் யாண்டும் பைந்தமிழ் பரவும்
யாழ்நூல் என்னுமிவ் வோர்நூல் அளித்தனை
வாழ்நாள் அனைத்தும் வாழ்த்தி வணங்குவென்'
என்றவள் வணங்கி இனிதிருந் தனளே. (167)

# 27. அயல்நாடு சென்று வந்த காதை

## மயில்வாகனர் பூங்கொடியை அயல்நாடு செல்ல வேண்டுதல்

ஒப்பிலா யாழ்நூல் செப்பிய பெருமகன்
கப்பிய அன்பினுல் கனிமொழி நோக்கிப்
'பூங்கொடி! நினக்கொன்று புகலுவ துடையேன்
ஆங்கிலம் முதலா அயன்மொழி யாவும்
தீங்கற வுணர்ந்த தெளிதமிழ்ப் புலவரும்,
தொல்கலை பலவும் தொகுத்தவை ஆயும்
பல்கலைக் கழகத்துப் பணிபுரி பெரியரும்,
மொழிநூல் வல்ல முதுபே ரறிஞரும்,
நுழைபுலங் கொண்ட நுண்மாண் கலைஞரும்,
உலக நாடுகள் பலவும் சென்று
கொழிதமிழ்ப் பெருமையைக் கூட்டி யுணர்த்தவும்,
மொழியயற் கலைகள் முட்டின் றுணரவும்,
தம்முட் குழீஇத் தமிழ்த்தூ தேகக்
குறித்தனர் செல்வி! அக் குழுவினுள் நீயும்
ஒருத்தி யாதலை உவந்தனென் மனனே;

தமிழுக் கிஃதொரு தனிப்பே ராக்கம்
இமிழ்கடல் வரைப்பும் ஏத்தும்நின் புகழை
நின்னுளம் யாதென நிகழ்த்துதி அம்ம!'

## மலையுறையடிகள் மனமிசைக எனல்

என்னலும் அம்மகள் அன்னையை நோக்கி
முன்னுள அடிகள்தம் முகமும் நோக்கினள்;
குறிப்புணர் அடிகள் கொடிக்கிவை கூறினர்;
'பொறுப்புணர் மாந்தர் விருப்புடன் ஏற்கும்
அறப்பணி யிஃதாம் ஆதலின் இசைகுவை!
அலர்தொறும் அலர்தொறும் அஞ்சிறை விரித்துப்
பலமுறை சுழன்று பசுந்தேன் உறிஞ்சி
நலம்நுகர் சுரும்புபோல் நாடொறும் முயன்று
பலமொழி பயின்று பயன்றுய்த் தனையால்;
ஆங்காங் கணுகி அவ்வவர் கலையும்
ஓங்குயர் பண்பும் உணர்ந்தனை யாயின்
புதுமைக் கலைகள் தமிழிற் பூக்கும்,
அருமைத் தமிழும் அவ்விடை மலரும்,
உரிமை யனைத்தும் உன்மொழிக் கெய்தும்,
இதற்கொரு மறுப்பும் ஈன்றுள் உரையாள்
எதற்கும் கலங்கேல் இசைந்தெழு மகளே';

## பூங்கொடி இசைந்தெழுதல்

இம்மொழி கேட்ட செம்மனப் பூங்கொடி
'நும்மொழி நடத்தல் நோன்பெனக் கொண்டுளேன்!
நம்மொழி செம்மொழி நலம்பெறல் வேண்டி
இல்லறம் என்னலம் இன்னன துறந்தேன்;
நல்லறம் தமிழ்ப்பணி நாடொறும் இயற்றுங்
குறிக்கோள் வாழ்வினைக் கொண்டுளேன் அறிவீர்!

இறப்பினும் இப்பணி இயற்றியே இறப்பேன்,
என்மொழிக் குயர்வெனின் இன்னுயிர் ஈவேன்,
பன்மொழிப் பயிற்சி பைந்தமிழ் வளர்ச்சிக்
கொருதுணை யாகுமென் றுன்னிப் பெற்றனென்,
விரிநீர் உலகத்து வெளிநா டனைத்தும்
பரிவுடன் ஏகிப் பண்பும் கலையும்
தெரிதர வுணர்ந்து தென்றமிழ்ப் பண்பெலாம்
புரிதர வுணர்த்திப் புதுமைக் கலைகள்
ஆக்குவென் ஆக்குவென் அப்பெரு முயற்சியால்
தேக்குவென் பெரும்புகழ் தீந்தமிழ் மொழிக்கே,
இன்னே எழுவேன் எனக்கேன் கலக்கம்?
அன்னையும் வாழ்த்தி அனுப்புவள் என்னை;

## அனைவரிடமும் விடை வேண்டுதல்

கண்டும் பாகும் கனியும் நிகர்க்கும்
தண்டமிழ் காக்கும் தொண்டுளம் கொண்ட
கோட்டை நகர்தரும் கோனூர் வள்ளலும்,
பாட்டுள் புதைந்த பழம்பெரும் யாழை
மீட்டும் கொணர்ந்த மேலவர் தாமும்,
உற்றுழி உதவி உறவின் முறையால்
பெற்றோ ராகிய பெருநிலக் கிழவரும்,
தந்தையாய்த் தலைவராய்த் தாழ்விலாச் செல்வராய்ச்
செந்தமிழ் மைந்தராய்ச் சிந்தையில் தூயராய்
வந்தருள் தந்தவர் வாய்மையில் நின்றவர்
குறளகங் கண்ட குன்றுறை யடிகளும்,
அருளுளங் கொண்ட அனைவரும் வாழ்த்திப்
பெருநிலம் யாண்டும் தரும்புகழ் நிறீஇ
வருகென உரைத்து வழங்குக விடையே'
உரையிவை கூறி உவப்புடன் இருந்தனள்;

## அருண்மொழியும் பிறரும் வாழ்த்துதல்

அயல்நா டேகும் அரிவையைத் தழுவிக்
கயல்விழி அருண்மொழி கண்ணீர் மல்கி,
'வெல்கநின் பணியே வெல்கநம் தமிழே,
செல்கநீ யாண்டும் செந்தமிழ்ப் பண்பைச்
சொல்கநீ சொல்கநீ சோர்வுறேல் கண்மணி!
பல்கலைப் பொருளும் பயில்கநீ' என்றனள்;
ஆண்டுள பெரியரும் ஆயிழை வாழ்கென
மூண்டெழும் உணர்வினால் மும்முறை வாழ்த்தினர்;

## பூங்கொடியின் அயல்நாட்டுச் செலவு

தமிழ்த்தூ தேகும் சான்றோர் குழுவினுள்
புகழ்த்திரு மகளாம் பூங்கொடி சார்ந்து
பயண மாகிப் பறந்தனள் வானில்,
அயலில் நின்றார் அனைவரும் மீண்டனர்;
வானிற் பறந்தும் மரக்கலம் ஊர்ந்தும்
வேனிற் பருவம் விழுபனிப் பருவம்
நானிலத் தோங்கும் நாடுகள் கடந்து
கடந்தாங் காங்குக் கடமைகள் ஆற்றிப்
படர்வோள் ஆயிடைப் பன்மொழிப் பயிற்சியும்,

## சான்மார் நாட்டில் பூங்கொடி

தமிழ்நூல் மாட்டுத் தணியா வேட்கையும்,
நிமிர்மனச் செருக்கால் தமிழ்மொழி பழிப்போர்
இமிழ்கட லுலகில் எவரே யாயினும்
விருப்பும் வெறுப்பும் விடுத்துப் பழிமொழி
மறுத்துரை வழங்கும் பொறுப்புணர் பண்பும்,
உடையவர் இளையவர் உலகறிந் தொழுகும்
நடையவர் சான்மார் எனும்பெயர்க் குரியவர்

பெருந்துணை கொண்டு பெருநாட் டாங்கண்
விருந்தின ளாகி வேண்டிய பொருள்கள்
தெரிந்துளங் கொண்டு தெரிப்பன தெரித்துப்

## கமிலர் நாட்டில் பூங்கொடி

பிறிதொரு நாடு பேணினள் செல்வோள்
அந்நாட் டாங்கண் அருந்திறல் அறிஞர்
தென்னாட் டவர்போல் திகழும் இயல்பினர்
தமிழின் நலந்தேர் தகவாற் பெரியர்
கமிலர் என்னுங் கற்றுணர் சுவைஞரைக்
கண்டுரை யாடிக் களிமகிழ் கூடித்
தொண்டொடு வாழ்வைத் தொடுத்தவள் இருந்தனள்;
அவர்தாம்
நறுந்தேன் மிதக்கும் நற்சுளை போல
அருந்துவோர் நெஞ்சினை அள்ளும் சுவைசேர்
செஞ்சொற் சிலம்பாம் செழுங்காப் பியமும்
விஞ்சுங் காதல் கொஞ்சும் வகையால்
அஞ்சு திணையால் அமைந்தநற் கலியும்
நாட்டுணர் வூட்டும் பாட்டுத் திறத்தால்
கூட்டுணர் வூட்டிக் கொடுங்கோல் சாய்த்துத்
தமிழுக் குய்வகை தந்தநற் பாரதி
அமிழ்தச் சுவைதேர் அருங்கவித் தொகுப்பும்
அனையன பிறவும் அவர்மொழிக் கேற்றி
இனியநற் பணிபுரி இயல்பினர், செயலினர்;
கமிலர் நாட்டிற் கற்பன கற்றுத்
தமிழர் நாட்டுத் தகவுகள் விளக்கி

## உருதின் நாட்டில் பூங்கொடி

மீள்வோள் உலகில் மேம்படு முறையால்
ஆள்வோர் நாட்டினை அணுகினள், ஆங்கு

மேலவர் கீழவர் வேற்றுமை யில்லை,
உயர்ந்தோர் தாழ்ந்தோர் ஒருவரும் இல்லை,
வறியரும் இல்லை உரியரும் இல்லை,
சரிநிகர் என்னும் சமநிலை கண்டனள்;
உடைமைகள் யாவும் உலகப் பொதுமை
தடையிலை எனுநெறி தையல் கண்டனள்,
விண்வழிச் சென்று வெண்மதி கண்டு
மண்ணிடை உலவும் மாந்தரும் கண்டனள்,
வெண்பனி சூழுமவ் வியன்பெரு நாட்டில்
நண்பும் பண்பும் நற்றமிழ்ப் பயிற்சியும்
மருவிய தோழர் மாசறு புலவர்
உருதின் என்னும் ஒருபெயர் மாற்றிச்
செம்பியன் எனஒரு செந்தமி ழாக்கிய
நம்பியைக் கண்டனள்; நலம்பல செறிந்த
அப்பெருந் தேஎத்துச் செப்புந செப்பி
நற்பொருள் பற்பல நாடித் தொகுத்துக்

## ஏனைய நாட்டில் பூங்கொடி

கற்பனைக் கெட்டாக் காலங் கண்ட
நற்றமிழ்ப் பணியே நாளெலாம் புரியும்
பொற்றொடி நங்கை புதுமை வளர்தரும்
நாடுகள் சென்றனள் ஏடுகள் தேடினள்
பீடுறு தமிழ்ப்புகழ் கூடுதல் உறுதி

## பூங்கொடி மீட்சி

என்றுளம் மகிழ்ந்தே இருநீர்ப் பரப்பும்
துன்றிய நிலமும் தொலைவிண் வெளியும்
கடந்து மீண்டனள் கலைபயில் செல்வி,
இடம்படு மணிநகர் யாண்டும் ஆர்ப்பொலி
படர்ந்திட வாழ்த்துரை பாவை ஏற்றனள்;

ஆயும் மலையுறை யடிகளும் பிறரும்
தோயும் மகிழ்வால் துள்ளினர் உள்ளம்;

### புது நூல் படைத்தல்

நாடுகள் தோறும் நடந்தன விளக்கி
ஏடுகள் கொணர்ந்தன எவைஅவை துலக்கிப்
பொருளியல் நூலும் புதுப்புதுப் படைப்பும்
அறிவியல் நூலும் அருங்கவித் திரட்டும்
உளநூல் நிலநூல் உண்மைத் தத்துவம்
பலவர லாறும் படைத்தனள் தமிழில்
கலையெலாம் தமிழில் இலையெனுங் குறையினி
இலையெனச் செய்தனள் எம்முயர் தலைவி;
மூச்சும் பேச்சும் முத்தமிழ்க் காக்கி
ஏச்சும் பேச்சும் இடரும் துச்சம்
எனஅவை ஒதுக்கி மனமொழி செயலால்
அணைமொழி தமிழுக் கருஞ்செயல் ஆற்ற
வல்லவள் அவளே வாழிய மகளே. (158)

*

# 28. சொற்போர் நிகழ்த்திய காதை

## பல்வகை எதிர்ப்பு

பூங்கொடி யின்புகழ் யாங்கணும் ஓங்கிடத்
தாங்குதல் ஆற்றுத் தரியலர் புழுங்கி
ஏங்கிய மனத்தொடு எவ்வழி யாயினும்
ஆங்கவள் வளர்புகழ் அழிப்பான் வேண்டித்
தீங்குகள் பலவும் செய்திடுங் குழுவும்,
தொலைவில் மறைந்து தூண்டுவோர் தூண்ட
அலையும் மனத்தினர் ஆடும் பாவைகள்
நிலையிலாக் கொள்கை கலையெனப் பூண்டோர்
மலையும் நோக்கினர் மதியிலார் குழுவும்,
உண்மை நன்மை ஒன்றும் அறிகிலார்
எண்ணும் ஆற்றல் எதுவும் அறிகிலார்
மனத்தால் தீமை மதித்தலும் அறிகிலார்
இனத்தால் நல்லவர் எனினும் அறிவெனும்
சுடரறி யாமல் சூழிருள் மூழ்கி
மடமுறும் மனத்தினர் வஞ்சமில் குழுவும்,
மெய்ம்மை யுணர மேவுவார் குழுவும்,
தெய்வப் பணியால் உய்யும் குழுவும்

கொடுத்திடும் துயரெலாம் குலக்கொடி உதறினள்;
தொடுத்திடும் கணையென அடுத்தடுத் திருந்து
விடுத்தனர் வினாக்கள் வெருவிலள் பூங்கொடி;

## பிறமொழி வெறுப்பு நன்றோ?

'பிறமொழி வெறுத்தல் பேதைமை யாகும்
அறமன முடையோர் அவ்வணம் செய்யார்
குறுமன மிஃதாம் விரிமனம் வேண்டும்
யாதும் ஊரென ஓதிய நாமோ
தீதெனப் பிறமொழி செப்பித் திரிவது?
மோதும் பகைமை முகிழ்ப்பது நன்றோ?'
நல்லுரை இவ்வணம் நவில்வது போலச்
சில்லுரை சிலர்சிலர் செப்பித் திரிந்தனர்;

## பூங்கொடி மறுப்புரை

மறுப்புரை அவர்க்குக் கொடுத்திடும் பொறுப்பினள்
விரித்துரை வழங்கி விளக்கினள் இவைஇவை;
'அகத்தும் பிறமொழி வெறுத்திடல் அறிகிலம்
பகுத்தறி வுடையோம் பண்பும் உடையோம்
வேண்டும் மொழிகளை வேண்டுவோர் பயின்றீங்
கீண்டி யுறையுநர் எண்ணிலர் அறிக!

## குறுமனம் அன்று

குறுமன மென்றும் விரிமன மென்றும்
சிறுமன முடையோர் செப்புவ கொள்ளேல்!
தனியொரு மாந்தன் தன்னலம் பேணின்
முனியத் தகுமது குறுமன மாகும்;
தன்னல மறுப்பது விரிமன மாகும்,
முன்னவர் பேணிய மொழியும் நாடும்

மன்பதை முழுமைக் குரியன வன்றே!
அன்புளங் கொண்டோர் அவற்றைப் பேணின்
தென்படும் குறைஎன்? தெளியா மாந்தர்
குறுகிய மனமெனக் குளறுவர் நம்பேல்!

## பிறமொழி வெறுப்பன்று

பெறுபுகழ்த் தாய்மொழி பேணுஅ ராகி
வருமொழி வாழ்த்தி வரவுரை கூறுநர்
அறமன முடையரென் றறிவுளோர் பகரார்;
பிறமொழி தீதெனப் பேசலும் அறிகிலம்
உரியநம் மொழியே உயர்வுறல் வேண்டி
இரவும் பகலும் இடரிலும் முயல்வேம்;

## பகைமையும் அன்று

யாதும் ஊரெனில் எம்முடை ஊரகம்
தீதுறல் வேண்டுமோ? சீருறல் தீமையோ?
யாவரும் கேளெனில் யாயுடன் தந்தையும்
மேவருங் கேடுகள் மேவுதல் வேண்டுமோ?
அன்னவர் நலம்பெற ஆர்வம் பூணுதல்
புன்மையோ? பகையும் பூத்திடல் என்னையோ?

## சான்றோர் நெறியே

உலகப் புகழ்பெறு தலைவரும் கவிஞரும்
பலகற் றடங்கிய பண்புயர் மாந்தரும்
தாய்மொழி வேட்கை தணிந்திலர் துறந்திலர்;
ஆய்புலப் பாங்கினர் அறிகுவர் இதனை;
தமிழின் பகைவர் சாற்றும் மொழியினை
உமிழ்க! மெய்ம்மை உணர்க! எழுக’
என்பன கூறி எழுச்சி யூட்டலும்
மன்பதை சிந்தனை வளர்த்தது மனத்தினில்;

## இசைவாணர் எதிர்ப்பு

பாடும் துறையில் பழகிய மாந்தர்
தேடும் பொருளாற் சிறந்தோர் சிலர்தாம்
கூடிச் சிலசொல் குறித்தனர் ஆங்கண்;
'உள்ளம் உருக்கி ஒப்பிலா இன்ப
வெள்ளம் பெருக்கும் வியன்பே ரிசையில்
மொழியால் வேற்றுமை மூட்டுதல் நன்றோ?
இழிவாம் இச்செயல்; மொழியிங் கெதற்கு?
குழலும் யாழும் கொடுத்திடும் இசையில்
மொழிஎது கண்டோம்? பழிஎது கண்டோம்?
இசைவளந் தமிழில் யாண்டுக் கண்டோம்?
இசையுணர் வுடையார் எம்மொழி யாயினும்
நசையுடன் ஏற்று நடப்பது கண்டோம்;
மொழிவெறி விடுத்து முயல்வதே முறை'என
வழிவகை கூறி வம்புகள் பேசினர்;

## பூங்கொடி மறுமொழி

சினந்தெழும் உணர்ச்சியின் செற்றம் அடக்கி
மனந்தெளிந் தரிவை மாற்றம் கொடுத்தனள்;

## குயிலும் காகமும்

'கூவும் குயில்தன் குரலாற் பாடும்;
காகம் தன்குரல் கொண்டே கரையும்;
இரவற் குரலைப் பெறுவது காணோம்;
பறவையின் இயல்பைப் பகுத்தறி வுளநாம்
அறிவதும் இல்லேம்; தெளிவதும் இல்லேம்;
நமக்குள மொழியை நாடுதல் தவிர்த்துப்
பிறர்க்குள மொழியாற் பிதற்றுதல் உடையேம்;

### ஊனுயிர் உருக்கும் பாட்டு

உருகும் இசையால் உள்ளம் என்றீர்!
பொருளும் உணரப் புரியும் மொழியால்
மருவிய பாடல் வழங்கும் இனிமையை
ஒருமுறை எண்ணுக! ஊனும் உயிரும்
நெஞ்சுடன் குழைந்து நெக்குநெக் குருகி
விஞ்சுபே ரின்ப விளைவினில் திளைக்கும்;

### யாழும் குழலும் போதுமோ?

குழல்தரு மிசையில் மொழியிலை என்றீர்!
அழகிது நும்மொழி! அவ்விசை சாலுமேல்
மிடற்றிசை வேண்டுமோ? வேறொரு மொழியில்
தொடுத்திடும் பாடலும் தொகையுடன் பாடுவோர்
கூட்டமும் வேண்டுமோ? குழல்முத லாகக்
காட்டும் அவ்விசைக் கருவிகள் சாலுமே!

### அயலிசை பாடுவோர்

தமிழ்விழை யாரும், தம்வயிற் றுணவே
அமிழ்தெனத் தேடி அலைந்துழல் வாரும்,
உரிமை வாழ்வினைக் கருதகில் லாரும்,
அடிமை வாழ்வினி லமைதிகொள் வாரும்,
தமிழறி வில்லாத் தமிழருந் தாமே
அயன்மொழி யிசையே அரங்கினிற் பாடுவர்
மயலுணர் வுடையீர்! மற்றொன் றறைகுவல்

### தமிழிலா இசையில்லை?

எம்மொழி யாயினும் இசையினி லேற்போர்
நம்மொழி ஒதுக்குதல் நன்றுடைச் செயலோ?
ஏற்போர் ஏற்க! இசையுணர் பெரியீர்!

காற்கூ றறிவாற் கழறுதல் தவிர்க!
இசைவளந் தமிழில் இலைஎனப் பிதற்றல்
வசையுமக் காகும்; வாய்மதம் ஒழிக!
முத்தமிழ் என்றொரு முறைவைப் புளதை
மெத்தவும் மறந்தீர்! மெய்ம்மையை இகழ்ந்தீர்!
நெஞ்சறி பொய்யை நிகழ்த்துதி ராயின்
பஞ்செனஅதுதான் பறப்பதிங் கொருதலை;

## இதுவா மொழி வெறி?

பழியுரை நாணுப் பண்புள பெரியீர்!
மொழிவெறி எனவொரு மொழியினை மொழிந்தீர்
உரிமை விழைவது வெறியெனக் கூறும்
பெருமை நும்பால் உறைவது கண்டேன்;
நரிமனம் இஃதென நவின்றிட நாணுவல்;
வெறியுணர் வுளதேல் விளைவன வேறு!
முறையொடும் அறிவொடும் முறையிடு கின்றோம்;
நெறியறிந் தொழுகும் நேர்மையை வியந்திலீர்!
புரைபடும் நும்முளம் புலப்படச் செய்தீர்!
செந்தமிழ் மொழியொடு செற்றம் என்கொலோ?
வந்துடன் தாய்மொழி வளர்த்திடக் கூடுக!
முந்துநம் தமிழிசை மொய்ம்புறப் பாடுக!'
செவ்விதின் இவ்வணம் செப்பின ளாக
அவ்விய நெஞ்சினர் ஆங்காங் கமைந்தனர்;

## கோவிலுள் தமிழ் மொழி

'வழிபடு துறையிலும் வண்டமிழ் வேண்டுதும்;
இழிநிலை போதும்; இறைவன் திருமுனர்
எம்முயர் மொழியே இசைத்திடல் விழைகுதும்'
இம்மொழி கேட்டோர் எரியெனக் கனன்றனர்;

## தமிழ் வழிபாட்டுக் கெதிர்ப்பு

'கோவிலில் தமிழா? கொடுமை! கொடுமை!
நாவினில் இதுசொல நடுக்குறூஉம் எம்முளம்!
முன்னோர் நம்மினும் முழுமதி யுடையர்
அன்னோர் நெறியினை அழித்திட முயல்வதோ?
முந்திய மொழிகளுள் மூத்ததே ஆயினும்
மந்திர வலிமை செந்தமிழ்க் குளதோ?
இடமிகு கோவிலுள் இறைவன் முன்னர்க்
கடவுண் மொழியே கழறுதல் வேண்டும்;
மந்திர மொழியாம் மறைமொழி விடுத்துச்
செந்தமி ழோதின் தெய்வம் உவக்குமோ?'
தேவரின் தூதுவர் ஏவலர் போலிவை
கூவினர்; மேவலர் கொள்ளும் வகையாற்
சான்றுடன் மறுமொழி சாற்றுவள் பூங்கொடி;

## தமிழர் வழிபடு மொழி எது?

'ஈன்றவட் பழிக்கும் இயல்பினை என்றுளீர்!
தமிழக வரைப்பில் தாய்மொழி ஆட்சி
திகழுதல் வேண்டும்; தேவுறு கோவில்
விலக்குடைத் தன்று; மயக்குறல் என்கொல்?
கலைக்கோர் உறைவிடம் கட்டியோர் தமிழர்
உள்ளுறை கடவுளும் உரியவர் நமக்கே
அள்ளுற வணங்குவோர் அயலவர் அல்லர்
இறைவினை புரிவோர் ஏதிலர் அல்லர்
முறைஎது? வழிபடு மொழிஎது? புகல்வீர்!

## முன்னோர் நெறிதான்

முன்னோர் நெறியினில் முரண்பா டென்றீர்!
முன்னோர் யாரென முடிந்த முடிபாச்

சொன்னோர் யாரே? முன்னோர் அவரினும்
முற்பட வாழ்ந்தவர் எப்பெய ருடையார்?
அப்பெரு முன்னோர் ஆண்டவன் மாட்டுச்
செப்பிய மொழிஎது? செந்தமி ழன்றோ?
திருவாய் மொழியெனத் திருவா சகமென
இறைவா! இறைவா! என்றவர் ஓதிய
திருவாய் மொழிஎது? தீந்தமி ழன்றோ?
அவரெலாம் முன்னோ ரல்லரோ? இறைவன்
செவிதனில் அம்மொழி சேர்ந்ததும் இலையோ?

## மந்திர வலிமை தமிழ்மொழிக்குண்டு

அரவணி இறைவனை ஆரூர் நம்பி
இரவிடைப் பரவைபால் ஏவிய தெம்மொழி?
இடங்க ருண்ட இளஞ்சிறு மகனை
உடம்பொடும் உயிரொடும் உய்வித்த தெம்மொழி?
ஒடுங்கிய எலும்பினை உருவெழில் குறைவிலா
மடந்தையின் வடிவா மாற்றிய தெம்மொழி?
அருமறை வினைஞரால் அடைபடு கதவம்
திருமறைக் காட்டில் திறந்ததும் எம்மொழி?
கணிகணன் முன்செல மணிவண்ணன் அடியிணை
பணிதிரு மழிசையர் பதறினர் பின்செலப்
படப்பாய் அணைமேல் பாற்கடல் மிசையே
கிடப்போன் தன்மனைக் கிழத்தியும் உடன்வர
அரவணைச் சுருட்டோ டாங்கவர் தொடர்ந்து
பரிவுடன் ஓடப் பண்ணிய தெம்மொழி?
அம்மொழி நம்மொழி! அத்துணைப் பெருமையும்
செம்மையின் எமக்கெலாம் செப்பியோர் நீவிர்!
இன்றிவை மறந்தீர்! எதிர்ப்புரை கிளந்தீர்!
கன்றிய மனத்தாற் கரவுரை புகன்றீர்!

மந்திர வலிமை செந்தமிழ்க் கிலையெனில்
இந்தநல் லருஞ்செயல் எவ்வணம் இயலும்?

## கடவுளர் விரும்பும் மொழி

கடகரி உரியன் கடும்புலி யதளன்
சடையினை மறைத்து மணிமுடி தரித்து
விடைக்கொடி விடுத்துக் கயற்கொடி எடுத்து
விடவர வொழித்து வேம்பலர் முடித்துத்
தொடுகழல் மாறன் வடிவொடு வந்ததூஉம்,
மடவரல் மனையாள் மலைமகள் உமையாள்
தடாதகைப் பெயரினைத் தாங்கி வந்ததூஉம்,
மயில்மே லமர்வோன் அயில்வே லுடையோன்
எயில்சூழ் மதுரை எழில்நக ரதனுள்
உக்கிர குமர னுருவொடு வந்ததூஉம்,
தெக்கண மொழியாம் தீந்தமிழ்ச் சுவையைச்
கூட்டுண வெழுந்த வேட்கையால் என்றே
பாட்டினில் குருபரர் பாடி வைத்தனர்;
வடக்கினில் நின்றோன் வரன்முறை யாகக்
கடுக்கவின் கண்டன் தென்றிசை நோக்கி
அடுக்க வந்துவந் தாடுதல் ஏனெனின்
தொடுக்கும் பழந்தமிழ்ச் சுவையினை மாந்தவே
அறைந்தனர் இவ்வணம் அருட்பரஞ் சோதி;
கண்ணுதற் கடவுள் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்து பசுந்தமிழ் ஆய்ந்தனன்;
வாத வூரன் ஓதிய வாசகம்
தீதுறா வண்ணம் தென்னா டுடையவன்
எட்டில் எழுதி நாட்டிற் களித்தனன்;
அர்ச்சனை பாட்டே ஆதலின் நம்மைச்
சொற்றமிழ் பாடெனச் சுந்தரன் றன்பால்

பற்றுடன் சென்று பைந்தமிழ் வேண்டினன்;
வழிபடு தமிழை விழைகுவர் இறைவரென்
றெழிலுற உணர்த்திட இவையிவை சான்றும்;
முன்னோர் சொன்ன முடிபினைக் கொள்க!
பின்னோர் நம்மைப் பேணுதல் வேண்டும்'
சொற்போர் இவ்வணம் பற்பல நிகழ்த்திக்
கற்போர் மற்றோர் களிப்பாற் போற்ற
மாந்தர் மனத்தில் மதியொளி ஏற்றினள்;

## ஆள்வோர்க்கு அறிவுரை

ஏந்தும் புகழ்சூழ் இளங்கொடி துணிவுடன்
அரசியல் ஆயத்து முறைபுரி வோர்க்கும்
குறையெலாம் உரைத்தனள் உரிமையும் வேண்டினள்
'துறைதொறும் துறைதொறும் தூயநற் றமிழே
ஆட்சி புரியும் மாட்சிமை வேண்டும்
ஆட்சியின் பெயரால் அயன்மொழி புகுதலைச்
சான்றோர் வெறுப்பர் தமிழகம் மறுக்கும்
ஆன்றமைந் தடங்கிய அறவோர் கொதிப்பர்
ஆதலின் அரசியல் ஆயத் துள்ளீர்
மேதகு பெரியீர் ஆவன புரிக'
என்று பலகால் எடுத்தெடுத் திசைத்தும்
நன்று புரிந்திட நயந்திலர் அவரே.

# 29. அறப்போர் நிகழ்த்திய காதை

## முத்தமிழ் மாநாடு

கலைமிகு தமிழ்மொழி காக்கும் நோக்கொடு
மலையுறை யடிகள் மாநா டொன்று
மணிநக ரென்னும் மாநக ரதனுள்
அணிபெறக் கூட்டினர்; அப்பே ரரங்கில்

## பன்னாட்டறிஞர் பாராட்டுரை

பைந்தமி ழுணர்ந்த பற்பன் னாட்டினர்
ஐந்தெனும் இலக்கண அமைப்புறும் செந்தமிழ்
மேன்மையைப் பான்மையை மேம்படு புலத்தால்
ஆய்ந்தவை கூறி அதன்நலம் பரப்ப
வாய்ந்தவும் உரைத்துத் தோய்ந்தனர் களிப்பில்;
பன்னாட் டிசையும் பகுத்துணர்ந் தாய்ந்தோர்
தென்னாட் டிசையின் திறமெலாம் வியந்தே
எந்நாட் டெங்கணும் இதுபோற் காண்கிலேம்
எனஅவர் தம்முள் ஒருசிலர் உரைத்தனர்;
குவளை நிகர்க்கும் கூர்விழி யிணையால்,

பவழ இதழால், பைந்தளிர் விரலால்,
பொற்புடை நுதலால், புருவச் சிலையால் ,
உட்குறிப் புணர்த்தும் மெய்ப்பா டனைத்தும்
தெற்றென விளக்கித் தெரிவையர் ஆடுங்
கலையெழிற் றிறமெலாம் பலபடப் புகழ்ந்தனர் ;

## தென்னாட்டார் தெளிவுரை

முத்தமிழ்க் காவலர், மொழித்துறை ஆய்வினர்,
புத்தமு தென்னப் புதினம் படைக்குநர்,
செந்தமிழ்க் காவலர், சிந்தனைப் பாவலர்,
பைந்தமிழ் நாவலர், பன்மொழிப் புலவர்,
பல்பொரு ளுணர்ந்த பண்டகர், அருள்நெறி
மல்கிய துறவற மாண்பினில் உறையுநர்,
குறள்நெறி ஓம்பிக் குடியர சோங்க
அறநெறி காக்கும் அரசியல் அறிஞர் ,
பிறபிற கட்சிகள் பேணுநற் றலைவர்,
பல்வகைச் சமயப் பாங்கினில் ஓங்கிய
நல்வகைப் பொருளுணர் நற்றமிழ் வல்லவர்,
இசையின் அரசர், எழிசை வல்லவர்,
நசைமிகு திரைப்பட நடிகர், பல்வகை
ஏடுகள் நடாத்தும் இயல்பினர் யாரும்
கூடினர் தத்தம் கோட்பா டனைத்தும்
நாடும் வகையால் நன்கனம் விளக்கினர் :
அவரவர் கோட்பா டறைந்தன ராயினும்
தவறியும் தமிழின் தன்மை குறைத்திலர் ;
வழியும் முறையும் வகைபல வாயினும்
மொழியின் உயர்வே முன்னினர் அவர்தாம் ;

## நான்கு முடிபுகள்

கவரும் முறையால் கனிமொழி காக்க
அவரவர் நோக்கில் அறைந்தவை யாவும்
உவகையிற் கேட்ட உயர்பே ரடிகள்

தொகுத்தவை கூட்டி வகுத்தனர் நால்வகை;
'இருப்பவை யனைத்தும் உருச்சிதை யாமற்
கருத்துடன் பேணிக் காத்திடல் வேண்டும் ;
இருப்பது போதும் எனநினை யாமல்
புதுப்புது நூல்கள் படைத்திடல் வேண்டும் ;
அயன்மொழி புகுந்திவண் அல்லல் கொடாஅவகை
மயலர வொழித்து மதியினைத் துலக்கித்
தடுத்துக் காக்கும் தறுகண் வேண்டும் ;
தொடுக்கும் தமிழ்க்குத் துறைதொறும் ஆட்சி
கொடுத்திடல் வேண்டுமென் றடிகள் கூறினர் ;

## பூங்கொடியின் மகிழ்ச்சி

பூங்கொடி யாகிய பொற்றொடி நங்கை
ஆங்கண் எழுந்தனள் அவள்சில மொழிந்தனள் ;
'சமயம் கட்சி சாதியோ டரசியல்
அமையுந் தொழிலால் ஆர்த்தெழு பகைமை
இமயம் போலது எதிருள தாயினும்
கருதா ததனைக் கடிதினில் ஒதுக்கி
ஒருதாய் மக்கள் உணர்வே ஓங்கி
வருகை புரிந்தீர் வாழிய பெரியீர்!
நெடுநாட் கனவை நினைவெனச் செய்தீர்!
பிறப்பால் வழக்கால் பேசும் மொழியால்
இனத்தால் தமிழர் எனுமொரு நினைவே
கருத்தாற் கொண்டுளோம் காலம் நமதே!
தாய்மொழி காக்கும் தணியா வேட்கை
சேய்கள் நம்பாற் செம்மையிற் கிளர்ந்தது ;
வாகையும் சூடுவோம் வளர்தமிழ் பாடுவோம்
ஓகையில் ஆடுவோம் ஓங்குக ஓங்கவே!'

## இனி ஆற்றவேண்டிய பணி

'நாடொறும் நாடொறும் நாடெலாம் போந்து

பாடியும் பேசியும் பட்டி மன்றத்துச்
சொல்லமர் ஆடியும் சொல்வன சொல்லி
நல்லதோர் ஆர்வம் நாட்டிடை மூட்டவும்
மொழியுணர் வூட்டவும் முயன்றனம்; பொங்கிப்
பொழியும் ஆர்வமும் புத்துணர் வெழுச்சியும்
பெருக்கெடுத் தோடும் பெற்றிமை கண்டோம்;
உருக்கொள அதுதான் ஒருநெறிச் செல்லத்
திருப்பலும் வரன்முறைப் படுத்தலும் நங்கடன்;
ஆக்கப் பணியில் அதனைத் தேக்கி
ஊக்கப் படுத்துதல் ஒன்றே இனிமேல்
ஆற்றப் படும்பணி யாகும்; ஆதலின்

## செயற்குழு அமைக்க வேண்டுதல்
## பன்மொழிப் பயிற்சிக் குழு

செயற்குழு பலவகை சீர்பெற அமைத்துச்
செயற்பட வேண்டுவல்; செந்தமிழ் நூல்களை
அயன்மொழி பலவுளும் அமைத்திடல் வேண்டியும்
நயனுள மொழிகளுள் நல்லன காண்புழிப்
பயனுறப் பெயர்த்துப் பைந்தமிழ் ஆக்கவும்
உலக மொழிகள் பலவும் பயில
இலகும் அறிவினர் இணைந்ததோர் குழுவும்,

## இலக்கியம் பரப்புக் குழு

தொல்காப் பியமும் தூயநற் குறளும்
பல்கிய பொருள்செறி பாட்டுந் தொகையும்
நாலடி முதலா நயனுறை நூலும்
தோலெனும் வகைப்படும் தொடர்நிலைச் செய்யுளும்
கல்லா மாந்தர்தம் கருத்துட் பாய்ச்ச
வல்லார் சொல்லில் நல்லார் குழுவும்,

## புதுநூல் படைப்புக் குழு

முன்னோர் நெறியின் முரண்பா டின்றிப்
பன்னூல் ஆக்க உன்னுவோர் தாமும்
பின்னோர் நம்மைப் பேணும் வகையால்
நன்னூல் ஆக்க நயப்போர் தாமும்
பொருளால் நடையால் புதுப்புது முறையால்
உரையால் கவியால் வரைவோர் தாமும்
அறிவியல் நூல்கள் ஆய்வுரை நூல்கள்
செறிவொடு பிறபிற செய்வோர் தாமும்
நிறைபுல மாந்தர் நெருங்கிய குழுவும்,

## வழூஉக் களைவோர் குழு

ஆவணத் தெருவினில் அரசியல் துறைகளில்
கோவிலில் செய்திகள் கொடுத்திடும் இதழ்களில்
மேவிய திரைப்பட மாகிய உலகில்
எழுத்தில் பேச்சில் எவ்வெத் துறையிலும்
வழுக்கள் களைந்து வண்டமிழ் வளர்ப்போர்
தொகுப்பாய்ப் பணிசெயும் தொண்டர்தம் குழுவும்,

## அறப்போர் ஆற்றுங் குழு

புதியதோர் மன்பதை பூத்திட வேண்டி
அறிவியல் பயிற்றிடும் அரும்பெறற் பள்ளியில்
புரிவியல் மொழியால் போற்றுநம் மொழியால்
புகட்டிட வேண்டிப் போரிடுங் குழுவும்,
தாய்த்திரு நாட்டில் தண்டமிழ்க் கெதிராய்
ஏய்ப்பவர் புகுத்திடும் எம்மொழி யாயினும்
மேய்ப்பவர் மருளக் காழ்ப்பகை சிதற
அறப்போர் தொடுக்கும் ஆண்மையர் தமிழ்மொழி
புரப்போர் பலராய்ப் போரிடுங் குழுவும்

அமைத்திடல் வேண்டும்; அறப்போர்க் குழுவுள்
உயிரும் உடலும் உவப்புடன் ஈவோர்
அயர்வும் தளர்வும் அச்சமும் விடுத்தோர்
இடம்பெறல் வேண்டும்; இவ்வணம் அமைத்துக்
கடமை உணர்வும் கட்டுப் பாடும்
உடையராய்ப் பணிசெயின் உலகில் நம்மொழி
ஒருமொழி யாக ஓங்குதல் ஒருதலை'
என்றுரை யாற்ற, ஈண்டிய பெரியோர்
நன்றுநன் றென்றே நயந்தனர் ஆர்த்தனர்;

## அடிகளார் போர் முழக்கம்

மன்றினில் இருந்த மலையுறை யடிகள்
ஒன்றிய வுணர்ச்சியும் உள்ளத் தெழுச்சியும்
துன்றிய மனத்தராய் நன்றுணர் புலவோர்
குழுவுடன் ஆய்ந்து வழிமுறை தெரிந்து
குழுபல அமைத்துக் கூறினர் சிலசொல்
'தென்மொழி நிலைமை தெற்றெனெ விளக்கி
மன்பதைக் குரைத்தோம்; மன்பதை சார்பில்
எவ்வெவ் வகையால் இயம்புத லொல்லுமோ
அவ்வவ் வகையால் ஆள்வோர்க் கியம்பியும்
தாய்மொழிக் குரிமை தந்திலர் அதனல்
ஆய்ந்தபின் அறப்போர் ஆற்றத் துணிந்தனம்;
போரிட முனைந்து புகுவோர் கேண்மின்!
ஆருயிர் கொடுப்ப தறப்போ ராகும்;
வேறுயிர் எடுப்பது மறப்போ ராகும்;
அதனதன் பெற்றிமை அறிகதில் லம்ம!
முதற்போர் புரிய முனைந்தனம் இன்றே;
போரெனில் உயிர்பல போதலும் இயல்பே;
சீரிய இப்பெரும் போரினில் புகுவோர்
யாரென யாரென இயம்புதிர் இன்றே;

இருப்பதும் ஒருயிர் இறப்பதும் ஓர்முறை
தடுத்திட ஒல்லுமோ? சாவதும் ஒருதலை;
விடுக்குமவ் வோருயிர் வீணிற் செலவிடா
தடுத்தநம் தாய்மொழி அரியணை வீற்றிடத்
தொடுத்திடும் போரில் விடுத்திடத் துணிக!
துணிவோ ரெவரோ அவரே வருக!
துணிவில ராயின் தொலைவிற் செல்க!

## நாட்டவர்க்கு வேண்டுகோள்

செல்வோர் தாமும் செய்வதொன் றுளது
வெல்போர் கருதி விடுதலைப் படையினர்
சிறையகம் புகுந்தும் உறுதுயர் அடைந்தும்
கையுங் காலும் மெய்யும் சிதைந்தும்
நையும் உயிரொடு நடைப்பிண மாகியும்
ஆளுநர் செயலால் அல்லற் பட்டுழிக்
கோளும் குறையும் கூறித் திரியாது
கண்ணீர் ஒருதுளி காட்டுக; இலையெனில்
உண்ணிறை பரிவொடும் ஒருமொழி புகல்க!
அந்நிலை தானும் ஆற்றீ ராயின்
செல்லல் எமக்குச் செய்யா தமைக!
அல்லன கூறுதல் அறவே விடுக!'
என்பன கூறி யிருந்தனர் ஆங்கண்;

## போர்க்கொடி உயர்த்தல்

புலிநிகர் வீரர் பொற்றொடி மகளிர்
கலைமலி தமிழைக் கற்றறி புலவர்
எவ்வகைத் துயரும் ஏற்றிடும் திறலோர்
அவ்வயின் யாம்யாம் ஆருயிர் ஈகுதும்
என்றுரைத் தெழுந்தனர் எடுத்தனர் வஞ்சினம்

துன்றிய ஆர்ப்பொலி துளைத்தது விண்ணை;
செங்கண் மறவர் சீற்றமும் ஏற்றமும்
பொங்குதல் கண்டுளம் பூரித் தெழுந்து
பற்பல அணிகள் பகுத்தனர் அடிகள்
பொற்புடன் போற்றினர் போர்க்கொடி ஏற்றினர்;

## எங்கணும் மறியல்

அருண்மொழி ஒருபால் அடிகள் ஒருபால்
விரிமலர்ப் பூங்கொடி வேறொரு பாலும்
உரிமை விழையுநர் ஒவ்வொரு பாலும்
அணியணி யாக ஆங்காங் கணுகிப்
பணிவும் கனிவும் துணிவும் பூண்டு
அரசியல் அலுவல் ஆற்றும் மனைதொறும்
பரசுங் கோவில் பள்ளிகள் தோறும்
பாடம் பயிற்றும் பள்ளிகள் தோறும்
பாடும் அரங்கம் பயிலிடந் தோறும்
மறியல் செய்தனர்; மருண்டனர் ஆள்வோர்;
வெறியொடு காவல் வீரரை ஏவினர்

## அனைவரும் சிறைப்படுதல்

ஏவிய காவலர் எத்துணை வெருட்டியும்
சாவது துணிந்தவர் சற்றும் விலகிலர்;
அடித்தும் பிடித்தும் அச்சப் படுத்தியும்
பிடித்த கொள்கையிற் பிறழ்ந்திலர் மறவர்;
வீரர் சீறினர் விலங்கொடு வந்தனர்
போரறம் புரிந்திடும் பூங்கொடி முதலா
நேரறம் பூண்டிடும் நீள்புகழ் அடிகளும்

கட்டில் அடங்காக் காளையர் கூட்டமும்
மட்டு வார்குழல் மங்கையர் ஈட்டமும்
நிறைகுண மங்கையாம் அருண்மொழி அன்னையும்
சிறையகம் புகுதச் செந்தமிழ் காக்க
விலங்குடைக் கையராய் வீதிகள் பலவும்
கலங்கலில் மனத்தராய்க் கடந்தனர் நடந்தே. (199)

*

# 30. சிறையகம் புகுந்த காதை

### ஊரவர் உரையாடல்

*தாய்கை விலங்கைத் தறிப்பான் வேண்டித்
தங்கை விலங்கைத் தாங்கினர் செல்வோர்
அஞ்சில ராகி அகமுகம் மலர்ந்து
நெஞ்சுரம் ஏறி நிமிர்ந்தநன் னடையராய்ப்
போதல் கண்ட பொன்னகர் மாந்தர்
வீதியின் மருங்கில் வெற்றிப் பேரொலி
ஆர்த்தனர் ஒருசிலர் ; அவர்புகழ் கண்டுளம்*

### அறப்போர் நாடகம்

*வேர்த்தவர் சிலர் ‘ இது வீண்படு முயற்சி
இவரால் தமிழ்மொழி ஏற்றம் உறுமோ?
எவரால் தமிழுக் கிடுக்கண் நேர்ந்தது ?
தவறே எண்ணித் தம்பெயர் ஒளிர
அறப்போர் நாடகம் ஆடினர் ’ என்றெலாம்
பரப்பினர் பழிமொழி பண்பிலாத் தொழிலினர் ;*

### வென்றிப் போர்

*நெடும்புகழ்த் தமிழ்மொழி நீணிலத் தோங்கக்
கடமுணர் இவரே காத்திட வல்லார்!*

அடவோ இவர்தம் அரும்பெரும் முயற்சி
கெடுமோ? இங்குக் கிளைபோற் புகுமொழி
தடுத்து நிறுத்தத் தக்கார் யாருளர்?
அடுத்த துயரெலாம் அகமகிழ் வுடனே
மடுத்துத் தந்நலம் விடுத்தனர் ஆஆ!
தொடுக்குமிவ் வறப்போர் கொடுக்கும் வென்றியே'
என்றநல் லுரைகளும் இடையிடை மிடைந்தன;

## மகளிர்க் கடுக்குமோ

'மகளிர்க் கித்துணை மனச்செருக் காகுமோ?
தகவுடைத் தொழிலோ? தன்றுணை, மக்கள்,
இல்லறம், குடும்பம் என்றுளங் கொளாஅது
மெல்லியல் மாதர் மீப்படு செயலிற்
செல்லுதல் அறமோ? சீச்சீ இழிவாம்;
தெருவிடை இவ்வணம் தெரிவையர் விலங்குடன்
வருவது நாணுத் தருவ'தென் றரிவையர்
அறிவுரை போற்சில அறைந்தனர் ஆங்கண்;

## மகளிர் வீரம்

'ஆடவர் போல அரிவையர் தாமும்
நாடும் மொழியும் நமதென எண்ணிப்
பாடு படுமிவர் பண்பினைப் போற்றுதும்;
விஞ்சுந் துயரினை வீறுட னேற்கும்
வஞ்சியர் நெஞ்சுரம் வாழ்த்துதும் வாழ்த்துதும்;
நெடும்பகை தமிழுக்கு நேர்ந்ததே என்று
குடும்பப் பணியாக் குறித்தறப் போரிற்
பங்கு கொண்டதோர் பாங்கினை ஏத்துதும்;
மங்கையர் இவரென மதித்தலு மின்றிச்
செங்கை பிணித்துத் தெருவிடை யிழுத்துச்

செல்லுமோ ரரசும் செங்கோ லரசோ?
நல்லார் எவரும் நாணுந் தகைத்' தெனப்
பல்லார் குழுமிப் பாவையர் கூறினர்;

## பித்தர் செயல்

கற்றவர் சிலர்தாம் மற்றிவர்க் கண்டு
'வெற்றொலி என்படும்? விளைபயன் ஒன்றிலை;
பற்றுளம் உடையரேல் பைந்தமிழ் கசடறக்
கற்றுளந் தெளிக! மற்றவர் தமக்கும்
ஐயந் திரிபற அதனை விளக்குக!
செய்யுந் தொழிலிது செந்தமிழ்க் காக்கம்;
நையும் வகையால் நலிவுகள் எய்திக்
கையில் விலங்குடன் கடுஞ்சிறை புகலால்
வையம் புகழும், வாழ்வுகள் நலியும்;
முத்தமிழ் வளர்க்க முயல்வான் வேண்டிப்
பித்தர் செயலினைப் பேணுதல் முறையோ?
எத்துணைப் பயன்தரும் இச்செயல்' என்றனர்;

## உரிமைப் போர்

'கசடறக் கற்றனர் கற்றவை உரைத்தனர்
நசையினை ஊட்டினர் நற்றமிழ் வளர்த்தனர்;
ஆயினும் உரிமையும் அதற்குரி நிலையும்
ஏயும்நன் மதிப்பும் ஈண்டதற் கிலையே!
உரிமையும் நிலையும் ஒடுங்கி வருங்காற்
பெருமையும் பிறவும் பேசிப் பயனென்?
அரசியல் நெறியால் அயன்மொழி புகுமேல்
வருமொழி ஒன்றே வளம்பெறும் செழிப்புறும்;
செந்தமிழ் ஆட்சி சிறப்புறல் யாங்ஙனம்?
இந்த நிலையினை எண்ணியோர் இவர்தாம்
எத்தகு துயரும் ஏற்போ ராகி
முத்தமிழ் வளர்க்க முனைந்தனர்; தமிழின்

பித்தராய்ப் பத்தராய்ப் பேணினர் அறப்போர்
இத்தகு நெறியும் இன்றுள நிலையில்
வேண்டுவ தொன்றே விளைபயன் உறுதி ;
வரும்நம் பரம்பரை வாழ்வினை வேண்டிப்
பொருமிவர் முயற்சியைப் போற்றுதல்வேண்டும்'என்
றுயும் அறிவினர் அறைந்தனர் புகழ்ந்தனர் ;

### சோற்றுக்கவலை

அறநெறி பிறழா அறப்போர் வீரரை
அரசியல் வாதிகள் அறைந்தனர் சிலசொல்
'உடனிலை ஓம்பவும் உயிர்நிலை பெறவும்
உடனடித் தேவை உணவே யன்றோ?
சோற்றுச் சிக்கல் மாற்றும் வழியைச்
சாற்றுவ தன்றி மாற்று நெறியில்
மக்களைத் திருப்புதல் மடமை யாகும் ;

### ஆட்சியில் ஆசை

சிக்கலை வளர்க்கும் நற்கலை வல்லார்
மொழியைக் காக்க முற்படு வார்போல்
வழிவகை செய்துதம் வாழ்வைப் பெருக்கினர் ;
ஆட்சியில் இவர்க்கோர் ஆசை தோன்றலால்
மாட்சிமை யில்லாச் சூழ்ச்சிகள் செய்தனர் ;
நாட்டை யாளும் நற்றிறன் தெரியார்
கேட்டினிற் செலுத்துவர் கீழ்நிலைக் காக்குவர் ;
நாட்டவர் இவரை நம்புதல் ஒழிக'
என்றெலாம் பழித்தும் இழித்தும் உரைத்தனர் ;

### சோறும் மொழியும்

'உயிர்நிலை பெறவும் உடலினை ஓம்பவும்
வயிறு நிறைக்கும் வாயுணா வேண்டும் ;
வேண்டுவ தில்லென விளம்பினர் எவரோ?

மூண்டெழு விலங்கு முதலா வுள்ளவும்
என்பு மில்லாப் புன்புழு முதலவும்
அன்புடன் முயல்வ தவ்வுணப் பெறவே ;
புழுவும் விலங்கும் மொழியறி வில்லன ;
தொழுதகு பிறப்பெனத் தூயவர் ஓதிய
விழுமிய மாந்தர் மொழியறி வுடையரால்
விலங்கினும் புழுவினும் வேற்றுமை தெரிய
நலங்கிளர் மொழியினை நயந்தனர் ஓம்பிட ;
ஓம்பும் முயற்சியில் உறுதுயர் அடைந்து
தேம்பும் வாழ்வில் சிதைந்தவர் பலர்பலர் ;

## குடியரசு கொடுத்த உரிமை

ஆட்சியில் ஆசை அரும்புதல் தீதோ?
மாட்சிமை யின்றெனின் மற்றவர் அங்கே
பற்றுதல் விடாஅது சுற்றுதல் ஏனோ?
பாரா ளுரிமை பரம்பரைச் சொத்தோ?
யாரா கினும்வ் வாட்சியில் அமரக்
குடியர சாட்சி கொடுத்துள துரிமை;
ஆளும் நற்றிறம் அமைந்தவர் இவரென
வேளை வருங்கால் விளங்குத லுறுதி ;

## அறப்போர் வெல்லும்

இன்றிவர் அறப்போர் இயற்றிய ததற்கோ?
நன்றறி மாந்தர் நவிலார் அங்ஙனம்;
பொய்ம்மை எத்தனை புகலினும் நிலைக்குமோ?
மெய்ம்மை எத்துணை மறைக்கினும் அழியுமோ?
அறப்போர் வெல்லும் அன்னை மொழியை
மறப்போர் ஆட்சி மண்ணினுட் செல்லும்'
எனச்சில தலைவரும் இயம்பினர் ஆங்கண் ;

## சிறையகம் புகுந்தனர்

மனத்தொடு பட்டது மறைத்த லின்றி
அனைத்தும் வெளிப்பட அறைந்தன ராகி
ஒட்டியும் வெட்டியும் உரைபல நிகழ்த்திப்
பட்டி மன்றெனப் பலர்பலர் நிற்க,
அறப்போர் நிகழ்த்திய அரிவையர் தாமும்,
குறட்பே றுடையார் குன்றுறை யடிகளும்,
இறப்பே எனினும் ஏற்போம் என்ற
வரிப்போத் தனையரும் வாழ்த்தொலி யுடனே
சிறைக்கோட் டத்துட் சென்றனர் சிரித்தே. (126)

*

# 31. விடுதலைக் காதை

## சிறையும் விடுதலை வீரரும்

கருங்கற் சுவரும் இரும்பின் கம்பியும்
திருந்திய நெஞ்சகம் பொருந்திய உணர்ச்சியைப்
பிரித்திட வல்ல பெற்றிமை யுற்றவோ?
குறித்தநற்கொள்கையர்கொடுஞ்சிறைக்கோட்டினுட்
கிடப்பினும் நாடும் கிளர்ந்தெழும் அவரும்
தனித்தனி பிரிந்திடத் தகுவரோ? விடுதலை
வேட்டெழும் வீரர்தம் வேட்டினில் அந்நிலை
காட்டுதல் கூடுமோ? கேட்டதும் இல்லை;
பூங்கொடி யுளத்துப் பூத்தநல் லார்வம்
யாங்ஙனம் அகலும்? ஓங்கி வளர்ந்தது,

## பூங்கொடி புலம்பல்

இனிமை மிகுதமிழ் இயம்பும் வாயினள்
தனிமை தருதுயர் தாங்கி யிருப்பவள்,
நனிமிகும் உணர்வொடு நவின்றனள் இவையிவை,
முன்னர் ஒருநாள் மூடிய சிறையுள்
தன்னந் தனியாய் இன்னலிற் கிடந்தேன்
செய்யாப் பழியைச் செய்தேன் என்று
பொய்யாற் சிறையுட் புகுத்தினர் கவன்றேன்;

இன்றென் தாய்மொழி இடுக்கண் துடைத்திடும்
நன்றமர் நடாத்தி நானிலம் அறியச்
சென்று புகுந்தேன் சிறையகம்; அதனல்
ஒன்றும் மகிழ்வால் உளங்களிக் கின்றேன்;

## உரிமை பெறுமுன் இறவேன்

நன்று புரிவோர் நலிவுறல் இயல்போ?
தூய்தமிழ் வாழத் தொண்டுகள் புரிந்தேன்,
தாய்மொழி வளரத் தந்தேன் வாழ்வு,
நல்லற மென்ற இல்லறந் துறந்து
சொல்லறம் பூண்டு சுற்றினேன் யாண்டும்;
கல்லெறி பட்டுக் காயம் உற்றேன்,
இடுபழி யேற்றேன் இருஞ்சிறைப் பட்டேன்,
கெடுவழி செல்லாது நடுநிலை பிறழாது
அடுபகை நீக்க அறப்போர் தொடுத்தேன்,
உயிரும் ஈய உறுதி பூண்டுளேன்,
இயலிசை கூத்தெனும் என்தமிழ் உரிமை
எய்துமுன் இறக்க ஒலேன் தாயே!

## எதை நான் எண்ணுவேன்

செய்தஎன் பணியெலாம் சீர்பெறுங் கொல்லோ?
வைதலும் வாழ்த்தலும் வழங்கியோர் தாய்மொழி
தழைத்திடச் சேர்ந்துடன் உழைத்திடு வார்கொலோ?
தனிப்பகை நீங்கி ஒருப்படு வார்கொலோ?
நற்றமிழ் ஈங்குக் கொற்றம் புரியக்
கற்றவர் மற்றவர் கலந்துழைப் பார்கொலோ?
பகுத்துணர் வூட்டிப் பைந்தமிழ் கூட்டி
அகத்துள் ஏற்றிய அணையா விளக்கம்
நின்றொளி வீசி நிமிர்ந்தெழுங் கொல்லோ?
இன்றுள நிலையில் எவரைநான் எண்ணுவேன்?

## ஒவ்வொரு வகையினர்

ஒவ்வொரு தமிழரும் ஒவ்வொரு வகையினர்
ஒவ்வொரு வகையும் ஒவ்வொரு நிலையின,
ஒவ்வொரு நிலையும் உன்னுதல் தன்னலம்;
தன்னலம் தவிர்ந்து தமிழ்நலங் கருதித்
தண்டமிழ்க் குரிமை தந்தனர் என்னும்
ஒளிதெரி யாமுனம் உயிர்பிறி தாக
வழிவரு மோவென அழிதுய ருற்றேன் ;

## நின் கடன்

அன்னை மொழிக்கே அரியணை வேண்டும்
என்னும் ஆசை என்னைப் பிணைத்தது;
நின்மக ளாசை நிறைவுறச் செய்வது
நின்னை யல்லால் பின்னை எவர்கடன்?
சூழ்நிலை யொன்றும் துணையெனக் கொளாது
வாழ்நா ளெல்லாம் வண்டமிழ் மொழிக்கே
உழைத்துழைத் திருந்தேன் உறுபயன் என்கொல்?

## பொற்காலம் பூக்குமோ?

மழைத்துளி கண்ட வான்பயிர் போல
முளைத்ததோர் உணர்ச்சி! தழைத்தது தாய்மொழி!
புதியபொற் காலம் பூத்தது! நாட்டில்
முதியரும் இளைஞரும் மூண்டெழுந் தார்த்தனர்!
என்றுமுள தென்றமிழ் என்னும் வாய்மொழி
நின்று நிலைத்தது எனுநிலை வருங்கொலோ?
என்றுபல புலம்பி இருவிழி சோர ;

## பூங்கொடி நோய்வாய்ப்படல்

‘வரும்வரும்’ என்று சிறையகம் திறந்தே
ஒருமகள் வந்தவண் உணவொடும் நின்றனள் ;

திருமகள் உணவினைத் தீண்டவும் செய்திலள் ;
வருமகள் வருந்தி வஞ்சியின் உடம்பைத்
தொட்டனள் ; தழலாய்ச் சுட்டது மெல்லுடல் ;
சட்டெனக் காவலர்க் குற்ற துரைத்தனள் ;

## மருத்துவ மனைக்கு விலங்குடன் செல்லல்

வெப்பு நோயின் வேகம் ஏறி
ஒப்பிலாள் படுதுயர் உணர்ந்த காவலர்
குற்றம் புரியா நற்றமிழ் மங்கையைப்
பற்றும் விலங்கொடு பற்றினர் சென்று
மருத்துவ மனையிற் கிடத்தினர் அந்தோ!

## துவண்டனள் பூங்கொடி

ஒருத்தியின் நல்லுடல் உருக்குலைந் திருந்தது ;
சிரித்தசெவ் வாயிதழ் விளர்த்துக் கிடந்தது;
செந்தமிழ் பேசிச் சிவந்தஅவ் வாய்தான்
அந்தம் இழந்து நொந்து கிடந்தது ;
குழலோ யாழோ குரலோ என்னும்
அழகிய இசைதரும் மிடறெழில் சிதைந்தது ;
குழலின் காடு குலைந்து பறந்தது ;
பிறையினைப் பழித்துப் பேசிய நுதலெழில்
குறைந்ததோ மறைந்ததோ கூறுவ தறிகிலேம் ;
குவளைக் கண்கள் கூர்மை யிழந்தன;
தவழும் அருளொளி இருளில் தணிந்தது ;
படர்ந்த பூங்கொடி பரிதியின் கொடுமை
தொடர்ந்து தாக்குறத் துவண்டது போல
மடந்தை உடலம் நுடங்கிக் கிடந்தது ;

## ஆள்வோர் ஆணை

மருத்துவர் பலப்பல மருந்துகள் தந்தனர் ;
நெருப்பெனச் சுடுநோய் நெகிழ்ந்திட வில்லை ;

ஒருநாள் இருநாள் ஓடி மறைந்தன;
மறுநாள் வெப்பம் சிறிதே தணிந்தது;
தணிந்து தணிந்து தண்ணெனக் குளிர்ந்தது;
முனிந்து சிறையுள் மூடிய அரசு
கனிந்துளம் நெகிழ்ந்து கடுநோ யுற்ற
பூங்கொடி தன்னைப் பூட்டிய சிறையகம்
வாங்குக என்ன வழங்கிய தாணை;

## தமிழணங்கின் தோற்றம்

அவ்விடை எவரோ ஆயிழை தன்பாற்
செவ்விதிற் சிலசொல் செப்புதல் போலச்
செவியிற் படலால் செந்தமிழ்ச் செல்வி
குவியிமை திறந்து கூர்ந்து நோக்கினள்;
காலிற் சிலம்பும் கையில் வளையும்
நூலிற் சிறிய நுண்ணிடை தன்னில்
மணிமே கலையும் மார்பில் மணியும்
அணிமிகு செவியில் அரியகுண் டலமும்
அணியும் ஒருத்தி ஆயிடை நின்றவள்,

## தமிழணங்கின் உணர்ச்சிமொழி

'என்னுயிர் மகளே! பொன்னிகர் மகளே!
நின்னலங் கருதிலை, என்னலங் கருதினை
உண்டுஞ் சுவைத்தும் உயிர்வாழ் உலகில்
தொண்டுகள் புரிந்தே துவண்டனை நாளும்;
பெருத்த உடலினைப் பேணுவா ரிடையே
கருத்தினை வளர்த்தாய்! பொறுப்பினை வளர்த்தாய்!
உணவினை வேண்டி உழல்வா ரிடையே
உணர்வினை ஊட்டி ஊட்டி வளர்த்தனை;
என்மகார் தாமே ஒன்னா ராயினர்;
நின்னால் எனக்கு நீணிலத் துரிமை

இன்னே வாய்க்குமென் றெண்ணி யிருந்தேன்
கொன்னே கழிவதோ மின்னே' என்றனள்;
தன்னே ரில்லாத் தையல் பூங்கொடி,
அன்னா யெனுஞ்சொல் அரைகுறை யாகச்
சொல்லா முன்னர்த் துணைவிழி கசிந்தது;
நல்லாள் விழிமலர் நனைந்தது குவிந்தது;

## விடுதலை விடுதலை

விடுதலை ஆணைத் திருமுகம் ஏந்தி
நெடுமகன் ஒருவன் நின்றனன் ஆங்கண்;
மருத்துவர் ஆங்கே மனமுவந் தோடி
ஒருத்தியின் முகத்தை உற்று நோக்கினர்;
விடுதலை விடுதலை விடுதலை என்றனர்;
உடலெனுஞ் சிறையுள் ஒடுங்கிக் கிடந்து
படுமுயிர் சென்றது விடுதலை பெற்றே! (130)

காதைகள் 31

வரிகள் 5243

*

# அருஞ்சொற்பொருள்

## காதை 1

ஆளுகை—ஆட்சி
இலங்கிட—விளங்கிட
உடீஇய—உடுத்த
உன்னுக—நினைக
கவைபடு—வளைந்த
கன்னல்—கரும்பு
கார்—மேகம்
கெழுமிய—பொருந்திய
கேளிர்—உறவினர்
கோலோச்சியது—செங்கோல் செலுத்தியது
சிறுமகார்—சிறுவர்கள்
துவைபட—அழுத்தமுற
நாற்றுமின்—தொங்க விடுவீர்
நிறீஇ—நிறுவி
மேவலர்—பகைவர்
யாண்டும்—எங்கும்

## காதை 2

இயைந்தவள்—பொருந்தியவள்
என்பு—எலும்பு
கூஉய்—அழைத்து
கொட்டம்—செருக்கு
கொழுநர்—கணவர்
செம்மல்—சிறந்த ஆடவர்
நசை—விருப்பம்
நச்சினராகி—விரும்பி
நாடாள்—விரும்பாள்
புந்தி—மனம்
மருள்—மயக்கம்
மாக்கள்—மக்கள்
வானிசை—உயர்ந்த இசை
விஞ்சிய—மிகுந்த
வைகும்—தங்கும்

## காதை 3

அருட்பா—திருவருட்பா
அவலம்—பெருந்துயர்
ஆவணம்—கடைத் தெரு
ஆன்—பசு
இடுக்கண்—துன்பம்
ஈண்டு—இங்கு (குறளகம்)
உருத்து—சினந்து
உழுத்தர்—கயவர்
உள்—மனம்
உறுதுணை—ஏற்ற துணை
ஊறு—துன்பம்
எழுதரு—உயர்ந்த
ஏதம்—துன்பம்
ஒசிந்து—அசைந்து
கழறினள்—சொல்லினள்
களமர்—உழவர்
காவணம்—பந்தல்
குறுகி—நெருங்கிச்சென்று
சிற்றினம்—கயவர் கூட்டம்
தக்கும்—நிலைபெறும்
துரப்ப—செலுத்த
தெரிவை—பெண்
நவில—கூற
நளிகனி—குளிர்ந்த கனி
நாகு—இளமை
நுடங்கும்—அசையும்
நுதல்—நெற்றி
படிமிசை—நிலத்தின்மேல்

பல்கினர்—பெருகினர்
பழுதறு—குற்றமற்ற
பெருவளி—பெருங்காற்று
பொழில்—பூங்கா
பொலிவு—அழகு
பொற்பு—அழகு
மறுகு—தெரு
விடலை—திண்ணியன்

## காதை 4

அரிவை—பெண் (பூங்கொடி)
அனை—அன்னை
இருளை—தோழி
இவண்—இங்கு
உயிர்ப்பு—மூச்சு
ஒண்டொடி—ஒளிபெருந்திய வளையணிந்த பெண்
ஒவ்வார்—உடன்படார்
கதுவ—பற்ற
கா—சோலை
கொடாஅள்-கொடுக்க மாட்டாள்
கொட்புறும்—சுழலும்
சிறார்—சிறுவர்கள்
செக்கர்—சிவந்த
தையல்—பெண் (பூங்கொடி)
நவை—குற்றம்
நளி—குளிர்ந்த
நாமம்—பெயர் (புகழ்)
படாம்—துணி
புகுதா—புகாத
பெட்டனள்—விரும்பினள்
பெட்பு—விருப்பம்
பொறிகள்-மெய்முதலிய ஐந்து பொறிகள்
பொறேன்—பொறுக்கமாட்டேன்
மல்குறு—நிறையும்
வதியிடன்—தங்குமிடம்
வெருவி—அஞ்சி
விழைவது—விரும்புவது

## காதை 5

அதான்று—அதுமட்டுமன்றி
அயர்வு—சோர்வு
அரவம்—ஒலி
அழலோம்பாளன்—வேள்வி செய்வோன்
அறத்துவழிப்படூஉம்—அறவழி நடக்கும்
ஆயிழை—ஆய்ந்து எடுத்த அணி கலனுடையபெண் (பூங்கொடி)
உய்த்தனன்—சேர்த்தனன்
உளையும்—வருந்தும்
உறைபுநர்—வாழ்பவர்
எரிநா—தீச்சுடர்
என்கோ—என்றுசொல்வேனோ?
ஒரீஇ—நீங்கி
ஒம்பும்—பேணும்
கசடு—குற்றம்
கலங்கஞர்—மிகுந்தவருத்தம்
காவா—காவாத
குழலியர்—மங்கையர்
குழூஉம்—கூடும்
சிவணியது—பொருந்தியது
செந்தண்மை—அருள்
தழீஇ—தழுவி
துவள—அசைய
தூ—இகழ்ச்சிக்குறிப்பு
தோகை—மயில்போன்ற பூங்கொடி
நத்தினர்—விரும்பினர்
நண்ணேன்—பொருந்த மாட்டேன்
நண்பு—நட்பு
நவில்வுழி—சொல்லுமிடத்து
நிறை—கற்பு
பரந்தன—பரவின

பிழைமணம்-பிழைபட்ட
புரந்திட-காத்திட [திருமணம்
புல்-ஒலிக்குறிப்பு
பூசுரர்-பார்ப்பனர்
பையென-மெதுவாக
பொறி-கருவி
மயல்-மயக்கம்
மிடைந்து-நெருங்கி
முடுகி-விரைந்து
மெல்லியல்-பெண்கள்
மேவா-பொருந்தாத
வஞ்சி-பெண் (பூங்கொடி)
வகித்துளோர்-அடைந்துளோர்
வீய்நிலை-அழியும்நிலை

காதை 6

அடவி-காடு
அறைந்தனர்-கூறினர்
அறையும்-அடிக்கும்
ஆயிழை-அல்லி
ஆயிழை-தாமரைக்கண்ணி
இரைகடல்-ஒலிக்குங் கடல்
இறும்-அழியும்
உடு-விண்மீன்
உருஅது-நிகழாது
ஏகுதிர்-செல்லுக
ஒள்ளிழை-தாமரைக்கண்ணி
ஒறுப்பர்-தண்டிப்பர்
ஓர்ந்து-உணர்ந்து
கடுநவை-கொடியதீங்கு
கட்படு-கண்ணில்தோன்றும்
கரைமிகின்-எல்லை கடந்தால்
கனல்-தீ
கனன்று-சினந்து
காளை-முத்தக்கூத்தன்
குருதி-இரத்தம்
குழல்-கூந்தல்
கொடியர்-கொடியவர்

கோற்படைவீரர்-ஊர்காவலர்
கூர்மதி-கூரிய அறிவு
கூனல்-குறுகிய
கேண்மின்-கேட்பீர்
செழிப்பான்-செழிக்க
ஞாலம்-உலகம்
துணுக்குற்று-அச்சமுற்று
துளங்கி-கலங்கி
தூரிகை-எழுதுகோல்
நாப்பண்-நடுவில்
நிணம்-கொழுப்பு
நுதலி-கருதி
பகருதி-சொல்லுவாய்
பரிதி-கதிரவன்
பளிக்கறை-பளிங்கு அறை
பிறக்கிட-புறமுதுகிட
புனல்-நீர்
பூவையீர்-பெண்களே
மதமுறு-ஆணவங்கொள்ளும்
மருங்கு-பக்கம்
மீக்கூர்ந்தவர்-மேம்பட்டவர்
மூங்கை-ஊமை

காதை 7

அந்தீங்கிளவி-அழகிய இனிய சொல்
அவ்விய-பொறாமையுற்ற
ஆயிடை-அங்கு
ஆன்ற-நிறைந்த
இவ்வணம்-இவ்வாறு
இழிதரல்-இறங்குதல்
இன்னியம்-இன்னிசை
உளரேல்-இருப்பாராயின்
உன்னி-நினைத்து
எற்கு?-எதற்கு?
ஏந்திழை-பூங்கொடி
ஒருப்படேன்-உடன்பட [மாட்டேன்
கடப்பாடு-கடமை
கடிமலர்-மணம்மிகு தாமரை

கண்படை—உறக்கம்
கதுவ-பற்ற
கழை-கரும்பு
கள்-தேன்
கார்-கருமை
கால்சீய்த்து—அழித்து
கிளை-உறவு
சால்பு—தக்கது
சாற்றுவென்—சொல்லுவேன்
சூழுப்—மேற்கொள்ளும்
சூழ்தரல்—சூழுதல்
செவ்விது—சிறந்தது
சொன்மழை—சொற்பொழிவு
தறிந்தனர்—அறுத்தனர்
துளக்கம்—நடுக்கம்
தெரியல்—மாலை
தெருள்—தெளிவு
தேவு—தெய்வம்
நயவா—விரும்பாத
நலிவு—துன்பம்
நிறுவுக—நிலைநாட்டுக
நுவன்றனள்—கூறினள்
பந்தர்—பந்தல்
பீடு—பெருமை
பெயர்ந்தோன்—சென்றவன்
பெறுஅது—பெறுமல்
போஒய்—சென்று
மதர்த்து—பெருமிதமுற்று
மல்லல்—வளப்பம்
மறுஅது—மறுக்காமல்
மான—போல
வன்பாய்—வன்முறையாக
முகடு—உச்சி
விம்மிதம்—பூரிப்பு
வியன்—அகன்ற

காதை 8

ஆயே — தாயே
ஆழி—கடல்
இரிந்திட—விலக
இறுமாந்து—செம்மாந்து
ஈண்டிய—நிறைந்த
ஒழிமதி—தவிர்க
கண்ணி—தாமரைக்கண்ணி
கல்லென்—'கல்' என்னும் ஒலியுடைய
சேக்கை—படுக்கை
தமியள்—தனித்தவளாய்
திரள்கோடு—திரண்டு
தோமறு—குற்றமற்ற
நயந்தனர்—வேண்டினர்
நேரியர்—நல்லவர்
புந்தி-மனம்
புல்லி—பொருந்தி
புன்முறை—தீயவழி
பேதுறல்—மயங்குதல்
பொருதனை — போரிட்டாய்
மதி—அறிவு
முகில்—மேகம்
வழு—குற்றம்
விசை—வேகம்
வேட்போர்—விரும்புபவர்

காதை 9

இலக்கு—குறிக்கோள்
உரன்—வலிமை
உவர்நீர்—உப்புநீர்
எல்லையில்—அளவில்லாத
கடிகதில்—நீக்குக
கண்டின்—கற்கண்டின்
கிளர்ந்தெழ—வளர
நடையால்—ஒழுக்கத்தால்
நவை—குற்றம்
நாணார்—நாணம் இலராய்
செம்மல்—சிறந்தோர்
நீணிலம்—பேருலகம்
புதுவது—புதியது

முன்னுவோர்—நினைப்பவர்
விதுப்புறேல் — அஞ்சாதே
விருது-பட்டம்
வெருகிட—புறமுதுகிட
வேத்தியலாளர்—அரசியலார்

## காதை 10

ஆர்வலர்—ஆவலுடையவர்
இடும்பை—துன்பம்
இளையோன்—கோமகன்
உள்ளுவோன்—நினைப்போன்
எழீஇ—எழுந்து
ஐவகை இலக்கணம்—எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி
கடிதின்—விரைவில்
காமரு—அழகுமிக்க
குக்கல்—நாய்
கூர்ந்து—மிகுந்து
கோட்டமில்—குற்றமில்லாத
தழீஇ—தழுவி
தாமரைவிழியாள்—தாமரைக் கண்ணி
திரை—அலை
துணர்-கொத்து
துன்னினர்—அமைந்தனர்
நுகர்வார்—அனுபவிப்பார்
நெருநல்—நேற்று
பரி—குதிரை
பாவாய் — பூங்கொடியே
மாற்றார்-பகைவர்
வதி—தங்கும்

## காதை 11

அணங்கு—பூங்கொடி
அதன்றலை—அதன்மேலும்
அரவு—பாம்பு
ஆயிழாய் — பூங்கொடி
ஆற்றினர்—செய்தனர்
இறுத்தனென்—தங்கினேன்
உய்ந்தேன்—பிழைத்தேன்
ஊனம்—குறை
ஒன்னார்—பகைவர்
கடிகமழ்—மணம்கமழும்
கையன—கையிலிருந்தன
செல், சிதல்—கறையான் வகை
செல்வுழி—செல்லுமிடத்து
தவிர்ந்த—நீங்கிய
துச்சம்—நிலையின்மை
துறக்கம்—வீடுபேறு
நிரல்பட-வரிசையாக
பவ்வம்—கடல்
பன்னரும்—கூற இயலாத
பாடுகள்—துன்பங்கள்
புரை—குற்றம்

## காதை 12

அருகிய—சுருங்கிய
ஆட்டினம்—ஆடுகள்
உய்வகை—முன்னேறும் வழி
உலப்பிலா—அழிவில்லாத
ஏந்தல்—சிறந்தோன்
கல்லா—கற்காத
கழியிருள்—மிகுந்த இருள்
குரக்கினம்—குரங்கினம்
குழவி—குழந்தை
தணிவறு—நீங்காத
திரிபற—மயக்கம் அகல
தேன்மொழி — பூங்கொடி
படிமிசை—நிலத்தின்மீது
படிறு—வஞ்சனை
பிணிக்கும்—தன்வயமாக்கும்
பெட்புடன்—விருப்புடன்
முகிழ்ந்த—கூப்பிய
யாக்கையர்—உடலினர்
வாளா—செயலின்றி
விறலுறு—வலிமையுறும்

## காதை 13

அயிரேல்—ஐயப்படாதே
அவ்வயின்—அவ்விடம்
ஆற்றான்-தாங்காதவன்
இற்செறித்தனன்—வீட்டிலடைத்தான்
உயிர்த்தவள்-பெற்றவள்
உருவு-உருவம்
உழலும்—வருந்தும்
ஊண்—உணவு
எள்ளேல்—இகழாதீர்
கதிர்—கதிரவன்
கழனி-வயல்
களமர்—உழவர்
குறுமாக்கள்—தீயவர்
குவலயம்—உலகம்
கோடு—தந்தம்
கோட்பகை—கொள்பகை
செவ்வியநடை—நல்லொழுக்கம்
தயங்கிழை—பூங்கொடி
துரைத்தனம்—அதிகாரம்
துன்றிருள்-நிறைந்த இருள்
தோலா-தோற்காத
நினைகுவை—நினைப்பாய்
நெடுமகன்-மூடன்
நெறியிடை-வழியில்
படாஅவகை—படாமல்
பிணித்தீர் - கட்டினீர்
புலம்-அறிவு
புறச்செலவு-வெளிச்செல்லல்
பேறு-செல்வம்
மறை-இரகசியம்
முடுக—விரைய
முட்டாள்-முள்தாள்
மேதி-எருமை
வரை-மலை
விடலை—சிறந்த ஆடவன்
வேட்டம்-வேட்டை

## காதை 14

அமயத்து-சமயத்து
அவனுழை—அவனிடம்
அளப்பரும்-கூறமுடியாத
அளப்பு-பிதற்றல்
இருப்புழி-இருந்தவிடத்து
இழுக்குறு-இழிந்த
உரவோய் - அறிஞ
உளப்பாடு—மனத்துயர்
எண்ணுநர்—நினைப்பவர்
எற்பணிந்து—என்னைப்பணிந்து
ஏதிலர்—அயலார்
ஒளிரும்—விளங்கும்
கட்படு—கண்ணில் படும்
கலைமலி—கலைமிகுந்த
காளை—மீனவன்
குழல்—புல்லாங்குழல்
குறுமகன்—சிறியவன்
கேட்குநர்-கேட்பவர்
கைதவன்—தீயவன்
சழக்கர்—கயவர்
சாமிநாதன்—திராவிடக்கலாநிதி உ. வே சாமிநாதய்யர்
செகுத்து—அழித்து
செயிர்த்தோர்—பகைவர்
செருத்தொழில்—போர்த்தொழில்
செல்லார்குழூ—கறையான் கூட்டம்
செவிமடுத்து-கேட்டு
சூரி—கைக்கத்தி
தப்பரும்-குறிதவறாத
தவலரும்—குறையற்ற
திணைகள்—குறிஞ்சி, முல்லை பாலை, மருதம், நெய்தல்.
துருவி—ஆராய்ந்து
தேவபாடை—ஆரியமொழி
நந்தா—அழியாத
நவில்—சொல்லும்

நேரார்—பகைவர்
நோக்குநர்—காண்பவர்
நோதக—வருந்த
புலம்—அறிவு
புறவு—புரு
பொன்று—அழியாத
மிடுக்கு—செருக்கு
முனம்—முன்பு
விருது—பரிசு, பட்டம்

காதை 15

அதூஉம்—அதுவும்
ஏதிலர்—பகைவர்
ஒருதலை—உறுதி
ஓரார்—உணரார்
கதைப்பர்—பொய்சொல்வர்
கிளத்துவள்—கூறுவள்
கெழுதகு—பொருந்திய
கொடுமுடி—ஊரின்பெயர்
கொன்னே—வீணாக
சாலும்—பொருந்தும்
செயிர்—குற்றம்
செலீஇ—சென்று
புகாஅது—புகாமல்
புணர்த்துவர்—சேர்ப்பர்
பூரியர்—கயவர்
வந்தித்து—வணங்கி
வாயென—உண்மைஎன

காதை 16

அவ்விய—பொறுமையுற்ற
இசையால்—பாட்டால்
இசையாள்—புகழுடையவள்
இவற்கு—இவனுக்கு
ஈர்க்கும்—கவரும்
உண்டியர்-உணவினர்
ஊர்திரை—ஊரும்அலை
ஊழியல்முறை—நூலின்முறை
ஊன்—உடல்
எம்முழை-எம்மிடம்
எம்மொழி—எந்தமொழி
எம்மொழி-எமதுமொழி
எழிலி—அழகி
கண்டனம்-கண்டோம்
கண்படை—உறக்கம்
கலம்—மரக்கலம்
கவ்விய-பற்றிய
கழி—உப்பங்கழி
காந்திய-கொதிக்கும்
குழீஇ—கூடி
கொடுவரி—வளைகோடு
கொழுவிய—வளமிக்க
சூர்வளி—புயல்
செய்திஇதழர்-பத்திரிகையாளர்
சொற்றது—சொல்லியது
தகைப்பார்—தடுப்பார்
தமிழியம்—தமிழின் கொள்கை
தரியேம்-பொறுக்கமாட்டோம்
தன்கண்—தன்னிடம்
தெண்டிரை—கடல்
பகுமரம்—மரத்துண்டு
பாத்திறம்—பாடல்திறம்
புன்கண்—துன்பம்
பெருவளி—புயல்
பேழ்வாய்—திறந்தவாய்
மண்டிய—நிறைந்த
மன்றினில்—அரங்கினில்
மிடல்—வலிமை
மிடை—நெருங்கிய
மீப்படல்—மேம்படல்
முந்நீர்—கடல்
முளைப்பவர்—தோன்றுபவர்
மொழிபெயர்—மொழி மாறிய
விளிவிலன்—இறக்காதவன்
வேய்அணைதோளி—எழிலி

காதை 17

அறுஅத—அற்றுப்போகாது

இருநிலம்—பெருநிலம்
கேளார்—கேளாதவர் (பகைவர்)
தெருட்டினள்—தெளிவித்தனள்
நிகழ்த்துதி—சொல்லுவாய்
நேருதல்—உடன்படல்
பட்டுணரறிவு—அனுபவ அறிவு
பிணித்து—கவர்ந்து
போந்து-சென்று
மட்டவிழ்கோதை—பூங்கொடி
மன்னு—நிலைபெறுத
மன்னுதல்—நிலைபெறல்
மீதா—மேலும் வளர
முழவு—தோற்கருவி
வேட்ப—விரும்ப

காதை 18

அடங்கலும்—முழுவதும்
அடரும்—நெருங்கும்
அந்தம்—அழகு
அனநடை—அன்னநடை
இசை—புகழ்
ஈர்த்தது—இழுத்தது
உழை—இடம்
எருத்து-பிடர்
எற்புகழ்ந்து—என்னைப்புகழ்ந்து
ஏமுறல்—மகிழ்தல்
ஒய்யெனும்—ஒலிக்குறிப்பு
ஓங்ககல்—நீண்டகன்ற
கடறு—காடு
கங்குல்—இரவு
காய்பசி—கொடும்பசி
காலையின்-பொழுதைவிட
கானம்—காடு
கோடைமலை-கோடைக் [கானல்
திருமலை-திருப்பதி
சேணுயர்-மிகஉயர்ந்த
ஞான்றினும்-பொழுதினும்
தண்டாது-தடையின்றி
தண்ணணிய-குளிர்ந்த
தழீஇய-தழுவிய
தையால்-பூங்கொடியே
தொக்கு-சேர்ந்து
நந்தலில்-அழிவில்லாத
நறவம்—தேன்
நிவந்த—நிமிர்ந்த
நீலப்பெருமலை-நீலமலை
பகரரு—கூற இயலாத
பகுவாய்—பெரியவாயில்
பதம்—சமயம்
பயிலிகள்—பயிற்சியாளர்கள்
பாரகம்—உலகம்
புலமெலாம்—ஐம்புலன்கள்
புள்ளினம்—பறவைகள்
பைதல்-வருத்தம்
மருங்குல்—இடை
மல்லல்—வளப்பம்
மாந்திடும்—பருகும்
மான—போல
மீளி—சிறந்தவன்
முகில்—மேகம்
மென்கால்—மெல்லியகாற்று
மொய்குழல்—சண்டிலி
மொய்ம்பிணை—திறத்தை
யாக்கும்-இயற்றும்
யாத்திட—இயற்றிட
வரூஉம்—வருவான்
வரைப்பு-உலகம்
வாலை-இளமை
வால்—தூய

காதை—19

அஞ்சுபொறி—ஐந்துபுலம்
அரும்புவது-கிடைப்பது
ஆயிழை — தேன்மொழி
உணா-உண்ண
உரி—தோல்ஆடை
எயிறு-பல்வரிசை

எய்யாது-சளைக்காமல்
ஏமம்-இன்பம்
ஒய்-விரைவுக் குறிப்புச் சொல்
ஓரீஇ-நீக்கி
ஒல்கா-அடங்காத
ஒழிப்பான்-ஒழிக்க
கண்படை-உறக்கம்
கழற்றுரை-இடித்துரை
கனல-எரிக்க
காண்பான்-காண
காப்பிலா-காவலில்லாத
கான்-காடு
குறுகி-அடைந்து
கொன்னே-வீணே
கோட்பட்டு-கொள்ளப்பெற்று
செயிர்ப்பு-சினம்
தவளம்-வெண்ணிறம்
திறம்பினள்-மாறினள்
துஞ்சுவது-இறப்பது
துடுக்கி-துடுக்குக்காரி
தொழூஉம்-தொழும்
தோடலர்-இதழ்விரிந்த
படாஅது-செல்லாமல்
படி-நிலம்
பவர்-பின்னிய கொடி
பால்மொழி-பூங்கொடி
பாவல-பாடல் வல்ல
பிணை-பெண்மான்
பூவை-பூங்கொடி
பொதுளிய-நிறைந்த
மண்டும்-நிறையும்
மாழ்குதல்-வருந்துதல்
மாற்றம்-மறுமொழி
மானும்-போலும்
முட்டின்று-தடையில்லை
முரணினர்-மாறுபட்டனர்
வதுவை-திருமணம்
விழாஅது-விழாமல்
வீயுற-அழிய
வெரீஇ-அஞ்சி

காதை 20

அரும்பா-முளைக்காத
ஆர்தரும்-நிறையும்
ஆர்வலர்-அன்பர்
ஊன்றுலக்குருகு-துருத்தி
எட்டுணை-எள்ளளவு
எழினி-திரைச் சீலை
எழூஉம்-எழும்
எற்பழித்து-என்னைப் பழித்து
எனாஅ-என்று
ஒல்லையில்-விரைவில்
கடுங்கால்-கடுங்காற்று
கண்டினை-கற்கண்டினை
கண்ணுள்வினைஞர்-ஓவியம் [வல்லார்
கப்பிய-நிறைந்த
காலும்-வெளிவிடும்
கைவல-கைவல்ல, சிறந்த
கைவலான்-வல்லன்
கொளீஇ-கொண்டு
செக்கர்-சிவப்பு
செலீஇய-சென்ற
செல்லல்-துன்பம்
தண்டாது-குறையாமல்
தண்ணுமை-மத்தளம்
தறித்திடும்-வெட்டிவிடப்பட்ட
திறம்பிலள்-மாறுபட்டில்ள்
தையாஅல்-சண்டிவியே
நாப்பண்-நடுவில்
நால-தொங்க
நாலும்-தொங்கும்
நெருநல்-நேற்று
படாம்-துணி
பழுநிய-முதிர்ந்த
புத்திசை-புதிய இசை
புரப்பது-காப்பது
புலத்தி-புலமைமிக்கவள்

 புலத்தி

பொருஅ-பொறுக்காத
மருஅ-மறுக்காத
மறுகிடை-தெருக்களில்
முரலும்-ஒலிக்கும்
வழங்குதல்-செல்லுதல்
வாமம்-இளமை
விடலை-கோமகன்
விடுமதி-விடுக
விதானம்-உள்மேற்கூரை

## காதை 21

அணைந்தது-அடைந்தது
இன்பில்-இன்பத்தில்
ஊடகம்-உள்மனம்
எந்தாய்-என்தந்தையே
என்பும்-எலும்பும்
ஏடு-பூவிதழ்
கோரிய-வேண்டிக்கொண்ட
சிலம்ப-ஒலிக்க
தந்தாய்-கொடுத்தாய்
தாங்கரும்-தாங்க இயலாத
துருவி-ஆராய்ந்து
நன்கனம்-நன்கு
நிலைஇய-நிலைத்த
பட்டறிவு-அனுபவம்
பாடகம்-மகளிர் காலில் அணியும் ஒருவகை அணி
பொறை-சுமை
மனக்கு-மனத்துக்கு

## காதை 22

அடாஅது-தகாதது
அரவம்-ஓசை
அருட்டிறம்-அருள்திறம்
அளி-கருணை
ஆஅய்புலம்-ஆராயும் அறிவு
உடீஇய-உடுத்த
உறக்கு-உறக்கம்
கண்டன-கண்டிக்கும், கற்கண்டு போலும்
கண்ணிய-கருதிய
கரந்தனன்-மறைந்து
கவவு-தழுவிய
காயும்-கோபிக்கின்ற, ஒளி பொருந்திய
கூஉம்பி-குவிந்து
கைதவன்-ஒழுக்கங்கெட்டவன்
கொடுவரி-புலி
செருப்புலம்-போர்க்களம்
தவமகிழ்வு-மிகுந்த மகிழ்வு
திவவு-நரம்புக் கட்டு
தூசு-ஆடை
தெரிவை-தெரிவாய்
தெரிவை-பெண்
தேஎம்பி-தேம்பி
படாஅவகை-படாமல்
பழுநியோள்-முதிர்ந்தவள்
பாயிருள்-பரவிய இருள்
பூஉங்கொடி-பூங்கொடி
பொருட்டிறம்-பொருள் திறம்
பொழுதத்து-பொழுதில்
பொறாஅன்-பொறுக்காதவன்
மட்கிய-மங்கிய
மன்பதை-மக்கள்
மாணா-தகாத
மீக்கூர்-மேம்பட்ட
மைமனம்-குற்றமுள்ளமனம்

## காதை 23

அடாஅது-தகாது
அணையும்-சேரும்
அறைகுவல்-கூறுவேன்
உறாஅ-பொருந்தாத
எற்றால்-எதனால்
ஒருவுதல்-நீங்குதல்
கரையிலான்-கட்டுப்பாடிலான்
செகுத்தனர்-அழித்தனர்

செயலி—செய்கையினள்
தெரிவான்-தெரிய
பற்றுமாக்கள்-பகைவர்
பன்னிய-கூறிய
வயங்கிழை-சண்டிலி

## காதை 24

உக்குறள்-குற்றியலுகரம்
உயிர்-உயிரெழுத்து
எற்றே-எத்தன்மைத்தோ
கோல்-தராசு
நன்னர்-நல்ல
நென்னல்-நேற்று
புல்வாய்-மான்

## காதை 25

அயர்வு-வருத்தம்
அறுதி-முடிவு
அனையாள்-போன்றவள்
இளையாள்—தங்கை
இறுதி—இறப்பு
இனைதுயர்—வருத்துந்துயர்
ஈழம்—இலங்கை
ஊடன்பிறப்பாட்டி—உடன்
பிறந்தவள்
உழுவலன்பு—ஒப்பற்ற அன்பு
கடிகுவம்—கண்டிப்போம்
கருமுகில்—கருமேகம்
கனியிசை—கனிந்த இசை
காழகம்—பர்மா
கேண்மோ—கேட்பாயாக
கோற்றொடி—அருண்மொழி
சென்னி—தலை
சொற்றது—சொல்லியது
தமர்—தம்முடையவர்
தவ்வை—தமக்கை
துன்பினர்—துன்பத்தினர்
துன்புளம்—துன்ப உள்ளம்
தூமொழி—அருண்மொழி
தெற்றென—தெளிவாக
தொன்று—பழமை
தோற்றுதல்—தோன்றுதல்
நசை—விருப்பம்
நன்னுதல்—பூங்கொடி
நேரிதின்—நேர்மையாக
பன்னுதல்—சொல்லுதல்
பாவை—அருண்மொழி
புரந்தேன்—காத்தேன்
பொன்றுங்காலை-அழியும் போது
போழ்ந்து—பிளந்து
மகண்முறை—மகள் உறவு
மலர்முகம்—மலர்ந்த முகம்
மலைத்து—திகைத்து
மனைக்கிழத்தி—மனைவி
மன்றல்—திருமணம்
முகமன்—மதிப்புச்சொற்கள்
முதிரா—முற்றாத
வரைந்தது—எழுதியது
வன்கணர்-கொடியவர்
விண்டிட—கூற
விளம்புவென்—கூறுவேன்
வீய்ந்த-இறந்த
வெந்துயர்-கொடுந்துயர்

## காதை 26

அடிகள்—மலையுறையடிகள்
அரண்செயும் - துணைசெய்யும்
அறம்பூண்டார்-துறவுமேற்
கொண்டார்
இருமை-நன்மை தீமை
இமிழ்கடல்-ஒலிக்குங்கடல்
இறுத்தனள் -சொல்லினள்
உரன்-அறிவு
உழன்றேனை-வருந்திய என்னை
உறைப்ப-சிதற

உற்றுழி-துன்பமுற்ற இடத்து
எற்கு-எனக்கு
ஏற்றம்-பெருமை
ஓப்பிய-காத்த
ஓரைந்து-ஐம்புலன்கள்
கடப்பாடு-கடமை
கடன்-கடமை
கரவிலர்-வஞ்சனையிலார்
காழ்ப்பு-பொறாமை
கிழாஅரும்-பெருநிலக்கிழாரும்
குறுமுகை-சிறுமொட்டு
கொடுமுடி-உச்சி
கோட்டமில்-வஞ்சமில்லாத
சிதர்-துளிகள்
சுரிகுழல்-சுருள் கூந்தல்
சுரும்பினம்-வண்டுக்கூட்டம்
துடியிடை-உடுக்கைபோன்ற [இடை
தெரிக்கும்-இசைக்கும்
தெள்ளிதின்-தெளிவாக
தெற்றென-தெளிவாக
தேறல்-தேன்
தொக்கு-கூடி
தோட்டி-அங்குசம்
நடுக்குறூஉம்-நடுங்கும்
நடை-ஒழுக்கம்
நற்றவர்-நல்ல தவத்தினர்
நன்கனம்-நன்கு
நாட்படு-பல நாள் பழகிய
நால்வகை-நரம்பு, தோல், துளை, கஞ்சம்
நாவலூர் நம்பி-சுந்தரமூர்த்தி நாயனார்
நாவின்அரசர்-திருநாவுக்கரசர்
பார்க்குள்-உலகில்
பார்த்தலம்-உலகம்
பிள்ளை-திருஞானசம்பந்தர்
புரவலர்-காப்பாளர்
பெற்றி-தன்மை
பொற்பணி-அழகியபணி
மன்பதை-மக்கள்
மாறன்-நம்மாழ்வார்
மிழற்ற-இசைக்க
மிடற்றிசை-குரலிசை
மீப்படும்-புகழ்மிகும்
முளரி-தாமரை
முற்றுற-முடிவுற
முற்றுறா-முடியாத
மென்கால்-தென்றல்
வரூஉம்-வரும்
வியன்-பெரிய
வீயுறும்-அழியும்
வேட்டு-விரும்பி

## காதை 27

அஞ்சிறை-உள் இறகு
அஞ்சு திணை-ஐந்து திணை
அலர்-மலர்
அனமொழி-அன்னமொழி
அனையன-அவைபோல்வன
இசைகுவை - உடன்படுக
இடம்படு-இடமகன்ற
இருநீர் பரப்பு-கடல்
இன்னன-இவை போல்வன
இன்னே-இப்பொழுதே
உருதின்-ஊதின்-உருசிய நாட் [டறிஞர்
ஏத்தும்-போற்றும்
ஒருதுணை-ஒப்பற்றதுணை
கண்டு-கற்கண்டு
கப்பிய-நிறைந்த
கமிலர்-கமில்சுவலபெல்-செக்கோசுலேவியா
கனிமொழி-பூங்கொடி
குறித்தனர்-கருதியுள்ளனர்
குன்றுறையடிகள்-மலையுறை யடிகள்
கூட்டுணர்வு-ஒருமைப்பாடு
கொழி தமிழ்-செழிக்கும் தமிழ்

சான்மார்—ஜான்மார்—
இங்கிலாந்து நாட்டறிஞர்
சுரும்பு—வண்டு
செப்புந—சொல்பவை
தகவுகள்—தகுதிகள்
துலக்கி—விளக்கி
துன்றிய—பொருந்திய
தெரிதர—தெரியுமாறு
தெரிப்பன—விளக்குவன
தேஎத்து—தேயத்தில்
தேக்குவென்—நிறைப்பேன்
தையல்-பூங்கொடி
நற்சுளை—பலாச்சுளை
நாடொறும்—நாள்தோறும்
நிகழ்த்துதி — சொல்க
நுண்மாண்—நுண்ணிதாக—
மாட்சிமையுற்ற
நுழைபுலம்—ஆராயும் அறிவு
படர்வோள்—செல்பவள்
பீடுறு—பெருமையுறும்
புரிதர—புரியுமாறு
பொற்றொடி நங்கை—பூங்கொடி
மனன்—மனம்
முட்டின்று—தடையின்றி
மேலவர்—மயில் வாகனர்
வரைப்பு—உலகம்

## காதை 28

அதளன்—தோலாடையன்
அழிப்பான்—அழிக்க
அள்ளுற—வாயுற
ஆரூர்நம்பி—சுந்தரர்
இடங்கர்—முதலை
உய்யும்-பிழைக்கும்
உரியன்-தோலாடையன்
உறையுநர்-வாழ்பவர்
எண்ணிலர்—கணக்கிலாதவர்
என்னையோ-ஏனோ
என்றுளீர் - எற்றுள்ளீர்
ஒருதலை—துணிவு
கடகரி-மதயானை
கடுக்கவின்—நஞ்சின் அழகு
கண்டன்—கழுத்தினன்
கதவம்-கதவு
கரவுரை—வஞ்சனைமொழி
கருதகில்லார்—கருதாதவர்
கழகம்-தமிழ்ச்சங்கம்
காற்கூறு-கால் பங்கு
குருபரர்-குமரகுருபரர்
சாலுமேல்—போதுமெனின்
சுருட்டு - (படுக்கைச்) சுருள்
செப்புவ-சொல்பவை
செற்றம்-சினம்
தணிந்திலர்-அடங்கினரிலர்
தரியலர்-பகைவர்
நம்பேல்-நம்பவேண்டா
நெக்குநெக்குருகி-மிக இளகி
பகரார்—கூறமாட்டார்
பரஞ்சோதி-திருவிளையாடற்
புராண ஆசிரியர்
பரவை-பரவைநாச்சியார்
பாவைகள்-பொம்மைகள்
புன்மையோ? - இழிவோ?
பேணாஅராகி-பேணாதவராகி
மடவரல்-இளமைமிகும்
மருவிய-பொருந்திய
மலையும்-தகராறு செய்யும்
மன்பதை-மக்கள்
மாந்தன்-மனிதன்
மாறன்-பாண்டியன்
மாற்றம்—மறுமொழி
மிடற்றிசை-குரலிசை
முகிழ்ப்பது-உண்டாவது
முனிய-வெறுக்க
மேவரும்-விரும்பத்தகாத
மேவலர்-பகைவர்
யாய்—தாய்

வாதவூரன்—மாணிக்கவாசகர்
வாய்மதம்—வாய்ச்செருக்கு
விடைக்கொடி—எருதுக்கொடி
விரிமனம்—பரந்தமனம்
வேம்பலர்—வேப்பம்பூ

காதை 29

அவ்வயின்—அவ்விடம்
ஈட்டம்—கூட்டம்
உட்குறிப்பு—மனக்குறிப்பு
ஓகை—உவகை
கொடாஅ—கொடுக்காத
கோட்பாடு—கொள்கை
கோள்—புறங்கூறல்
செல்லல்—துன்பம்
தறுகண்—அஞ்சாமை
தொகை-எட்டுத் தொகை நூல்
நடாத்துப்—நடத்தும்
நங்கடன்—நம் கடமை
பண்டகர்—டாக்டர்பட்டம்
பரசும்—வணங்கும்
பாட்டு—பத்துப்பாட்டு
புரிவியல்—புரிகின்ற

மயலரவு—மயக்கம்
முதலா-முதலாக

காதை 30

உணா—உணவு
ஒளிர—விளங்க
கடம்—கடமை
கொளாஅது—கொள்ளாமல்
தங்கை—தம் கை
தன்றுணை—கணவன்
நாணுத்தருவது—நாணம் தருவது
மிடைந்தன—கலந்தன
முயல்வான்—முயல
வரிப்போத்து—புலி
வென்றி—வெற்றி

காதை 31

அந்தம்—அழகு
இன்னே—இப்பொழுதே
ஒன்றும்—பொருந்தும்
ஒன்னார்—பகைவர்
கொன்னே—வீணே
பின்னை—பின்பு
மகார்—மக்கள்
மிடறு-கழுத்து

| பக்கம் | வரி எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 12 | 6 | மனங்தொளீஇ | மனங்கொளீஇ |
| 32 | 31 | அடுத்ததர் | அடுத்தவர் |
| 39 | 17 | மொழிவளம | மொழிவளம் |
| 53 | 90 | என்று கூத்ரறை | என்றுரை கூறத் |
| 123 | 241 | வேணிலும் | வேனிலும் |
| 239 | 66 | உணவோடும் | உணவொடும் |

# எங்கள் வெளியீடுகள் !

டாக்டர் சி. இலக்குவனார்,
எம். ஏ., எம். ஓ. எல்., பிஎச். டி.
அவர்களின் நூல்கள்

1. திருக்குறள் (எளிய பொழிப்புரை)
(இரண்டாம் பதிப்பு)
288+8 பக்கங்கள் கிரௌன் 1×8 விலை ரூ. 2—50

2. தொல்காப்பிய ஆராய்ச்சி
294 பக்கங்கள் 1×8 கிரௌன் விலை ரூ. 5—00

3. பழந்தமிழ்
256 பக்கங்கள் 1×8 கிரௌன் விலை ரூ. 4—00

4. இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல் (சங்க காலம்)
158+10 பக்கங்கள் 1×8 கிரௌன் விலை ரூ. 2—50

பிற நூல்கள்

5. திருக்குறள் (மூலம்)
133 பக்கங்கள் விலை ரூ. 0—50

6. அண்ணல் சுப்பிரமணியனார் மணிமலர்
அளவு 1×4 கிரௌன் 175 பக்கங்கள் விலை ரூ. 3—00

---


## வள்ளுவர் பதிப்பகம்

855, வடக்கு இராச வீதி,
புதுக்கோட்டை, திருச்சி மாவட்டம்.

மதராஸ் ரிப்பன் பிரஸ், புதுக்கோட்டை.